ஆசிரியர் : கவிஞர் நாரா நாச்சியப்பன்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மன ஊஞ்சல்

நாரா நாச்சியப்பன்

தமிழாலயம்

137, ஜானி ஜான் கான் தெரு

சென்னை - 600014.

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the book | —MANA OONJAL |
| Author | —NARA NACHIAPPAN |
| Language | —Tamil |
| Edition | —First |
| Publication | —15th May, 1986 |
| Copy right | —Author |
| Paper used | —11-6 kg Double Crown White printing |
| Size | —Crown octavo |
| Types used | —10 point |
| Pages | —8+344=352 |
| Copies | —1200 |
| PRICE | —**Rs. 25** (TWENTY FIVE) |
| Printers | —Novel Art Printers Madras -600 014 Phone : 82731 |
| Publishers | —Thamizhalayam 137, Jani Jan khan Road Madras - 600 014 |
| Subject | —A Novel describing emotions of love in the heart of a young girl. |

Copies available at :

M/s **PARRI NILAYAM** 184, Prakasam Road, Madras--600 001.

M/s. **AINTHINAI PATHIPPAKAM,** 282, Bharathi Salai, Madras - 600 005.

M/s. **AANANTH PABLICATIONS** 15, Theetharappan Street, Madras - 600 005.

# முன்னுரை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் "தென்றல்" இதழில் பணிபுரிந்த போது, அதன் உரிமையாளராகிய திரு ஆ. நடராசன் அவர்கள் ஒரு தொடர் கதை எழுதுமாறு கேட்டார்கள். தென்றல் ஆசிரியர் கவிஞர் கண்ணதாசனும் கேட்டுக் கொண்ட பின், எழுத முயன்றேன்.

வெள்ளிக் கிழமை தோறும் வெளிவரும் தென்றலுக்கு, வியாழக்கிழமைக்குமுன் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், புதன் கிழமை வரை என்ன முயன்றாலும் எழுத முடிவதில்லை. கற்பனை பிறப்பதில்லை. எழுதும் மனநிலை அமைவதில்லை.



வியாழக்கிழமை அச்சுக்கோப்பவர்கள் வேலையின்றிச் சும்மா நிற்கிறார்கள் என்ற நிலையில் அவர்களின் மேலாளர் வந்து வேறு ஏதாவது கதை கட்டுரைகள் இருந்தால் எடுத்துக் கொடுங்கள் என்று கேட்ட பின், அரைமணிநேரம் பொறுங்கள்" என்று கூறிச் சென்ற வாரத்துக் கதையைப் படிப்பேன். அடுத்த வாரத்துக் கதை வளரும்.

சிறுசிறு தாள்களில் பேனா ஓடிக் கொண்டேயிருக்க, பத்துப் பத்து வரிகள் அடங்கிய தாள்களை அச்சுக் கோப்பவர் எடுத்துச் சென்று கொண்டே யிருக்க, கதை வளர்ந்து கொண்டேயிருக்கும். போதும் என்று மேலாளர் வந்து சொல்

லும் போது அந்தப் பக்கத்தின் அடியில் தொடரும் என்று போட்டுக் கதையை நிறுத்திவிடுவேன்.

அன்று மாலை அச்சாகும் இதழை எடுத்துப் பார்க்கும் திரு. ஆ. நடராசன் தாங்கள் எப்படி எழுதினீர்கள் என்று வியப்பார். இதில் வியப்பதற்கென்ன இருக்கிறது என்று கேட்டு, வேறு வேலைகளைப் பார்க்கத் தொடங்குவேன்.

இப்படி வாரந்தோறும் வளர்ந்த இந்தக் கதை காதல் கதைதான்! ஓர் இளம் பெண்ணின் காதல் எண்ணங்கள் எப்படி அலைபாய்கின்றன. காதல் பாதையில் உள்ள தடைகள், மேடுபள்ளங்கள், கல்லு முள்ளுகள், சிலசமயம் பாதையே தவறான பாதையாகும் நிலை, அதனால் ஏற்படும் தடுமாற்றம், அப்படித் தடுமாறும் நிலையில் நெறிப்படுத்த வேண்டிய நிலை இவற்றையெல்லாம் 'தங்கம்' என்ற பெண்ணின் மூலம் காட்டியிருக்கின்றேன்.

ஒரு காதலியின் மன உறுதி எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறாள் ராதா.

தற்போது வெளிவருகின்ற மாத நாவல்களுக்கும் இந்தப் புதினத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு. ஒரு பருவப் பெண்ணின் நெஞ்சில் பீறிட்டு எழும் காதல் உணர்வு வெறும் வெறியாகாமல் இது போன்ற புதினங்களால் நெறிப்படுத்தப் பட்டு, அவளை மேனிலைப் படுத்தும் என்பது என் துணிவு.

ஓர் எழுத்தாளன் தன் எழுத்தின் மூலம் படிப்பவர் உள்ளத்தில் நல்லுணர்வுகளைப் புகுத்துவதே தன் கடமையாகக் கொள்ள வேண்டும்.

வெறியுணர்வுகளைத் தூண்டும் எழுத்தாளன், விளம்பரம் பெறும் அளவு பாராட்டுப் பெறுவானா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

மாத நாவல்களுக்கும் இந்தப் புதினத்துக்கும் உள்ள வேறுபாடு, படிப்பவர்களுக்குப் புரியும்.

காதலே ஓர் இலட்சியமாக மலரும்போது, அது பெருமைக்குரியதாகி விடுகிறது.

இந்த இலட்சியக் காதலுக்கு இலக்கியமாகத் திகழ்கிறது இந்த மன ஊஞ்சல். தென்றலில் இக்கதையின் பெயர் ‘மல்லிகைப் பந்தல்’.

கதையைப் படியுங்கள். உங்கள் கருத்துக்களை ஓர் அஞ்சல் அட்டையில் பதிவு செய்து எனக்கு அனுப்புங்கள். நீங்கள் கூறும் குறைகள் அடுத்து எழுதும் போது திருத்திக் கொள்ளத் துணையாகும். உங்கள் பாராட்டுக்கள் அடுத்த ஆக்கத்தை விரைவு படுத்தும் உந்து கோல் ஆகும்.

அன்பன்,

**நாரா நாச்சியப்பன்**

### கதை அச்சாகும் போதே படித்த இருவரின் கருத்துரைகள்

# படிப்பது பெருமை! பெறுவது இன்பம்!

மனத்தின் ஆழத்தைக் கிளறி, அதில் உள்ள காதலை வெளிப்படுத்தி இலக்கிய வடிவத்தில் வாசகர்களுக்கு நல்ல கருத்தோவியமாகப் படைத்திருக்கிறார் நாவலாசிரியர்.

ஏழைக் கந்தசாமி வாத்தியாருக்கு அறிவு, குணம், அழகு எல்லாம் பொருந்திய தங்கம்.

நொண்டிக் கையும் அரைப் பைத்தியமான பாங்கும் கொண்ட நடராசன்.

மாமன் மகனாக வந்த சுந்தரேசன். அவன் நல்லவன் என்று நினைத்து அவனையே திருமணம் செய்து கொள்ள எண்ணும் தங்கம்.

அண்ணாமலைப் பண்டிதருக்கும் சுந்தரேசனுக்கும் மர்ம புதிராக உள்ள உறவு.

அண்ணாமலைப் பண்டிதர் பணத்தைக் கொடுத்துத் தன்னை விலைக்கு வாங்கி விட்டதாக எண்ணும் தங்கம்.

இந்தக் கதாபாத்திரங்களைக் கொண்டு, அன்பு, காதல் ஆகியவற்றின் மேன்மையை இலக்கிய நயத்தோடு ஆசிரியர் விளக்குகிறார்.

இலக்கியத்தின் உச்சகட்டமாக விளங்கும் இந்த நாவலைப் படிப்பது பெருமை; பெறுவது இன்பம், இன்பம்!

**P. ரெங்கேஸ்வரி**

# மன ஊஞ்சலின் என் மனக்கருத்து

ஒரு நாவல் என்பது அதைப்படிக்கத் தொடங்கியவுடன் ஒரே எண்ணத்தோடு நம் நினைவுகளை ஒன்றுபடுத்தி நம்மை அக்கதையிலேயே ஐக்கியப்படுத்தி அதில்வரும் கதையை நம் கதையாகவும், நினைத்து எடுத்த புத்தகத்தை கீழே வைக்க மனமில்லாமல் அதன் முடிவைத் தெரிந்து கொள்ளும் வரை படித்துக் கொண்டே இருக்க வேண்டும். தன்னையே மறந்து ஒரு நாவலைப் படிக்கிறோமென்றால் அதைவிட சிறந்த நாவல் இவ்வுலகிலேயே இல்லையென்று தான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு காதல், கவிநய நாவல் தான் நம் கவிஞர் திரு. நாரா நாச்சியப்பன் அவர் களின் மன ஊஞ்சல். இது ஒரு மகத்தான சிறந்த நாவல்.

ஒரு பெண்ணின் மனத்தைப் பற்றி ஒரு பெண் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு இந்நாவலைத்தான் படிக்க வேண்டும். அந்தக் காலத்தில் ஏற்படும் அன்பிற்கும் இந்தக் காலத்தில் ஏற்படும் அன்பிற்கும் எவ்வளவு வேற்றுமை கள் இருக்கின்றன என்பதை இக்கதையில் ஆசிரியர் மிக அழகாக விளக்கியுள்ளார்.

ஒரு பெண் தன் வாழ்க்கையைத் தான் விரும்பியபடி தான் அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், அவள் தன் விருப்பத்தை நிறைவேற்றுமுன் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காதலில் சிறிது ஏமாந்தாலும், படுபாதாளத்தில் விழுந்துவிட நேரிடும் என்பதை மன ஊஞ்சல் மூலம் நாம் மிகத் தெளிவாக அறிந்து கொள்கிறோம்.

இந்நாவலை ஒருமுறை படித்தால் தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதில் உள்ள கதை நயமும் காதல் சுவையும் நம் மனத்தை விட்டு என்றும் நீங்காத நினைவுகளாய் இருக்கின்றன.

**J. ராணி**

இறைவன் உலகைப் படைத்தான்.

அந்த உலகில் பல உயிர்களைப் படைத்தான்.

அந்த உயிர்களுக்கிடையே, ஆசையென்றும் பாச மென்றும் வெறுப் பென்றும் பகை யென்றும் மாறுபாடான பல தொடர்புகளை ஏற்படுத்தி வித விதமான நாடகங்கள் நடக்கும்படி செய்துவிட்டான்.

உலகில் நடைபெறும் இந்த நாடகங்களைப் போன்ற ஒன்றைத்தான் எழுத்தாளனும் தன் ஆற்றலுக்கு ஏற்பச் சிறியதாகவோ பெரியதாகவோ படைக்கின்றான்.

அப்படி ஓர் எழுத்தாளன் படைத்த படைப்புத்தான் இந்தப் புதினம்.

# 1. மகளே, உனக்குத் திருமணம்!

தங்கத்திற்கு இந்தக் கார்த்திகை வந்தால் வயது இருபத்திமூன்று நிறைந்துவிடும். அவள் சடங்காகிப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னும் கழுத்திலே மஞ்சள் கயிறு ஏறவில்லை.

தங்கம் தங்கநிறம் தான்; அவள் குணமும் பத்தரை மாற்றுத் தங்கம்தான். ஆனால், அழகான பெண் என்பதற்காகவோ, நல்ல குணவதி என்பதற்காகவோ இக்காலத்தில் யாரும் கலியாணம் செய்து கொள்ள முன்வந்து விடுகிறார் களா என்ன? தங்கம் என்று சொன்னால் போதுமா? பெயர் இருந்தால் போதுமா? கையிலே எவ்வளவு தங்கம் இருக்கிறது என்று தானே எல்லாரும் பார்க்கிறார்கள்.

கந்தசாமி வாத்தியார், அவர்தான் தங்கத்தைப் பெற்ற புண்ணியவான், அவரிடம் தங்கமும் இல்லை வெள்ளியும் இல்லை. சேமிப்பு என்ற பெயரிலே செப்புக் காசுகள்கூட அவரிடமில்லை. அவரிடம் உள்ள தங்கமெல்லாம் அவர் மகள் தங்கம்தான். ஓர் தொடக்கப்பள்ளி வாத்தியாரிடம் என்னதான் இருக்க முடியும்?

இந்தக்காலத்தில் எல்லோரும் சீர்திருத்தம் என்று பேசு கிறார்கள்! ஆனால், வாழ்வில் அதை யார் கடைப்பிடிக்

கிறார்கள்? முற்போக்கு, பொதுவுடைமை ஆகியவற்றைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறவர்கள் எல்லாம் தங்கள் சொந்தப் பிரச்னை வரும்போது திசை மாறிவிடுகிறார்கள்.

வரதட்சிணை, ஸ்ரீதனம், சீர்வரிசை என்ற பெயர்கள் எல்லாம் பெண்ணைப் பெற்றவனின் பண பலத்தைப் பரிசோதிப்பதற்காகச் சமூகத்திலே உண்டாக்கப்பட்டவை. ஆனால், அவை பரிசோதனை செய்வதோடு நின்றுவிட்டால் பாதகமில்லை. ஏழைப்பெண்களின் இன்பவாழ்வுக்குக் குறுக்குச் சுவர்களாகவும் நிற்கின்றன.

தொடக்கப்பள்ளியில் வேலை பார்க்கும் ஏழைக் கந்தசாமி வாத்தியாருக்கு உயிரோடு இருக்கின்ற ஒரே ஒரு மகள் தங்கம். அவளுக்கு முன்னும் பின்னும் தோன்றி வளர்ந்து நோயாகிக் கிடந்து கொஞ்ச நஞ்ச நிலபுலன்களுக்குச் சொந்தக்காரராக இருந்த கந்தசாமி வாத்தியாரை கந்தலாடைக்காரராக்கி விட்டு மறைந்து போய் விட்டன மற்ற குழந்தைச் செல்வங்கள். மிஞ்சியிருந்த ஒரே ஒரு பெண்ணைக் கந்தசாமி வாத்தியாரும் அவருடைய மனைவி மரகதமும் தங்கத்தைப் பாதுகாப்பதுபோல் பாதுகாத்து வந்தார்கள்.

தங்கம் மற்ற குழந்தைகளைப் போல் செத்து மடிந்திருந்தால் கந்தசாமி வாத்தியாருக்கு இந்தக் கவலை ஏற்பட்டிருக்காது என்று சொல்லலாம். ஆனால், அவளும போயிருந்தால், அவரும் அவர் மனைவியும் உயிரோடு இருந்துவர முடியுமா?

கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த அந்தத் தங்கம்தான் எவ்வளவு புத்திசாலிப் பெண்ணாக வளர்ந்து விட்டாள். கந்தசாமி வாத்தியார் ஒவ்வொரு முறை தனக்குள் நினைத்துப் பார்ப்பார். தனக்கும் தங்கத்துக்கும் ஒரே சமயத்தில் தேர்வு வைத்தால், தங்கம் தான் தன்னைக் காட்டிலும் அதிக மதிப்பெண் வாங்குவாள் என்று தோன்றும்.

அவ்வளவு படித்திருக்கிறாள் அவள். பெண்கள் எவ்வளவு படித்து என்ன? வெளியில் விளங்கித் தோன்ற முடிய வில்லையே!

அறிவு, குணம், அழகு எல்லாம் இருந்தும் யாரும் தங்கத்தை நாடி வரவில்லை. நாடி வரவில்லையென்றால், கலியாணம் என்று சொல்லிக் கழுத்தில் தாலி கட்டித் தங்கள் இல்லத்து அரசியாக அவளை ஏற்றுக் கொள்ளத்தான் யாரும் நாடி வரவில்லை. வேறு விதத்தில் அவளை நாடி வந்த வர்கள் பலர்.

அம்மாவுக்குச் சமையலுக்காக அவள் திருக்குளத்திற்குத் தண்ணீர் எடுக்கச் சென்றபோது கண்ணால் சாடை காட்டி அழைத்தவர்கள் இல்லாமல் இல்லை. அவள் தங்கம் பக்கம் திரும்பித் தன் செம்பவழ உதடுகளால் புன்னகை புரிவாளா என்று ஏங்கிக்கிடந்தவர்களும் இருந்தார்கள். கோயிலுக்குச் செல்லும்போது ஒரு நாளாவது அவள் கடைக்கண் அருள் கிடைக்காதா என்று தவங்கிடந்த பக்த சிகாமணிகளும் பலர் இருந்தனர்.

எந்தெந்தப் பாதையிலோ, எப்படியெப்படியோ போகத் திட்டமிட்டு முட்டி மோதித் தடுமாறி விழுந்த கந்தசாமி வாத்தியார் கடைசியில் திருமண முயற்சி செய்வதையே விட்டுவிட்டார். இருந்தாலும் மனத்திலே கவலை உறுத்திக் கொண்டுதான் இருந்தது. இப்படியே பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன.

கொஞ்சிப் பேசும் பஞ்சவர்ணக்கிளி போல் கொள்ளை யழகுடைய தங்கத்தை வீட்டிலே வைத்துக் கொண்டு, பருவ மடைந்து பத்து வருடங்கள் ஆகியும் கட்டிக் கொடுக்க முடியாமல் திண்டாடுகின்ற கந்தசாமி வாத்தியாரின் கையாலாகாத் தனத்தைப் பற்றிப் பழித்துப் பேசாத பெண் கள் அந்த ஊரிலேயே கிடையாது. வம்பர் மகாசபை நிகழ்ச்சி நிரலிலே இது ஓர் அங்கமாகிப் போய் விட்டது.

விதிப்படி நடக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டார் கந்தசாமி வாத்தியார். ஆங்காலம் வந்தால் யாவும் தானாக நடக்கும் என்று அவர் தன் மனத்திற்குள் சமாதானம் கூறுக்கொள்வார்.

நெடுநாளைக்குப் பிறகு மறுபடியும் அவர் தங்கத்தின் திருமணத்தைப் பற்றி நினைக்க—அதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ண ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது விதிதான் தன்னை இப்படித் தூண்டுகிறதோ என்று கூட எண்ணினார்.

கந்தசாமி வாத்தியார் வேலை பார்த்த நெய்யூர் தொடக்கப் பள்ளியில் முருகேசர் என்று ஒரு புதிய ஆசிரியர் வந்து சேர்ந்திருந்தார். அவர் பள்ளியில் வேலைக்குச் சேர்ந்து ஒரு ஆண்டாகி விட்டது. அவரும் கந்தசாமி வாத்தியாரும் மிகவும் அன்பாக நெருங்கிப் பழகினார்கள். ஒருவர் குணம் ஒருவருக்குப் பிடித்துப்போய் விட்டது.

ஒரு நாள் அந்த முருகேசர் கந்தசாமி வாத்தியாரைப் பார்த்துப் பேசும் பொழுது, "கந்தசாமி, எத்தனை நாளைக்கு உன் பெண்ணை இப்படியே வைத்துக் கொள்ளப் போகிறாய்?" என்று கேட்டார்.

"முருகேசரே, என் நிலை தெரியாதவர் போல் பேசுகிறீர்களே?" என்றார் கந்தசாமி.

"தெரியாமல் பேசவில்லை, இதோ பார். உன் பெண்ணுக்கும் மாப்பிள்ளை கிடைக்கவில்லை. என் பையனுக்கும் பெண் கிடைக்கவில்லை. நான் இவ்வளவு துணிந்து கேட்கிறேனே என்று கோபப்படாதே! உள்ள நிலைமையைத்தான் சொல்கிறேன். எனக்குத் தஞ்சாவூரில் நிலம் இருக்கிறது என்பதும், நெல் விளைந்து வருகிறது என்பதும், உனக்குத் தெரியும். அது ஒரு குடும்பத்திற்கு வருடம் முழுவதும் சாப்பாட்டுக்குப் போதும், திருமணத்திற்காக ஒன்றும் செலவழிக்க வேண்டாம். நெய்யூர் முருகனுக்கு ஓர் அபிசேகம்

ஆராதனையைப்பண்ணி விட்டு அவன் சன்னிதானத்திலேயே திருமணத்தை முடித்து விடலாம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார், முன்னாலேயே யோசித்து முடிவுசெய்து விட்ட முருகேசர்.

கந்தசாமி வாத்தியார் பதில் சொல்லத் தயங்கினார். ஒருவேளை, முருகப்பிரான்தான் முருகேசர் உருவத்தில்வந்து இந்த முடிச்சைப் போட முனைகிறானோ என்று அவர் உள்ளம் கருதியது.

''கந்தசாமி ஏன் தயங்குகிறாய். எதற்கும் தங்கத்தை யும் கேட்டுவிடு. அவள் சம்மதம் என்று சொன்னால் மேற் கொண்டு இதைப் பற்றிப் பேசுவோம் இல்லாவிட்டால் வேண்டாம். இந்த விசயத்தில் உன் சம்மதம் மட்டும் எனக் குப் போதாது. தங்கமும் சம்மதித்தால்தான் நான் இந்த காரியத்தில் ஈடுபடுவேன். நாளைக்கு என் பிள்ளையோடு வாழ வேண்டியவள் அவள் அல்லவா?'' என்று நியாயமான ரீதியில் பேசினார் முருகேசர்.

கந்தசாமி வாத்தியார் எதுவும் பதில் பேசவில்லை.

''என்ன, தங்கத்தைக் கேட்டுச் சொல்கிறாயா?'' என்று மறுபடியும் கேட்டார் முருகேசர்.

'சரி'' என்பது போல் தலையை ஆட்டினார் கந்தசாமி வாத்தியார்.

பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பிய கந்தசாமி வாத்தியார் தயங்கித் தயங்கிக் கொண்டுதான் உள்ளே நுழைந்தார்.

'ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டு வரவேற்றாள் அவருடைய மனைவி மரகதம்.

''ஒன்றுமில்லை...லேசாகத் தலைவலி...தங்கம் எங்கே? கொஞ்சம் கூப்பிடு''- வார்த்தைகள் விட்டு விட்டு வெளிப் பட்டன,

சிறிது நேரத்தில் தங்கம் அங்கே வந்து அவர் எதிரே அமெரிக்கையாக நின்றாள்.

பருவ எழில் பூத்து குலுங்கிய அந்தப் பச்சைப் பசுங் கொடி போன்ற தன் அழகியப் பெண்ணைப் பார்த்ததும், கந்தசாமி வாத்தியார் முன்னால் ஒன்று கூட்டிச் சேர்த்து வைத்திருந்த தைரியமெல்லாம் சிதறிப் போய் விட்டது, அவருக்குப் பேசுவதற்கு நாவெழவில்லை.

''அப்பா, கூப்பிட்டீர்களா?'' வாஞ்சையோடு கேட்டாள் தங்கம்.

வாத்தியார் சிறிது நெஞ்சைத் திடப்படுத்திக் கொண் டார்.

'அம்மா, முருகேச வாத்தியாரை உனக்குத் தெரியுமே?''

''ஓ! தெரியுமே! எத்தனை தடவை நம் வீட்டுக்கு வந் திருக்கிறார்! மிக நல்லவரப்பா! எப்போதும் அவரோடு பேசிக் கொண்டே இருக்கலாம். திருக்குறள் ஒவ்வொன்றுக்கும் அவர் எவ்வளவு அழகாகப் பொருள் சொல்லுகிறார் தெரியுமா?''

''ஆம் அம்மா! அவர் மகன்...'' இதற்குமேல் வாத் தியாரின் வாய் அடைத்துப்போய் விட்டது. வார்த்தைகள் சுத்தமாக வெளிவர மறுத்து விட்டன.

''அவர் மகனா? நீங்கள் அவருக்கு மகன் இருப்பதாகச் சொல்லவே யில்லையே! அவர்கூடச் சொல்லவே யில்லையே. அப்பா! அவர் மகனும் அவரைப்போல் பண்டிதராக இருப்பார் இல்லையா?'' என்று கள்ளமில்லாமல் கேட்டாள் தங்கம்.

''அம்மா. அவர் மகன் என்றால் அவருக்குப் பிறந்த மகனல்ல. அவருடைய வளர்ப்புப் பிள்ளைதான்!'' இப் போது கந்தசாமி வாத்தியாருக்குச் சிறிது தெம்பு வந்து விட் டது. வார்த்தைகளை வெளியே கக்கிவிட்டார். ''தங்கம்

முருகேசர் அந்தப் பையனுக்கு உன்னைத் திருமணம் செய்து...'' அவர் வார்த்தையை முடிக்கவில்லை.

தங்கத்தின் முகத்தில் நாணத்தின் சிவப்பு படர்ந்தது. வெட்கித் தலை குனிந்து கொண்டாள். அவள் மனமோ எங்கோ உல்லாச உலகிலே பவனி சென்று கொண்டிருந்தது.

முருகேச வாத்தியார் வளர்த்த பிள்ளையென்றால் அவரைப்போல அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். இலக்கியம் விரும்பிக் கற்றவன் தன் கணவனாக வந்தால் வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்! பருவமடைந்த புதிதில் கலியாணப்பேச்சு வரும் போதெல்லாம் தன்கணவன் தமிழ் இலக்கியம் படித்தவனாக இருக்க வேண்டும் என்று அவள் கனவு காண்பாள். தன் கருத்துக்குகந்த கணவன் கிடைப்பதற்காகத்தான், கடவுள் இத்தனை காலம் கலியாணமாகாமல் தடுத்து வைத்திருக் கிறார் என்று அவள் எண்ணமிட்டாள்.

''அவருடைய சொந்தப்பிள்ளையாக இருந்தால் நான் யோசிக்க மாட்டேன். ஆனால், இவன் யார் பெற்ற பிள்ளையோ?''

''என்னப்பா! கற்றுச்சிறந்த நீங்களே, இப்படிப்பேசினால் என்ன ஆவது? சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை செந்தா மரைதான்; குப்பைமேட்டில் கிடந்தாலும் குன்றிமணி குன்றி மணிதான் என்று நீங்களே அடிக்கடி சொல்வீர்களே? கள்ளி வயிற்றில் அகில் பிறக்கிறது; காட்டில் சந்தனம் தோன்று கிறது அதுபோல நல்லவர்கள் எங்கு பிறந்தாலும் சிறந்தவர் களே!'' என்று வெட்கத்தை விட்டுப் பேசிவிட்டாள் தங்கம்.

''அவன் பிறப்பைப் பற்றி நான் கவலைப்படவில்லை யம்மா! ஆனால், அவன்...அவன்...'' என்று திக்கித் திணறிய கந்தசாமி அதற்குமேல் பேசமுடியாமல் விக்கி விக்கி அழத் தொடங்கி விட்டார்.

முருகேச வாத்தியாரின் மகளைப் பற்றி ஏதோ சொல்ல வந்தவர் சொல்லமாட்டாமல் தவிக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட தங்கம். "அப்பா அழாதீர்கள்! நீங்கள் இதைப் பற்றி ஒன்றும் பேசவேண்டாம்!" என்று சொல்லிச் சமாதானப் படுத்த முயன்றாள்.

ஆனால், அவள் முயற்சி பலிக்கவில்லை. கந்தசாமி வாத்தியார் அழுது கொண்டிருந்தபடியே தூங்கிப்போய் விட்டார்.

அவர் என்ன எண்ணினார் என்பது புரியாமல் தங்கம் அன்று இரவு முழுவதும் குழம்பிக் கொண்டிருந்தாள்.

## 2. அரும்பு திருட வந்த அழகன்

மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து கூடத் தங்கத்திற்கு அந்தக் குழப்பான சிந்தனை மாறாமலேயிருந்தது. வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தபடியால் ஓரளவு அதைப்பற்றி நினைத்துக் கவலைப்படாமல் இருந்தாள். ஆனால், பெரும் பாலும் வீட்டு வேலைகள் எல்லாம் முடித்து, சாயுங்காலம் துணிமணிகளைத் துவைத்துப்போட்டுவிட்டுத் தோட்டத்துப் பக்கம் இருந்த சன்னல் கதவண்டைபோய் உட்கார்ந்தபோது தங்கத்தின் எண்ணங்கள் மீண்டும் தன் தந்தை தன்னிடம் சொல்லத் தயங்கிய திருமணச் செய்தியைச் சுற்றிச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தன.

கந்தசாமி வாத்தியார் அன்று கார்த்திகையானதால், பள்ளிக்கூடம் விட்டதும் நேரே கோயிலுக்குப்போய்த் தீபாராதனை பார்த்து விட்டு வெகுநேரம் கழித்துத்தான் வருவார். கந்தசாமி வாத்தியார் சில சமயங்களிலே சீர்திருத்தவாதிபோலப் பேசுவார் என்றாலும் அவருக்கு இந்த மாதிரியான பூசை, ஆராதனை, நாள் நட்சத்திரம் ஆகியவற்றிலே உள்ளூற நம்பிக்கை யுண்டு. பத்திரிகை வாங்கினால் ''இன்று நாளை சோசியம்'' என்ற பகுதியைத் தான் முதலிலே படித்துப் பார்ப்பார். முக்கியமான தினங் களிலே கோயிலுக்குப் போகத் தவறமாட்டார்.

கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வர நேரமாகுமாகை யால் அவர் மனைவி மரகத அம்மா ஒரு மூலையிலே உட்கார்ந்து பெரிய எழுத்து இராமாயணத்தை மூக்குக் கண்ணாடியின் வாயிலாகக் கண்ணுக்குள்ளே பதித்துக் கொண்டிருந்தாள். தங்கம் மட்டும் சன்னலோரத்திலே இருந்து தோட்டத்துக்குள்ளே தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

அந்தச் சன்னலுக்கு நேரே தோட்டத்தின் ஒரு மூலையிலே ஒரு மல்லிகைப் பந்தல் இருந்தது. தோட்டத்தின் பிற பகுதிகளிலே காய்கறிச் செடிகளும், கீரைப்பாத்திகளும் பிற பூஞ்செடிகளும் ஆங்காங்கேயிருந்தன. இந்த மல்லிகைப் பந்தல், கந்தசாமி வாத்தியார் அந்த வீட்டிற்குக் குடிவந்த ஆரம்பத்தில் வைக்கப்பட்டது. ஆளுயரத்திற்குக் காவணம் கட்டி அதன்மீது செடிபடர விடப்பட்டிருந்தது. நல்ல இருண்ட பச்சை நிறமுள்ள இலைகளோடு இடையிடையே இளிப்பச்சை நிறமான கொழுந்து இலைகளும் தலை நீட்டி அந்த மல்லிகைப்பந்தல் பச்சைப்பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்தது. அந்தப் பச்சைப் பரப்புக்கு இடையிடையே நீட்டிக் கொண்டிருந்த தூய வெள்ளை நிறமான அரும்புகள், பட்டு மெத்தையில் இடையிடையே தைத்த குஞ்சங்கள் போலத் தோன்றின.

மெல்லத் தவழ்ந்து வந்த தென்றல் காற்று அந்த மல்லிகையின் மணத்தை அள்ளிக் கொண்டு வந்து வீடு முழு வதும் நிரப்பியது. தங்கம் தற்செயலாக அந்த மல்லிகைப் பந்தலை நோக்கினாள்.

அவள் விழிகள் அப்படியே, அந்தத் திசையிலேயே பதிந்து விட்டன. இருண்டு விளங்கிய அந்தக் கருவிழிகள் குத்து நோக்காக அந்தப் பந்தலையே நோக்கின.

"யார்?" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெடித்துக் கிளம்பின.

யாரோ ஒருவன் அரும்பு மல்லிகைகளை விரும்பிப் பறித்துக் கொண்டிருந்தவன் அந்தக் குரல் கேட்டதும் திடுக்கிட்டுப்போனான். அப்படியே, கையில் இருந்த அரும்புகளைக் கீழே போட்டுவிட்டுத் தோட்டத்துச்சுவரை நோக்கிப் பாய்ந்தான். ஐந்தடி உயரமுள்ள அந்தத் தோட்டத்துச் சுவரில் பரபரவென்று பாய்ந்து ஏறினான். ஆச்சு! இன்னும் கொஞ்சம்தான் பாக்கி! சுவரின் உச்சிக்குப் போய்விட்டால் அடுத்த பக்கம் குதித்துத் தப்பி ஓடிவிடலாம். அதற்குள், பதற்றமோ என்னவோ, தடாலென்று தோட்டத்தின் உட்புறமாகவே விழுந்து விட்டான் அந்த மனிதன். விழுந்தவன் ஓடுவதற்காக மீண்டும் எழுந்திருக்க வேண்டும். ஆனால் அவன் எழவேயில்லை.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தங்கம் சட்டென்று எழுந்து, அவன் விழுந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

அவனைக் கண்டவுடன் அவள் ஆடாது அசையாது அச்சடித்த பதுமைபோல நின்று விட்டாள். என்ன கவர்ச்சியான முகம்! அவள் இப்படிப்பட்ட எழில் நிறைந்த ஆடவன் உருவத்தை இதற்கு முன் கண்டதேயில்லை என்று சொல்லலாம். ஆனால் அப்படி ஒரேயடியாக உறுதியிட்டுச் சொல்லிவிடவும் முடியாது. ஏனெனில் அவள் சிறுமியாயிருந்தபோது பள்ளிச் சிறுவர்கள் பலரைக் கண்டிருக்கிறாளே தவிர தெருவில் பலப் பலரைக் கண்டிருக்கிறாளே தவிர, பெரியவள் ஆன பிறகு,அவள் தன் தந்தையையும் அவரோடு தொடர்புடைய ஒரு சிலரையும் தவிர எந்த ஆடவரையும் - அதிலும் இளைஞர்கள் யாரையும் பெரும்பாலும் கண்டதில்லை.

அப்போது அழகே வடிவான அந்த இளைஞனின் கவர்ச்சிகரமான முகத்தைக் கண்டதும் அவள் அப்படியே பிரமைக் கலக்கம் அடைந்து நின்று விட்டாள். சற்று நேரத்

திற்குப் பிறகுதான் அந்த இளைஞனுடைய மண்டை அங்கு கீழே கிடந்த கருங்கல் ஒன்றிலே மோதிக் காயம்பட்டு இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்ததை அவள் கவனித்தாள்.

இரத்தத்தைக் கண்டதும் அவளுக்கு ஒரே பயமாகப் போய் விட்டது "அம்மா!" என்று கூவிக்கொண்டே வீட்டுக்குள் ஓடிவந்தாள். இராமாயணத்தில் சடாயுவதைப்படலம் படித்துக் கொண்டிருந்த மரகத அம்மா, மகள் கூச்சலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள், திக்கித் திணறிக் கொண்டே, தங்கம் தான் கண்ட காட்சியைப் பற்றிக் கூறினாள்.

யாரோ தலையில் அடிபட்டு இரத்தம்சிந்தி மயக்கமாகக் கிடக்கிறான் என்ற உடனே, இரக்கச் சிந்தனை நிறைந்த மரகத அம்மாளின் இதயம் இளகியது

"பாவம்! யார் பெற்ற பிள்ளையோ! வா, போய்ப் பார்க்கலாம்!" என்று கூறித் தங்கத்தையும் அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குள் சென்றாள்.

அங்கே அந்த இளைஞன் கிடந்த நிலையைக் கண்டதும், உடனடியாக அவனுக்கு மருத்துவ உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் மரகத அம்மாளுக்குத் தோன்றியது. அவள் தன் மகள் உதவியுடன் மெல்ல மெல்ல அவனைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டின் உள்ளே கிடத்தினாள். தலையில் இருந்த காயம் அப்படி ஒன்றும் பெரியதாகத் தோன்றவில்லை. மரகத அம்மாள் தனக்குத் தெரிந்த முறையில் காயம்பட்ட இடத்தைக் கழுவித் துடைத்து மஞ்சளை அரைத்து வைத்துக் கட்டினாள். பிறகு, உடலில் எங்கேனும் காயம்பட்டு இருக்கிறதா என்று கவனித்தாள். எவ்விதமான காயமும் இல்லை. தாயும் மகளும் உணர்வற்றுக் கிடந்த அந்த இளைஞனின் உடலைப் பரிசோதித்துக் கொண்டிருந்த போது தங்கம் திடீரென்று "அம்மா!" என்று திகைப்போடு கூவினாள்,

"என்னடி தங்கம் என்ன?" என்று பதற்றத்தோடு கேட்டுக் கொண்டே மரகத அம்மாள் அவளை நோக்கினாள்.

"இங்கே பாரம்மா!" என்று தங்கம் சுட்டிக்காட்டிய இடத்தைத் தாய் நோக்கினாள். அது அந்த இளைஞனின் இடது கை. அந்த இடதுகை தோளில் துவங்கி மணிக்கட்டின் சற்றுக் கீழோடு முடிந்திருந்தது. அதற்கப்புறம் முழு உள்ளங் கையையோ அதில் அடங்கிய ஐந்து விரல்களையோ காண முடியவில்லை. பாதிவரை எரிந்து கரிந்து போன விறகுக் கட்டை யொன்றின் நுனியைப் போல அந்த இடது கையின் நுனிப் பாகம் விளங்கியது.

"ஐயோ பாவம்!" என்ற வார்த்தைகள் ஆயாசப் பெருமூச்சோடு மரகத அம்மாளின் வாயிலிருந்து வெளிப் பட்டன. "இவ்வளவு அழகான பிள்ளைக்கு இப்படி ஒரு குறையா!" என்று அவள் மனம் வருந்தியது. அதே எண்ணம் தான் தங்கத்தின் உள்ளத்திலும் தவழ்ந்து கொண்டிருந்தது' ஆண்டவன் படைப்பில் எதுவுமே பூரணத்துவம் அடைவ தில்லையோ?' என்று அவள் மனத்திலே ஐய வினா எழுந்து நின்றது.

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த இளைஞன் மயக்கந் தெளிந்து கண்களை அகல விரித்துச் சுற்றும் முற்றும் நோக் கினான். அவன் பார்வையிலே ஒரு விதமான மிரட்சி தோன்றியது.

"நான் எங்கிருக்கிறேன்?" என்று பயந்துகொண்டே கேட்டான்.

"ஏன் தம்பி பயப்படுகிறாய்? நீ இங்கேதான் இருக் கிறாய். தைரியமாகப்பேசு" என்று மரகத அம்மாள் கூறினாள்.

"அந்த இராட்சசி போய் விட்டாளா? இன்னும் அங்கே தான் இருக்கிறாளா?" என்று கேட்டான் அவன்.

"என்ன தம்பி சொல்கிறாய்?" என்று விளங்காமல் கேட்டாள் மரகத அம்மா.

"நான் மல்லிகையரும்பு பறிக்க வந்தேனே, அப்போ ஒரு இராட்சசி என்னை விரட்டிக்கிட்டு வந்தாளே, அவ இன்னும் அங்கே தான் இருக்கிறாளா?" என்று திரும்பவும் கேட்டான்.

தன்னைப் பார்த்தால் அவனுக்கு இராட்சசி போலவா தோன்றுகிறது என்று மனத்திற்குள் சிணுங்கிக் கொண்டாள் தங்கம்.

"என்ன தம்பீ உளறுகிறாய்? இராட்சசியாவது, விரட்டுவதாவது?" என்று கேட்டாள் மரகத அம்மா.

"இல்லேம்மா. கமலம் அப்படித் தான் சொன்னாள். அவள் சொன்னபடியே இராட்சசி என்னை விரட்டிக் கொண்டு வந்தாள்" என்றான் அவன்.

மண்டையில் அடிபட்டதால் அவன் குழம்பிப் பேசுகிறான் என்று நினைத்தாள் மரகத அம்மா. ஆனால் தன்னை அவன் இராட்சசி என்று குறிப்பிட்டது தங்கத்திற்கு மிகவும் உறுத்தலாயிருந்தது. கமலம் என்ற பெண்ணைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். ஒரு பெண்ணுக்கு வேண்டிய அடக்க ஒடுக்கங்கள் எல்லாம் அந்தக் கமலத்திடம்கிடையாது. பெரிய குறும்புக்காரி. யாரையாவது வம்புக்கிழுப்பதும், யாரிடையேயாவது சண்டை மூட்டி விடுவதும், கோள் சொல்வதும் கமலத்தின் உடன்பிறந்த பழக்க வழக்கங்கள். தன்னைப்பற்றி அந்த இளைஞனிடம் மோசமாகச் சொல்லியிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

"இதோ, பாருங்கள். என்னையா இராட்சசியென்று சொன்னாள்?" என்று கேட்டு அவனை உற்று நோக்கினாள் தங்கம். அவனும் தங்கத்தை உற்று நோக்கினான்.

"ஐயையோ! நீ எவ்வளவு அழகாயிருக்கிறே? உன்னைப் பார்த்து யாராவது இராட்சசி என்று சொல்வார்களா?

உண்மையான இராட்சசியைத்தான் சொன்னாள்'' என்றான் மண்டையில் அடிபட்டுக் கிடந்த அந்த இளைஞன்.

''பாவம்! அடிபட்டு மூளை கலங்கிப் போயிருக்கிறது. அதிகம் பேச்சுக் கொடுக்காதே தங்கம்!'' என்று கடிந்து கொண்டாள் மரகத அம்மா.

''அதெல்லாம் இல்லேம்மா, மூளை கலங்கவும் இல்லே ஒண்ணுமில்லே! உள்ளபடியே சொல்லுகிறேன், நடந்த விசயத்தைக் கேளுங்களேன்!'' என்றான் அவன்.

தாயும் மகளும் பேசாதிருந்தனர்.

''கேளுங்கம்மா, அந்தக் கமலம் இருக்காளே. அவளுக்கு என்னைப் பார்த்தா எப்போதும் கேலிதான். அவ மட்டு மில்லே, அவ கூட இருக்காங்களே ருக்கு, வள்ளி கோகிலம், விசயா எல்லோரும் அப்படித்தான். அவங்க எல்லோரும் கூடிக்கொண்டு நீ ஆண்பிள்ளை தானா என்று கேட்டாங்க. ஆண்பிள்ளை இல்லேன்னா நான் சேலையா கட்டிக் கொண் டிருக்கிறேன்?'' என்றுகேட்டேன். வேட்டிகட்டிட்டா ஆண் பிள்ளையாயிடுவியா? தைரியம் வேணும் தைரியம்!'' என்றாங்க. 'என்ன செய்யணும் சொல்லு. உன் கையை முறிக்கவா? காலை ஒடிக்கவா?' என்று கேட்டேன். 'உனக் குத்தான் கையில்லே—அதுக்கு எங்க கையையும் முறிக்க வேணுமா?' என்று கேட்டா அம்மா, அப்புறம் அவள் என் கிட்டே வந்து, 'அழாதே! நீ ஆண்பிள்ளை தானே? ஒரு காரியம் செய்கிறாயா? என்றுகேட்டாள். எனக்கு ரோசம் வந்துவிட்டது. அழுகையை நிறுத்திவிட்டு, என்ன செய்ய வேணும்? சொல்! என்றேன்.

''அதோ, அங்கே ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் ஒரு மல்லிகைப் பந்தல் இருக்கிறது. அதிலே போய் எங்களுக் கெல்லாம் அரும்பு பறித்துக் கொண்டு வருகிறாயா?'' என்று கேட்டாள்.

'பூ! இவ்வளவு தானா?'' என்று கேட்டுவிட்டுக் கிளம்பினேன்.

'இதோ பார். அந்த மல்லிகைப் பந்தல் பக்கத்திலே ஓர் இராட்சசி காவல் இருக்கிறாள். அவ பார்த்தா உன்னைப் பிடித்து, மல்லிகை பறித்த கையை அப்படியே கடித்துத் தின்று விடுவாள்' என்று சொன்னாள் கமலம்.

''இராட்சசியாவது,பிடிக்கிறதாவது?' என்று சொல்லிக் கொண்டே சுவர் ஏறிக் குதித்து இந்தத் தோட்டத்துக் குள்ளே வந்தேன். மல்லிகை அரும்பு பறித்துக் கொண்டிருந் தேன்! இருந்தாலும் எனக்கு மனசுக்குள்ளே ஒரு பயம், எங்கிருந் தாவது இராட்சசி வந்துவிடுவாளோ என்று நெஞ்சு படக் படக் என்று. அடித்துக் கொண்டது. அப்போது திடீரென்று யாரோ அதட்டுகிற குரல் கேட்டது. அவ்வளவுதான் 'டபார்' என்று பாய்ந்து சுவரின் மேல் ஏறினேன். இந்த ஒரு கையிலே விரல் இல்லாததனாலே, அவசரத்திலே நழுவி விழுந்து விட்டேன். அப்புறம் தலை கிர்ரென்று சுற்றுவது போல் இருந்தது. நல்ல வேளை! நீங்கள் வந்து என்னைக் காப்பாற்றிவிட்டீங்க. இல்லேன்னா அந்த இராட்சசி என்னைக் கடிச்சே தின்றுவிட்டிருப்பாள் இல்லையா?'' என்று கேட்டான் அந்த இளைஞன்.

''ஏற்கனவே பித்துக்குளி. அத்தோடு மூட நம்பிக்கையை வேறு ஏற்றிவிட்டார்கள் அந்தச் சுட்டிகள்!'' இப்படி நினைத்து வருத்தப்பட்டாள் மரகத அம்மா.

''இவ்வளவு அழகான உருவத்திற்குள் எவ்வளவு பைத்தியக்காரத்தனமான மூளை!'' என்று எண்ணி அவனுக்காக அனுதாபப் பட்டாள் தங்கம்.

உலகம் விசித்திரமானது. பிறர் அனுதாபங் காட்ட வேண்டிய கீழான நிலையிலே சிலர் இருப்பார்கள். ஆனால் அவர்கள் வேறு சிலரைப் பார்த்து இரக்கப்படுவார்கள்.

தங்கம் அழகிருந்தும் அறிவிருந்தும் பண்பிருந்தும் குணமிருந்தும் பணமில்லாத குறையால் நாடுவார் இல்லாத பெண்ணாக இருந்தாள். அவள் அழகிருந்து அறிவில்லாத அந்த இளைஞனை நோக்கி இரக்கப் பட்டாள்.

வீட்டு முன் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டுத் தங்கமும் மரகத அம்மாவும் திரும்பிப் பார்த்தார்கள். கந்தசாமி வாத்தியாரும் முருகேச வாத்தியாரும் வருவதைக் கண்டு அவர்கள் எழுந்து ஒதுங்கி நின்றார்கள்.

படுக்கையில் கிடந்த அந்த வாலிபனைப் பார்த்தவுடன் முருகேச வாத்தியார், கோபத்துடன், "ஏண்டா, நீ எங்கே வந்தாய்? கலியாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றா வந்தாய்?" என்று சீறினார்.

கந்தசாமி வாத்தியாரோ அவர் தோளைப்பிடித்து அமர்த்தி அவன் தலையில் கட்டுப் போட்டிருப்பதைச் சுட்டிக் காண்பித்துத் தம் நண்பரைச் சினம் தவிர்க்கும்படி வேண்டிக் கொண்டிருந்தார்.

முருகேச வாத்தியாருடைய வார்த்தைகளைக் கேட்ட தங்கத்துக்குத் தலை சுற்றிக்கொண்டு வந்தது. அடிபட்டுக் கிடந்த, ஒரு கையில்லாத பித்துக்குளி இளைஞன் தான் தன்னை மணக்கப் போகிற மாப்பிள்ளை என்பதையறிந்த போது, தன் தந்தை முதல் நாள் இரவு இந்தச் செய்தியைத் தான் வாய்விட்டுச் சொல்ல முடியாமல் திண்டாடினார் என்பதை நினைத்துப் பார்த்தபோது, அவளுக்கு என்னவென்று சொல்ல முடியாத ஒரு மாதிரியாக வந்தது. தலையை ஒரு கையால் பற்றித் தாங்கிக்கொண்டே, அடுக்களை அறைக்குள் ஓடித் தரையில் குப்புற விழுந்து கொண்டு விசித்து விசித்து அழலானாள்.

# 3. அண்ணாமலைப் பண்டிதர்

நினைத்துப்பார்த்தால் வாழ்க்கை விசித்திரமாகத்தான் தோன்றும். பெரும்பாலான சந்தர்ப்பங்களிலே நாம் பார்த்திருக்கிறோம் நமக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்கள் யாராவது திடீரென்று நம்மைச் சந்திக்கிறார்கள். பிறகு அவர்கள், ஏரேழு தலைமுறைக்கு முன்னாலிருந்தே நம்மோடு ஐக்கியமாக இருந்து வந்திருக்கவேண்டிய உறவினர்களாக இருப்பதை அறிந்து கொள்ளும்படி நேரிடுகிறது. எங்கோ, எப்போதோ, எதற்காகவோ நம் மூதாதையர் காலத்திலே விட்டுப்போன உறவு நம் காலத்திலே ஒட்டிக்கொள்ள ஆரம்பித்து விடுகிறது. சில சமயங்களில் அவர்கள் நம் உறவினர்களாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் ஏற்படுகின்ற நட்பு, பிரிக்க முடியாத வகையில் ஒட்டிக்கொண்டு விடுகிறது. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த உறவுதான் அண்ணாமலைப் பண்டிதருக்கும் கந்தசாமி வாத்தியாருக்கும் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

அண்ணாமலைப் பண்டிதர் நெய்யூரைச் சேர்ந்தவரல்ல; நெய்யூருக்கு இதற்குமுன் வந்தவருமல்ல, ஆனால், அவர் நெய்யூருக்கு வந்த பிறகு நெய்யூரிலே ஒரு கலகலப்பு ஏற்பட்டு விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அவர் வந்த பிறகு நெய்யூரிலே 'கட்சி' தோன்ற ஆரம்பித்து விட்டது என்று

கூடச் சொல்லலாம். ஓய்வு நேரத்திலே நாலுபேர் கூடினால் அவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிப் பேசாமல் இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட பெரிய மனிதராகி விட்ட அண்ணாமலைப் பண்டிதர் ஒரு சிலரின் விருப்புக்கும் வேறு சிலரின் வெறுப்புக்கும் ஆளாகியிருந்த அந்த அண்ணாமலைப் பண்டிதர், முருகேச வாதியாருக்கு நெருங்கிய நண்பராகி விட்டார். இதனால் அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிப் பேச்சு வளர்கின்ற இடங்களில் முருகேச வாத்தியாரின் பெயரும் ஓரிரு முறை அடிபடத்தான் செய்தது. அண்ணாமலைப் பண்டிதர் அந்த வட்டாரத்திலேயே ஒரு பெரிய வித்வான் என்று பெயர் பெற்றவர், தண்டமிழின் கரைகண்ட பண்டிதர் என்று கற்றறிந்தவர்கள் பலர் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

அண்ணாமலைப் பண்டிதர் நெய்யூர் அருகிலே யிருந்த கதலிப்பட்டணத்திலே யிருந்து வந்தார். வயது சுமார் ஐம்பது அல்லது ஒன்றிரண்டு கூடவும் இருக்கலாம். அவர் தம் வீட்டிலேயே உட்கார்ந்து நூலாராய்ச்சி செய்வதும், புது நூல்கள் எழுதுவதும் வேலையாகக் கொண்டிருந்தார். இடையிடையே, வெளியூர்களுக்குச் சொற்பொழிவு செய்யப் போவதும் உண்டு.

நெய்யூர் தொடக்கப்பள்ளி ஆண்டு விழாவிலே சொற்பொழிவு செய்வதற்கு அண்ணாமலைப் பண்டிதரை அழைக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் பலர் விரும்பினார்கள். அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகத் தலைமையாசிரியரும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

பள்ளி ஆண்டு விழாவின் போது பிள்ளைகள் விளையாட்டுப் போட்டியெல்லாம் முடிந்த பிறகு, மாலை ஆறு மணியைப் போல் பரிசு வழங்குதலும் சொற்பொழிவும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாதாரணமாக அந்த ஊர் மக்கள் விளையாட்டுப் போட்டி பார்த்து முடிந்ததும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பி விடுவார்கள். ஆனால் அண்ணாமலைப் பண்டிதரின் பெயர் எங்கும் தெரிந்து பரவியிருந்தபடியால், அவர் பேச்சைக் கேட்பதற்கு என்று எல்லோரும் தங்கியிருந்தார்கள். அண்ணாமலைப் பண்டிதர் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேர்ந்து தமது சொற்பொழிவைத் தொடங்கினார். அவர் பேச்சு முழுவதும் அந்த ஊர் மக்களுக்குப் புதிதாயிருந்தது. அவர்கள் இதுவரை மனத்தில் நினைத்துக்கூடப் பார்க்காத பல கருத்துக்களை அண்ணாமலைப் பண்டிதர் பேசினார்.

அண்ணாமலைப் பண்டிதரின் பேச்சு சிலருக்குச் சிந்தனையைக் கிளறிவிடுவதாயிருந்தது; சிலருக்கு ஆத்திரத்தை மூட்டிவிடுவதாயிருந்தது. அவர் கூறிய கருத்துக்கள் சிலருக்குக் குளிர் தென்றலாக வீசி, இன்பம் தருவனவாக இருந்தன; சிலருக்கு அனற் காற்றாக அடித்து வேதனைத் துடிப்பில் ஆழ்த்துவனவாக இருந்தன.

அண்ணாமலைப் பண்டிதர், தமிழ் மொழியின் பெருமையைப் பற்றிப் பேசினார்; தமிழ் அரசர்களின் பண்பு, வீரம் ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். இத்தோடு நின்றிருந்தால் கேட்டவர்கள் கேட்டு விட்டு அவரவர் வீட்டுக்குப் போய்ப் பேசாமல் தூங்கியிருப்பார்கள். ஆனால், அவர் தமிழனின் இன்றைய நிலையை அவ்வப்போது முந்திய நிலையோடு ஒப்பிட்டுக் காட்டிக்கொண்டிருந்தார். "ஆண்டவனை அருச்சிக்கும் போது தாய் மொழியில் போற்றி அருச்சிக்காவிட்டால் உள்ளம் இறைவனோடு எவ்வாறு அமையும்?" என்று கேட்டார். இன்னும் ஆடு வெட்டுதல், கோழியறுத்தல் முதலிய பலியிடும் வழக்கங்கள் அருத்தமற்றவை யென்று கூறினார். அத்தோடு நில்லாமல், சாத்திரம் பேசுதல், சகுனம் பார்த்தல், சோதிடம் கேட்டல், சாதகம் பார்த்தல், முதலிய மூட நம்பிக்கைகளை யெல்லாம் களைந்தால்தான் நல்லறிவு

பிறக்கும் என்று கூறினார். ஆண்டவன் மீது நம்பிக்கை யில்லாதவர்கள் தான் கோளிலும் குறியிலும் நம்பிக்கை கொண்டு அலைவார்கள் என்று சொன்னார். ஆண்டவன் படைப்பில் எல்லோரும் சமமே என்று சொன்னார். இப்படி அவர் தெய்வீகத்தையும் விட்டுக்கொடுக்காமல் மூடத்தனத் தையும் விட்டு வைக்காமல் பேசினார். அவர் போக்கே, புதுமையாயிருந்தது.

அண்ணாமலைப் பண்டிதருடைய பேச்சிலே அப்படி யொன்றும் விந்தையான புதுமையில்லை யென்றாலும் அங்கிருந்த மக்களுக்குப் புரட்சிகரமாகத் தோன்றியது. 'அண்ணாமலைப் பண்டிதர் நாத்திகக் கட்சியைச் சேர்ந்தவர்; அவர் ஒரு நாத்திகர்' என்று சிலர் பேசிக்கொண்டார்கள். அப்படிப் பேசிக்கொண்டவர்களைப் பார்த்து அவர் திரு நீறு பூசியிருக்கிறாரே? என்று கேட்டால், "ஆமாம்! திரு நீறு பூசிய நாத்திகர்!" என்று அந்தப் பழமை வாதிகள் பளிச் சென்று சொல்லிவிடுவார்கள். இப்படிப்பட்ட பிரசாரத்திற்கு இலக்காகியிருந்த அண்ணாமலைப் பண்டிதர்மீது கந்தசாமி வாத்தியாருக்கு ஓர்அன்பு ஏற்பட்டுவிட்டது. அண்ணாமலைப் பண்டிதர் கூறும் கருத்துக்கள் சரியானவை என்று அவருக்குத் தோன்றின.

ஆண்டு விழா முடிந்தவுடனேயே அவரைத் தம் வீட்டுக்கு விருந்துக்குக் கூட்டி வந்துவிட்டார்.

'ஏதோ ஏழை வாத்தியார்; சாப்பாடு சாதாரணமாக இருந்தாலும் அதற்காக நீங்கள் குறைப்பட்டுக் கொள்ளக் கூடாது!" என்று இலையில் உட்காரும் போது கூறினார் கந்தசாமி.

'அன்போடு கூழை வார்த்தாலும் அது அமுதாகி விடாதா?" என்று கேட்டுவிட்டுப் படைத்திருந்த கீரை மசியலைக் கொஞ்சம் நாக்கிலிட்டுச் சுவை பார்த்த

அண்ணாமலைப் பண்டிதர், ''சமையல் மிக அருமை. பொருள் சாதாரணமாக இருந்தாலும், அதை ஆக்கிப்படைக்கிற கை சுவையுடைய தாக்கிவிடுகிறது'' என்றார்.

அன்று தங்கம்தான் சமைத்திருந்தாள். தன்னை அவர் பாராட்டிப் பேசுவதாக எண்ணிக் கொண்டு வெட்கத்துடன் அவள் உள்ளே ஓடிவிட்டாள். ஆனால் அதைக் கவனித்தும் கவனிக்காதவர் போல் பேசாமல் இருந்து விட்டார் அண்ணாமலைப்பண்டிதர். சமைத்தது யார் என்றோ, உள்ளே ஓடிய அந்தப்பெண் யார் என்றோ அவர் விசாரிக்கவேயில்லை. இது தங்கத்திற்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது. ''ஆக்கிய பொருளைப் புகழ்ந்தவர், அதை ஆக்கியவளை அறிந்து கொள்ள விரும்பாதது ஏனோ?'' என்று அவள் மனம் வருந்தியது. நாடெங்கும் புகழ் பெற்ற அந்தப் பண்டிதர், தன்னை மனமாரப் புகழவில்லையே என்று அவள் சிறிது வருத்தப்பட்டாள்.

அண்ணாமலைப் பண்டிதரை இரண்டு மூன்று நாட்களுக்குத் தன் வீட்டில் விருந்தாளியாக வைத்திருந்து பிறகு அனுப்ப வேண்டும் என்று எண்ணித்தான் கந்தசாமி வாத்தியார் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். ஆனால், அவர் இரண்டு மூன்று நாட்கள் ஆனபிறகும் சொல்லிக் கொண்டு போவதாகத் தெரியவில்லை. அதற்காகக் கந்தசாமி வாத்தியாரோ, மரகதமோ, தங்கமோ, வருத்தப் படவில்லை. பண்டிதருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் தங்கம் தான் ஓடியோடிக் கவனித்து வந்தாள். அந்த மனிதர் அதற்காக ஒரு சிறிதாவது நன்றி கூறினாரா என்றால் கிடையவே கிடையாது. ஒரு வாரம் வரையிருந்த பண்டிதர் ஒரு நாள் கந்தசாமி வாத்தியாரை நோக்கிக் கேட்டார். ''கந்தசாமி, கதலிப் பட்டணத்திலே நான் தன்னந் தனியாக இருக்கிறேன். கடைச் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ள வில்லை, கொஞ்சம் உடம்பு தேறுகிறவரை இன்னும்

இரண்டொரு மாதத்திற்கு...'' என்று அவர் சொல்லி முடிக்கு முன்னாலேயே, கந்தசாமி வாத்தியார், ''அதற்கென்ன? நீங்கள் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இங்கேயே யிருங்கள். உங்களைப் போன்ற பெரியவர்கள் இருக்கக் கொடுத்து வைக்க வேண்டுமே!'' என்று சொன்னார்.

''கந்தசாமி! நீ வெள்ளை மனதுள்ளவன். எதற்கும் சரியென்று சொல்லி விடுவாய். எதற்கும் உன் மனைவியையும் கேட்டுச் சொல்லி விடு'' என்றார் பெரியவர். இதை அடுக் களையோரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மரகத அம்மாள், கூடத்திற்குள்ளே வந்து, அண்ணாமலைப் பண்டிதரை ''நீங்கள் என் அண்ணன் மாதிரி. எத்தனை நாள் வேண்டுமானாலும் இங்கேயே இருங்கள். நீங்கள் இங்கிருந்து என்றாவது 'புறப்பட்டுப் போகிறேன்!' என்று சொன்னால் எங்களுக்கு வருத்தமாயிக்குமே தவிர, நீங்கள் இங்கேயேயிருக் கிறேன் என்றால் மகிழ்ச்சியே யடைவோம்'' என்று சொன்னாள்.

விருந்தாளியாகத் தான் அந்த வீட்டுக்குள்ளே நுழைந்தார் என்றாலும், உண்மையில் அண்ணாமலைப் பண்டிதர் அடுத்த ஏழு நாட்களில் அந்தக் குடும்பத்திலேயே ஒருவர் போல் தான் ஆகிவிட்டார். அவர் விடை பெற்றுக் கொண்டு போவதாகச் சொல்லியிருந்தால் கந்தசாமி வாத்தி யாருக்கும் அவர் மனைவிக்கும் வருத்தமாகத்தான் இருந்திருக்கும். இவ்வளவுக்கும் அந்த அண்ணாமலைப் பண்டிதரால் இவர்களுக்கு ஏதாவது ஒத்தாசை உதவி உண்டா என்றால், கிடையாது என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவர் தினந்தோறும் புதிது புதிதாகச் சொல்கின்ற கருத்துக்கள் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. அவர் சொல்லுகிற முறையில் உலகம் திருந்திவிடுமானால் இது எவ்வளவு பெரிய இன்ப உலகமாகத் திகழும் என்று தோன்றியது.

அண்ணாமலைப் பண்டிதரின் கொள்கையே விந்தை யானது, அது ஒரேடியான முன்னேற்றமாகவும் இருக்காது. ஒரேயடியான பின்னேற்றமாகவும் இருக்காது, நாள்தோறும் காலையிலும் மாலையிலும் ஒரு நடராசர் உருவத்தை எதிரில் வைத்துக் கொண்டு, அதை நோக்கியபடி திருவாசகம், திருவருட்பா முதலிய பாடல்களைச் சொல்லித் தொழுகை நடத்துவார். கால்கட்டி உட்கார்ந்து கைகூப்பித் தொழுவார். அந்த உருவத்திற்குப் பூவிட மாட்டார். பூசை செய்ய மாட்டார். நீரோ பாலோ இட்டுத் தலை முழுக்காட்ட மாட்டார். மணியடித்துத் தீபமும் காட்ட மாட்டார். கேட் டால் அவை யாவும் வெளிவேடங்கள் என்பார். ஆண்டவனை வணங்கச் சிலை தேவையா என்று கேட்டால், மனத்தை ஒரு நிலைப்படுத்த அது வேண்டும் என்பார்.

நாள்தோறும் பேசிக் கொண்டிருக்கும் போதே சகுனம் பார்ப்பதைச் சாடுவார்: சோதிடக் குறிபார்ப்பதைக் குறை கூறுவார்; விதி என்பதாக ஒன்று கிடையாது என்பார். இப்படி அவர் புதிது புதிதாகச் சொல்கின்ற கருத்துக்கள் எல்லாம் கந்தசாமி வாத்தியாருக்கும் மரகதத்துக்கும் சரி யான கருத்துக்களாகத் தோன்றும்.

இப்படி அவர்கள் வீட்டகத்திலும் மனத்தகத்திலும் இடம் பிடித்திருந்த அண்ணாமலைப் பண்டிதர் தங்கத்திடம் நடந்துகொண்ட விதம்தான் நேர்மைக்கு மாறானது. அயலாராகிய அவருக்குத் தங்கம் எவ்வளவோ பொறுமை யுடன் பணிவிடைகள் புரிந்து வந்தாள். அவருடைய அறையைக் கூட்டுவது, சாப்பாடு கொண்டு போவது, ஆடை களைத் துவைத்து உலர்த்தி மடித்துக் கொடுப்பது, மாலை வேளைகளில் அவருடன் தோட்டத்திற்கு உலாவப் போவது, இப்படிப்பட்ட வேலைகளை அவள் நாள்தோறும் அவருக் காகச் செய்து வந்தாள். அவரோ, ஏதோ குற்றேவல்காரியை நடத்துவதுபோல், அவள் வேலைகளில் ஓட்டை கூறிக் கோப

மாகக் கடிந்து கொள்வார். அவர் எவ்வளவுதான் கடிந்து கொண்ட போதிலும் தங்கம் சிறிதேனும் முகம் கோணிய தில்லை. அப்பா அம்மாவிடம் குறை சொன்னதுமில்லை.

இப்படியாக இரண்டு மாதம் அங்கு தங்கியிருந்த அண்ணாமலைப் பண்டிதர் கடைசியில் ஒருநாள் தான் போகப் போவதாகச் சொன்னார். இவ்வளவு தூரம் குடும்பத்தில் ஒருவராகப் பழகிய அவரைப் பிரியக் கந்தசாமி வாத்தி யாருக்குச் சிறிது கூட மனமில்லை.

''எங்கள் மேல் உங்களுக்கு என்ன கோபம்? எங்களில் யாரேனும் தவறுதலாக நடந்துகொண்டிருந்தால் சொல் லுங்கள். திருந்திக்கொள்கிறோம். ஆனால் எங்களைவிட்டுப் போவதாகச் சொல்லாதீர்கள். நீங்கள் போய்விட்டால் இந்த வீட்டில் ஒளி குறைந்துவிடும்!'' என்று வேண்டிக் கொண்டார் கந்தசாமி வாத்தியார்.

''சரி. நீங்கள் சொல்வதற்காக வேண்டுமானால் இன்னும் ஒரு வாரம் இருக்கின்றேன்'' என்று சொன்ன பண்டிதர் அந்த ஒரு வாரம் முடிந்த பிறகு, போவதாகச் சொல்லவில்லை. அந்த ஒரு வாரத்திற்கிடையே நடந்த நிகழ்ச்சிகள் அவர் முடிவை மாற்றிக் கொள்ளச் செய்துவிட்டன. காரணம் என்னவோ?

# 4. ஒற்றைக் கையும் உழைத்துப்போடும்

தங்கம் மல்லிகை மொட்டுக்களைப் பறித்துக் கொண் டிருந்தாள். நாள்தோறும் புதிது புதிதாக அரும்புகின்ற அந்த மொட்டுக்களைப் பறித்துச் சென்று அவளும் அவள் தாயும் கோத்துக் கட்டிக் கூந்தலில்வைத்துக் கொள்வார்கள். அதுதான் அவர்கள் செய்து கொள்ளும் அழகு, அலங்காரம் எல்லாம்.

அண்ணாந்து அண்ணாந்து எங்கெங்கே அரும்புகள் இருக்கின்றன என்று எவ்வி எவ்விப் பறித்துக் கொண்டிருந்த போது அவளைப் பார்ப்பதற்கே ஓர் அழகாக இருந்தது. அழகான மான்குட்டியொன்று ஓடாமல் நின்ற இடத்திலேயே துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டிருப்பது போலிருந்தது. அப்படி அவள் துள்ளிக் குதித்தபோதெல்லாம் மாலைச் செம்மை கலந்த வெய்யிலிலே அவளுடைய அழகிய அங்கங் கள் ஒவ்வொன்றும் குலுங்கிக் குலுங்கி ஒய்யார அழகு காட்டி மின்னிக் கொண்டிருந்தன; இப்படித்தன்னை மறந்து அரும்பு சேர்ப்பதே குறிக்கோளாக இருந்த தங்கத்தின் தோளை யாரோ தொடுவது போல் அவள் உணர்ந்தாள். உடனே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். நின்ற ஆளைக் கண்டதும் அவள் திகில் அதிகரித்தது. ஒற்றைக் கையன் நடராசன்-முருகேச வாத்தியாரின் மகன் நடராசன்-அவளைப் பார்த்துக் குறுநகை புரிந்தான்.

குறுநகை புரிந்துகொண்டு நின்றபோது அவனைப் பார்த்தால் எவ்வளவு அழகாக இருந்தது! ஆண்மையின் அழகே உருவெடுத்து வந்து அங்கே சிரித்துக் கொண்டு நிற்பதுபோலிருந்தது. அவனிடமிருந்த ஊனமும் ஈனமும் தெரியாத பேர்களுக்கு அவன் ஓர் அழகரசன் போலவே தோன்றுவான் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவனையும் அவன் உடலமைப்பையும், அவன் மனநிலைமையையும் நன்கு அறிந்து கொண்டிருந்த தங்கத்திற்கு எப்படியிருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

அவள் அவன் ஓர் அங்கவீனன் என்பதற்காகவோ, அரைப் பைத்தியம் என்பதற்காகவோ அவன் மீது அரு வெறுப்புக் கொள்ளவில்லை. ஆனால், அவன் தனக்குப் பார்க்கப்பட்ட மாப்பிள்ளை என்பதை நினைத்துப் பார்க்கும் போதுதான் அவளுக்கு மனச் சங்கடமாயிருந்தது. ஒரு முறை அவனைப் பார்த்தால், அவளுக்கு இரக்மாக யிருந்தது. இன்னொரு முறை அவனைப் பார்த்தால், தன் நிலையை எண்ணி அவள் அஞ்சித் துடிக்க வேண்டியிருந்தது

''நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?'' என்றுகேட்டாள் தங்கம்.

''தங்கம்! நீ மிகமிக நல்லவள். நீ யொருத்திதான் என்னை மரியாதையாக அழைத்துப் பேசுகிறாய். உன்னை எனக்கு மிகவும் பிடித்துப் போயிருக்கிறது. ஏன் தங்கம், நீ எப்போதும் என்னிடம் மரியாதையாக நடந்து கொள் வாயா!'' என்று கேட்டான் அந்த வெகுளி.

''ஏன்? உங்களை யார் அவமானப்படுத்துகிறார்கள்?''

''அதை ஏன் கேட்கிறாய் தங்கம்? இந்த ஊர்ப் பெண் பிள்ளைகள் யாருமே என்னை இப்படி மரியாதையாக அழைப்பதில்லை. சின்னச்சின்னப் பெண்களெல்லாம் கூட என்னை எப்படிப் பேசுகின்றன தெரியுமா? அவன் இவன்

அடே இடே என்று கூடப் பேசுவதில்லை தங்கம். ஏ, ஊய் என்றுதான் என்னை அழைப்பார்கள். என் பெயர் நடராசன் ஆனால் இந்தப் பெண் பிள்ளைகள் ஒற்றைக் கையன் என்று கூப்பிடுகிறார்கள். நீயே சொல்லு தங்கம். எனக்குக்கோபம் வருமா? வராதா? கோபத்தோடு அவர்களை அடிக்கப் போனால், 'அடியே பைத்தியம் ஓடி வருகுதடி' என்று சொல்லிக்கொண்டே கிண்டல் செய்துவிட்டு ஓடிவிடுகிறார் கள். நான் பைத்தியம்தானா? நீயே சொல்லு தங்கம்'' என்று பரிதாபமாகக் கேட்டான் நடராசன்.

"தங்கம், நீயே, சொல்லு, நான் பைத்தியம்தானா?''

''இல்லையே, யார் சொன்னா அப்படி?''

''கமலம் சொல்லுகிறாள்; சுசீலா சொல்கிறாள்; ருக்கு சொல்கிறாள்; இன்னும் எல்லாப் பெண்களுமே சொல்கிறார் கள் தங்கம். எனக்கு ஒற்றைக்கையில்லையாம்; அத்தோடு மூளையும் அடியோடு இல்லையாம். அதனாலே ஒரு பெண் கூட என்னைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டாளாம். ஏன் தங்கம். நீயும் அவர்கள் மாதிரி தானா? என்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டாயா?''

தங்கம் எதுவும் பதில் சொல்லவில்லை.

''ஏன் தங்கம், பேச மாட்டேன் என்கிறாய். நான் சம்பாதித்துச் சோறு போடமாட்டேனா? அதைப்பற்றிக் கவலைப்படாதே தங்கம். உனக்கு என்னென்ன வேண்டுமோ சொல். அவ்வளவும் கொண்டுவந்து குவிக்கிறேன். இந்த ஒற்றைக் கை இருக்கிற வரையிலே உனக்கு நான் உழைத்துச் சம்பாதித்துப் போடாமல் இருக்கவே மாட்டேன். அதிலே மட்டும் நீ கொஞ்சங் கூடச் சந்தேகப்பட வேண்டாம்...' என்று ஏதாதோ பேசிக் கொண்டிருந்தான் நடராசன். தங்கம் அவற்றை மனத்திலே வாங்கிக் கொள்ளவில்லை அப்போது யாரோ தோட்டத்திற்குள் நுழைந்து வருவதைக் கண்ட தங்கம் அந்தத் திசையில் தன் கவனத்தைத் திருப்

பின்னால் ஒரு நவநாகரிக இளைஞன் வந்து கொண்டிருந்தான். காலில் பூட்சு, சில்க் சட்டை, புல் பாண்ட், கிராப்புத் தலை, நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் படியாக வழவழப்பாக வழிக்கப்பட்ட முகம் ஆகிய இவற்றுடன் அவர்களை நெருங்கி வந்த அந்த வாலிபன், தங்கத்தை நோக்கினான்.

தங்கம் அவனை வியப்புடன் நோக்கினாள். அவனை முன்பு எங்கோ பார்த்த மாதிரியாக இருந்தது. ஆனால் எங்கென்று நினைவு வரவில்லை. அவன் யார் என்றும் அவளால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"தங்கம் என்னைத் தெரியவில்லையா?" என்று அவன் கேட்டான்.

குரல்கூட எங்கோகேட்ட மாதிரியாக இருந்தது. ஆனால் தங்கத்தின் நினைவுக்கு அது எட்டி வரவில்லை.

"நீங்கள் யார்? நீங்கள் யார்?" என்று அவள் சொல்லி முடிக்க முடியாமல் திண்டாடினாள்.

"என்ன தங்கம்? அதற்குள் மறந்து விட்டாய்! நான் தான் சுந்தரேசன்!" என்றான் அந்த நவ நாகரிக வாலிபன்.

இதைக் கேட்டதும் "அத்தான்!" என்று ஆனந்தத் தோடு கூவிய தங்கம், அடுத்த வினாடியே தான் ஒரு பருவப் பெண் என்பதை நினைத்துக் கொண்டவள் போல, வெட்கித் தலைகுனிந்து கொண்டாள்.

"இதென்ன வெட்கம்? இங்கே வா தங்கம்!" என்று அவள் தோளைத் தொட்டுத் தள்ளித் தன்னோடு நடந்து வரச் செய்தான் அந்த இளைஞன்.

"அத்தான், ஏது இப்படித் திடீரென்று இந்த ஏழைகள் வீட்டுப் பக்கம்? அப்பாவைப் பார்த்து விட்டீர்களா?" என்று கேட்டாள் தங்கம்.

''மாமாவை இன்னும் பார்க்கவில்லை. வீதி வழியாக வரும் போதே உன்னைப் பார்த்தேன் அப்படியே தோட்டத்திற்குள் வந்துவிட்டேன். உன்னைப் பார்த்து விட்டு அப்புறம் அத்தையையும் மாமாவையும் பார்க்கலாம் என்று நினைத்தேன்.''

''சரி, வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்!'' என்று அவனை அழைத்துக் கொண்டு தங்கம் வீட்டுக்குள்ளே நுழைந்தாள். அவள் தன்னிடம் பதில் எதுவும் பேசாமல் போய் விட்டதை எண்ணி வருந்தி அங்கேயே நின்று கொண்டிருந்தான் நடராசன் என்ற அந்த ஒற்றைக் கையிழந்த இளைஞன்.

வீட்டினுள்ளே தங்கத்தோடு நுழைந்த இளைஞனைக் கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் உடனடியாக அடையாளம் புரிந்து கொள்ளவில்லை. தங்கந்தான் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''அம்மா! அதிசயத்தைப் பார்த்தாயோ? பெரிய சீமான் ஒருவர் இந்த ஏழைகளின் வீட்டைத் தேடி வந்திருக்கிறார்!'' என்று குறும்புத்தனமாகக் கூறினாள் தங்கம்.

மரகத அம்மா அவள் சொல்லுவது என்ன என்று புரியாமல் திண்டாடினாள்.

''என்னம்மா விழிக்கிறீர்கள்? இது யார் தெரியுமா? சுந்தரேச அத்தான்!'' என்று தங்கம் சொன்னவுடனே மரகத அம்மாள் ஓடி வந்து அவனைக் கட்டித் தழுவிக் கொண்டாள். தன் அண்ணன் மகனைக் கண்டதில் அவளுக்கு அத்தனை ஆனந்தம்.

''தம்பீ! நீ இங்கு வந்தது தெரிந்தால் உன் அம்மா மிகவும் வருத்தப்படுவாளே!'' என்று கந்தசாமி வாத்தியார் கூறினார். இரண்டு குடும்பங்களுக்கு இடையே நிரந்தரமான பிளவை ஏற்படுத்தியவள் சுந்தரேசனின் தாய் என்பதை அவர் நன்றாக நினைவு வைத்திருந்தார்.

"அதெல்லாம் அம்மா இப்போ ஒன்றும் சொல்ல மாட்டாள். அவள் நான் என்ன செய்தாலும் கோபப்படவே மாட்டாள்" என்றான் சுந்தரேசன்.

"ஏண்டா, சுந்தரேசம்! உன் கல்யாணத்திற்குத் தான் நாங்கள் வரக் கொடுத்து வைக்கவில்லை. உன் மனைவி எப்படியிருக்கிறாள். குழந்தை குட்டிகள் ஏதாவது?" என்று விசாரித்தாள் மரகத அம்மாள்.

"குழந்தையாவது குட்டியாவது! அவள் தான் ஆறு மாதம்கூட இருக்கவில்லையே!" என்று துயரக் குறியை முகத்தில் வரவழைத்துக் கொண்டு கூறினான் சுந்தரேசன்.

"ஏண்டா, உன் அம்மா அடித்து விரட்டிவிட்டாளா?"

"போ அத்தை! எப்போதும் உனக்கு அம்மாவைப் பிடிக்காது. அவள் இந்த உலகத்தை விட்டே போய் விட்டாள் என்றால்." என்று மேலும் வருந்துபவன் போல் கூறினான் சுந்தரேசன்,

"ஐயோ பாவம்!" என்று வருத்தப்பட்டாள் மரகத அம்மாள்.

சுந்தரேசன் மரகத அம்மாளின் அண்ணன் மகன். அவளுடைய அண்ணன் கயிலாயத்திற்கு இரண்டு மனைவிகள். இளையவளின் கொடுமை தாங்கமாட்டாமல் மூத்தவள் தன் குழந்தையோடு கிணற்றில் விழுந்து இறந்து விட்டதாகக் கேள்வி. இளையாளின் மகன் சுந்தரேசன். இளையவளான சுந்தரேனின் தாய் பெயர் குணவதி. பெயருக்குமாறுபாடான இயல்புடையவள் அவள். யாரோடும் அவள் ஒற்றுமையாக இருந்ததில்லை. அவளால் தான் மரகதமும் தன் அண்ணனுடன் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. அவளுடைய கொடுமை தாங்காமலே, கயிலாயமும் திடீரென்று எங்கோ மறைந்து போய்விட்டார். "மனைவி சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாகில் கூறாமல் சன்னியாசம் கொள்." என்ற

பழமொழி வாக்கியத்தின்படி அவர் சாமியாராய்ப் போய் விட்டதாய்ப் பேசிக்கொண்டார்கள்.

இப்படி நெடுநாளாகத் தங்களோடு ஒற்றுமையில்லா திருந்த குணவதியின் மகன் சுந்தரேசன் தங்கள் வீட்டுக்குத் திடீரென்று வந்திருப்பது கந்தசாமி வாத்தியாருக்கும் மரகத அம்மாளுக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனால், மரகத அம்மாள் அவனைத் தன் அண்ணன் மகன் என்ற கண் ணோடேயே நோக்கினாள். ஆகையால், ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் காட்டிலும்; அன்புடைமையே அவள் உள்ளத்தில் ஓங்கியிருந்தது. கந்தசாமி வாத்தியாரும் பகைமைகளை மறந்துவிடும் பண்புடையவர். ஆகவே சுந்தரேசனுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது அவர்கள் வீட்டிலே.

சுந்தரேசனோடு பேசிக் கொண்டே இருந்ததில் குடும்ப நல விசாரணைகள், பழஞ் சேதிகள், இடைக்காலத்திய நடப்புகள் ஆகியவற்றை விசாரித்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. கடைசியில் சாப்பாட்டு நேரம் வந்து விட்டது. அப்போது தான் அவர்களுக்கு அண்ணாமலைப் பண்டிதரின் நினைவு வந்தது.

'பண்டிதர் எங்கே காணவில்லை?' என்று விசாரித்தார் கந்தசாமி வாத்தியார்.

'சாயுங்காலம் தோட்டத்தின் பக்கமாக உலவி வருவ தாகப் போனார். தங்கம், போய்ப் பெரியவரை அழைத்துவா' என்றாள் மரகத அம்மா.

''நான் சாயுங்காலம் தோட்டத்திற்குத் தானே போயிருந்தேன். அவர் வரக் காணவில்லையே!'' என்றாள் தங்கம்.

''இல்லை அங்கே தான் போவதாகச் சொன்னார். போய்ப் பார்த்து விட்டு வா'' என்றாள் மரகதம்.

தங்கம் தோட்டத்திற்குள் காலடி எடுத்து வைத்தாள். மல்லிகைப் பந்தலின் கீழிருந்து எழுந்த இரண்டு உருவங்களை அவள் கண்டாள். இருட்டில் உருவங்கள் யார் என்று சரியாகக் கவனிக்க முடியவில்லை. அந்த உருவங்களில் ஒன்று தோட்டத்திலிருந்து நேரே வீதிப்பக்கம் செல்லும் கதவை நோக்கி நடந்தது; இன்னொன்று வீட்டை நோக்கி நடந்து வந்தது.

அருகில் வந்ததும் வீட்டை நோக்கி வந்த உருவம் அண்ணாமலைப் பண்டிதர் தான் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது ஆனால் அவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்றது யார் என்பது தெரியவில்லை.

'அது யாராயிருக்கும்? என்று தங்கம் ஒரு கணம் யோசித்தாள். ஆனால், அதையே சுற்றிச் சுற்றி அவள் எண்ணம் வட்டமிடவில்லை. ஏனெனில், பிறர்விஷயங்களில் தலையிட்டுத் துருவிப்பார்க்கும் வழக்கம் தங்கத்திற்குக் கிடையாது. ஆகவே பிறகு அதைப் பற்றியேஅவள் மறந்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சாப்பாட்டிற்காக உட்கார்ந்த போது, முதன் முதலாகச் சந்தித்த அண்ணாமலைப் பண்டிதரும் சுந்தரேசனும் வினாடி நேரம் ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொண்டார்கள். அந்தப் பார்வைகளின் சந்திப்பில், ஏதோ வெறுப்பும் அருவருப்பும் கலந்திருந்ததை மற்றவர்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை.

# 5. பைத்தியத்திற்குப் பண்டிதர் பரிவு

அண்ணாமலைப் பண்டிதரைத் தங்கம் சாப்பிடக் கூப்பிடு வதற்காகத் தோட்டத்திற்குள் நுழைந்த போது மல்லிகைப் பந்தலிலிருந்து கிளம்பிச் சென்ற மற்றோர் உருவம் வேறு யாருமல்ல, ஒரு கை முடவனான அரைப் பைத்தியம் நடராசன்தான். நடராசனோடு தான் அண்ணாமலைப் பண்டிதர் அவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

அண்ணாமலைப் பண்டிதர் அதற்கு முன் அந்த நடராசனைப் பார்த்ததில்லை. தற்செயலாக அன்று தோட்டத்திற்குள் சிறிது காலார உலவிவிட்டு வரலாமென்று புறப்பட்டவர் அங்கே தங்கம் ஓர் இளைஞனோடு பேசிக் கொண்டிருப்பதைக் காண நேரிட்டது.

தங்கத்தின் குணம் அவருக்குத் தெரியும். தங்கத்திடம் அவர் கோபமாகவும் குரூரமாகவும் நடந்து கொண்டு வந்தார் என்றாலும், அவளை எடை போட்டு மதித்து வைத்திருந் தார். ஆனாலும் இளைஞன் ஒருவனோடு அவள் பேசிக் கொண்டு நிற்பதைக் கண்டதும் அவருடைய உள்ளம் துணுக் கென்றிருந்தது.

தங்கம் மணமாகாத இளமைப் பருவத்தினள். அவள் ஓர் இளைஞனோடு பேசிக்கொண்டு நிற்பதென்றால் காண்பதற்கு

அது காதல் காட்சியாகத்தானே தோன்றும். காதல் புரிவதிலே அண்ணாமலைப் பண்டிதருக்கு வெறுப்பில்லை. ஆனால் இந்தக் காலத்துக் காதலிலே அவருக்குப் பெரும்பாலும் நம்பிக்கையில்லை. இந்தக் காலத்திலே பெரும்பாலான காதல் விவகாரங்கள், பெண்களின் சீர்குலைவுக்குத்தான் வழிவகுக்கின்றன என்பது அவருடைய கருத்து.

இந்த வழியில் தங்கம் செல்லுவதாகத் தெரிந்தால் அவளைச் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. எதற்கும் விவகாரத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு அதன் பிறகுதான் தங்கத்தை நயமாகவோ பயமாகவோ சொல்லித் திருத்த வேண்டுமென்று முடிவு செய்தார். அதனால் அவர் மெதுவாக, அவர்கள் அறியாதபடி செடிகளின் மறைவிலே ஒளிந்து சென்று அந்த மல்லிகைப் பந்தலுக்குப் பின்னாலே மறைந்து அமர்ந்து கொண்டார்.

அப்போதுதான் நாம் முன்பு விவரித்த நிகழ்ச்சி நடந்தது. அரைப் பைத்தியம் நடராசன், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி தங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால், தங்கம் அவனிடம் எதுவும் பேசாமல், யாரோ, புதிதாகவந்த இளைஞனோடு 'அத்தான்' என்று அழைத்தபடி ஆனந்தமாகப் பேசிக் கொண்டு வீட்டுக்குள்ளே போய் விட்டாள்.

அவள் 'அத்தான்' என்று அழைத்துப் பேசிய அந்த இளைஞனை யார் என்று தெரிந்து கொள்ள அண்ணாமலைப் பண்டிதர் ஆவல்கொண்டார். ஆனால், அரைப் பைத்தியம் நடராசன் மேல் அவருக்கு அனுதாபமோ அன்போ அல்லது இரண்டுமோ ஏற்பட்டு விட்டது. தன்னை அலட்சியப்படுத்தி விட்டு, நவநாகரிக உடையணிந்த ஓர் இளைஞனோடு தங்கம் போவதை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அந்தப் பையன்மீது அவருக்கு அக்கறை ஏற்பட்டுவிட்டது. ஒளிந்திருந்த இடத்தை விட்டு வெளியில் வந்து, அவன் தோளைப் பற்றி, "தம்பி! என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா, நான் கையில்லாதவனாம்! மூளையில்லாதவனாம் என்னை ஒரு பெண்கூடக் கலியாணம் செய்து கொள்ள மாட்டாளாம். தங்கம் நல்லவள். அவள் என்னிடம் அன்பாகப் பேசினாள்! அவளாவது என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுவாள் என்று நம்பியிருந்தேன். ஆனால் இன்னொருவன் வந்து அவளை இழுத்துக் கொண்டு போய் விட்டானே!' என்று தனக்கே உரிய முறையில் அவரிடம் வருத்தத்தோடு கூறினான் நடராசன்.

இதைக் கேட்ட அண்ணாமலைப் பண்டிதருக்கு இரண்டு கண்களிலிருந்தும் நீர் பொலபொலவென்று உதிர்ந்தது.

"ஐயா! எனக்காக நீங்கள் அழவேண்டாம்." என்று சொல்லி நெருங்கி வந்து அவருடைய தோள் துண்டை எடுத்து அவர் கண்களையும் கன்னத்தையும் துடைத்து விட்டான் நடராசன்.

அண்ணாமலைப் பண்டிதர் அப்படியே அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். "தம்பீ! நான் தங்கத்தைக் கேட்டுப் பார்க்கிறேன். முடிந்தால் அவள் உனக்கே கழுத்தை நீட்டும்படி செய்ய முயல்கிறேன். நீ அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டிரு'' என்று நாத்தழுதழுக்கக் கூறினார்.

பிறகு அண்ணாமலைப் பண்டிதர் நடேசனின் வாழ்க்கை படிப்பு ஆகியவற்றைப் பற்றி விசாரித்தார்! பள்ளிக் கூடத்தில் அவன் ஆறுமாதம் சேர்ந்து படித்ததாகவும், அதன் பிறகு பைத்தியம் என்று சொல்லிப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்படாமல் இருந்துவிட்டதாகவும் கூறினான். 'இனிமேல் நீ தினமும் என்னிடம் வந்து படித்துக் கொள்கிறாயா? மற்றவர்கள் உன்னைப் பைத்தியம் என்று சொல்லாமல் புத்திசாலி என்று சொல்லும்படி செய்து விடுகிறேன்' என்று கேட்டார் பண்டிதர்.

"ஆகா! தினம் வருகிறேன்!" என்று ஒப்புக் கொண்டான் நடராசன்.

பிறகு இருவரும் பிரிந்து செல்வதற்காக எழுந்த போது தான் தங்கம் அவரைச் சாப்பாட்டுக்குக் கூப்பிட வந்தாள்.

சாப்பாட்டிற்காக இலையின்முன் உட்காரும் போது தான் தங்கத்தோடு வந்த இளைஞன் யார் என்று பார்ப்பதற்காக அவர் அவனைக் கூர்ந்து நோக்கினார். அவனும் அவரைக் கூர்ந்து நோக்கினான். வினாடி நேரத்திற்குப் பிறகு அவர்கள் பார்வையை மாற்றிக் கொண்டு விட்டார்கள். சாப்பிடும் பொழுதே, சுந்தரேசனை அண்ணாமலைப் பண்டிதருக்குக் கந்தசாமி வாத்தியார் அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டாரே தவிர, அண்ணாமலைப் பண்டிதர் எதுவும் பதில் சொல்லவில்லை. சுந்தரேசனும் அவரிடம் எதையோ தேடுபவன்போல் அவரை உற்று நோக்கினான். ஆனால் தேடுவது அவரிடம் இல்லையென்று தெரிந்து கொண்டாற் போல் பிறகு அவரைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருந்துவிட்டான்.

மறுநாள் காலையில் விடிந்ததும் விடியாததுமாக முருகேச வாத்தியார், கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு ஓடி வந்தார். கந்தசாமி வாத்தியார் அவரை விஷயம் என்னவென்று விசாரித்தார். அவர் அண்ணாமலைப் பண்டிதரைப் பார்க்க வேண்டுமென்று சொன்னவுடன், அவர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''ஐயா, நீங்கள் என் மகனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னீர்களாம். அரைப் பைத்தியமாயிருக்கிறான்; அவன் எங்கே படிக்கப் போகிறான் என்று நாங்கள் அவனைக் காலாடியாகத் திரியும்படி விட்டுவிட்டோம். ஆனால் உங்களைப் போன்ற மேதைகள் நினைத்ததைச் செய்து முடித்து விடுவீர்கள். ஆனால் நான் சொல்ல வந்த விஷயம் இதுவல்ல. நீங்கள் என் மகனை இங்கே வந்து படித்துக் கொண்டு போகச் சொன்னீர்களாம், உங்களைப்

போன்ற பெரியவர்களுடைய கண்காணிப்பில் இருக்கக் கிடைத்தது அவன் பாக்கியமே. ஆனாலும் ஒரு சின்ன வேண்டுகோள். நீங்கள் தயவு செய்து எங்கள் வீட்டில் கொஞ்ச நாள் தங்கியிருக்க வேண்டும். இதைக் கேட்டுக் கொள்ளத்தான் நான் இங்கே ஓடி வந்தேன். சற்று முன் தான் நடராசன் என்னிடம் இச்செய்தியைச் சொன்னான் என்றார் முருகேசவாத்தியார்.

அண்ணாமலைப் பண்டிதர் ஏதோ யோசித்துக் கொண்டிருப்பது போல் உட்கார்ந்திருந்தார். அவருடைய வாயிலிருந்து என்ன வரப்போகிறதென்று முருகேச வாத்தியார் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

''முருகேசரே! பெரியவர் இங்கேயே இருக்கட்டும். உமது பிள்ளைக்குப் பாடம் சொல்லித் தர வேண்டுமென்பதற்காக அவர் அங்கே வர வேண்டுமென்பதில்லை, எனக்கென்னவோ பண்டிதரைப் பிரிந்திருப்பதென்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. உமது மகனே இங்கு வந்து படித்துக் கொண்டு போகட்டும்'' என்று கந்தசாமி வாத்தியார் கூறினார்.

''அதற்குச் சொல்லவில்லை, நான் எல்லாவற்றையும் யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். கந்தசாமி, உன் மகள் வயது வந்தவள். என் மகனோ பித்துக்கொளி. அவன் அடிக்கடி இங்கேவந்தால் ஊர் வாய் சும்மாயிருக்காது. நாளைக்குக் கலியாணமாக வேண்டிய பெண். அதையும் நினைத்துப் பார்க்க வேண்டுமல்லவா?'' என்று முதல் நாள் மாலை நடராசன் மல்லிகைப் பந்தலருகில் தங்கத்துடன் பேசிக் கொண்டிருந்த விவரத்தை வெளியிட்டார், முருகேச வாத்தியார்.

கந்தசாமி வாத்தியாருக்கு அவர் சொல்வது சரியென்றே தோன்றியது. ஆனால், பண்டிதரைத் தன் வீட்டை விட்டு அனுப்பவும் அவருக்கு மனமில்லை. ஒருவித

மான முடிவுமில்லாத இரண்டுங்கெட்டான் தன்மையான உணர்ச்சியோடு அவர் பண்டிதரை நோக்கினார்.

''நீங்கள் எந்த விஷயத்தைக் குறித்தும் கவலைப்பட வேண்டாம். நடராசனுக்கு இங்கே யிருந்து கொண்டு கல்வி கற்றுத் தரப்போவதில்லை. அதற்காக முருகேசர் வீட்டுக் கும் போய் விடப்போவதில்லை'' என்றார் அண்ணாமலைப் பண்டிதர்.

இரண்டு வாத்தியார்களும் அவர் சொல்லுவதன் பொருள் விளங்காமல் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்படியானால் எங்கேயிருந்து கற்றுத்தரப் போகிறீர் கள்'' என்று கேட்டார் முருகேச வாத்தியார்.

''கதலிப் பட்டணத்தில்'' என்று பண்டிதரின் வாயிலி ருந்து பட்டென்று பதில் வந்தது.

காதலன் பிரியப்போகும் செய்தியறிந்த காதலியின் மன நிலைதான் அப்போது கந்தசாமி வாத்தியாருக்கிருந்தது. பெரியவரைப் பிரிவது, எதையோ இழப்பது போலிருந்தது அவருக்கு. ஆனால் அடுத்தாற்போல் பெரியவரின் வாயிலி ருந்து வந்த வார்த்தைகள் அவர் உள்ளத்தில் தேன் பாய்ச்சின.

''காலையில் கதலிப் பட்டணத்திற்கு நடராசனை அழைத்துக் கொண்டு செல்வேன். மத்தியானச் சாப்பாட்டுக் குத் திரும்பி வந்து விடுவேன்'' என்றார் அண்ணாமலைப் பண்டிதர்.

''அதற்குத் தகுந்தாற்போல் கார் வசதி கிடையாதே!'' என்று இழுத்தார் கந்தாமி.

''மாட்டு வண்டி?'' என்று பண்டிதர் கேட்டார்.

''ஓ! அது எத்தனையோ கிடைக்கும் நான் ஏற்பாடு செய் கிறேன்!'' என்றார் முருகேசர்.

"அதெல்லா நீங்கள் யாரும் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டாம்" என்று பண்டிதர் சொன்னார்.

பண்டிதரின் போக்கே அவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது. முதலாவதாக யாரும் அக்கறை காட்டாத நடராசன் மீது அவருக்கு அக்கறையும் அனுதாபமும் ஏற்பட்டது; இரண்டாவதாகக் கல்வி கற்றுத் தருவதற்கு அவர் கதலிப்பட்டணத்தைத் தேர்ந்தெடுத்தது; மூன்றாவதாக அதற்கு எவ்வித ஏற்பாடும் செய்ய வேண்டாமென்று சொன்னது எல்லாம் சேர்ந்து அவர்களை ஆச்சரியப்படச் செய்தது. அவர் ஒரு விந்தை மனிதராக மட்டுமல்லாமல் மர்ம மனிதராகவும் தோன்றினார்.

கந்தசாமி வாத்தியார் எந்த விஷயத்தையும் ஆழ்ந்து நுணுகிப் பார்ப்பதில்லை. ஆனால் முருகேச வாத்தியார் எந்த விஷயத்தையும் விசித்திரமாகச் சிந்தித்துப் பார்ப்பார். அவருக்கு அண்ணாமலைப் பண்டிதரிடம் ஏதோ ஒரு சக்தியிருக்கிறதென்று தோன்றியது.

தன்னைப் பார்த்தவர்களையெல்லாம் வசப்படுத்தி விடுகிறார். தன் பேச்சைக் கேட்டவர்களையெல்லாம் தான் சொல்லுவது சரியென்று எண்ணச் செய்துவிடுகிறார். இப்போது பைத்தியமாக உள்ள பையனுக்குக் கல்வி போதிப்பதாகச் சொல்லுகிறார். அதற்கு வண்டி ஏற்பாடும் தானே கவனித்துக் கொள்வதாகச் சொல்லுகிறார். இவ்வளவும் செய்யவல்ல இவரிடம் ஏதோ "சித்து" இருக்கிறதென்று முடிவு கட்டினார் முருகேசர்.

இந்த முடிவுக்கு வந்தபிறகு அவர் பண்டிதரிடம் மேலும் பயபக்தியுடையவரானார்.

அவர்கள் மூவருடைய பேச்சும் முடிவுக் கட்டத்தையடைந்தவுடன் முருகேசர் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்

டிற்குச் சென்றார். கந்தசாமி வாத்தியார் பள்ளிப்பிள்ளைகளின் நோட்டுப் புத்தகங்களைத் திருத்தப் போனார். அண்ணாமலைப் பண்டிதர் திருக்குறள் படிக்கத் தொடங்கினார்.

மறுநாள் காலை ஒன்பது மணியடித்தது.

கந்தசாமி வாத்தியார் பள்ளிக்கூடத்திற்குப் புறப்படத் தயாரானார். ''கந்தசாமி, இதோ நானும் வருகிறேன்!'' என்று பண்டிதரின் அறையிலிருந்துகுரல்கேட்டது. கந்தசாமி நின்றார். பண்டிதர் புன்சிரிப்போடு நடந்து வந்தார். ''சரி வா போகலாம்!'' என்று சொன்னவுடன், கந்தசாமியும் அவரைப் பின் தொடர்ந்தார்.

இருவரும் வாசலுக்குவருவதற்கும். அழகான இரட்டை மாட்டு வில்வண்டியொன்று அங்கே வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. ''கந்தசாமி ஏறிக்கொள்! உன்னைப்பள்ளிக் கூடத்தில் விட்டுவிட்டுப் போகிறேன்!'' என்றார் பண்டிதர்.

வண்டியையும், வண்டியோட்டும் ஆளையும் பார்த்து வாத்தியார் பிரமித்துப் போனார், வண்டி கதலிப்பட்டணம் ஜமீந்தார் கருணாகரருடையது, அதை யோட்டி வந்தவன் வேறு யாருமில்லை; அரைப் பைத்தியமான ஒற்றைக் கை நடராசன்தான்.

அண்ணாமலைப் பண்டிதர் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, கந்தசாமி வாத்தியாரையும் ஏறிக் கொள்ளச் சொன்னார். வாத்தியார் பின்புறத்தில் உட்கார்ந்தார். அப்போது சன்னல் வழியாக மரகத அம்மாளும் தங்கமும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வண்டியின் முன்பக்கத்தில் பண்டிதரின் முகமும் நடராசனின் முகமும் அடுத்தடுத்துத் தெரிந்தன. அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்த தங்கத்துக்கு, ஏதாவது உவமானமாகச் சொல்ல வேண்டும் போலிருந்தது.

''அம்மா! அவர்கள் இருவரும் ஒன்றாக இருப்பது எப்படியிருக்கிறது?'' என்று கேட்டாள் தங்கம்.

''அப்பாவும் பிள்ளையும்போல் இருக்கிறது'' என்றாள் மரகத அம்மா.

''இல்லை ஒளியும் இருளும் ஒன்றாக இருப்பதுபோல் இருக்கிறது'' என்று சொன்னாள் தங்கம்.

அதற்கு மரகத அம்மாள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

நடராசன் கயிற்றைத் தளர்த்திப் பிடித்து 'ஹே! ஹே!' என்று மாடுகளை அதட்டினான்.

ஜல் ஜல் என்று மணியடிக்க ஜமீந்தார் வீட்டு வில்வண்டி ஓடத் தலைப்பட்டது.

# 6. திருட்டுப்போன திருவாசகம்

தங்கத்திற்கு அத்தான் சுந்தரேசனைக் கண்டதும் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. சின்ன வயதில் அவனோடு தான் கூடியோடி விளையாடியதெல்லாம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அவன் செய்த போக்கிரித் தனங்களும், தன்னை அழ அழச்செய்து வேடிக்கை பார்த்துச் சிரித்ததுவும். தன்னைத் தலையில் குட்டி விட்டு மாமியிடம் போய்த் தான் அவனைக் கிள்ளிவிட்டதாகக் கோள் சொல்லிச் சண்டை மூட்டி விட்டதும் எல்லாம் மனக்கண் முன் தோன்றின. ஆனால் அத்தான் எவ்வளவு தூரம் மாறிவிட்டார் என்று யோசித்தபோது அவளுக்கு ஆச்சரியம் மேலிட்டது,

போட்ட சட்டையைப் புழுதியாக்கிப் பீத்தலாக்கிப் பார்ப்பதற்கு அழுக்குக் களஞ்சியமாய் மூக்கு வழிய வழிய நிற்கும் அந்த அத்தான் இப்போது எவ்வளவு அழகாக, ஸ்டைலாக, டீக்காக நவநாகரிகமே உருவெடுத்து வந்தது போல் இருக்கிறார்! தன்னை வம்பிழுப்பதே வேலையாக இருந்தவர் இன்று எவ்வளவு மேன்மையான இன்ப மொழிகள் பேசும் இயல்புடையவராகி விட்டார்! உருவத்திலும்; நாகரிகத்திலும் பண்பிலும் இடைப்பட்ட நாட்கள் அவரை எவ்வளவு தூரம் மாறிவிட்டன!

நெடுநாளைக்குப் பிறகு அத்தானை முதன் முதலாகப் பார்த்தவுடனேயே அவள் ஏதோ ஒருவிதமான கவர்ச்சிக்கு ஆட்பட்டவளானாள். 'அத்தான் அத்தான்' என்று அவன் பின்னேயே சுற்றித் சுற்றித் திரியலானாள்.

சுந்தரேசன் சிறுபிள்ளையில் முரடனாயிருந்தான் என்றால் இப்போது கைகாரனாக வளர்ந்து விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். அவன் பார்த்தவுடனேயே தங்கத்தைக் கணக்கிட்டு விட்டான். பதின்மூன்று ஆண்டுகளாகப் பருவக் குறுகுறுப்புடன் தவித்துக் கொண்டிருக்கும் ஓர் இளங்கன்னியான அவள் தன் வசீகரமான பார்வையொன்றுக்கே அடிமையாகி விடுவாள் என்று அவன் நன்றாகப் புரிந்து கொண்டான். தான் வாய்விட்டு அவளைக் கேட்காமலேயே அவள் தனக்குச் சரணாகதியடைய வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான். அவ்வாறு காதல் சரணாகதியடைவாள் தங்கம் என்பதிலே அவனுக்கு அசையாத நம்பிக்கையும் இருந்தது. அந்தப் பேதைப் பெண்ணும் அவனைக் கண்டதுமுதல் அவனையே எண்ணி எண்ணிக் காலங்கழித்தாள்.

முதலில் தங்கம் சுந்தரேசன் மீது தன் காதலைச் செலுத்தப் பெரிதும் தயங்கினாள். அதற்குக் காரணம் அவன் மணமானவன் என்பதே! இன்னொருத்தியின் உடைமையான ஒருவனைத் தான் எண்ணுவதும் தவறு என்ற தமிழ் நாட்டுப் பெண் பண்பு அவளைத் தடுத்தாட்கொண்டது. ஆனால், சுந்தரேசன் தன் மனைவி யிறந்து போய் விட்டதாகச் சொல்லிய பிறகு தங்கத்தின் உள்ளம் அந்த காலியான இடத்தைத் தான் ஏன் ஆக்கிரமித்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணியது. ஆனால், சுந்தரேசன் நிலையையும் அவள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள். சுந்தரேசன் தாயார் குணவதியம்மாளைப்பற்றி நினைக்கும்போது அவள் குலை நடுங்கக் கண்டது.

தானோ, திருமணச் செலவுக்கோ, சீர்வரிசை கொடுக்கவோ சக்தியற்ற நிலையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள். அத்தான் சுந்தரேசனோ பணக்காரர்; மாமா கைலாயம் சேர்த்துவைத்து பணத்திற்கெல்லாம் அதிபதி. அத்துடன் முதல் கலியாணத்தின் மூலம் வந்த வரும்படிவேறு சேர்ந்திருக்கும். அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் உள்ளவர் தன்னை ஏற்றுக் கொள்வாரா என்பது சந்தேகமே. அவர் ஏற்றுக் கொண்டாலும் அவருடைய தாயார் குணவதியம்மாள் சீர்சிறப்பு இல்லாமல் மருமகளாக வரும் தன்னை ஏற்றுக் கொள்ளவே மாட்டாள் என்பது நிச்சயம். இதையெல்லாம் நினைக்கும்போது அத்தானைக் காதலிக்காமல் இருப்பதே மேலென்று தோன்றியது. ஆனால், அந்த மனம்—அது மட்டும் கட்டுப்படக் கூடியதாயில்லையே!

சுந்தரேசன் திடீரென்று தங்கள் வீட்டுக்கு வந்த காரணம் என்னவென்று யாருக்கும் தெரியாது. அவன் நாட்கணக்காய் அங்கு தங்கியிருப்பதும் ஏனென்று தெரியாது. தங்கமோ அதைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. அவளுக்கு எப்போதும் அத்தான் அருகிலேயே யிருக்க வேண்டும்போல் இருந்தது. மரகத அம்மாளுக்குத் தன் மருமகன் விஷயம் புரியாத புதிராக இருந்தபோதிலும், அவன் தன் வீட்டில் தங்கியிருப்பதை அவள் பாரமாக நினைக்கவேயில்லை. கந்தசாமி வாத்தியாரோ இந்த மாதிரி விஷயங்களைக் கருதுவதேயில்லை. ஆனால், குடும்பத்தின் வருவாயோ குறைவு. அதில், நிரந்தரமாக இரண்டு பேர் அதிகப்படியாக வந்து சேர்ந்தது பெருங் கவலையை உண்டாக்கி விட்டது.

கந்தசாமி வாத்தியார் எங்கெங்கோ எப்படி எப்படியோ கடன் வாங்கிக் கொண்டு வந்து செலவுகளிலே தட்டுப்பாடு வராதபடி கவனித்துக் கொண்டார். வந்திருந்த விருந்தினர்கள் இரண்டு பேரும் தன் நிலையைத் தெரிந்து கொள்ளாதபடி நடந்துகொண்டார். தன் மனைவியிடமோ,

மகளிடமோகூட அவர் தம் பொருளாதாரக் கவலையை எடுத்துச் சொல்வது கிடையாது. எப்படியோ காலம் ஓடிக் கொண்டிருந்தது.

தங்கம், தன் தாயாருக்கு வீட்டு வேலைகளில் உதவியாக இருப்பாள். அண்ணாமலைப் பண்டிதருக்குத் தேவையறிந்து பணிபுரிவாள். இந்த வேலைகள் போக மீதியுள்ள நேரத்தில் அத்தான் சுந்தரேசனோடு தோட்டத்திலோ வீட்டிலோ உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பாள்.

அவள் இவ்வாறு தோட்டத்தில் சுந்தரேச அத்தானோடு பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் சில சமயம் நடராசன் வந்து சேருவான். அவன் கேட்கிற கேள்விகளுக்கு தங்கம் அமைதியாகப் பதில் சொல்வாள். ஆனால், சுந்தரேசன் அவனைக் கடிந்து பேசி விரட்டிவிடுவான். தங்கத்திற்குத் தன் அத்தானின் இந்தப்போக்கு வேதனையை உண்டாக்கும். இல்லாதவர்களிடம் இரக்கமும், எளியவர்களிடம் அன்பும் காட்டவேண்டுமென்பது தங்கத்தின் இதயலட்சியம். ஆனால், அத்தான் கருணையற்றவராக இருப்பது அவளுக்குத் துன் பத்தைக் கொடுத்தது. ஆனால், அத்தான்மேல் அவள் கொண்டிருந்த அந்த எண்ணம் மட்டும்—அந்த மயக்கம் மட்டும் மாறவில்லை.

இப்படியாகத் தங்கத்தின் நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

ஒருநாள் அண்ணாமலைப் பண்டிதர் காலையில் நடராசனுடன் கதலிப்பட்டணத்திற்குப் போய் விட்டுத் திரும்பிவந்தார். வந்தவர் சமையற்கட்டில் போய்ச் சாப் பிட்டுவிட்டு மேலே தன் அறைக்குச் சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு தங்கம் வெற்றிலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு சென்றாள்.

அவளைக் கண்டவுடனே அவர் ஒரே கோபமாகப் பேசத் தொடங்கிவிட்டார். வெறிபிடித்தவர் போல் அவர், ''ஏ

தங்கம்? என் சாமான்களையெல்லாம் நீ எதற்காகத் துருவிப் பார்த்தாய்?' என்று கேட்டார். அவர் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன.

''நானா? நான் எதற்குப் பார்க்கிறேன்?' என்று ஒன்றும் புரியாத தங்கம் கேட்டாள்.

''பின்னே, நீதானே என் அறைக்கு அடிக்கடி வருகிறாய். அதோ பார், என் புத்தகங்களெல்லாம் அடுக்கி வைத்த மாதிரியே இல்லை. எல்லாம் தலைகீழாக இருக்கின்றன. நீ எதுவும் படிக்க வேண்டுமானால் என்னைக் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டியது தானே. ஏன், நான் இல்லாத போது, இப்படி?'' என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

இப்போது அவர் குரல் சிறிது இறங்கி இருந்தது.

''இல்லையே! நான் எதையும் எடுக்கவில்லையே!'' என்று சொன்னாள் தங்கம்.

''சரி, சரி, போ. பொய் சொல்லுபவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. என்முன் நிற்காதே!'' என்று அவளை விரட்டினார் பண்டிதர் அவள் கடைசிப் படியில் கூட இறங்கியிருக்கமாட்டாள். அண்ணாமலைப் பண்டிதர் மறுபடியும் அலறும் சத்தம் கேட்டது.

''தங்கம்! தங்கம்; ஏ தங்கம்! இங்கே வா!'' என்று ஆத்திரத்தோடு கூச்சலிட்டுக் கூவியழைத்தார்.

தங்கம் மறுபடியும் மேலே போனாள்.

''தங்கம். இதோ பார். நான் பாராயணம் செய்கிற சின்னத் திருவாசகப் புத்தகத்தைக் காணோம். அது எனக்கு உயிர் மாதிரி, அதை நீ வைத்திருந்தால் கொடுத்துவிடு" என்றார்.

''ஐயோ! எனக்கெதற்குத் திருவாசகம்?'' என்று வருந்தினாள் தங்கம்.

''உனக்குத் தேவையில்லாவிட்டால், வேறு யாருக்கும் தேவைப் பட்டிருக்கும். நீ எடுத்துக் கொடுத்திருப்பாய்!'' என்றார் பண்டிதர்.

''நான் அந்தமாதிரிச் செய்ய வில்லையே. அப்படி யாரும் எனக்கு வேண்டியவரில்லையே என்று பதில்சொல்லி வருந்தினாள் தங்கம்'

அண்ணாமலைப் பண்டிதர் அவள் தான் திருவாசகத்தைத் திருடி விட்டாள் என்று கூச்சலிட்டார். எப்போதும் அமைதியாகக் காணப்படும் அவர் முகம் அன்று அனல் போலச் சிவந்திருந்தது. அப்படி அவர் கத்தவே மரகத அம்மாளும் மேலே போய் என்ன செய்தியென்று அறிய முற்பட்டாள். கடைசியில் மாலை கந்தசாமி வாத்தியார் வந்ததும், அண்ணாமலைப் பண்டிதர் புகார் செய்தார். அவரும் என்ன செய்வது. பண்டிதருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மயங்கினார்.

அப்போதுதான் வெளியில் போய்விட்டுத் திரும்பிய சுந்தரேசன் விஷயம் என்னவென்று விசாரித்துத் தெரிந்து கொண்டு ''பூ இவ்வளவுதானா? இன்னொரு திருவாசகம் வாங்கிக்கொண்டால் போகிறது!'' என்றான்.

''தம்பீ! உனக்கெப்படி அதன் அருமை தெரியும்? அது எங்கள் தாத்தா படித்த திருவாசகம் ஆயிற்றே!'' என்றார் பண்டிதர்.

''சரி இங்கேதான் எங்காவது கிடக்கும். மறந்து எங்கே போட்டீர்களோ? தேடிப் பார்த்தால் கிடைக்கிறது. இல்லாவிட்டால் இன்னொரு புதுப்புத்தகம் வாங்கிக் கொள் கிறது'' என்றான் சுந்தரேசன்.

பிறகு எல்லோரும் திருவாசகப் புத்தக வேட்டையில் இறங்கினார்கள்.

கடைசியில் சாப்பாட்டுக் கூடத்தில் ஒரு சன்னலில் அது இருப்பதைக் கண்டெடுத்தாள் தங்கம்.

"பார்த்தீர்களா! நீங்கள்தான் சாப்பிட வந்தபோது மறந்து இங்கேசன்னலில் வைத்துவிட்டுப்போயிருக்கிறீர்கள்" என்றான் சுந்தரேசன்.

"இல்லை. தங்கம்தான் இங்கே எடுத்து வந்திருக்கிறாள். நான் அடுக்கி வைத்த மாதிரியாகப் புத்தங்களும் இல்லை. கந்தசாமி, உன் மகளைக் கொஞ்சம் கண்டித்து வை" என்றார் பண்டிதர்.

இந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் தங்கத்தின் மனத்தை வெந்து போகும்படி செய்தன.

அன்று இரவு தங்கம் சரியாகச் சாப்பிடவும் இல்லை. சரியாகத் துங்கவும் இல்லை. அண்ணாமலைப் பண்டிதர் குற்றம் சாட்டியதற்காக அவள் வருந்தவில்லை. ஆனால், அவர் தன்னைத் தொடர்ந்து வெறுப்பாக நடத்தி வருவதை நினைத்துத்தான் மிக வருந்தினாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும்-ஏன் ஒரு கை முடவன் நடராசனுக்கும் கூட நல்லவராக இருப்பவர் ஊருக்கெல்லாம் உயர்ந்தவராக இருப்பவர் தன்னிடம் ஏன் எரிந்து விழவேண்டும் என்று நினைத்து வருந்தினாள்.

அண்ணாமலைப் பண்டிதரும் அன்று இரவு சரியாகத் தூங்க வில்லை. ஆனால், அவர் மனம் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தது. திருட்டுப்போன திருவாசகத்தைப் பற்றியே அது திரும்பத் திரும்பச் சுற்றிக்கொண்டிருந்தது போலும்.

# 7. கடிதத்தால் வந்த கடுகடுப்பு

திருவாசகம் திருட்டுப் போய்த் திரும்பி வந்த நாளி லிருந்து அண்ணாமலைப் பண்டிதர் கிறுக்குப் பிடித்தவர் போலிருந்தார். அந்த வீட்டில் இருந்த ஒவ்வொருவரையும் சந்தேகக் கண்ணோடு பார்த்தார்.

இவ்வளவு சீர்திருத்தம் பேசுகிறவர், ஒரு புத்தகம் காரணமாக இப்படி மருக்கொண்டவர்போல் இருக்கிறாரே என்று கந்தசாமி வாத்தியார் ஆச்சரியப்பட்டார். மரகத அம்மாளுக்கும் பண்டிதரின் போக்கு சரிவரப் புரியவில்லை. அண்ணாமலைப் பண்டிதரின் பார்வையைச் சந்திக்கும் போதெல்லாம் தங்கத்திற்கு மனத்திற்குள் கோபமாக இருந் தது. இன்னும் அவர் தன் மேலே கொண்ட சந்தேகத்தை விடவில்லை என்பதை எண்ண எண்ண அவள் இதயம் கொதித்தது. சுந்தரேசனுக்கோ அண்ணாமலைப் பண்டிதரின் கண்களை ஏறெடுத்துப் பார்க்கவே பயமாயிருந்தது. ஏதோ அவருடைய முகத்திலே அபாயக் குறியைக் கண்டவன்போல் அவர் எதிர்ப்படும் போதெல்லாம் விலகித் திரும்பி நடந் தான். பண்டிதர் ஒவ்வொருவர் மீதும் தன் சந்தேகப் பார் வையை நிலை நாட்டிய போதெல்லாம் இப்படிப்பட்ட எதிர் விளைவுகளைக் கண்டார். ஆனால், அவர் வழக்கம்போல் செய்கிற காரியங்களையெல்லாம் வழுவில்லாமல் செய்து கொண்டிருந்தார்.

நாள்தோறும் காலையில் நடராசனுடன் கதலிப் பட்டணத்திற்குப் போய் வந்தார். ஜமீந்தார் வீட்டு வில் வண்டியை வழக்கம்போல் நடராசன் ஓட்டிக் கொண்டு சென்றான். நடராசனுக்கு இருந்த பைத்தியம் பண்டிதருக்குத் திரும்பி விட்டதோ என்றுகூட நினைக்கும்படியாக இருந்தது.

நடராசன் இப்போதெல்லாம் முன்னைப்போல் இல்லை. வரவரத் திருந்தி வந்துவிட்டான். முன்னெல்லாம் வீதியிலே பெண்களோ, சிறுவர்களோ கிண்டல் கேலி செய்தால் அசடு போல அவற்றைக் கேட்டுக் கொண்டு நிற்பான் அல்லது சில சமயம் கோபத்தோடு அவர்களை அடிக்கப் போவான். சில சமயம் யாராவது தன்மீது கல்லையெறிந்தால், கொக்கரித்துக்கொண்டு அதே கல்லை எடுத்துக் கொண்டு அவர்கள் மீது எறிய விரட்டிக்கொண்டு ஓடுவான். பள்ளிப் பிள்ளைகள் பல்லைக் காண்பித்துப் பைத்தியம் என்று சிரித்தால், இவனும் பல்லைக் காண்பித்து நீதான் பைத்தியம் என்று சொல்லிச் சிரிப்பான். இப்போது அப்படியில்லை.

யார் தன்னை என்ன சொன்னாலும், அது காதில் விழாதவன் போல் திரும்பிப் பார்க்காமல் தன்பாட்டுக்கு நடந்து செல்வான். யாரோடும் பேசும்போது முன் போல் கெக்கே பிக்கே என்று உளறாமல், சாந்தமாகவும் பதட்டமில்லாமலும் அமர்ந்து பேசுவான். தன்மேல் யாரும் கல்லையெறிந்தால் கூட கவனிக்காதவன் போல் நடந்து செல்வான். அப்போது அவனைப் பார்த்தால் பெரிய மகான்களைப் பார்ப்பது போலிருக்கும். நடராசனிடம் ஏற்பட்ட இந்த மாறுதல் ஊரில் இருந்த எல்லோரையுமே பெருவியப்பில் ஆழ்த்தியது. கல்வியினால் ஆகாத தொன்றில்லை; அதுவும் அண்ணாமலைப் பண்டிதர் போன்ற அறிஞர்களால் செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை என்று எல்லாரும் எண்ணினார்கள்.

நடராசனுக்குக் கற்றுக் கொடுக்கும் கல்வியை ஏன் நெய்யூரிலேயே இருந்து கற்றுக்கொடுக்காமல், பண்டிதர் கதலிப்பட்டணம் அழைத்துச் செல்லவேண்டும் என்று சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தும் கந்தசாமி வாத்தியாருக்கோ முருகேசருக்கோ உண்மை புலப்படவில்லை. இன்று பைத்தி யத்தைத் தெளிவித்தார். நாளை கையைக்கூட வளரச் செய்துவிடுவார். அவரிடம் ஏதோ 'சித்து' இருக்கிறது என் பதில் சந்தேகமே இல்லை என்று முருகேச வாத்தியார் நினைத்தார். தான் நினைத்ததை எல்லோரிடமும் தெரி வித்தும் வந்தார். அவருக்குத் தன் பிள்ளை நடராசன் திருந்தி வருவதில் அத்தனை ஆனந்தம்!

ஒரு நாள் நடராசனும், அண்ணாமலைப் பண்டிதரும் கதலிப் பட்டணத்தில் இருந்த மருத்துவ மனை அருகில் உள்ள வீதியில் சென்றுகொண்டிருந்தார்கள். அண்ணா மலைப் பண்டிதருக்கு யாரோ தன்னைப் பின் தொடர்ந்து வருவது போல் தோன்றியது. அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தார். ஆனால் அவர் கண்ணுக்கு யாரும் தட்டுப்படவில்லை. எல்லாம் மனப்பிராந்தி என்று நினைத்துக் கொண்டார். ஆனால் ஏதோ ஒன்று அவர் மனத்திற்குள்ளேயே யாரோ தன்னை வேவு பார்க்கிறார்கள் என்று உணர்த்திக் கொண்டிருப்பது போலவே யிருந்தது. எப்படியோ மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டார். இரண்டு பேரும் மருத்துவ மனைக்கு வந்து முன் வாசலில் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் ஒளி மருத்துவம் நடக்கும் பிரிவிற்குப் போனார்கள். அப்போது நடராசன் 'ஐயா! அதோ சுந்தரேசன்!'' என்று சுட்டிக் காட்டினான். சுட்டிக் காட்டிய பக்கம் பண்டிதர் சட்டென்று திரும்பிப் பார்த்தார். சுந்தரேசன் வெகு வேக மாக மருத்துவவிடுதியை விட்டுச் சென்றுகொண்டிருந்தான். அவன்தான் தன்னைத் தொடர்ந்து வந்திருப்பானோ என்று

அண்ணாமலைப் பண்டிதருக்குச் சந்தேகம் ஏற்பட்டது; ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. இருந்தாலும் அவர் அன்று முதல் சுந்தரேசன் மீது ஒரு கண் வைத்துக்கொள்ள ஆரம்பித்தார். பிறர் தன்னை உளவு பார்ப்பது என்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

இப்படி நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் அங்கேயே நிலையாகத் தங்கி விட்டார்கள். கந்தசாமி வாத்தியாரும் யாரிடமும் கடுமுகம் காட்டாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் பிற்பகலில் கதலிப் பட்டணத்திலிருந்து திரும்பி வந்த அண்ணாமலைப் பண்டிதர் வண்டியிலிருந்து இறங்கினார். நடராசன் அவர் இறங்கியவுடன் வண்டியைத் தட்டிவிட்டான். வீட்டு வாசற்படியில் காலடியெடுத்து வைத்த அண்ணாமலைப் பண்டிதர் 'சார் போஸ்ட்' என்ற குரல் கேட்டுத் திரும்பினார். தபால்காரன் இரண்டு கடிதங்களை அவரிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். அவற்றை வாங்கிய அண்ணாமலைப் பண்டிதர் மேல் முகவரியைப் பார்த்தார். இரண்டும் சுந்தரேனுக்குத்தான் வந்திருந்தன. அனுப்பு முகவரியை நோக்கினார். ஒன்றில் கயி. குணவதி, சித்திர நல்லூர் என்றிருந்தது. இன்னொன்றில் அனுப்பு முகவரி குறிக்கப்படவில்லை. ஆனால், அஞ்சல் முத்திரையிலிருந்து சென்னை என்று கண்டுகொள்ள முடிந்தது. இரண்டையும் தன் கையில் இருந்த புத்தகத்திற்கிடையில் வைத்து மறைத்துக் கொண்டு அண்ணாமலைப் பண்டிதர் வீட்டினுள்ளே நுழைந்தார். அப்படி நுழையுமுன் யாரும் தன்னைப் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக்கொண்டார்.

சாப்பிட்டு முடிந்ததும் மேலே தன்னறைக்குச் சென்றவர் அறைக்கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளேயிருந்து கொண்டு

கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்து மிகவும் கவனமாகப் பிரித்துப் படித்தார். குணவதியம்மாளிடமிருந்து வந்த முதல் கடிதத்தைப் படித்தபோது அவர் முகத்தில் ஆச்சரியமும், திகைப்பும், கடுகடுப்பும், நகைப்பும் ஆகிய உணர்ச்சிகள் மாறி மாறிப் படர்ந்தன. ஆனால் உறையில் முகவரி யில்லாத இரண்டாவது கடிதத்தைப் படித்தபோது அவருக்கு ஒரே கோபம் கோபமாக வந்தது. வெறுப்புணர்ச்சி அப்படியே அவர் முகத்தில் தாண்டவமாடியது.

நெடுநேரம் அந்த இரண்டாவது கடிதத்தையே கூர்ந்து நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் எழுந்திருந்தார். குணவதியம்மாளிடமிருந்து சுந்தரேசனுக்கு வந்த கடிதத்தைப் பத்திரமாகத் தம் பெட்டிக்குள்ளே வைத்துப் பூட்டினார். பிறகு மிகவும் கவனமாகத் தான் பிரித்த அந்தக் கடித உறைகளில் அனுப்பு முகவரியில்லாத உறையை எடுத்து அதனுள் கடிதத்தை வைத்து மூடித் தாம் முன்னேற்பாடாகக் கொண்டு வந்திருந்த சோற்றுப் பருக்கையைத் தடவி உறையை ஒட்டி விட்டார், இரண்டு மூன்று முறை தான் அதைப் பிரித்த அடையாளம் தெரிகிறதா என்று திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டார். அவர் தன் வேலையெல்லாம் முடிந்து திருப்திப்பட்டுக் கொண்டிருப்பதற்கும் அறைக்கதவு தட்டப் படுவதற்கும் சரியாக இருந்தது. அவசர அவசரமாக அருகில் இருந்த சோற்றுப் பருக்கையை எடுத்து எச்சிற் பணிக்கத்திற் குள்ளே தள்ளிவிட்டார். பின் தன் கையில் இருந்த கடிதத்தை மெத்தைக்குக் கீழே வைத்து விட்டுக் கதவைத் திறந்தார்.

அங்கே வெற்றிலைப் பெட்டியுடன் தங்கம் நின்று கொண்டிருந்தான்.

தங்கம் கதவுத் துவாரம் வழியாகத் தன்னைக் கவனித் திருப்பாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது பண்டிதருக்கு.

உடனே அவர் மூக்குத் துடித்தது. 'எவ்வளவு நேரமாக இங்கே நின்று கொண்டிருக்கிறாய்?' என்று ஓர் அதட்டு அதட்டினார்.

தங்கம் பொறுமையுடன் ''இப்போதுதான் வந்தேன். வந்தவுடன் கதவைத் தட்டினேன். நீங்கள் தூங்கிக்கொண்டு இருந்திருந்தால் தெரியாமல் அதைக் கலைக்க நேர்ந்ததற்காக மன்னிக்க வேண்டுகிறேன்.'' என்றாள் தங்கம்.

அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்று அவருக்குத் தோன்றியது.

''சரி, வெற்றிலைப் பெட்டியை வைத்துவிட்டுப் போ'' என்றார்.

தங்கம் அவர் கட்டிலில் பெட்டியை வைத்துவிட்டுச் சென்றாள். அவள் ஐந்தாறு படிகூடக் கீழே இறங்கியிருக்க மாட்டாள், அதற்குள் மேலேயிருந்து பண்டிதர் கூப்பிட்டார். ''தங்கம் இந்தத் தபால் உன் அத்தானுக்கு வந்தது. தபால்காரனிடம் நான் வாங்கினேன். உன் அத்தான் வந்தவுடன் இதைக் கொடுத்துவிடு'' என்று உறையை அவளிடம் கொடுத்தார். அவள் பண்போடு அதை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டாள்.

பகலெல்லாம் எங்கெங்கோ வெளியில் சுற்றிவிட்டு சுந்தரேசன் மாலை நேரத்தில் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். காப்பி குடித்த பிறகு தங்கமும் சுந்தரேசனும் தோட்டத்திற்குள்ளே சென்றார்கள்.

''அத்தான் உங்களுக்கொரு கடிதம் வந்திருக்கிறதே!'' என்றாள் தங்கம்.

''யாரிடமிருந்து தங்கம்?''

'அதுதான் தெரியவில்லை. ஆனால் சென்னைத் தபால் முத்திரை இருக்கிறது!'' என்றாள்.

சென்னை என்றவுடனே சுந்தரேசனின் முகம் கருத்தது. ஆனால் சட்டென்று அதைச் சமாளித்துக் கொண்டான். தன் இரவிக்கை இடுக்கில் இருந்த கடிதத்தை எடுப்பதில் முனைந் திருந்த தங்கம் அவன் முகமாறுபாட்டைக் கவனிக்கவில்லை.

கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள் தங்கம். அதற்குள், மரகத அம்மாள் 'தங்கம், தங்கம்'' என்று அவளைக் கூப்பிடும் சத்தம் கேட்டது. தங்கம் போய் விட்டாள்.

சுந்தரேசன் பரபரப்போடு அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அதைப் படிக்கப் படிக்க அவ னுக்கு ஆத்திரமும் கோபமும் அச்சமும் பீதியும் ஏற்பட லாயின. இதற்குள் திரும்பி வந்த தங்கம் அத்தான், அடுத்த வீட்டு ராதாவோடு கோயிலுக்குப் போய் வருகிறேன், என்று சொல்லி விட்டுச் சென்றுவிட்டாள். நல்ல வேளை! அவள் தன்னைக் கவனிக்கவில்லை. இல்லாவிட்டால், தன் னிலையைத் தன் முகமே காட்டிக் கொடுத்திருக்கும் என்று எண்ணிக் கொண்டான்.

சுந்தரேசன் அந்தக் கடிதத்தைச் சுக்குச் சுக்காகக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தான். அப்போது அங்கே வந்து சேர்ந்தார் அண்ணாமலைப் பண்டிதர். அவரைக் கண்டதும் அவன் தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ள முயன்றான். ஆனால் முடியவில்லை.

''என்ன தம்பீ! ஒரே வாட்டமாயிருக்கிறாயே? இது என்ன? ஏதோ கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டாய் போலிருக்கிறதே!'' என்று அவர் கேட்டார்.

# 8. இலண்டனுக்கும் போய் வருவேன்

பொதுவாக சுந்தரேசனும் அண்ணாமலைப் பண்டிதரும் ஒருவரிடம் ஒருவர் நடந்துகொண்டதைப் பார்த்தால் ஒருவரைப் பற்றிய ரகசியத்தை மற்றவர் அறிந்துகொண்டதைப் போலவும், அதை ஒருவருக்கொருவர் வெளிக் காட்டிக் கொள்ளாததைப் போலவும் இருந்தது. சுந்தரேசன் பண்டிதருடைய உண்மையைத் தான் அறிந்திருப்பதாக எண்ணிக் கொண்டான். ஆனால் தன்னைப் பற்றி அவர் இதுவரை தெரிந்து கொள்ளவில்லை யென்றும், இனிமேல் தெரிந்துகொண்டு விடாதபடி சிறிது காலம்வரை பார்த்துக் கொள்ள வேண்டும் மென்றும் தீர்மானித்துக் கொண்டான். அண்ணாமலைப் பண்டிதரோ முதலில் சுந்தரேசனைப் பற்றிச் சந்தேகம் மட்டுமே கொண்டிருந்தார். இப்போது அந்த இரண்டு கடிதங்களையும் படித்துப் பார்த்த பிறகு அந்தச் சந்தேகமெல்லாம் உண்மையென்று நன்றாகத் தெரிந்துகொண்டார். அத்தோடு அவன் தன்னைக் கண்டு கொண்டான் என்பதையும் தெரிந்து கொண்டார். ஆனால் அவனிடம் தான் எதுவும் தெரிந்துகொள்ளாதது போலவே நடந்துகொண்டார்.

மல்லிகைப் பந்தலின் அடியில் சுந்தரேசன் கிழித்துப் போட்ட கடிதத்தைப் பற்றி அவர் கேட்டவுடனேயே அவன்

கலங்கிப் போனான். ஆனால், உணர்ச்சிகளை உடனுக்குடன் மாற்றி மறைத்துக்கொள்ளும் கலையில் வல்லவனான சுந்தரேசன் சட்டென்று தன் திகைப்புணர்ச்சியைக் குறைத்துக் கொள்ள முயன்றான். ஆனால், அதற்குள் அவனுக்கு வேறொரு புது யோசனை உதயமாகியது. அப்படியே கவலையுணர்ச்சியைத் தன் முகத்தில் சற்றேனும் மாறாமல் மறையாமல் கூடாமல் குறையாமல் தேக்கி வைத்துக் கொண்டு மெதுவான குரலில், என் 'கஷ்டத்தை நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?' என்றான்.

பெற்ற தகப்பனிடமே கற்ற வித்தையைக் காட்டும் பிள்ளையைப் போலத் தன்னிடம் சுந்தரேசன் நடிக்கிறான் என்பதை அறிந்த அண்ணாமலைப் பண்டிதர் அவனைக் காட்டிலும் அருமையாக நடித்தார்.

"தம்பீ! அப்படி உனக்கென்ன கஷ்டம்? என்னிடம் தாராளமாகச் சொல் என்னால் முடிந்தால் நான் உனக்கு எத்தகைய உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்" என்றார்.

"ஐயா' நீங்கள் தமிழாசிரியர். உங்களிடம் நூல்களை வேண்டு மானால் கேட்கலாம். புத்திமதிகளை எதிர்பார்க்கலாம். உடல் உழைப்பினால் வரக்கூடிய உதவி ஒத்தாசையை வேண்டுமானால் பெறலாம். ஆனால் எனக்கு வேண்டியது இவையெல்லாம் அல்லவே" என்றான்.

"தம்பீ, உள்ளதைச் சொன்னால் அல்லவா விளங்கும். பணம் எதுவும் வேண்டுமானாலும் நான் உனக்குத் தயார் பண்ணித் தர முடியும்" என்று குசுகுசுத்த குரலில் சொன்னார்.

சுந்தரேசனும் அவரை உற்று நோக்கினான். ஒருவேளை அவருக்குத் தன்னைப் பற்றித் தெரிந்திருக்குமோ, தெரிந்து கொண்டே ஆழம் பார்க்கிறாரோ என்று வினாடி நேரம்

சந்தேகம் தோன்றியது. ஆனால் பண்டிதர் எங்கோ ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருந்தார். அங்கே காணப் படாத நட்சத்திரங்களை அவர் தேடிக்கொண்டிருப்பது போலிருந்தது. அவருடைய முகத்தில் அவன் சந்தேகப்படும் படியாக எந்தக் குறியும் தென்படவில்லை.

''பண்டிதரே! பத்து அஞ்சு என்றால் நீங்கள் தயார் பண்ணிக் கொடுக்க முடியும், ஆனால் எனக்கு வேண்டியது பெருந்தொகை. மிகப் பெருந்தொகை!'' என்றான் சுந்தரேசன்.

''தொகையைத்தான் சொல்லேன், முடியுமா என்று பார்க்கிறேன்.''

''இரண்டாயிரம் ரூபாய்!'' என்றான் சுந்தரேசன்.

'பூ! இரண்டாயிரம் ரூபாய் தானா?' என்று சட்டென்று கேட்ட பண்டிதர் பிறகு விழித்துக் கொண்டவர்போல், ''ஆமாம், ஏன், தம்பீ! இவ்வளவு பெரிய தொகை எதற்கு? ஏதேனும் வியாபாரம், ஆரம்பிக்கப் போகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை, பண்டிதரே. என் நண்பன் ஒருவனிடம் அவசரத் திற்குக் கடன் வாங்கியிருந்தேன். அவன் இப்பொழுது திருப்பிக் கேட்கிறான். என் கையிலோ பணமில்லை. என் தாயாரிடம் வாங்கிக் கொடுக்கலாம் என்றாலும் இப்போது முடியாது. வயல் விளைந்து வந்தால்தான் அவள் கையில் பணமிருக்கும். அவனோ இப்போது மிக அவசரமாகக் கேட்கிறான். என்ன செய்வதென்று புரியவில்லை'' என்று ஒரு பச்சைப் புளுகை அளந்துவிட்டான் சுந்தரேசன்.

''உன்னைப் போன்றவர்கள், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லா விட்டால் கவலையாகத்தான் இருக்கும். தம்பீ! எனக்குத் தெரிந்த ஒருவரை உனக்குப் பணம் தரச் சொல்லுகிறேன். ஆனால், அதற்கு நீ சென்னை போக வேண்டும்'' என்றார் பண்டிதர்.

''ஐயா! சென்னை யென்ன, இலண்டனுக்கே வேண்டுமானாலும் போய் வருகிறேன். என்னுடைய இக்கட்டுத் தீர்ந்தால் போதும்'' என்றான் சுந்தரேசன்.

''சரி, இந்தப் பணத்தை எப்போது தம்பி, திருப்பித் தருவாய்?'' என்று கேட்டார் பண்டிதர்.

திருப்பிக் கொடுக்கும் எண்ணம் சுந்தரேசனுக்குக் கொஞ்சம் கூடக் கிடையாது. இருந்தாலும் ''நெல் விளைந்து வரட்டும் தை மாதம் கொடுத்து விடுகிறேன்'' என்று சத்தியவான் அரிச்சந்திரன் பரம்பரைபோல் சொன்னான்.

''சரி, தம்பி நீ எப்போது சென்னைக்குப் புறப்படுகிறாய் என்று சொல். நான் என் நண்பருக்குக் கடிதம் கொடுக்கிறேன். நீ அதைக் கொண்டுபோய்க் காட்டிப் பணம் வாங்கிக் கொள்ளலாம்'' என்றார் பண்டிதர்.

சுந்தரேசனுக்கு ஒரு சின்ன சந்தேகம் எழுந்தது.

''பண்டிதரே; கையிலிருக்கிற காசைச் செலவழித்துக் கொண்டு பட்டணத்திற்குப் போய் அங்கு பணம் கிடைக்காவிட்டால்...?'' என்றான்.

''தம்பி! ஏதோ கஷ்டத்தில் இருப்பவனுக்குச் சமயத்தில் உதவி வைப்போமே யென்றுநான் முன்வந்தேன். உனக்குச் சந்தேகமாக இருந்தால் போகவே வேண்டாம். எனக்கும் பொறுப்பு விட்டதுபோலிருக்கும்'' என்று வெறுப்பான குரலில் பேசினார் அண்ணாமலைப் பண்டிதர்.

சுந்தரேசனுடைய சந்தேகம் பறந்துபோய் விட்டது.

''ஐயா, மன்னிக்க வேண்டும். உங்களைப் புரிந்து கொள்ளாமல்பேசிவிட்டேன். கோபித்துக் கொள்ளக்கூடாது'' என்று கெஞ்சினான் சுந்தரேசன்.

''சரி, தம்பீ. நீ எப்போது சென்னைக்குப் புறப்படுறாய்'' என்று வெடுக் கென்று கேட்டார் பண்டிதர்.

''நாளைக்கு'' என்று மேலும் குழைந்து கொண்டே சொன்னான் சுந்தரேசன்.

''சரி' நான் என் நண்பருக்குக்கடிதமெழுதி வைக்கிறேன். நீ நாளை அதை வாங்கிக்கொண்டு போய்வரலாம்'' என்றார் பண்டிதர்.

சுந்தரேசன் அப்போது அவரைப் பார்த்த பார்வையில் நன்றியுணர்ச்சி அப்படியே ததும்பி வழிந்தது என்று சொல்லலாம். ஆனால், மனத்திற்குள்ளே தான் அவரை ஏமாற்றிவிட்டதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.

# 9. புளியமரத்து ராக்கப்பன்

அடுத்த வீட்டு ராதாவும் தங்கமும் கோயிலுக்குப் போய்த் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். சென்ற வழியாகவே திரும்பி வந்துகொண்டிருந்தபோது ஒரு சந்து முனைக்கு வந்ததும் ராதா, தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள். அவள் தன்னை நிறுத்திய காரணம் புரியாமல் தங்கம் ராதாவை நோக்கினாள்.

''தங்கம், நாம் இந்தப் பாதையாகப் போக வேண்டாம். மேட்டுத் தெருப்பக்கமாகப் போகலாம்'' என்றாள் ராதா.

''இந்தச் சந்தில் போய்த் திரும்பினால் நம் வீதி வந்துவிடும். மேட்டுத் தெரு போய்த் திரும்புவ தென்றால் மூன்று வீதி தாண்டி வர வேண்டுமே!'' என்று சலித்துக் கொண்டாள் தங்கம்.

''மூன்று வீதி தாண்டி நடந்தால் கால் வலியோடு போகும். அதைப் பார்த்தால் இந்தச் சந்தில் போய் என்னமும் ஆகிவிட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டாள் ராதா.

''என்ன ஆகும்?'' புரியாமல் தான் கேட்டாள் தங்கம்.

''என்ன ஆகுமா? ஏண்டி தங்கம். நீ இந்த ஊரில்தான் இருக்கிறாயா? இந்தச் சந்தின் அந்த முனையிலே இருக்கிறதே

புளிய மரம். அந்தப் புளிய மரத்திலே.. ராத்திரி நேரத்தில் அந்தப் பக்கம் போகக் கூடாதடி. அதுவும் பெண் பிள்ளைகள் தனியாகப் போனால் அது வசமாகப் பிடித்துக் கொண்டு விடுமாம்'' என்று நடுநடுங்கிக் கொண்டே சொன்னாள் ராதா.

இதைக் கேட்டுத் தங்கம் சிரித்தாள். அவள் குரலோடு இன்னொரு குரலும் சேர்ந்து சிரிப்பது போலிருந்தது. இரு பெண்களும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

''பயப்படாதீர்கள்''! நான் புளியமரத்துப் பிசாசல்ல. சாதாரண மனிதன் நடராசன்தான்!'' என்று சொல்லிக் கொண்டு நெருங்கி வந்தான் நடராசன்.

''நானும் இந்தச் சந்து வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது நீங்கள் பயப்படாமல். என்னோடு வரலாம்'' என்று முன் நடந்தான் நடராசன். இரண்டு பெண்களும் அவனைப் பின்தொடர்ந்தார்கள். தங்கத்திற்குப் பிசாசைப்பற்றிப் பயமேயில்லை. ஆனால், ராதாவிற்கு உள்ளே நெஞ்சு திகுதிகுவென்றுதான் இருந்தது.

நடராசன் ராதா பக்கம் நோக்கி, ''ராதா, புளிய மரத்துக்குப் பிசாசு எப்படி வந்தது? கொஞ்சம் சொல் பார்க்கலாம்'' என்று கிண்டலான குரலில் கூறினான்.

''இந்த இடத்தில் நான் அதைச் சொல்லமுடியாது'' என்று பயத்தோடு கூறினாள் ராதா.

''அப்படியானால், அந்தப் புளியமரத்தடியிலேயே சொல்கிறாயா!'' என்று கேட்டான் நடராசன்.

''பைத்தியம்! பைத்தியம்! இன்ன இடத்தில் இன்னது தான் பேச வேண்டுமென்று தெரியாது உனக்கு'' என்று கடிந்துகொண்டாள் ராதா.

''ஐயோ! பைத்தியமாம் பைத்தியம்! யாருக்குப் பைத்தியம் இத்த ஊரிலே எத்தனையோ பைத்தியங்கள் இருக்கின்றன. பணப்பைத்தியம், பதவிப் பைத்தியம், பெண்பைத்தியம், சோஸ்யப் பைத்தியம், சாஸ்திரப் பைத்தியம், சகுனப் பைத்தியம், பிசாசுப் பைத்தியம், இப்படி எத்தனையோ இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு எல்லோரும் என்னைப் பைத்தியமென்கிறார்கள். நீ ஒரு பிசாசுப் பைத்தியம், நீ பார்த்து என்னைப் பைத்தியமென்றால் எப்படி?'' என்று உள்ளுக்குள்ளே தனக்கிருந்த கோபத்தையடக்கிக் கொண்டு நிதானமாகக் கேட்டான் நடராசன்.

''அடி ஆத்தே! இவனுக்கு இவ்வளவு பேசத் தெரிந்தது எப்படியடி தங்கம்?'' என்று வியப்புடன் கேட்டாள் ராதா.

''ராதா! இப்போது இவருக்குப் பைத்தியமில்லை. அதெல்லாம் தெளிந்துவிட்டது'' என்று அவள் காதுக்குள் கூறினாள் தங்கம். நடராசன் முன்பு பைத்தியமாயிருந்தான் என்றுகூட அவன் முன்னால் சொல்ல அவளுக்கு ஏனோ நாவெழவில்லை.

''ராதா! நல்லதுக்குத்தான் கேட்கிறேன். அந்தப் பிசாசு வந்த கதையைக் கொஞ்சம் சொல்லேன், இங்கேயே நின்று வேண்டுமானாலும் சொல். நீ சொல்லி முடித்ததும் நாம் நடக்க ஆரம்பிக்கலாம்'' என்றான் நடராசன்.

''சொல்லடி, அவர்தான் கூட இருக்கிறாரே! என்ன பயம்?'' என்று தங்கமும் ஊக்கப்படுத்தினாள்.

ராதா சொன்னாள்.

''நம் ஊரிலே ராக்கப்பன் என்று ஒருவன் இருந்தான். அவன் சின்ன வயதிலேயே திருட்டு, குடி, சூது என்று கெட்டலைந்தான். கடைசியில் அவனுக்குக் கலியாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தி வாழவேண்டுமென்று தோன்றியது. ஆனால், ஊரிலே ஒருவர்கூடப் பெண் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அவன்

தான் திருந்தி வாழுவதாகக் கோயிலிலே சத்தியம் பண்ணிக் கொடுப்பதாகக் கூறியும்கூட எந்தப் பெண்ணும் அவனைக் கட்டிக் கொள்ள முன் வரவில்லை. இதனால் துக்கமடைந்த அவன், இந்தப் புளிய மரத்திலே ராத்திரி நேரத்திலே வந்து தூக்குப்போட்டு மாட்டிக்கொண்டு செத்துப்போய்விட்டான். இப்போது ஆவியுருவத்தில் இருந்து கொண்டு தினமும் ராத்திரி நேரத்தில் ஆண்துணையில்லாமல் தனியாக வரும் பெண்களைப் பிடித்துக் கொள்கிறானாம்'' என்றாள் ராதா.

''இதுவரை யாரையும் அவன் பிடித்திருக்கிறானா?''

''இல்லை, சில பேரைப் பயமுறுத்தியிருக்கிறான். அவர்கள் பயந்து காய்ச்சலாகக் கிடந்திருக்கிறார்கள். பெரும்பாலும் பெண்கள் இந்த வழியாகப் போவதே யில்லை.''

''சரி, பயந்து காய்ச்சலானவர்களை என்ன செய் வார்கள்.''

''கோயில் குருக்களையாவிடம் கூட்டிச் செல்வார்கள். அவர் விபூதிமந்திரித்துக் கொடுப்பார். பிறகு காய்ச்சல் நின்று குணமாகி விடும்'' என்றாள் ராதா.

''ராதா, நான் சொல்வதைக் கவனி. ஆவி என்பதாக ஒன்று கிடையாது. வெளியில் உள்ள காற்றுத்தான் நம் மூக்கின் வழியாக உடலுக்குள்ளே போய்ப் போய் மீள்கிறது. இதைத்தான் மூச்சு விடுதல் என்கிறோம். உடம்பு நன்றாக இருக்கும் வரை மூச்சு ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும். உடம்புக்குக் கோளாறு என்றால் மூச்சு ஓட்டத்தின் வேகமும் மாறி விடும். இந்த மூச்சு ஓட்டம் நின்று போனால்தான் மனிதன் செத்துப்போகிறான். அவன் எப்படிப்பட்ட சாவை யடைந்தாலும் மூச்சு நின்றதும் மூக்கில் ஓடிக்கொண்டிருந்த காற்று, காற்றோடு காற்றாகக் கலந்துவிடுகிறது. அது ஆவியாகவோ பிசாசாகவோ அலைவதோ திரிவதோ

கிடையாது. ஒருவன் தூக்குப் போட்டுக் கொண்டு செத்துவிட்டால் அவன் பிசாசாகி விடுகிறான் என்பது நம் கற்பனைதான். இந்தக் கற்பனையை உண்மை யென்று நம்புவதால்தான் நாம் அந்த இடத்தில் செல்லும்போது பயத்தோடுசெல்கிறோம். அவ்வாறு பயத்தோடு செல்வதால் அந்த இடத்தை யடைந்ததும் அது அதிகரித்து நம்மை அதிர்ச்சியடையச் செய்துவிடுகிறது. இதனால் தான் காய்ச்சல், நடுக்கம் எல்லாம் உண்டாகின்றன. பூசாரி விபூதி மந்திரித்தவுடன் பிசாசு நம்மை விட்டு நீங்கி விடுவதாக நம்பி மனந்தெளிகிறோம். நம் நோயும் பறந்து விடுகிறது. தெரிகிறதா என்று கேட்டான் நடராசன்.

''தெரிகிறது' என்று ராதா சொல்லி வாய் மூடுமுன் திடீரென்று அந்தச் சந்தின் மறு கோடியிலிருந்த புளியமரத்தின் கிளைகள் பலமாகக் குலுங்கிய சத்தமும், அதன் பழங்கள் உதிர்ந்து விழுகிற ஓசையும் கேட்டன.

''ஐயோ! பிசாசு!'' என்று கத்திக் கொண்டே ராதா நடராசனைப் பிடித்துக் கொண்டாள். ''ஆ!'' என்று கூவிக் கொண்டே தங்கமும் அதிர்ச்சியுடன் அவனைத் தழுவினாள். சட்டென்று ஏற்பட்ட அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பிரமித்து நின்ற நடராசன் அவர்கள் இருவரையும்தாங்காமல் சாய்ந்து தரையில் வீழ்ந்தான். அவனோடு அந்தப் பெண்களும் வீழ்ந்து மூர்ச்சையடைந்து போனார்கள்.

கீழே விழுந்த நடராசன் தன்னைத் தானே நம்ப முடியாத அளவு திகைத்துப் போயிருந்தான். விழுந்து கிடந்தபடியே சுற்றிச் சூழ்ந்திருந்த இருட்டை உற்று நோக்கினான். அவன் கண்ணுக்கு எதுவும் புலப்பட வில்லை. ஆனால், அவன் காதிலே தான் அந்தப் புளிய மரத்தின் கிளைகள் விட்டு விட்டுக் குலுங்கிக் கொண்டிருந்த ஓசை கேட்டது. அவன் திக்பிரமை பிடித்தவன் போல் ஆனான். கிடந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவும் பயமாயிருந்தது.

பக்கத்திலே விழுந்து கிடந்த அந்தப் பெண்களோ மூச்சுப் பேச்சற்று இந்த உலக நினைவே இல்லாதவர்களாக அசைவற்றுக் கிடந்தார்கள். நடராசனுக்கும் பயம் கொண்டு விட்டது. சிறிது சிறிதாக அவன் உள்ளத்திலே பீதி அதிகரித்துக் கொண்டு வந்தது. இந்த நிலையே நீடிக்கு மானால், அவனும் அந்தப் பெண்களின் கதியை அடையக் கூடிய நிலை உருவாகிக் கொண்டிருந்தது. அப்போது மறுகோடியில் ஒரு லாந்தர் விளக்குத் தோன்றியது. அதைக் கண்ட பிறகுதான் நடராசனுக்கு உயிர் வந்தது போல் இருந்தது. விளக்கைக் கண்டால் அல்லது நெருப்பைக் கண்டால் பிசாசு ஓடிவிடும் என்று சொல்வார்களே என்று நினைத்துக்கொண்டுஅவன் மெல்ல எழுந்திருந்தான்.ஆனால் மறு பக்கத்திலிருந்து விளக்கொளி நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்ததே தவிர, புளிய மரத்தின் ஆட்ட ஓசை நிற்க வேயில்லை. காற்றில்லாத நேரத்திலே, அதுவும் மரத்தின் ஒன்றிரண்டு கிளைகள் மட்டுமே அப்படி ஆடுவது என்றால் அது எப்படி முடியும். அது பிசாசாகத்தான் இருக்க வேண் டும். ஆனால் அது நெருப்பைக் கண்டு ஓட்டம் பிடிக்கக் காணோமே! இவ்வாறு நடராசன் மனம் அப்படியும் இப்படி யும் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்த விளக்கொளிமரத்தையடைந்தது. மரக்கிளைகள் குலுங்கும் ஓசையும் நின்றது. அதைத் தொடர்ந்து பழங்கள் உதிரும் ஓசையும் நின்றது. அதே சமயத்தில் நடராசனின் காதில் இந்தப் பேச்சுக்குரலும் தெளிவாக விழுந்தது.

'முனியா, சீக்கிரம் இறங்கி வா. யாரும் வருவதற்குள் பழங்களையெல்லாம் பொறுக்கிக் கொண்டு போய்விடலாம்,"

"இதோ வருகிறேன் காத்தா. சாக்குக் கொண்டு வந்திருக்கிறாயல்லவா?"

யாரோ மரத்திலிருந்து சரசர வென்று இறங்கும் ஓசை கேட்டது.

நடராசன் புரிந்து கொண்டான். மரத்தைக் குலுக்கியது ஆவியுலகத்து ராக்கப்பனல்ல பூலோகத்து முனியன்தான். காத்தனும் முனியனும் புளியம்பழம் களவாட வந்திருக்கின்றனர் என்ற விஷயம் அவனுக்கு விளங்கி விட்டது.

அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது! ''ஆ! களவாடி; களவாடி!'' என்று கத்தினான்.

அவ்வளவுதான். காத்தனும் முனியனும் காற்றாய்ப் பறந்தார்கள். அவர்கள் ஓடிய வேகத்தில் புளியம்பழம் அள்ளக் கொண்டு வந்திருந்த சாக்குப் பைகளையும் லாந்தர் விளக்கையும் விட்டுவிட்டுப் போனார்கள். நடராசனுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த பயமும் தெளிவடைந்தது. சற்றுமுன் கத்துகின்ற போது கூட, எங்கே அந்தத் திருடர்கள் தன்னைத் தாக்குவார்களோ என்ற பயம் இருந்தது. இப்போது அதுவும் பறந்து போய்விட்டது. ஒரு மனிதனுடைய குரலுக்குப் பயந்து ஓடுகின்ற அந்த உருவங்கள் பிசாசாக இருக்க முடியாதென்று அவன் நிச்சயமாக எண்ணினான். லாந்தர் விளக்கை அந்தத் திருடர்கள் விட்டுவிட்டுப் போனது அவனுக்கு இன்னொரு வகையில் நல்லதாகத் தோன்றியது. அந்தப் பெண்கள் இருட்டில் கண் விழித்தால் எதிரில் தெரிகிற உருவமெல்லாம் பிசாசாகவே தோன்றக் கூடும்; அதனால் அவர்கள் பயந்து அலறக்கூடும்; மறுபடி மூர்ச்சித்து விழவும் கூடும். அவன் மெல்ல எழுந்து நடந்து சென்று அந்த லாந்தர் விளக்கை எடுத்துக் கொண்டு வந்தான். அந்தப் பெண்கள் படுத்திருந்த இடத்தின் அருகில் அதை வைத்தான். அதன் பிறகு என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

அவர்கள் மூர்ச்சை தெளியும் வரை அங்கேயே இருப்பதா அல்லது போய் யாரையாவது கூட்டிக்கொண்டு வந்து அந்தப் பெண்களைத் தூக்கிக் கொண்டு போய் அவரவர்கள் வீட்டில் சேர்ப்பதா என்று அவன் யோசித்தான். பிறர் உதவியை எதிர் பார்ப்பதையோ அல்லது அங்கு காத்துக் கொண்டிருப்

பதையோ விடத் தானே ஏன் அந்தப் பெண்களை ஒவ்வொரு வராகத் தூக்கிச் சென்று அவரவர்கள் வீட்டில் விட்டு வரக் கூடாது என்று அவனுக்கு இன்னோர் எண்ணம் உண்டாகியது. அதுதான் சரியென்று அவன் முடிவுக்கு வந்தான்.

தங்கம் தைரியசாலி என்பது அவன் எண்ணம். ஆகவே முதலில் ராதாவைத் தூக்கிக் கொண்டுபோய் அவள் வீட்டில் விட்டுவிடுவதென்றும், தான் திரும்பும் வரையில் தன்னந் தனியாகக் கிடக்கும் தங்கம் விழித்துக் கொண்டாலும் ராதா அளவு பயப்பட்டுவிட மாட்டாள் என்றும் அவன் எண்ணி னான். தங்கம் விழித்துக் கொண்டால் பயப்படாமல் இருப்ப தற்காக லாந்தரை அங்கேயே விட்டுவிட்டு ராதாவைத் தோளில் சாய்த்துப் போட்டுக் கொண்டு மெல்ல! மெல்ல நடந்து சென்றான்.

போகும் வழியிலேயே ராதா கண்விழித்துப் பார்த்தாள். கண்விழித்த உடனே அவளுக்குத் தெரிந்தது சுற்றிச் சூழ்ந் திருந்த பயங்கரமான இருள்தான். சற்று உணர்வு வந்த பிறகு தான், தான் தூக்கிச் செல்லப்படுவதை உணர்ந்தாள். புளிய மரத்து ராக்கப்பன்தான் தன்னைத் தூக்கிச் செல்கிறானோ என்று அவளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. அந்த எண்ணம் உதித்த உடனே அவள் இதயத்திலே ஒரு படபடப்பு—அவள் அங்கங்களிலே ஒரு நடுநடுக்கம் உண்டா கியது. அவளைத் தோளில் சாய்த்துத் தூக்கிக்கொண்டு போன நடராசனுக்கு அந்தப் படபடப்பும் நடுநடுக்கமும் நன்றாகத் தெரிந்தன. அவள் இதயம் படபடவென்று அடிப்பது அவன் தோளில் விட்டுவிட்டு மென்மையாக இடிப்பதுபோல் இருந்தது. அவளுடல் உறுப்புக்கள் நடுங்கிய போது ஏற்பட்ட அசைவுகள் அவன் உடலைத் தாக்காமல் விட்டுவிடவில்லை. ஆகவே, அவள் விழித்துக் கொண்டு விட்டாள் என்பதை யறிந்த அவன் 'ராதா, பயப்படாதே

ராக்கப்பனை விரட்டியடித்து விட்டேன்'' என்றான் ''உண்மையாகவா?'' என்று கேட்டுக்கொண்டே அவள் கீழே குதித்தாள். ஆனால், அவள் பயம் முற்றிலும் போய்விட வில்லையாகவே அவன் கையை இறுகப் பிடித்தவாறு அவனை ஒட்டிக் கொண்டே நடந்து சென்றாள். அவர்கள் அப்படி நடந்து போய்க் கொண்டிருந்தபோது, திடீரென்று ராதா நடராசனைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவள் உடலெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. குப்பென்று வியர்த்துப் போய்விட்டது. ''அதோ பார்த்தீர்களா?'' என்று கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலப் பேசினாள். அவள் குறிப்பிட்டுக் காட்டிய பக்கம் உற்றுப் பார்த்த நடராசனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ''என்ன? ஒன்றும் தெரியவில்லையே!'' என்று கேட்டான். 'அதோ நேரே பாருங் கள். ஏதோ நிழலாடுவது போல்அசைகிறது!'' என்று சுட்டிக் காட்டினாள் ராதா. ஆனால், நடராசன் பார்த்த போது எதுவுமே தெரியவில்லை. ''ஒன்றும் தெரியவில்லையே!'' என்று மறுபடியும் கூறினான் ''ஆம்! இப்போது அதைக் காணோம்'', என்றாள் ராதா. ''சும்மா வா! நீ மிகவும் குழம்பிப்போய் இருக்கிறாய், காணுகின்ற நிழல் எல்லாம் உனக்குப் பேயாகப் தோன்றுகிறது. பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு என் கையைப் பிடித்துக் கொண்டு நடந்து வா!'' என்றான் நடராசன்.

ராதாவின் வீட்டிற்கு அவர்கள் தங்கத்தின் வீட்டைக் கடந்துதான் போகவேண்டும். தங்கத்தின் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் வீட்டு வாசலிலும் மின்சார விளக்குப் போடப்பட்டிருந்தது. அந்த வெளிச்சத் தில் வந்தவுடன் ராதா, நடராசனை விட்டுச் சிறிது விலகிக் கொண்டாள். அவ்வளவு நேரமும் இல்லாத வெட்க உணர்ச்சி அவளுக்கு அப்போது வந்துவிட்டது! அவ்வளவு நேரமும் இருந்த அதிதீவிரமான அச்சஉணர்ச்சி அந்த வெட்க உணர்ச்

சியை அடக்கி வைத்திருந்தது. ஆனால், அந்த அச்சம் குறைந்தவுடன், வெட்கம் திரும்பவும் தன்னுடைய இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

அப்போதுதான் ராதாவுக்குத் தங்கத்தின் நினைவு வந்தது. "தங்கம் எங்கே?" என்று கேட்டாள். "அந்த இடத்திலேயே தான் கிடக்கிறாள்" என்று பதில் சொன்னான் நடராசன்.

"ஐயையோ! தனியாகவா கிடக்கிறாள்? பயமாக இருக்குமே! நான் அவர்கள் வீட்டில் போய்ச் சொல்லி விட்டு வருகிறேன்" என்று தங்கத்தின் வீட்டுப் பக்கமாய்ப் பாய்ந் தாள் ராதா.

நடராசன் எட்டிச் சென்று தங்கத்தின் வீட்டை நோக்கிச் சென்ற ராதாவின் கையைப் பிடித்து நிறுத்தினான். "வேண் டாம், ராதா வேண்டாம். அவர்கள் பதறிப் போய்விடுவார் கள். உன்னை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு நான் போய் அவளை மூர்ச்சை தெளிவித்து அழைத்துக் கொண்டு போகிறேன்" என்றான் நடராசன்.

"அப்படியானால், வாருங்கள். இப்போதே திரும்பிப் போய், அவளை அழைத்துக்கொண்டுவந்து விடுவோம்" என்றாள் ராதா.

"உன்னையும் கூட்டிக் கொண்டா? போதும்! போதும்! இருண்ட தெல்லாம் உன் கண்ணுக்குப் பேயாகத் தெரிகிறதே உன்னையும்கூட அழைத்துச் சென்றால், சரிதான். மறுபடியும் மயக்கம் போட்டு விழுந்து விடுவாய். உன்னை வீட்டிலே கொண்டு போய் விட்டுவிடுகிறேன். நீ பேசாமல் இரு. நான் போய்த் தங்கத்தை அழைத்து வருகிறேன்" என்றான் நடராசன்.

அதன்பின் ராதா எதுவும் பேசவில்லை. இவரும் ராதா வின் வீட்டு வாசலை அடைந்ததும் ராதா கதவைத்

தட்டினாள், கதவு திறக்கப்பட்டவுடன், நடராசன் திரும்பி விட்டான், ராதா உள்ளே போனாள்.

நடராசன் வெகு வேகமாகத் திரும்பி நடந்து அதே சந்துக்குவந்து சேர்ந்தான். அந்தச் சந்தில் அவன் வைத்து விட்டுப் போன லாந்தரைக் காணவில்லை. காற்றிலோ அல்லது எண்ணெய் குறைந்தோ அது நின்று போயிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அவன் அவளை விட்டு விட்டு வந்த இடத்தை நோக்கி நடந்தான். போகும் வழியில் புளியம் பழங்களின் மீது அவன் கால் பட்டு அவற்றின் ஓடுகள் நொறுங்கின. அவன் காலில் பழங்கள் ஒட்டிக் கொண்டு பிசுபிசுத்தன. அதையெல்லாம். பொருட்படுத்தாமல் அவன் வேகவேகமாக நடந்தான். தங்கத்திற்கு என்ன ஆயிற்றோ என்று அவன் இதயம் துடித்துக் கொண்டிருந்தது.

தங்கத்தையும் காணவில்லை, தங்கம் கிடந்த இடத்தின் அருகில் இருந்த லாந்தர் விளக்கையும் காணவில்லை. நடராசனின் இதயம் பக்கென்று நின்று போனது போலிருந்தது. "தங்கம், தங்கம்!" என்று இரண்டு முறை மெல்ல அழைத்துப் பார்த்தான். பதிலில்லை. மறுபடியும் உரத்த குரலில். "தங்கம் தங்கம்!" என்று கூவினான். அதற்கும் பதிலில்லை. அந்தச் சந்து முழுவதும் அவன் குறுக்கும் நெடுக்குமாக நடந்துநடந்து எந்த இடத்திலாவது தங்கம் கிடக்கிறாளா என்று தேடிப் பார்த்தான். ஆனால் அவள் எந்த இடத்திலும் காணப்படவே யில்லை.

திரும்பவும் அவன் ராதா வீட்டுக்கு ஓடினான். கதவைப் படபடவென்று தட்டினான். அப்போதுதான், நடந்த நிகழ்ச்சிகளைத் தன் தாய்க்கு விளக்கிச் சொல்லிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்த ராதா ஓடி வந்து கதவைத் திறந்தாள் அவள் தாயும் அவள் பின்னாலேயே வந்தாள்.

"ராதா! தங்கத்தை அங்கே காணோம்!' என்று டராசன் சொன்னவுடன் "ஆ!" வென்று கதறிவிட்டாள் ராதா.

# 10. கனவா? நனவா? மெய்யா? பொய்யா?

தங்கம் கண் விழித்தபோது அவள் முன்னே ஒரு முகம் தோன்றியது. அந்த முகத்தைக் கண்டவுடன் பூச்சாண்டியைக் கண்ட குழந்தை போலத் தங்கம் அலறிவிட்டாள். அடுத்த வினாடியே அவள் மறுபடியும் மூர்ச்சையடைந்து விட்டாள்.

உண்மையில் அந்த முகம் பயங்கரமானதாகத்தான் இருந்தது. பரட்டைத் தலையும், சுருக்கம் நிறைந்த நெற்றியும், கோடிய புருவமும், குழி விழுந்த கண்களும், கோணிய வாயும், அமுங்கிய மூக்கும், ஒட்டிய கன்னமும் ஆகத் தோன்றிய அந்த முகத்திலே விளங்கித் தோன்றிய ஒரு விதமான கடுகடுப்பும் கொடுமையும் குரூரமும் காணக்காண அது பயங்கரத்தையே அதிகமாக்கியது. எத்தனை துன்பங்கள் அடுக்கடுக்காய் வந்தாலும் கவலையோ வருத்தமோ எரிச்சலோ கோபமோ அடையாத கந்தசாமி வாத்தியாரைத் தந்தையாகப் பெற்ற தங்கத்திற்கு—என்றும் இன்முகமே காட்டி, எவருடனும் அன்பாகவே பேசும் மரகத அம்மாளைத் தாயாகப் பெற்ற தங்கத்திற்கு—தந்தையோடொத்த அன்புள்ளம் பூண்ட முருகேச வாத்தியாரையும் தன்னிடம் கடுகடுப்பாகப் பேசினாலும் எப்போதும் மற்ற

எவரிடத்தும் சாந்தமாகவே பேசும் அண்ணாமலைப் பண்டிதரையும் இதுபோன்ற அருளுள்ளம் கொண்ட அன்புடையாரையுமே பெரும்பாலும் கண்டுவந்திருந்த தங்கத்திற்கு, அந்தக் கொடுமையான புதிய முகத்தைக் காணும்போது ஒரே பயமாக இருந்தது. அத்துடன் அவளுடைய நாடி நரம்புகளெல்லாம், சில மணிநேரத்திற்கு முன்னால் நடந்த பேய் விளையாட்டிலே அதிர்ந்துபோய் இருந்தபடியால், அதையடுத்த நிகழ்ச்சியாக அந்த முகத்தைக் கண்டவுடன் பேரதிர்ச்சியுற்று மயக்க நிலையை யடைந்து விட்டாள் என்று சொல்லலாம்.

நெடுநேரத்திற்குப் பிறகு தங்கம் கண்விழித்தபோது அவளருகில் ஒரு கூனற் கிழவி உட்கார்ந்திருந்தாள். அந்தக் கூனற் கிழவியின் உருவத்தையும் அவள் உடுத்தியிருந்த ஆடைகளையும் அவள் தோற்றத்தையும் பார்க்கவே அருவருப்பாயிருந்தது. அவள் உடலிலிருந்து புறப்பட்டுக் காற்றில் கலந்த ஒரு நெடியும் மூக்கைத் துளைத்தது.

மெல்லக் கண் விழித்த தங்கம் தன் கண்களைச் சுற்று முற்றும் உருட்டிப் பார்த்தாள். அவள் கண்களில் பட்ட பொருள்களெல்லாம் கனவில் பட்ட காட்சிகளைப்போல் இருந்தன. மெதுவாக "நான் எங்கு இருக்கிறேன்?" என்று கேட்டாள்.

"பயப்படாதே, கண்ணே! நம் வீட்டில்தான் இருக்கிறாய்!" என்ற நல்ல வார்த்தைகள் அந்தக் கூனற் கிழவியின் வெற்றிலை குதப்பும் வாயிலிருந்து வெளிப்பட்டன.

"பாட்டி, நீங்கள் யார்? நான் எப்படி இங்கே வந்தேன்!" என்று தங்கம் கேட்டாள்.

அந்தக் கிழவி அவலட்சணமாக அவளுடைய பொக்கை வாயால் ஒரு புன்சிரிப்பை யுதிர்த்தாள். அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் "கண்ணே, உனக்கு பசிக்கிறதா?" என்று கேட்டாள்.

“இல்லை” என்று சொன்னாள் தங்கம். உண்மையில் அவளுக்கு அப்போது ஏதாவது சாப்பிட்டால் நல்லதென்று தான் தோன்றியது. ஆனால் அந்தக் கிழவியிடமிருந்து எதுவும் வாங்கித் தின்ன அவளுக்கு மனம் வரவில்லை.

தங்கம் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந் தாள். தான் ஓர் ஓலைக் குடிசையில், பீத்தல் பாய் ஒன்றின் மீது படுத்துக் கொண்டிருக்கிற உண்மை நிலையை அவள் அப்போதுதான் உணர்ந்தாள். அவளுக்கு முந்திய நினைவு அப்போதுதான் வந்தது. ராதாவுடன் கோயிலுக்குப் போனதும் வழியில் நடராசனைச் சந்தித்ததும் புளிய மரத்தில் பேயாடியதும் அவளுக்கு நினைவு வந்தன. அதற்குப் பின் என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரியவில்லை. தான் எப்படி இந்தக் குடிசைக்கு வந்து சேர்ந்தோம் என்பதை நினைத்துப் பார்க்க முடியாமலிருந்தது. தன்னை அறியாமல் எப்படி இங்கு வந்தோம் என்பது அவளுக்கு வியப் பாயிருந்தது.

ஒரு வேளை அந்தப் புளியமரத்துப் பிசாசு தன்னைத் தூக்கி வந்துவிட்டதோ என்று எண்ணினாள். கேள்விக் குறிப்போடு அவள் பக்கத்திலிருந்த கிழவியை நோக்கினாள். அவளை உற்றுப் பார்க்கப் பார்க்க அவளைப் பற்றித் தங்கத் திற்கு நல்ல எண்ணமே உருவாகவில்லை. கட்டுக்கதைகளில் வரும் சூனியக்காரிகளின் உருவத்திற்கு அப்படியே எடுத்துக் காட்டாக விளங்கினாள் அந்தக் கூனற்கிழவி. அவள்தான் தன்னை எதற்காகவோ இங்கு கொண்டு வந்து வைத்திருக் கிறாள் என்று எண்ணினாள் தங்கம்.

அவள் மனம் பெருங் குழப்பமடைந்தது. அவள் திரும்பத் திரும்ப தான் அங்கு எப்படி வந்திருக்கக் கூடும் என்பதையே நினைத்துப் பார்த்தாள். ராதாவும் தானும் நடராசனுடன் அந்தச் சந்தில் வந்துகொண்டிருந்ததும்,, புளிய மரத்தில்

பேயாடும் ஓசை கேட்டுப் பயந்து இருவரும் நடராசனைக் கட்டிப் பிடித்துக் கொண்டதும், அவளுக்கு நன்றாக நினைவில் இருந்தது.

ராதாவும் நடராசனும் தன்னை இந்தக் கிழவியிடம் ஒப்படைத் திருக்கக் கூடும் என்று எதிர் பார்க்க நியாயமில்லை. ஒரு வேளை அவர்களையும் இந்தச் சூனியக் காரி கொண்டுவந்து வேறு எங்காவது வைத்திருப்பாளோ என்று தோன்றியது.

"ராதா எங்கே!" என்று அவள் கேட்டாள். அதற்கும் அந்தக் கூனற் கிழவி வெற்றிலை குதப்பிக் கொண்டிருந்த வாயில் புன்சிரிப்பைத்தான் தேக்கினாள். "கொஞ்சம் காப்பி மட்டும் சாப்பிடம்மா!" என்றாள் கிழவி.

"வேண்டாம்" என்றாள் தங்கம்.

அத்துடன் அவர்கள் பேச்சு நின்றது. தங்கத்தின் குழப்ப மான நெஞ்சம் தான் சிக்கிக் கொண்டிருந்த இந்தக் குழப்ப நிலையைக் கண்டுபிடிக்கச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. கிழவி, வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே உட்கார்ந்திருந் தாள். பொழுது மெல்லமெல்லக் கடந்து கொண்டிருந்தது. இதேநிலையில் அந்தக் குடிசையில் சூழ்ந்திருந்த பயங்கரம் செறிந்த அமைதியான போக்கில் மத்தியானம் ஆகிவிட்டது.

தங்கத்துக்குப் பசி வயிற்றைக் கிள்ளியெடுத்தது. ஆனால் அந்தக் கிழவியிடம் எதுவும் கேட்டு வாங்கிச் சாப்பிட விரும்பவில்லை. பசிமயக்கத்தில் அவள் கண்களை மூடிக் கொண்டு சுவர்மீது சாய்ந்து கொண்டிருந்தாள். அப்போது திடீரென்று ஒரு கடுமையான பேச்சுக்குரல் காதில் விழுந்தது. அவள் கண் திறந்து பார்த்தாள்.

அந்தப் பயங்கரமான முகம். அவள் முதலில் நினைவற்றிருந்த நிலையில் கண்ணில் பட்ட அதே கொடூர

மான முகம் அவள் கண்ணெதிரே தோன்றியது. ஆனால் அவள் இப்போது மயக்கமடைந்து விடவில்லை என்றாலும் பயந்து கூச்சல்போட வாய்திறந்தாள். ஆனால், அவளுடைய பயத்தில் சத்தம் தொண்டையோடு அமுங்கி விட்டது. வெளிப்படவேயில்லை, அந்தப் பயத்திற் கிடையிலும் அவனை-அந்தப் பயங்கரமுகத்தை, தான் முன்னொரு முறை பார்த்திருப்பது அவள் நினைவுக்கு வந்தது. முதலில் அவனைப் பார்த்த போது ஒரு விதமான மயக்க நிலையில் தான் இருந்ததும் அவளுக்குத் தெரிந்தது. சந்தேக மில்லாமல் தான் ஒரு சூனியக்காரியிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டதாகவே அவள் நம்பினாள். அவர்களிட மிருந்து, அந்தக் கூனல் கிழவியிடமிருந்தும் எதிரில் நிற்கும் அந்தப் பயங்கர மனிதனிடமிருந்தும், எவ்வாறேனும் தப்பி யோடிவிட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் எப்படித் தப்புவது? கூனற்கிழவியோ தன் அருகி லேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அந்தப் பயங்கர மனிதனோ எதிரில் வாசல் பாதையில் நின்றுகொண்டிருக் கிறான். கூனற்கிழவியைக் கடந்து போனாலும் அவனிட மிருந்து தப்பிக்க முடியாது. அவனிடமிருந்து தப்பித்தாலும் கிழவி தன் மந்திர சூனிய சக்தியினால் தன்னை ஏதாவது செய்துவிடக்கூடும். இப்படி அவளுடைய எண்ணமெல்லாம் ஓடிக்கொண்டிருந்த போது அந்தப் பயங்கர மனிதன் வாய் திறந்து பேச ஆரம்பித்தான்.

"தங்கம் மயக்கம் தெளிந்துவிட்டதா? பாவம்! நான் வராவிட்டால் இந்தப் பனியில், தெருப்புழுதியில் நீ புரண்டு கொண்டிருக்க வேண்டும். நல்ல வேளை! நான் அங்கேவந்து சேர்ந்தேன். பொன் போன்ற உன் உடல் புழுதியில் கிடக் கலாமா என்று இங்கே தூக்கிவந்தேன். பாட்டி, தங்கம் எதுவும் சாப்பிட்டாளா?" என்று கேட்டான் அந்தப் பயங் கரத் தோற்றமுடைய மனிதன்.

இதைக் கேட்ட பிறகுதான் தங்கத்திற்குத் தான் தெருவில் மயக்கம் போட்டுக்கிடந்த உண்மை தெரிய வந்தது.

"ஐயா! ராதா எங்கே? ராதாவையும் தூக்கி வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள் தங்கம்.

"ராதாவா? அது யார் அது? நீ மட்டும்தானே தெருவில் கிடந்தாய்"? என்று கேட்ட அந்த மனிதன், 'ஓகோ! சரிதான் இராத்திரி ஒரு பையனோடு பேசிக் கொண்டே போனது அந்தப் பெண்தான் போலிருக்கிறது!" என்று மெல்லச் சொல்லிக் கொண்டான். இது தங்கத்தின் காதில் விழாமலில்லை. ராதாவோ நடராசனோ அப்படித் தன்னைத் தனியே போட்டுவிட்டுப் போயிருக்க முடியாது என்று அவள் நம்பினாள். ஆகவே அந்த மனிதன் வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. இருந்தாலும் அவள் தன் அவநம்பிக்கையையோ அவனையோ, கிழவியையோ பற்றித் தான் கொண்டிருந்த சந்தேகத்தையோ வெளிக்காட்டிக் கொள்ளாமல், அவனை நோக்கி 'ஐயா! உங்கள் உதவிக்கு நான் மிகவும் நன்றியுடையவளாயிருப்பேன்; என்றும் இதை மறக்க மாட்டேன். போய் வருகிறேன்!' என்று சொல்லிப் புறப்படுவதற்காக எழுந்தாள்.

"பெண்ணே! அவ்வளவு எளிதாக உன்னைப் போக விடுவதற்காகவா நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை இங்கே தூக்கி வந்தேன்? இரு இரு" என்றான் அந்த மனிதன்.

தங்கம் நடுங்கினாள்.

அவன் சொல்லுவதன் பொருள் அறியாமல் தடுமாறினாள்.

"ஐயா என் பெற்றோர் தேடுவார்கள். தயவுசெய்து என்னை வீட்டுக்குப் போக அனுமதியுங்கள்" என்றாள் தங்கம்.

"பெண்ணே! உன்னைப் போக அனுமதிக்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் நீ எனக்கொரு வாக்குறுதி கொடுக்க வேண்டும் சம்மதமா?" என்று கேட்டான் அவன்.

"பார்க்கலாம்! இப்போது என்னை வீட்டுக்குப் போக விடுங்கள்?" என்றாள் தங்கம்!

"பெண்ணே! அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்கிற வார்த்தை யெல்லாம் உன்னிடத்தில் நான் எதிர்பார்க்க வில்லை. உறுதி கொடுப்பதாக ஒப்புக் கொள்ள வேண்டும்."

"என்னால் முடிந்தால் செய்கிறேன். இப்போது என்னைப் போக விடுங்கள்" என்றாள் தங்கம். அவள் உடலும் உள்ளமும் இரண்டுமே அந்த இடத்தை விட்டு உடனே போய்விடத் துடித்தன.

"உன்னால் முடியும். அதுவும் உன்னால்தான் முடியும்!" என்று அழுத்தமாகச் சொன்னான் அந்த மனிதன்.

"சரி, சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றாள் தங்கம்.

"தங்கம், சொல்லுகிறேன், கேள். உலக வாழ்க்கை என்றால் என்னவென்றுணராமல் தன்னந் தனியாக நான் இத்தனை ஆண்டுகளையும் தாறுமாறாகத் கழித்து விட்டேன். மூக்குக்கயிறில்லாத மாடும், கடிவாளமில்லாத குதிரையும் நேரான பாதையில் போகாது என்பார்கள். அப்படித்தான் இதுவரை என் வாழ்வு இருந்து விட்டது. இனிமேல் நான் குடியும் குடித்தனமுமாக வாழ விரும்பு கிறேன். தங்கம், அதற்காகத்தான் உன்னைக் கேட்கிறேன் என்னோடு சேர்ந்து குடித்தனம் நடத்த நீ இணங்க வேண்டும். இந்த உலகத்தில் நான் எத்தனையோ பெண்களைப் பார்த் திருக்கிறேன். ஆனால் உன்னைப்போல் மனைவியாக இருக்கத் தகுதியான வேறொரு பெண்ணை நான் பார்த்த தில்லை. தங்கம் என்னைக் கட்டிக் கொள்ள ஒப்புக்கொள் கிறாயா? திருமணத்திற்கு நேரம் பார்க்கட்டுமா?" என்று கேட்டான் அந்தப் பயங்கர மனிதன்.

தங்கம் திகைத்துப் போனாள். தான் அவனிடமிருந்து தப்ப முடியாதா என்று துடித்துப் போனாள்.

அவள் தயங்கி நிற்பதைக் கண்ட அந்த மனிதன் மேலும் பேச ஆரம்பித்தான்.

''தங்கம்! என்னைத் தள்ளிவிடாதே! இத்தனை நாளும் நான் கொலை, கொள்ளை, குடி கூத்தியென்று அலைந்தேன், சூதாடியும், சோம்பிக் கிடந்தும் காலத்தை ஓட்டினேன். ஆனால், அந்த வாழ்க்கை எனக்குக் கசந்து விட்டது. இனி மேல், உலகத்தாரைப் போல ஒழுங்கான வாழ்க்கை வாழ விரும்புகிறேன். என்னிடம் பணம் நிறைய இருக்கிறது. நீ மட்டும் சம்மதித்தால் நான் உனக்குத் தனியாக ஒரு மாளிகை கட்டித் தருகிறேன். வேலைக்கு ஆட்கள் வைக்கிறேன். நாம் நம் வாழ்க்கையில் ஏழை எளியவர்களைப் போல் அவதிப் பட வேண்டியதில்லை. பணக்காரர்களைப் போலவே வாழு வோம். படித்த மேதைகளோடு பழகுவோம். பட்டம், பதவியில் உள்ளவர்களோடேயே உறவாடுவோம். வாழ்க் கையில் என்னென்ன இன்பம் உண்டோ அத்தனையும் அனுப விப்போம். இவ்வளவுக்கும் பணம் வேண்டுமே யென்பாய். என்னிடம் நிறைய பணம் இருக்கிறது. இதுவரை கொள்ளை யடித்த பணமெல்லாம் சூதாடியது போக மீதிப்பட்ட ஏராள மான பணம் முழுவதும் ஓரிடத்திலே புதைத்து வைத்திருக் கிறேன். அது நமக்கு உதவும்.

''ஆனால், இனிமேல் நான் அந்த மாதிரியான தீய வேலைகட்குப் போகமாட்டேன். உனக்கு வேண்டுமானால் சத்தியம் செய்து கொடுக்கிறேன்.

''தங்கம் உன்னை ஊரெல்லாம் நல்ல பெண் என்று சொல்கிறார்கள். பாவம், இவ்வளவு நல்ல பெண்ணுக்கு இவ் வளவு நாளாய்க் கலியாணம் ஆகாமல் இருக்கிறதே என்று சொல்லுகிறார்கள். இனிமேல் அந்த க் கவலை வேண்டாம்

நான் உன்னைத் தங்கம் போல் வைத்துக் காப்பாற்றுகிறேன். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான், அந்தப் பயங்கர மனிதன்.

அவன் பேசப் பேசத் தங்கத்தின் பயம் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவனிடமிருந்து தான் தப்பவே முடியாது போலிருந்தது. அவள் பேசாமலிருந்தாள். அவன் தொடர்ந்து பேசினான்!

''தங்கம்' நான் குடிகாரன், கொள்ளைக்காரன், சூதாடி என்று எந்தப் பெண்ணும் என்னைக் கட்டிக் கொள்ள மறுக்கிறாள். இதே கவலையால் என் தாயும் இறந்து போய் விட்டாள். எனக்குத் துணையாக-உறவு என்ற பெயரில் இருப்பது இந்தப் பாட்டியொருத்திதான். நீயும் ஒப்புக் கொள்ளாவிட்டால், நான் தூக்குப் போட்டுக்கொண்டு சாக வேண்டியது தான். திருந்தி வாழ நினைக்கிற ஒருவனுக்கு இந்த உலகில் இடமில்லையா தங்கம்?'' என்று கேட்டான்.

அவனுடைய கதை முழுவதையும் பயத்துடன் கேட்டுக் கொண்டிருந்த தங்கத்திற்கு புளியமரத்துச் சந்தில் ராதா சொன்ன ராக்கப்பன் கதை நினைவுக்கு வந்தது. இவன் சொன்ன கதையும், அந்த ராக்கப்பன் கதையும் ஒரே மாதிரியாக இருந்ததைக் கண்டபோது அவளுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ஒரு வேளை அந்த ராக்கப்பனுடைய ஆவியைத் தான் இந்தச் சூனியக்காரக் கூனற்கிழவி இப்படி உருமாற்றியிருக்கிறாளோ என்று எண்ணினாள்.

அவள் குளறிக் கொண்டே, ''ஐயா, நீங்கள்...நீங்கள் யார்?'' என்று கேட்டாள்.

''என்னைத் தெரியவில்லையா? ஆம், உண்மைதான்! நான் முதலிலேயே என் பெயரை உன்னிடம் சொல்ல மறந்து

போய் விட்டேன். நான்தான் ராக்கப்பன்!'' என்றான் அந்தப் பயங்கர மனிதன்.

தங்கம் பயந்தது சரியாகப் போய் விட்டது. அவன் இந்தப் பெயரைச் சொன்னவுடனே, 'ஆ! பிசாசு!'' என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தாள். ஆனால் மூர்ச்சையடைய வில்லை. பயந்து பயந்து பழகிவிட்டதால் மயக்கம் வரவில்லை போலிருக்கிறது.

ஆனால், தான் மயக்க நிலையிலேயே இன்னும் இருப்பதாகத் தான் அவள் நினைத்துக் கொண்டாள். தான் காணும் காட்சிகள் கனவாக இருக்க வேண்டும் என்றுதான் அவளுக்குத் தோன்றியது,

# 11. ராதா, உனக்குப்பிடித்திருக்கிறதா?

தங்கத்தைக் காணவில்லை என்று புளியமரத்துச் சந்துக்குப் போய்வந்த நடராசன் தெரிவித்தவுடனே ராதா திகைத்துப்போய்விட்டாள். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சிறிது நேரம் அப்படியே அசைவற்று நின்றாள். அந்தக் குழப்பமான அமைதியைக் குலைத்தது நடராசனின் கேள்வி.

''ராதா! தங்கத்தின் வீட்டில் போய்ச் சொல்லுவோமா?''

என்ன செய்வதென்றே புரியாமல் குழம்பிக் கொண்டிருந்த அவளுக்கு இந்த யோசனை ஒரு வழிகாட்டியாக இருந்தது. ''சரி, வாருங்கள்!'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு புயல் வேகத்தில் வீதியில் நடை போட்டாள் ராதா. நடராசனை மட்டும் இழுத்துக்கொண்டு நடக்கா விட்டால் அவள் பறந்திருப்பாளோ என்னவோ?

அவர்கள் தங்கத்தின் வீட்டுக் கதவைப் படபடவென்று தட்டியவுடன், கந்தசாமி வாத்தியார் வந்து கதவைத் திறந்தார். மாடியில் இருந்த அண்ணாமலைப் பண்டிதர் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். அடுக்களையில் அப்போதுதான், தங்கம் திரும்பி வருவதை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்

திருந்து எடுத்து வைக்கப்பட்டிருந்த சாப்பாட்டுக்கெதிரில் தடுக்கில் படுத்திருந்த மரகத அம்மாள் எழுந்து உட்கார்ந் தாள்.

கந்தசாமி வாத்தியார் தங்கம்தான் கோயிலிலிருந்து திரும்பி வந்துவிட்டாள் என்ற எண்ணத்தில் சாவதானமாகக் கதவைத் திறந்தார். அவர் கதவைத் திறந்துவிட்டவுடனே, ராதா உள்ளே பாய்ந்து வந்தாள். நடராசனும் பின்னால் நுழைந்தான்.

"ராதா......தங்கம்?" என்று கந்தசாமி வாத்தியார் கேட்பதற்குள்ளே, "புளிய மரச் சந்தில்......" என்று நடராசன் சொல்ல ஆரம்பித்தான். புளியமரச் சந்து என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனேயே, மரகத அம்மாள் பதறிக்கொண்டு அடுக்களையிலிருந்து ஓடி வந்தாள். நடராசன் நடந்ததையெல்லாம் விவரித்துச் சொல்லி முடிக்கும் வரை பெற்றவர்கள் இருவரும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். அவன் சொல்லி முடித்து, அவளைக் காணவில்லை என்று தெரிவித்தவுடன், "மகளே! தங்கம்!" என்ற சொற்கள் துயரக் குறிப்புக் கலந்ததாய் இருவர் வாயிலிருந்தும் ஒரே சமயத்தில் வெளிப்பட்டன. அவர்கள் இருவரும்-தாயும் தந்தையும் தங்கத்திடம் வைத்திருந்த அன்பில் எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று சொல்ல முடியாமலிருந்தது. கந்தசாமி வாத்தியார் தங்கத்தைக் கண்ணுக்குக் கண்ணாக நேசித்தார் என்று சொன்னால், மரகத அம்மாள் அவளைத் தன் உயிருக்கு உயிராகப் போற்றி வந்தாள் என்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட அவர்கள் இருவரும், புத்தம் புதிதாகத் தங்கத்தைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் தத்தம் உள்ளத்திலே கொண்ட திகைப்பும், பிரமிப்பும், கலக்கமும், துயரும், கவலையும் அந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடாக வெளிவந்த வார்த்தைகளும் ஒன்றாக இருந்தன என்பது ஆச்சரியப்படத்

தக்கதே அல்ல. கீழே ஏற்பட்ட கலவரமான சந்தடியைக் கேட்டு, மெல்ல மெல்லப் படிகளிலே அடியெடுத்துவைத்து இறங்கி வந்தார் அண்ணாமலைப் பண்டிதர்.

என்ன செய்தி யென்று கேட்டுத் தெரிந்துகொண்ட அவர் சிறிதேனும் கலவரப்பட்டவராகத் தோன்றவில்லை.

ஆனால், அவர் நடராசனை நோக்கிப் பேசிய அந்தச் சொற்கள் அவர் மனவருத்தத்தை ஓரளவு வெளிக்குப் புலப் படுத்துவதாக இருந்தன. "நடராசா, உன்னுடைய பைத்தியக்காரத்தனத்தால் தான் அந்தப் பெண் காணாமல் போய்விட்டாள்!" இந்த வார்த்தைகளைத்தவிர அவர்மேற் கொண்டு எதுவும் சொல்லவில்லை. அவர் அவ்வாறு கூறியபோது நடராசனின் முகத்தில் ஏற்பட்ட சங்கடமான உணர்ச்சியை யாரும் கவனிக்கவில்லை.

கந்தசாமி வாத்தியார் அப்பொழுதே ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு தங்கத்தைத் தேடக் கிளம்பினார். ஆனால், அண்ணாமலைப் பண்டிதர் காலையில் தேடி கொள்ளலாமென்று சொல்லி அவரைத் தடுத்துவிட்டார்.

பெரியவரின் வார்த்தையை மீற அவருக்குத் துணி வில்லை. எல்லோரும் தத்தம் படுக்கைக்குத் திரும்பினார்கள். நடராசனும் ராதாவும் வெளியில் வந்தார்கள். ராதாவை வீட்டில் விட்டு விட்டு நடராசன் அந்த இருட்டில் கால்போன போக்கில் நடந்து சென்றான். ஊரைச் சுற்றிச் சுற்றிக் கடைசியில் அந்தப் புளியமரச் சந்துக்கே திரும்பி வந்தான். அவன் அந்தச் சந்துக்குத் திரும்பி வந்தபோது நள்ளிரவு நேரம். அந்தப் புளியமரத்தின் சில கிளைகள் குலுங்கிக் கொண்டிருந்தன. மரத்தடியில் ஒரு லாந்தர் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரோ ஒரு மனிதனுடைய உருவம் நிழல்போலத் தரையில் காலூன்றி நின்று கொண்டிருந்தது தெரிந்தது. இப்போது நடராசன் அச்சப்படவில்லை நேராக மரத்தடியைநோக்கி நடந்தான்.

ஆள் வரும் ஓசையைக் கேட்டு அந்த மரத்தடியில் நின்றவன் சந்தேகத்தோடு திரும்பிப் பார்த்தான். மரத்தில் இருந்தவனும் குலுக்குவதை நிறுத்தி விட்டு நடராசன் வருவதை உற்று நோக்கினான், "ஐயா! இந்தச் சந்தில் ஒரு பெண் மயக்கமாகக் கிடந்தாளே, நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டான் நடராசன். அவர்கள் தெரியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். கடைசியில் நடராசனுக்கு ஏற்பட்ட சிறு நம்பிக்கையையும் கைவிட வேண்டியதாயிற்று. பித்துப் பிடித்தவனைப்போல் அவன் நடந்து சென்றான். தன்னை யறியாமலே அவன் கால்போன போக்கில் நடந்து தன் வீட்டு வாசலுக்கே வந்து சேர்ந்தான்.

வீட்டுக்குள் நுழையவே அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், அவன் கால்கள் அயர்ந்து போயிருந்தன. ஒரே களைப்பாயிருந்தது. ஆகவே கொஞ்சநேரம் தூங்கி ஒய்வு பெறலாம் என்று அவன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டதும் நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்துக்கொண்டான். ஆனால் தூக்கம் தான் வரவில்லை.

மறுநாள் காலையில் கந்தசாமி வாத்தியார் ஒரு பக்கம், முருகேச வாத்தியார் ஒரு பக்கம். நடராசன் ஒரு பக்கமாக ஊரையும் ஊரைச் சுற்றி இருந்த இடங்களையும் தேட ஆரம்பித்தார்கள், வாத்தியார்கள் இருவரும் பள்ளிக் கூட மணியடிக்கிறவரையிலே எங்கெங்கோ தேடிப் பார்த்து விட்டு, வழியில் தெரிந்த மிக முக்கியமான நண்பர்கள் சிலரிடம் தங்கம் தட்டுப்பட்டால் தெரிவிக்கும்படி கூறி விட்டுப் பள்ளிக்குச் சென்றுவிட்டார்கள். பள்ளிக்கூடத்தில் கந்தசாமி வாத்தியாருக்கு வேலையே ஓடவில்லை. சாயுங் காலம் பள்ளிக்கூடம் விட்ட பிறகும் வெகுநேரம் ஊரைச் சுற்றித் திரிந்துவிட்டுத் தான் வீட்டுக்குத் திரும்பினார். மரகதஅம்மாள் அன்று முழுவதும் சாப்பிடவேயில்லை.

வீட்டில் இருந்த அண்ணாமலைப் பண்டிதர் இருந்த இடத்தில் இருந்து கொண்டே "கவலைப்படாதே! தங்கம் கிடைத்து விடுவாள்!" என்று எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவள் மனம் அமைதி யடையவில்லை. காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்ட நடராசன் திரும்ப வரவேயில்லை. கதலிப் பட்டணத்திற்குத் தினந்தோறும் போகும் பழக்கப்படியும் அவன் வரவில்லை. ஒரே மூச்சாக அவன் தங்கத்தைத் தேடு வதில் ஈடுபட்டிருந்தான் போலும். இவ்வளவு அமளிக் கிடையிலும் சுந்தரேசன் அண்ணாமலைப் பண்டிதரிடம் கடிதம் வாங்கிக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்.

பொழுது சாய்ந்து இருள் பரவி வரத் தொடங்கியது. அடுத்த வீட்டு ராதா மெல்லத் தங்கத்தின் வீட்டுக்கு வந்தாள். பத்து நாள் பட்டினியும் நூறு நாள் கவலையும் ஒன்று சேர்ந்தது போன்ற தோற்றத்தோடு உட்கார்ந்திருந்த மரகத அம்மாளைப் பார்த்ததும் அவளுக்கே அழுகை யுண்டாகிவிட்டது. எல்லாம் இந்த நடராசனால் வந்த வினை என்றுதான் அவள் நினைத்துக் கொண்டாள். அவன் மட்டும் தங்கள் பாதையில் குறுக்கிடாமலிருந்திருந்தால் இதெல்லாம் நேரிட்டிருக்காது என்பது அவள் எண்ணம்.

அவள் வந்த சிறிது நேரத்திற்குப் பிறகு முருகேச வாத்தி யாரும் அங்கு வந்து சேர்ந்தார். கந்தசாமி வாத்தியார் அவரைப் பார்த்துப் பார்த்து விம்மி விம்மிப் பெருமூச்செறிந் தார். வாய்விட்டு ஓசையிட்டு அவர் அழவில்லையே தவிர, அவர் நெஞ்சம் துயரத்தால் புழுங்கிக் கொண்டிருந்தது. கண்களில் நீர் தடையில்லாத ஊற்றுப் போல் ஊறி வழிந்து கொண்டேயிருந்தது.

யாருக்கு யார் சமாதானம் சொல்லுவதென்று தெரியாமல் இவர்களெல்லாம் கீழே இம்மென்று துயரத்

தோடு இருந்து கொண்டிருந்தார்கள். அண்ணாமலைப் பண்டிதரோ மாடியில் தம் அறையில் இருந்தபடி திருவாசகத்தில் திருவூசல் பாடிக்கொண்டிருந்தார். புயலடிக்கும் நேரத்தில் ஆனந்த பைரவி பாடியது போல இருந்தது அவருடைய போக்கு. பாட்டு முடிந்ததும் அவர் கீழே இறங்கி வந்தார். அவர் சிறிதுகூடக் கவலைப் படாதவர் போல, புன்சிரிப்புடன், கந்தசாமி வாத்தியாரையும்-குறிப்பாக மரகதஅம்மாளையும் நோக்கி, ''ஒரு நாள் தங்கத்தைப் பிரிந்திருப்பதற்கே நீங்கள் இவ்வளவு துயரப்பட்டால், அவளைத் திருமணம் செய்து கொடுத்த பிறகு என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார். அவர்கள் இருவராலும் வாய் திறந்து பதில் சொல்ல முடியவில்லை.

''திருமணம் செய்து கொடுத்தால், மகள் எங்கே போனாள், எப்படியிருக்கிறாள் என்ற செய்தியெல்லாம் அவ்வப் போது தெரிந்துகொள்ளலாம். விரும்பியபோது போய்ப் பார்த்து வரலாம். இப்போது அவள் எங்கே இருக்கிறாள், என்ன ஆனாள்? என்பதே தெரியவில்லையே எப்படி வருத்தமில்லாமல் இருக்கும்?'' என்று கேட்டாள் ராதா.

அவர் கேட்ட மாதிரியையும் நடந்து கொண்ட போக்கையும் பார்த்தால் அவரே தங்கம் இருக்கும் இடத்தை அறிந்து வைத்திருப்பது போல எண்ணவும் இடமேற்பட்டது. துயரத்தோடு சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர்கள் அனைவரும், திடீரென்று அண்ணாமலைப் பண்டிதர் கடுமையான குரலில், ''ஏன் தங்கம் எங்கே போயிருந்தாய்?'' என்று கேட்டபோது, இவருக்கு என்ன கிறுக்குப் பிடித்து விட்டதோ என்று நினைத்துக்கொண்டே நிமிர்ந்து பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! அங்கே அவர்கள் மத்தியில் தங்கம் நின்று கொண்டிருந்தாள். மரகத அம்மாள் ஓடிச் சென்று அவளைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டாள். அண்ணாமலைப் பண்டிதர் தான் தன் மாய சத்தியால்

அவளை அங்கே வரச் செய்துவிட்டார் என்று மூட நம்பிக்கையில் ஆழ்ந்துள்ள அவள் மனம் எண்ணமிட ஆரம்பித்தது. ஆனால் அவளைத் தேடி அழைத்து வந்தது நடராசன் என்பது தெரியும்படியாக அவனும் அங்கே வந்திருந்தான். வெளிக்கதவு திறந்தே கிடந்த படியால் அவர்கள் உள்ளே நுழைந்ததை யாரும் காணவில்லை. ஆனால் தங்கத்தைக் கண்டவுடன் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. வானத்திலிருந்து அவள் அங்கே வந்து திடுதிப்பென்று குதித்தது போல் இருந்தது. மரகதம்மாள் அவளைப் பிடித்தணைத்துக் கொண்டு "தங்கம், எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டாள். ராதாவும், "தங்கம் உனக்கு என்ன ஏற்பட்டது?" என்று கேட்டாள்.

"எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். எனக்கு இப்போது ஒரே பசியும் களைப்புமாயிருக்கிறது" என்றாள் தங்கம். உடனே, மரகத அம்மாள் அவளுக்குச் சோறு போட்டுத் தூங்கச் செய்தாள். முருகேச வாத்தியாரும் நடராசனும் வீட்டுக்குத் திரும்பினார்கள். ராதா, அங்கேயே தங்கத்துக்குத் துணையாகத் தங்கியிருப்பதாகச் சொன்னாள். எல்லோரும் மன நிம்மதியுடன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றார்கள்.

அன்று இரவுப் பொழுது அமைதியாகக் கழிந்தது.

மறுநாள் காலையில் தங்கமும் ராதாவும் மல்லிகைப் பந்தலுக்குப் போய் அதனடியில் அமர்ந்து கொண்டார்கள்.

"ராதா, நீங்கள் இருவரும் அந்தச் சந்தில் ஏன் என்னைத் தனியே விட்டு விட்டுப் போனீர்கள்?" என்று தங்கம் கேட்டாள். ராதா நடந்த விவரத்தை யெல்லாம் சொல்லி விட்டு, "தங்கம் நீ எப்படி அங்கிருந்து காணாமற் போனாய்" என்று கேட்டாள்.

"ராக்கப்பன் என்னைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான்" என்று தங்கம் சொன்னவுடனே, "ஆ!" வென்று அலறிவிட்டாள் ராதா, "பயப்படாதே! நடந்தது முழுவதை யும் கேள்" என்று தங்கம் கூறினாள். அவள் பாதி கூறிக் கொண்டு வரும்பொழுதே, "அந்தச் சூனியக்காரக் கூனற் கிழவியிடமிருந்தும், ஆவியுலகத்து ராக்கப்பனிடமிருந்தும் நீ எப்படித் தப்பி வந்தாய்?" என்று கேட்டாள் ராதா. "நடராசன் உதவியால்" என்று தங்கம் பதிலளித்ததும், ராதாவின் வியப்பு மேலும் பெருகியது.

அதன் பிறகு நடராசன் தனக்கு எப்படி உதவி செய் தான் என்பதைத் தங்கம் விவரித்துரைக்க ஆரம்பித்தாள்.

"அந்த ராக்கப்பன் தன் ஓலைக் குடிசையில் என்னைச் சிறை வைத்து, அடிக்கடி வந்து தன்னைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினான். ஆனால், தான் ஒப்பி வராததைக் கண்ட அவன் என்னைப் பலவந்த மாகக் காட்டுப் பிள்ளையார் கோயிலுக்குத் தூக்கிக்கொண்டு போய் அங்கு தாலி கட்டிவிடுவதென்று முடிவு கட்டி விட்டான்"

"ஆமாம், ஆவிகள் பிள்ளையார் கோயிலைக் கண்டால் பயப்படும் என்பார்களே!" என்று இடையிட்டுக் கேட்டாள் ராதா.

"அவன் ஆவியுமில்லை, பிசாசுமில்லை. நானும் உன்னைப்போல் தான் முதலில் அவனை ஆவியுருவமென்று எண்ணிப் பயப்பட்டேன். ஆனால் நடராசன் வந்த பிறகு தான் ராக்கப்பனும் ஒரு சாதாரண மனிதன் தான் என்பதைத் தெரிந்துகொண்டேன். சாயுங்காலம் அவன் என்னைத் தூக்கிக்கொண்டு போகும்போது அந்தப் பாதையாக நடராசன் சென்றுகொண்டிருந்தார். அவரைக் கண்டவுடன் எனக்குச் சிறிது தைரியம் பிறந்தது. கூச்சலிட்டேன், என்

கூச்சலைக் கேட்டுவிட்டு அவர் நெருங்கி வந்தார். என்னைத் தூக்கிச் சென்றதை அவர் கண்டுபிடித்தார். உடனே பாய்ந்து வந்து, அவனை வழி மறித்தார். அவன் என்னைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அவரோடு வாதாடினான். வார்த்தை தடித்து ஒருவரையொருவர் திட்டுவதில் முடிந்தது. திட்டுவது மாறி அடிதடியில் வந்து நின்றது. அவர் தன் ஒற்றைக்கையால் அவனை ஓங்கி ஓர் அறை அறைந்தார். அவன் சன்னம் கூவி வீங்கிப் போய்விட்டது. இருந்தாலும் அவன் மிகுந்த ஆக்கிரோஷத்தோடு அவர் மீது பாய்ந்தான். அவர் போராடிக்கொண்டே அவன் காலை இடறிவிட்டார். அவன் நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். அவன் பல் ஒரு கல்லில் மோதிச் சிதறுண்டு விழுந்தது. அவன் மயங்கிச் சோர்ந்து கீழே விழுந்தான். அவனைப்பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் அவர் என்னைத் திருப்பி அழைத்துக் கொண்டு வந்தார். நானும் இங்கு வந்து சேர்ந்துவிட்டேன். அவர் மட்டும் இல்லாவிட்டால்'' என்று தங்கம் கூறியபோது,

''பாவம்! நீ பேய்க்கு வாழ்க்கைப்பட்டிருக்க வேண்டி வந்திருக்கும்!'' என்றாள் ராதா.

''அவன் பேயல்ல! அவன்தான் அசல் ராக்கப்பன்!'' என்றாள் தங்கம். ராதா வியப்புடன், ''அப்படியானால், பேயாக இருக்கும் ராக்கப்பன் யார்?'' என்று கேட்டாள் ராதா.

'தூக்கிலே தொங்கிச் செத்தவன் ராக்கப்பனல்ல. யாரோ அவனைப்போல் கொடூரமான உருவமுள்ளவன். குடும்பக் கவலை தாங்கமாட்டாமலோ, நல்ல மனைவி வாய்க்காமலோ அவன் தூக்குப் போட்டுக்கொண்டு செத்திருக்கிறான். அவன் செத்த நாளும், ராக்கப்பன் இந்த ஊரை விட்டு வெளியூருக்குப் பிழைக்கச் சென்ற நாளும் ஒன்றாக இருந்திக்கின்றன. ஆகவே, இறந்தது ராக்கப்பன்தான் என்று

ஊாரர் முடிவு கட்டிவிட்டார்கள். ராக்கப்பனுடைய ஆவிக்கு அவனுடைய தீயகுணங்களையெல்லாம் ஏற்றிச் சொல்லி விட்டார்கள்.

"அப்படியானால் நடராசன் சொன்னதெல்லாம் உண்மைதானா? பேயென்பது, வீண் மனப் பிராந்திதானா?" என்று கேட்டாள் ராதா'

"சந்தேகமில்லாமல்"

"தங்கம், நீ நடராசனைப்பற்றி என்ன நினைக்கிறாய்!"
"பைத்தியமல்ல-பகுத்தறிவுவாதிஎன்றுஎண்ணுகிறேன்"

"அதைக் கேட்கவில்லை தங்கம். உனக்கு அவரைப்பற்றி என்ன தோன்றுகிறது?"

"தோன்றுவதற்கு என்ன இருக்கிறது? நல்லவர்! அழகானவர்! ஆனால் அந்தக் கை மட்டும் ஒழுங்காக இருந் திருந்தால்... " என்றாள் தங்கம்.

"கை மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால்... என்ன செய்வாய்?" என்று கேட்டாள் ராதா.

தங்கம் பேசாமலிருந்தாள். அவள் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

தங்கத்திற்கும், நடராசனுக்கும் முடிச்சுப் போடப் பேச்சு நடந்ததெல்லாம் ராதாவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் தங்கத்திற்கு நடராசனுடைய பைத்தியக்காரத் தனமும், முடம்பிடித்த கையும் பிடிக்கவில்லை; அதனால் திருமணம் நடக்கவில்லை என்பதும் அவளுக்குத் தெரியும்.

"தங்கம், நானாயிருந்தால், அவர் கை ஒழுங்காக இல்லாததற்காக அவரை வேண்டாமென்று ஒதுக்கிவிட மாட்டேன்,"

"என்ன? என்ன? உண்மையாகவா?" என்று அவளை உற்று நோக்கினாள் தங்கம்.

"ஆம்" என்பது போல் நாணிக் கோணிக் குனிந்து கொண்டாள் ராதா. அவளுடைய முகத்திலே செம்மை படர்ந்திருந்தது.

தங்கம் அவளைக் கூர்ந்து நோக்கினாள். சிறிது நேரத்திற்குப் பிறகு, "ராதா, உண்மையாகத்தான் சொல்கிறாயா? அந்த ஒற்றைக்கையரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள். அவள் கேள்வியில் கேலியோ, கிண்டலோ இல்லை என்பது நிச்சயம். ஆனால் ஏதோ ஓர் உள்ளுணர்ச்சி ராதா அவனைக் காதலிக்கிறாளா என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை அவளுக்கு ஏற்படுத்தியது போலிருந்தது.

ராதா அவளுக்கு எதுவும் பதில் சொல்லவில்லை. பேசாமல் எழுந்து "தங்கம், நான் போய் வருகிறேன்." என்று சொல்லிவிட்டுத் தோட்டத்துப் பாதை வழியாகவே தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

உண்மையில் அவள் நடராசனைக் காதலிக்கிறாளா அல்லவா என்று தெளிவாகத் தெரிந்துகொள்ளத் தங்கத்தால் முடியவில்லை.

# 12. உணர்ச்சிக் குழப்பம்!

உலகப் பழி என்பது இருக்கிறதே, அதற்குப் பயப்படாதவர்கள் மனிதரல்ல. இந்த உலகப் பழியைப்பற்றி அறிஞர்களிடையே மட்டுமல்லாமல் மக்களிடையேயும் கூட இரு விதமான கருத்துக்கள் நிலவுகின்றது.

உலகம் பழிக்கும் என்பதனால்தான் இன்று உலகத்தில் ஓரளவு யோக்கியத் தன்மையும். நல்ல பண்பும் நாகரிகப் போக்கும் நிலவுகிறதென்று சொல்ல வேண்டும். இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள் கூடத் தீமைபுரிவதற்கு அஞ்சுவதில்லை. இன்னும் சொல்லப் போனால் தீயதொரு காரியத்தை அல்லது கள்ளச் சந்தை வியாபாரத்தைக்கூட, வெற்றிகரமாக முடித்துத் தரும்படி கடவுளுக்குப் பூசை போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்கிறார்கள். ஆனல், உலகத்துக்குப் பயப்படுகிறவர்கள் அப்படியல்ல, எங்கே தான் செய்கிற காரியம் வெளிக்குத் தெரிந்துவிடுமோ? தெரிந்து விட்டால், வெளியே தலை காட்டமுடியாதே என்று அஞ்சி நடுங்குகிறாகள், தன் முரட்டுத்தனத்தால் மற்றவர்களை அரட்டி மிரட்டும் தன்மை வாய்ந்த குண்டனாக இருந்தாலும் சரி, தன் பணப் பெருக்கால் எதையும் திரைபோட்டு மறைத்துவிடலாமென்று எண்ணுகிற முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவனா

யிருந்தாலும் சரி, தன் பதவி அதிகாரத்தால் எதுவும் வெளி வராதபடி செய்துவிடக்கூடிய வசதியுள்ளவனாகவிருந் தாலும் சரி, தன் ஆணவம், அதிகாரம், செல்வம் எல்லா வற்றையும் கடந்து எங்கே தன் தீய செயல் வெளிப்பட்டு விடுமோ என்று பயந்து நடுங்குகிறான்.

எப்படிப்பட்டவன் எவ்வளவு மறைமுகமாக ஒரு கொடுமையையோ, தீமையையோ செய்தாலும் அது எப்படியும் வெளிப்பட்டே தீரும். உலகம் எதையும் நெடு நாளைக்குத் தன்னகத்தே அடைத்து வைத்திருக்காது. அது உலக இயற்கை. பூமியின் வயிற்றில் தங்கமோ. நிலக்கரியோ வைரமோ புதைந்து கிடந்தாலும் கூட அதுவும் ஒரு நாள் வெளிப்பட்டுவிடுகிறது. வையகத்தின் குடலுக்குள்ளே ஓடிக் கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பு என்றாவது ஒரு நாள் எரி மலைவாயிலாக வெடித்துக் கிளம்பத்தான் செய்கிறது. எதையும் என்றும் அடக்கி மறைத்துக் காக்காத இயல் புடையது இவ்வுலகம். இந்தச் சடப் பொருள்கள் மட்டுமல்ல, காற்றில் இருக்கின்ற ஒலியணு மாத்திரமாக உள்ள இரகசியங்களும் கூட இந்த விதிக்கு—இயற்கைக்கு விலக்கானவையல்ல. அவையும் ஒரு நாள் வெளிப்பட்டே தீரும். யாரும் காணாத இடத்திலேயிருந்து தன்னந் தனியாகவே ஓர் அக்கிரமத்தைச் செய்து முடித்தவன்கூட என்றாவது ஒரு நாள் அந்த இரகசியச் செய்தியைத் தன் நெஞ்சிலே புதைத்து வைத்திருக்கமாட்டாமல் வெளியிட்டு விடுவான்.

அந்தக் கொடுமையின் இரகசியம் சிறிது வெளிப்பட்ட உடனேயே உலகம் அவனைப் பார்த்தும் பார்க்காமலும் பழிக்கத் தொடங்கிவிடும். ஆகவேதான், நல்லறிவு மிக்க சான்றோர்கூட உலகப் பழிக்கு மிகவும் பயப்பட்டார்கள்; பயப்பட்டு வருகிறார்கள்.

நல்லவர்கள் உலகப் பழிக்கு ஏன் பயப்பட வேண்டும் என்னும் போதுதான் நாம் அந்த உலகப் பழியைப் பற்றிய இரண்டாவது கருத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சில சமயம் இந்த உலகப் பழி அடிப்படையே இல்லாமல் ஏற்பட்டு விடும்.

பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் அது பாலென்று நம்பாது இந்த உலகம். "பார்! பார்! இவனைப் போய் நல்லவனென்று எண்ணிக் கொண்டிருந்தோமே, இப்போதல்லவா தெரிகிறது இவன் வண்டவாளம்" என்று பழிக்கத் தொடங்கிவிடும். இதற்காகத் தான் "கண்ணால் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்; தீர விசாரித்தறிவதே மெய்" என்றுசொல்லுகின்ற வழக்கும் ஏற்பட்டது. ஆனால், உலகம் அப்படித் துப்பறியும் வேலையில் ஈடுபட்ட பிறகா தன் பழிவாயைத் திறக்கிறது? "நான் பார்த்தேன் அவனும் அவளும் ஒன்றாக இருந்ததை, என்று ஒருவர் சொல்ல, அவளை அழைத்தது நன்றாக என்காதில் விழுந்தது என்று கூட இருப்பவர் கூற உலகத்திலே யோக்கியன் என்று சொல்லத் தகுதி வாய்ந்தவன் யாருமே கிடையாது என்று மூன்றாமவர் முடிவு கட்டி விடுவார். இப்படியாக ஒருவனைப் பற்றிய பழிச்சொல் எவ்விதமான உண்மை ஆதாரமுமின்றியே ஒன்றுக்குப் பத்தாகப் பத்துக்கு நூறாக வளர்ந்து பெருகிவிடும். இந்த உலக இயல்பைக் கண்டு தான் மிக உயர்ந்த ஒழுக்க நெறியில் வாழ்க்கை நடத்தும் பெரியோர்கள், எங்கே தங்களை உலகம் தவறாகப் புரிந்து கொண்டு பழிக்கத் தொடங்கிவிடுமோ என்று எப்போதும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள்.

ஒரு முறை உலகப் பழிக்கு ஆளாகிறவன் அந்தப் பழியைத் துடைத்துக்கொள்வதென்பது மிகவும் அரியசெயல். எவ்வளவுதான் அவன் உண்மை விளக்கங்கள் கூறினாலும் அவற்றை நிலைநாட்டுவது அரிது.

சான்றோர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் கூடச் சமயத்தில் உலகப் பழிக்கு இலக்காகி விடுகிறார்கள் என்று சொன்னோமல்லவா அந்தக்கதி நமது தங்கத்திற்கும் ஏற்பட்டது.

தங்கமான பண்புடைய தங்கத்துக்கா இந்தப்பழி? பழிக்கப்படும்படி அவள் என்ன செய்தாள்? இது என்ன அநியாயம்? இந்த உலகத்தில் நீதியேயில்லையா? உண்மைக்கு இங்கே இடமேயில்லையா? என்று உங்கள் உள்ளம் துடிக்கலாம். உங்களுக்கு மட்டுமல்ல, கந்தசாமி வாத்தியாருக்கும், மரகத அம்மாளுக்கும் கூடத்தான் இந்தப் பழிப் பேச்சு காதில் விழுந்தபோது இந்த மாதிரியான ஆத்திரம் ஏற்பட்டது:

அவர்களுக்கு நன்றாகத் தெரியும், தங்கத்திற்கு முருகேச வாத்தியாரின் பிள்ளை நடராசன் மீது சிறிதுகூடக் காதல் கிடையாது என்று ஆனால் அந்த நெய்யூர் முழுக்க, நேரில் கண்டது போல் என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா? "தங்கத்திற்கும் நடராசனுக்கும் காதல் உண்டாகிவிட்டது. நடராசன் அவளைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போய்விட்டான்; ஆனால் விஷயமறிந்ததும் பயந்துபோய்த் திரும்பவும்கூட்டிக் கொண்டு வந்து விட்டுவிட்டான்." இப்படித்தான் ஆங்காங்கே கணவனும் மனைவியும், அத்தானும் மச்சானும், அண்ணியும் நாத்தியும், நண்பர்களும் தோழர்களும் தத்தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள். "தங்கமா? சே! சே! அப்படியிருக்கவே யிருக்காது. நான் நம்பவே மாட்டேன்" என்று யாராவது மறுத்துச் சொன்னால் "உள்ளதுதான்! தங்கம் நல்ல பெண் தான். ஆனால், வயதையும் பருவத்தையும் யோசித்துப் பார்த்தாயோ? பஞ்சும் நெருப்பும் ஒன்றாய் இருந்தால் என்ன ஆகும்?" என்று கேட்டு அடித்துச் சொன்னார்கள் பேச்சைத் தொடக்கியவர்கள்.

எப்போதும் பழி கூறுபவர்கள் தங்கள் கூற்றை மெய்யாக்கிக் காட்ட முயல்வதும். அதைக் கேட்பவர்கள் கடைசியில் உண்மையென்று நம்பி விடுவதும்தான் வழக்கம். அப்படி நம்பாதவர்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் பெரிய ஞானிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தங்கத்தைப் பற்றி ஊரார் பேசிக் கொண்டதையும், பழி தூற்றியதையும் கேட்டுக் கந்தசாமி வாத்தியார் துடித்தார்.

மரகத அம்மாளோ வாய்விட்டு அழமாட்டாமல் அடுப்படி மூலையிலே குந்திக் கொண்டு ஒரே கவலையாக 'உம்' மென்று இருந்தாள். தங்கத்தின் காதில் முதன் முதல் இந்தச் செய்தி விழுந்தபோது அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. நெய்யூர்க்காரர்கள் எல்லோருமே கற்பனைக் கதை எழுது வதற்கு மிக மிகப் பொருத்தமானவர்கள் என்று அவள் எண்ணினாள். ஆனால், வர வர அந்தப் பேச்சு வளர்ந்து எங்கும் பரவிய போக்கினைக் கண்டபோதுதான். அது எவ்வளவு தூரம் தன் மானத்தைப் பாதிக்கக் கூடிய ஆற்றலுடையதாயிருக்கிறது என்பதை உணர்ந்தாள்.

ஊர்ப்பழி என்று ஒன்று ஏற்பட்டு விட்டால், அது காதலர் இருவருக்கிடையேயும் உண்டாகிய காதலை மேன் மேலும் வளர்க்கும் என்று சொல்லுவார்கள். அந்தக் காதலுக்கு ஊர்ப் பழியே உரமாக அமையும் என்று கூறு வார்கள். ஆனால் தங்கம் தான் நடராசனைக் காதலிக்க வில்லையே. காதலித்தால் அல்லவா அந்தக் காதல் வளரும்; அல்லது, ஊர் என்ன சொன்னாலும் அதை உறுதியோடு வளர்த்து வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்?

அவளுக்கு நடராசன் மீது ஏதோ ஒரு விதமான அன்பு இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அந்த அன்புக்குப்

பேர் காதல் என்று அவள் நினைக்கவில்லை. நடராசனுடைய உருவத் தோற்றம் அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது. அழகான அந்த உருவத்தை முதன் முதல் அவள் கண்ட போது பிரமித்துப் போனவள்தான். ஆனால், அவன் ஒரு பைத்தியக்காரன்; அதிலும் ஒரு கை முடவன் என்றறிந்த பிறகு அவளால் அவனைத் தன்னோடு உடன் வைத்து எண்ணிப் பார்க்கவே துயரமாக இருந்தது. பிறகு அவனுக்குப் பைத்தியம் தெளிந்துவிட்டது என்று கண்டபோது அவனைப் பற்றி அவள் நல்லெண்ணம் கொள்ள ஆரம்பித்தாள். அவனுடைய அறிவு மணம் கமழும் பேச்சுக்களைக் கேட்ட போது அவளுக்குத் தன்னையறியாமல் ஒரு பெருமை யுணர்ச்சிகூட உண்டாகியது என்றுதான் சொல்ல வேண்டும். அவனை யாரும் பைத்தியம் என்று பழித்தால் கூட அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால், அப்போதும் அவள் அவன் தன்னுடன் இணைத்துப் பேசப்படத் தகுதியுள்ளவன் என்று நினைக்கவில்லை. குறைபட்ட அவனுடைய கையைக் காணும்பொழுதெல்லாம் அல்லது நினைக்கும்பொழு தெல்லாம் அவனுக்கும் தனக்கும் எவ்விதமான பொருத்தமும் இல்லையென்றே அவள் எண்ணிவந்தாள்.

அவனுக்கும் தனக்கும் எவ்விதமான பந்தமும் ஏற்பட விரும்பாத அவளைப் போய் அவன்மீது ஆசைப்பட்டுக் கூட ஓடிப் போய்விட்டாள் என்று ஊர் பழித்துப் பேசியதை நினைத்துப் பார்த்தபோது அவளுக்கு முதலில் சிரிப்பாக வந்தது. போகப் போக எரிச்சலாக வந்தது.

அதுமட்டும் உண்மையான காதலாக இருந்திருந்தால், ஊர் எவ்வளவுதான் பழித்திருந்தாலும் அவளுக்குத் தங்கள் இருவரையும் ஊரார் இணைத்துப் பேசுவது இன்பத்தைக் கொடுத்திருக்கக்கூடும். ஆனால், அவள் பேருக்குக்கூட நடராசன் மீது காதல் கொள்ளவில்லையே. அது அவளுக்கு இன்பத்தை எப்படித் தரும்? ஆனால், நடராசனைப்

பொறுத்த வரையில் அந்தப் பழி உண்மையில் அவன் நெஞ்சில் இன்பநீர் பாய்ச்சியது என்று தான் சொல்ல வேண்டும்.

நடராசன் சுத்தப் பைத்தியக்காரனாய் இருந்தபோதே அவன் மனம் தங்கத்தின்மேல் பதிந்துவிட்டது. அந்தப் பைத்தியக்கார நிலையிலும் அவன் தங்கத்தைத் தன் பெண்டாட்டியாக்கிக்கொள்ள விரும்பினான். அவ்வாறு ஆக்கிக்கொள்வதால் தனக்கு நன்மையுண்டென்று அவன் எண்ணினான். பிறகு பைத்தியம் தெளிந்து அறிவு வளர வளர அவன் தங்கத்தின்மேல் வைத்திருந்த மதிப்பு மேலோங்கியது. தங்கத்தைப்போல் ஒரு குணவதியை, அறிவுச் செல்வத்தை, அமைதிக் கடலை உலகத்தில் காண்பது அரிது என்று கருதக் கருத அவனுக்கு அவள் மேல் இருந்த அன்பும் வாஞ்சையும் அதிகமாயின. அவன் வெளியிலே காட்டிக்கொள்ளா விட்டாலும், தங்கத்தைப் பார்க்கப் போகிறோம் என்று எண்ணியபோதே பரவசமடைந்தான். அவளோடு பேசிக் கொண்டிருக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அதுவே பேரின்பம் என்று மகிழ்ச்சியுற்றான். அவள் தன்னிடம் அன்பாகப் பேசுகிறாள் என்று நினைக்கும்போதே அவன் நெஞ்சு பெருமிதத்தால் விம்மியது. அவளுக்கும் தனக்கும் ஒரு காலத்தில் மணப் பேச்சு நடந்தது என்பதை அறிந்தபோது அவனுக்கு அந்தச் செய்தியே தேன்போலிருந்தது. அன்று இரவு அவளுக்குத் தான் வழித்துணையாகப் போக வாய்த்த சந்தர்ப்பத்தை எண்ணியபோது அவனுக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாகப்பட்டது, ஆனால், அவளைத் திரும்ப வந்து இருட்டில் தேடித் தேடிப் பார்த்துக் காணாமல் ராதா வீட்டுக்குத் திரும்பியபோது அவன் நெஞ்சு பட்ட பாடு நெருப்புப் பிடித்த பஞ்சுப் பொதிகூடப்பட்டிருக் காது. தங்கத்தைக் காண வில்லை என்ற நினைப்பே அவன் அங்கத்தை யெல்லாம் அணுத்தோறும் அணுத்தோறும் வாள் கொண்டறுப்பது போலிருந்தது. அதன் பிறகு, அவன்

தங்கத்தைக் கண்டு பிடிக்கும் வரையிலே வெறி கொண்டவன் போல் அலைந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டுபிடித்து அந்த ராகக்கப்பனிடமிருந்து மீட்டுக்கொண்டு வந்து வீட்டில் விட்ட பிறகுதான் அவனுக்கு மனத்திலே அமைதி பிறந்தது. அப்போது அவன் தனக்கு உரிய பொருளொன்றைக் காப்பாற்றிவிட்டது போன்ற நெஞ்சநிறைவை அடைந்தான். இப்போது ஊரார் தன்னையும் அவளையும் இணைத்துப் பேசியதைக் கண்ட அவனுக்குப் பெருமையாக இருந்தது. பேரின்பமாகவும் இருந்தது. ஆனால், பாவம் தங்கத்தின் மனப்போக்கைமட்டும் அவன் அறிந்திருந்தால் எத்தனை தூரம் வருத்தப்பட்டிருப்பான்! அவள் தன்னை விரும்பவில்லை—தான் இத்தனை ஆர்வத்தோடு காதலிக்கும் அந்தப் பூங்கொடி தன்னைத் தழுவிப் படர மறுக்கிறது-மனமில்லாமலிருக்கிறது என்ற உண்மையை அறிந்தால் அவன் உள்ளம்—அந்தக் கள்ளம் கபடமில்லாத நல்ல உள்ளம் எவ்வளவு வேதனைப்படும் என்பதை அந்த நிலையில் இருந்து பார்ப்பவர்களே உணரலாம்.

தங்கத்தையும் நடராசனையும் இணைத்துக் கதை பேசிப் பொழுது போக்கிய ஊராரின் பழியைக் கேட்டு மனக்கிலேசம் கொண்ட இதயம் இன்னொன்று இருந்தது. அது யாருடைய இதயம் என்பதை நாம் சொல்லாவிட்டாலும் வாசகரே இந்நேரம் தெரிந்து கொண்டிருக்கலாம்.

அந்த உள்ளம் ஊராரின் பேதைமையை எண்ணி ஒரு கணம் சிரித்தது. உண்மையில்லாத இந்தப் பழிப் பேச்சு மட்டும் உண்மையாக இருந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தபோது வெந்து நொந்தது. தங்கத்தைப் பற்றிப் பேசப்படுகின்ற விஷயங்கள் உண்மையாக இருந்து அந்த இடத்தில் தங்கத்திற்குப் பதிலாகத் தான் இருக்கக் கூடாதா என்று எண்ணி ஏங்கியது. ஆனால், அந்த இதயத்துக்குரியவள் தன் எண்ணத்தில் ஏற்பட்ட இந்த

உணர்ச்சிகளைப் பற்றி வாய் விட்டு வெளிப்படையாக யாரிடமும் தெரிவிக்காமலே இருந்தபடியால் அது யார் என்பதை நாமும் வெளிப்படையாகச் சொல்லாமல் இவ்வள வோடு நிறுத்திக் கொள்கிறோம்.

தங்கத்திற்கு வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது என்னவோ மாதிரியிருந்தது, இவ்வளவு நாளும் அந்த வீட்டிற்குள்ளேயேதான் அடைபட்டுக் கிடந்தாள். வீட்டை விட்டால் தோட்டம்; தோட்டத்தை விட்டால் வீடு என்று மாறி மாறி யிருந்து வந்தாள். வெளியில் அவள் யார் வீட்டுக்கும் போய் எந்தப் பெண்களோடும் பேசிப் பழகியதில்லை. அவளுக்குப் பழக்கம் நட்பு என்பதெல்லாம் ராதா ஒருத்தியிடம்தான். ராதாவிடமும் அவளுடைய வீட்டுக்குப் போய்த் தங்கம் பழகி வரவில்லை. ராதாதான் பெரும்பாலும் தங்கம் வீட்டுக்கு வருவாள். அவள் பத்துத் தடவை வந்தால் தங்கம் ராதா வீட்டுக்கு ஒரு தடவை போவாள். அதுவும் ராதா மிகக் கட்டாயமாகச் சொல்லி இழுத்துக் கொண்டு போனால் தான் உண்டு. அன்று என்னவோ தங்கத்திற்கு வீட்டிற்குள் இருப்பது பெருங் கட்டாயமாக இருந்தது. தோட்டத்திற்குப் போகக்கூடிய நேரமாக அது இல்லை. காலையிலோ மாலையிலோ என்றால் தோட்டத்துக்குப் போகலாம். உச்சியிலிருந்து அப்போது தான் கதிரவன் மேற்கில் இறங்க ஆரம்பித்து இரண்டு மணி யாகியிருந்தது. அந்த நேரத்தில் தோட்டத்திற்குப் போக முடியும்?

தங்கத்திற்கு வீட்டைவிட்டு எப்படியும் வெளியே போக வேண்டும் என்று ஒரே முனைப்பாக இருந்தது. அவள் மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சிக் குழப்பத்தை யாரிடமாவது கொட்டித் தீர்த்துக்கொள்ள வேண்டும் போல் இருந்தது. அம்மாவிடம் போய், ''அம்மா, ராதா வீட்டுக்குப் போய் வருகிறேன்'' என்று சொன்னாள்.

மரகத அம்மாள் தன் மகள் விருப்பத்தை எப்போதும் மறுக்கக்கூடியவள் அல்ல. அவள் இப்போது விரும்பியதும் யோசித்து விடை சொல்ல வேண்டிய விஷயமல்ல. ஆகவே, ''போய் வாம்மா'' என்று விடை கொடுத்தனுப்பினாள்.

தங்கம் ராதா வீட்டுப்படியில் கால் வைத்தபோது, ராதா கதவைத் திறந்துகொண்டு வெளியில் கால்வைத்தாள். தங்கத்தைக் கண்டவுடன் அவள் புன்சிரிப்புடன், ''தங்கம், நமக்குள் எவ்வளவு மன ஒற்றுமை பார்த்தாயா? உன்னை உடனடியாகப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. கிளம்பினேன். நீயும் என்னைப் பார்க்க வந்து நிற்கிறாய்?'' என்று சொன்னாள்.

''நீ எதற்காக என்னைப் பார்க்க நினைத்தாய்?'' என்று கேட்டாள் தங்கம்.

''காரணமெல்லாம் எனக்குச் சொல்லத் தெரியாது. ஏதோ என் மனத்தில் அவ்வாறு தோன்றியது. உடனே புறப்பட்டேன்'' என்றாள் ராதா.

''சரி, வா போகலாம்!'' என்று தன் வீட்டுக்கு அழைத்தாள் தங்கம்.

''ஏன் இங்கேயே இருப்போமே'' என்று தன் வீட்டுக்கு அழைத்தாள் ராதா.

சரியென்று தங்கம் ராதா வீட்டுக்குள் நுழைந்தாள்.

இருவரும் கூடத்திலே போய் உட்கார்ந்தார்கள்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. யார் முதலில் பேசுவதென்று தெரியாமல்உட்கார்ந்திருந்தார்கள் போலிருக்கிறது

கடைசியில் தங்கம் ''ராதா!'' என்று பேச வாயெடுத்தாள். அதே சமயம் ராதாவும் ''தங்கம்'' என்று கூப்பிட்டாள்.

அடுத்தாற்போல் இருவ்வரும் ஏக காலத்தில் ஒருவரையொருவர் ''என்ன?'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

"இன்று நம் மன ஒற்றுமை அதிகமாகத்தான் இருக்கிறது. நீ சொல்ல வந்த செய்தியைச் சொல்" என்றாள் தங்கம்.

"இல்லை, நீயே சொல்!" என்றாள் ராதா.

"இப்படி வம்பு பண்ணினால், ஒற்றுமை வேற்றுமையாகி விடும். பேசாமல் நீயே சொல்!" என்று தங்கம் செல்லக் கோபத்துடன் சொன்னாள். ராதா பணிந்துவிட்டாள்.

"தங்கம் உண்மையாகச் சொல். உனக்குக் கொஞ்சங் கூட நடராசனைப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள் ராதா.

"ராதா, நீ உண்மையாகச் சொல். அவரை நீ கொஞ்சங் கூட வெறுக்கவில்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

"குறும்புக்காரியடி நீ! எப்பொழுதும் மனத்தில் உள்ளதைச் சொல்லவே மாட்டாய்!" என்று கடிந்து கொண்டாள் ராதா.

'நீதான் என்னவாம்? அப்படியே பிட்டுப் பிட்டுச் சொல்லிவிடுகிறாயாக்கும்?" என்று கேட்டாள் தங்கம்.

"எனக்கு அந்த நடராசனைக் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை." என்றாள் ராதா.

தன் வாயைக் கிளறத்தான் அவள் அப்படிச் சொல்கிறாள் என்று தெரிந்து கொண்டாள் தங்கம்.

"எனக்கும் அப்படித்தான்!" என்றாள்.

"ஆனால், அந்தக் கை மட்டும் ஒழுங்காக இருந்தால்..." என்று குறும்புத் தனமாக ஆரம்பித்தாள் ராதா.

"அவ்வளவுக்கு ஏன் போகிறாய்? கை எப்படியிருந் தாலும் கட்டிக்கொள்ளத்தான் ஆளிருக்கிறதே!' என்றாள் தங்கம்,

உடனே ராதாவின் தலை தானாகக் கவிழ்ந்தது. அவள் முகம் சிவந்தது. அவளுக்குத் தங்கத்தை நிமிர்ந்து பார்க்கவே கூச்சமாயிருந்தது. அவள் நடராசனைக் காதலிக்கிறாள் என்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டாள் தங்கம். இதே உணர்ச்சிகளை முன்னொரு நாள் ராதா வெளிப்படுத்தியபோது" அவள் உள்ளத்தைச் சரியாகத்தெரிந்து கொள்ளாத தங்கம் இப்போது தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டாள். ஆனால், நடராசன் தங்கத்தின்மேல் ஒரே உயிராக இருக்கிறான் என்ற விஷயம் அந்தப் பேதைப் பெண்கள் இரண்டு பேருக்குமே தெரியாது.

சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு தங்கம் பேசத் தொடங்கினாள்.

"ராதா, நான் காணாமற் போனதைப் பற்றி ஊரிலே என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''ஊர் அப்படித்தான் பேசும்! அப்படிப் பேசப்பட்டவர்கள் இருவருமே திருமணம் செய்துகொண்டுவிட்டால் அப்புறம் 'ஆகா! காதல் தம்பதிகள்!'' என்று புகழ்ந்து பாராட்டும்.

''அப்படிப் பேசப்பட்டவர்களில் ஒருவருக்கும் பேசப் படாதவள் ஒருத்திக்கும் திருமணம் நடந்தால் இந்த ஊர் என்ன செய்யும்?'' என்று கேட்டாள் தங்கம்.

ராதா பதில் சொல்ல வாயெடுத்தாள். ஆனால் சட்டென்று தன் உதட்டைக் கடித்துக்கொண்டு, முன்னிலும் நாணம் படர்ந்து சிவந்த முகத்தோடு, ''தங்கம்! வரவர நீ பெரிய குறும்புக்காரியாய் வந்துவிட்டாய்! உன்னை அந்த ஒற்றைக் கையனுக்கே திருமணம் செய்து வைத்துத்தான் தண்டிக்க வேண்டும்'' என்று கூறினாள்.

''சரி, அப்படியேதான் செய்துகொள்கிறேனே!'' என்று அலட்சியமாகச் சொல்லிய தங்கம் ராதாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

அலட்சியமான அவள் கூற்றைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாத ராதாவுக்கு உடனே முகத்தில் ஏமாற்றக்குறி படர்ந்தது. பேச்சுக்காகத் தங்கம் அப்படிக் கூறியிருப்பாள் என்று அவள் எண்ணிய போதிலும் கூட, அவள் அப்படிச் சும்மா சொன்னதைக்கூட அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவள் உணர்ச்சிகளை ஆரம்பத் திலிருந்தே கவனித்துக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த தங்கம், "பயப்படாதே! நான் உனக்குப் போட்டியாக வந்துவிட மாட்டேன்!'' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

அதன் பிறகுதான் ராதாவின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. கொஞ்சநஞ்சம் மிஞ்சியிருந்த வெட்கத்தையும் ஒதுக்கிவிட்டு ராதா, தங்கத்திடம் தன் இதயத்துணர்ச்சிகளை வெளிப்படுத்திப் பேசத் தொடங்கினாள்.

அன்று, புளிய மரச் சந்திலிருந்து நடராசன் தன்னைத் தூக்கிக்கொண்டு வந்ததையும், பிறகு தான் கண் விழித்ததையும், கீழே இறங்கிப் பயந்து அவரை ஒட்டிக் கொண்டே வந்ததையும் கூறினாள். பிறகு, அவர் தன்னை விட்டுப் போனது முதல், அவள் எதையோ இழந்து தவிப்பது போல் உணர்ந்ததையும், அவருடன் தான் அந்த இருட்டில் ஒட்டி ஒட்டிக்கொண்டு வந்த செயலை எண்ணிப் பார்த்து உள்ளம் சிலிர்த்ததையும், தன் வாழ்வில் அவரே துணையாக என்றும் இருக்கக் கூடாதா என்று எண்ணி ஏங்கியதையும் விரிவாக எடுத்துக் கூறினாள். பொதுவாகவே, பெண்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிவிட்டால், தங்கள் உள்ளத்து இரகசியங்களையெல்லாம் ஒருவர்க்கொருவர் எடுத்துச் சொல்லி விடுவார்கள். ஆனால், தங்கம் இந்த விஷயத்தில் அழுத்தக்காரி என்றுதான் சொல்ல வேண்டும். அவள் தன் அத்தான் சுந்தரேசனிடம் கொண்ட ஈடுபாட்டைப் பற்றி ராதாவிடம் சொல்லவேயில்லை. நடராசனைப் பொறுத்தவரை அவள் தன் மனக் கருத்தை

ராதாவுக்கு எடுத்துச் சொல்லியிருந்தாளே தவிர, சுந்தரே சனைப் பொறுத்த செய்தி எதுவும் சொல்லவேயில்லை.

ராதா, தன் இதயத்தை அப்படியே தங்கத்திற்கு விரித்துக் காட்டிவிட்டாள் என்றே சொல்ல வேண்டும். நடராசன் எப்படிப்பட்டவராயிருந்த போதிலும் அவரையே கட்டிக்கொள்வதென்று தான் தீர்மானித்துவிட்டதாக அவள் உறுதியாகச் சொன்னாள்.

அவனையும் தன்னையும் சேர்த்துப் பார்த்து-அவள் கட்டியிருந்த இன்பக் கனவுகளையெல்லாம் எடுத்தெடுத்துச் சொன்னாள். முதலில் சிறிது அலட்சியமாகவே அவள் பேச்சுக் களைக் கேட்டுக் கொண்டு வந்த தங்கம், போகப் போகக் கவனமாகக் கேட்கத் தொடங்கினாள். ராதா தன் காதலை விவரித்துச் சொல்லச் சொல்லத் தங்கத்தின் மனத்தில் வியப்பும் பிரமிப்பும் மேலோங்கின.

ஒரு பெண் ஓர் ஆடவனிடம் இதயத்தைச் செலுத்தி விட்டால் அவனைச் சாதாரண மனிதனாக மதிப்பதில்லை. மனிதர்களுக்கு எல்லாம் மேலாக, மிக மிக உயர்ந்தவனாக மதிக்கத் தொடங்கிவிடுகிறாள் என்ற எண்ணம் தங்கத்திற்கு ஏற்பட்டது. தான், தன் அத்தானை அவ்வளவு மேலாகக் காதலிக்கவில்லை என்ற தாழ்வுணர்ச்சி கூட அவளுக்கு உண்டாகியது. ராதா பேசப் பேச அவளுக்கே நடராசன் உயர்ந்தவனாகக் காணப்பட்டான்.

கடைசியாக ராதாவுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய தங்கத்துக்கு, மனத்தில் ஏதோ புது விதமான உணர்ச்சி ஒன்று தோன்றியிருந்தது. ஒருவேளை அவளுக்கு ராதாவின் மேல் ஏற்பட்ட பொறாமையுணர்ச் சியாகக்கூட அது இருக்கலாமோ என்று எண்ணும்படியாக இருந்தது. தனக்கு நடராசன் மேல் காதல் இல்லை என்று அவள் தெளிவாக உணர்ந்தாள். ஆனால், அவனை ராதா காதலிப்பதைக் கண்டு தனக்கு ஏன் பொறாமை போன்ற உணர்ச்சி தோன்ற வேண்டும் என்று அவளுக்கே புரியவில்லை ஒரே குழப்ப மாயிருந்தது!

# 13. நடராசன் ஓடிவிட்டான்.

வீட்டிலே பணம் கொண்டு வந்து தரவில்லையென்று சொல்லி நச்சரித்தாளாம் மனைவி, அதைத் தாங்கமாட்டாமல் சீட்டாடக் கிளப்புக்குப் போனான். அங்கே யிருந்தவர்கள் அவனைப் பழைய பாக்கி கேட்டுத் துன்புறுத்தினார்களாம். மனத்துன்பத்தை மறப்பதற்காக ஒருவன் திரைப்படம் பார்க்கப் போனானாம். அங்கே படத்தில் ஓடிய கதையோ சோகக்கதையாக இருந்ததாம். அது அவனுடைய மனத் துயரத்தை அதிகப்படுத்தவே உதவியதாம், மனிதர்கள் பெரும்பாலான சமயங்களில் இப்படித்தான், அழுக்குத் தீரக் குளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டு, சேற்றிலே இறங்கியவன் கதை போல, தங்கள் துன்பத்தைத் தீர்க்க முயன்று மேலும் துன்பப்படும் நிலையை அடைகிறார்கள்.

தங்கமும் இப்படித்தான் தன் மனக் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணிக் கொண்டு ராதா வீட்டிற்குப் போனபின், மேலும் குழம்பிய மனத்தோடு வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள். அவளால் வீட்டில் இருக்கவே முடியவில்லை. ஆகவே தோட்டத்திற்குள் நுழைந்து மல்லிகைப் பந்தலின் அடியில், மாலை வெயில் அவளுடைய பொன்வண்ண மேனிக்கு மூலாம் பூசி அழகு செய்ய, ஓவியச்சிலைபோல் உட்கார்ந்து சிந்தனை வயப்பட்டு

இருந்தாள். அவள் எவ்வளவு முயன்றும், ராதாவின் பேச்சுக் களை மறக்கவே முடியவில்லை. அவள் நடராசனைப் பற்றிக் கூறிய ஒவ்வொரு வரியும் அவள் உள்ளத்தில் ஒவ்வொரு படி அவனைப் பற்றிய மதிப்பை உயர்த்தி ஏற்றுவதாகவே யிருந்தது.

இவ்வளவு நாளும் தங்கம் நடராசனை மிகவும் சாதாரணமாகவே எண்ணிக் கொண்டிருந்தாள். இப்போது ராதா பேசியதைப் பார்க்கும்போது, அதே நடராசன் எங்கோ ஒரு பெரிய குன்றின் மீது மிக உயரமான முடியின் உச்சியில் ஒளி வீசுகின்ற பெருஞ்சோதி போலத் தோன்றினான். இவ்வளவு நாளும் தனக்கு அவனைப்பற்றி இம்மாதிரியான கருத்துத் தோன்றாதபோது, ராதாவுக்கு மட்டும் எப்படித் தோன்றியது என்று அவள் ஆச்சரியப் பட்டாள்.

ஒரு வேளை ராதா அவன் மீது கொண்டுள்ள காதலால் அவனை இவ்வளவு உயர்த்திப் பேசுவதாயிருக்கக் கூடும் என்ற எண்ணம் தங்கத்தின் இதயத்தில் திரும்பத் திரும்பத் தலைதூக்கியது. ஆனால் அதே சமயம் தான் விரும்புகின்ற தன் அத்தான் மீது தனக்கு இவ்வளவு மகோன்னதமான கருத்து எதுவும் உண்டாக வில்லையே என்றும் தங்கம் எண்ணினாள். அத்தான் சுந்தரேசனுடைய நினைப்பு வந்ததும், அவளுக்கு, நடராசன் மதிப்பை எடை போட ஓர் அளவு கோல் கிடைத்தது போலாயிற்று.

நடராசனுக்கும் அத்தான் சுந்தரேசனுக்கும் இடையேயுள்ள பண்பு பாகுபடுகளை அவள் ஒப்பிட்டுப் பார்த்தாள். நடராசன் நல்லவன்; களங்கமற்றவன். உயர்ந்த பழக்க வழக்கங்களும், பண்பு நலங்களும் சிறக்கப் பெற்றவன். ஆனால், எவ்வளவு இருந்தாலும் அவன் அத்தான் சுந்த ரேசனைக் காட்டிலும் மட்டமானவனாகவே அவளுக்குத்

தோன்றினான். அத்தான் சுந்தரேசனுடைய ஒரு புன்சிரிப்புக்கு முன் இத்தனை குணப்பண்புகளும் தலைகுனிந்தோட வேண்டியதுதான். அத்தானுக்கு இந்த நல்ல குணங்கள் குறைவு தான் என்றாலும், அவரிட மிருந்த கவர்ச்சிக்கு முன் இவையெல்லாம் என்ன செய்தும் தலை தூக்கமுடியவில்லை; தன் அத்தானுக்கு முன்னால், நடராசன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே உரியவனல்ல என்று கூட அவள் மனம் முடிவு கட்டியது. ஆனால், அவனைப்பற்றி ராதா இவ்வளவு பெரிதாக எண்ணி கொண்டிருக்கிறாளே என்று அவளுக்கு வியப்பாக இருந்தது.

ஆச்சரியப் படும்படியாக அவள் கொண்ட வியப்புணர்ச்சியை மாற்றிக் கொள்ளும் படியான நிகழ்ச்சி ஒன்று அப்போது நடந்தது. நடராசனே அவள் முன்னால் அப்போது வந்து நின்றான்.

ஆம்! உண்மையில் அப்போது நடராசன் தான் அவள் முன்னே வந்து நின்றான். சுந்தரேசன் இருந்தவரை, அவனுடன் ஏதாவது வீண் சச்சரவு ஏற்படக் கூடும் என்ற எண்ணத்தில் அவன் தங்கத்துடன் நெருங்கிப் பேச முனையாமல் இருந்தான். இப்போது. சுந்தரேசன் இல்லாத படியால் தான் அவளைக் கண்டு பேசலாமென்று முடிவு கட்டிக் கொண்டு அவன் அங்கே வந்து சேர்ந்தான்.

ராதா சொன்ன விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டே அவள் அவனை நிமிர்ந்து நோக்கினாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கும் ராதாவின் இதயத்தில் ஏற் பட்ட அந்த உயர்வான எண்ணங்களே உண்டாயின. இனிமையாக டங்காரம் செய்து கொண்டிருந்த வீணையின் தந்திக் கம்பிகள் திடீரென்று அறுந்து தெறித்ததைப் போல அவளுடைய பார்வை பையப் பைய அவன் முகத்தை விட்டு இறங்கி வந்தபோது அந்தக் குறைபட்டகையைக் கண்டவுடன் அவனைப்பற்றி அவளுக்கு ஏற்பட்ட அந்த உயர்ந்த எண்ணங்களெல்லாம் சடாரென்று மாறி விட்டன.

பண்பிலும், பழக்க வழக்கத்திலும், நேர்மையிலும் நாணயத்திலும், உண்மையிலும், ஒழுக்கத்திலும் எத்தனையோ குறைகள் உள்ள சுந்தரேசன் அவளுக்கு உயர்ந்தவனாகத் தோன்றினான். ஆனால், எல்லா வகையிலும் நிறைவான நடராசன் அந்த ஒருகை, குறைவாக இருந்த காரணத்தால் மட்டுமே பிடிக்காதவனாகி விட்டான்.

ராதாவுடன் பேசிக் கொண்டிருந்த போதுகூடத் தங்கம் இப்படித் தான் எண்ணினாள். எல்லா வகையிலும் நடராசன் உயர்ந்தவர் தான். ஆனால் அந்தக் கை மட்டும் ஒழுங்காக இருந்து விட்டால்...! அந்த ஒரு காரணம் மட்டும் போதுமா அவனை வெறுத்தொதுக்க! இல்லை அவளையறியாமல் வேறு ஏதேனும் காரணமிருக்குமா? தெரியவில்லை. ஆனால் சுந்தரேசனைப் பற்றி நினைக்கும்போது மட்டும், அவனுடைய குறைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவே அவள் தன் இதயத்தை விடுவதில்லை.

இப்படிப்பட்ட மன நிலையில் இருந்த தங்கத்திடம் நடராசன் கேட்கவந்த செய்தியை நினைத்துப் பார்த்தால், நிலைமை தெரியாத பேச்சாகத்தான் அது தோன்றும்.

"தங்கம், உன்னிடம் ஒன்று கேட்கவிரும்புகிறேன்" என்று பேச்சைத் தொடங்கினான் நடராசன்.

தங்கம் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவன் சொல்லுவதைக் கேட்கத் தயாராக இருந்தாள்.

'தங்கம், உன் மனத்தில் என்ன இருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் என் மனத்தில் உள்ளதை நான் சொல்லி விடுகிறேன். கேள்! கேட்டு அது பற்றிய உன் கருத்தைக் கூறு. பல நாட்களுக்கு முன்னால் என் தந்தையும் உன் தந்தையும் கூடி நமக்குத் திருமணம் செய்து வைப்பது பற்றி ஆலோசித்தார்களாம். அப்போது நான் பைத்தியக்காரனாக இருந்ததை முன்னிட்டு ஒரு முடிவும் ஆகவில்லையாம். நீ

மறுத்தாயோ. அல்லது உன் தாய்தந்தையர் மறுத்தார்களோ தெரியாது. ஆனால், இப்போது நான்பைத்தியமல்ல—இனி நான் பைத்தியமாகவும் மாறமாட்டேன் என்று எனக்கு உறுதியாகத் தெரிகிறது. ஆகையால் தான் நான் உன்னிடம் இது பற்றிப் பேசத் துணிந்தேன். உனக்கு என்மேல் அன்புண்டா? அப்படிச் சிறிதாவது அன்பிருக்குமானால், என் இல்லத் துணைவியாக நீ வருவாயா? இதை அறிந்து கொள்ளவே நான் உன்னை நாடி வந்தேன்'' என்றான் நடராசன்.

அவன் பேச்சு, காதலனுடையதைப் போல் இல்லை. அப்படி யிருந்திருக்குமானால் தங்கம் அவ்வளவு நேரம் அதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு இருந்திருப்பாளா என்பதும் ஐயம்தான்! முன்னமேயே அவளிடம் இன்னதுதான் பேச வேண்டுமென்று திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டு வந்தவனைப்போல் அவன் பேசினான். ஆனால், அந்தப் பேச்சிலும், அவன் தங்கத்தின் மேல் கொண்டிருந்த அளவு கடந்த காதல் வெளிப்பட்டுத் தோன்றாமலில்லை.

தங்கமும் திட்டவட்டமாகத் தெரிவித்தாள், ''தயவு செய்து இதுபற்றி இனிமேல் என்னிடம் பேசாதீர்கள்'' என்று.

நடராசனும் ஆதரவான பதிலே நிச்சயமாகக் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு வரவில்லை. சந்தேகமான மனநிலையுடன்தான் வந்திருந்தான். ஆகவே, ஒன்றை எதிர்பார்த்து தான் ஏமாற்றமடைந்த அதிர்ச்சி அவனிடம் காணப்படவில்லை. இருந்தாலும், அவன் உள்ளத்தின் அடித் தளத்திலே இந்த ஏமாற்றம் போய்த்தாக்கி அதைத் துண்டு பண்ணாமலும் விடவில்லை. உள்ளம் உடைந்தது வெளிப் பட்டுத் தோன்றாத நிலையில் நடராசன் அமைதியான போக்கில் சிறிதும் கலங்காதவனைப் போல நின்றான். பிறகு வாயெடுத்துக் கேட்டான்.

"அப்படியானால், தங்கம், உனக்கு என்மீது அன்பு கிடையாதா"

"அன்பு உண்டு—ஆனால், காதல் கிடையாது!—உங்களைக் காதலிக்க இன்னொருத்தி இருக்கிறாள்!" என்றாள் தங்கம். ஆனால் அவள் சொன்ன இரண்டாவது செய்தியைத் காதில் வாங்கிக்கொள்ளாமலே அவன் விடுவிடு வென்று நடந்து போய்விட்டான். காதல் கிடையாது என்ற அந்த வார்த்தைகள் ஏற்கனவே உள்ளுக்குள் உடைந்திருந்த இதயத்தைச் சல்லி சல்லியாக்கி விட்டனவோ என்னவோ, மேலும் நிற்காமல் விடுவிடுவென்று நடந்து தோட்டத்தை விட்டு வெளியேறி விட்டான். தங்கம் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால், மறுநாள் மாலை முருகேச வாத்தியார் கந்தசாமி வந்தியாரைத் தேடிக் கொண்டு வந்தபோது தான், தங்கத்திற்குக் கவலை ஏற்பட ஆரம்பித்தது. முருகேச வாத்தியார் வீட்டுக்குள் நுழையும்போதே அவர் முகத்தில் பதற்றத்தின் அறிகுறி தென்பட்டது. உள்ளே வந்ததும், அவர் படபடவென்று, "ஐயோ! கந்தசாமி, நேற்றிலிருந்து நடராசனைக் காணவில்லையே!" என்று கதற ஆரம்பித்து விட்டார். மேலேயிருந்த அண்ணாமலைப் பண்டிதர் அப்போது கீழே இறங்கி வந்தார். அவரைப் பார்த்தவுடன் முருகேசர் சின்னக் குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டே, "ஐயா' எவ்வளவு அருமையாக வளர்த் தேன். என்றும் என் சொல்லுக்கு மீறிப் பேசாதவன் அந்தப் பிள்ளை—இப்பொழுது எங்கு போனானோ தெரிய வில்லையே! பைத்தியக் காரனாக இருந்தபோதுகூட என் அனுமதியில்லாமல் எதுவும் செய்யமாட்டானே! இப்போது நேற்றிலிருந்து காணவில்லையே!" என்று பதைத்துப் பதறி அவர் கதறிய காட்சியைக் காணத் துன்பமாயிருந்தது.

"எங்கேயாவது போயிருப்பான். சொல்லிவிட்டுப்போக சந்தர்ப்பம் கிடைத்திருக்காது திரும்பிவந்துவிடுவான். ஆண் பிள்ளை காணாமற்போனதற்கு நீங்கள் இப்படிப் பெண் பிள்ளை போல் அழுவது நன்றாக இல்லையே!" என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர்.

"ஐயா, அவன் சொல்லாமற் போயிருந்தால் நான் இவ்வளவு கவலைப்படமாட்டேன், அன்று தங்கத்தைத்தேடி அவன் போனதைப் பற்றிக்கூட நான் கவனிக்கவே யில்லையே. இப்போது கடிதம் எழுதிவைத்து விட்டுப் போயிருக்கிறானே. அதுதானே எனக்குக் கவலையளிக்கிறது!" என்று சொல்லித் தன் பையிலிருந்த ஒரு கடிதத் துண்டை எடுத்து அண்ணாமலைப் பண்டிதரிடம் கொடுத்தார். கொடுக்கும் போது அவர் கைகள் நடுங்கின.

அண்ணாமலைப் பண்டிதர் முதலில் அந்தக் கடிதத்தை மனத்துக்குள் படித்துக் கொண்டார். பிறகு, கந்தசாமி வாத்தியார் முதலியவர்கள் அதன் உள்ளடக்கத்தை அறிய ஆவலுடையவர்களாயிருப்பதைக் கண்டு, அதை வாய் விட்டுப் படிக்கலானார்.

வணக்கத்திற்குரிய தந்தையார் அவர்களுக்கு,

நடராசன் பணிவுடன் எழுதிக்கொள்ளும் கடிதம். சின்ன வயதிலிருந்து என்னைப் பெற்றவர்களினும் உயர்வாகப் பேணி வளர்த்த உங்களுடைய அன்புக்கு முற்றிலும் கடமைப் பட்டவன்நான். என்றாலும், சில நாட்களாக என் மனத்திலே ஏற்பட்டு வந்த ஒரு குறை காரணமாக, என்னால் இந்த ஊரில் மன அமைதியோடு இருக்க முடியாத நிலை ஏற் பட்டுள்ளது. ஆகவே, நான் எங்காவது ஒரு தூர தேசத்தில் போய் சில நாட்களைக் கழித்து-உலகானுபவத்தையும் பெற்றுத் திரும்பிவர எண்ணியுள்ளேன். என் பிரிவைத் தாங்கள் பொறுக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால், எனக்காகப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டு கிறேன். என்னிடம் அன்பு பாராட்டி வரும் கந்தசாமி வாத்தியார். அண்ணாமலைப் பண்டிதர் இருவருக்கும் என் நன்றியதலைக் கூறுங்கள்.

இப்படிக்குத் தங்களை என்றும் மறவாத மகன்
நடராசன்

கடிதத்தைப் படித்து முடித்ததும் எல்லோரும் அசைவற்று நின்றார்கள். அவர்கள் எல்லோருடைய உடலும் கற்சிலைபோல் நின்றனவே தவிர, அவர்களின் உள்ளங்கள் எல்லாம், அலைகடல்போல் கொந்தளித்துக்கொண்டிருந்தன. அண்ணாமலைப் பண்டிதர் ஒருவர்தான் நிலை குலையாத நெஞ்சுடன் இருந்தார். மற்றவர்கள் எல்லோரும் பெருத்த கவலையோடு பலப்பலவாறு எண்ணங்களை செல்லவிட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கத்தின் நிலைதான் மிகப் பரிதாபமாயிருந்தது.

நடராசன், தன்னுடைய மறுதலிப்பைக் கேட்டுவிட்டுத் தான் மனமுடைந்து ஊரைவிட்டுப் போய்விட்டான் என்பது அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அவன் தன் மேல் கொண்டிருந்த காதலை மறக்கத்தான் ஊரைவிட்டுப் போக முடிவு செய்திருக்கிறான் என்பதை அவள் நன்றாக உணர்ந்தாள். அவன் மீது அவளுக்கு அன்பு இருந்தது; இப்போது இரக்கமும் பிறந்தது. ஆனால் அந்த அன்போ. இரக்மோ, அவன் மீது காதல் கொளளும்படியாகத் தூண்டக் கூடிய ஆற்றல்பெற்றனவாக இல்லை. அவன் ஆசையைத் தான் நிறைவேற்ற முடியாதநிலையில் இருப்பதற்காக அவள் வருந் தினாள், தனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்பது தெரிந் தால், அவன் மனத்தை யடக்கிக்கொண்டு பேசாமல் இருந் திருக்க வேண்டும் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. இவ் வளவு பேருடைய மனமும் சஞ்சலப்படும்படி செய்துவிட்டு ஏன் ஊரைவிட்டு ஓடவேண்டும். மனத்தை அடக்கிக்கொள்ள

முடியாதவர்கள் எப்படித்தான். உலகத்தில் வாழ முடியும்? என்றெல்லாம் அவள் எண்ணினாள். ராதாவைப் பற்றி நினைக்கும்போதுதான் அவளுக்குப் பகீர் என்றது. நடராசன் ஊரை விட்டே போய்விட்டசெய்தி அறிந்தால், அவள் எவ்வளவு துன்பப்படுவாள் என்று எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. பாவம்! அவன் தன்னைத்காதலித்ததன் காரணமாக ஓடிவிட்டான் என்று அறிந்தால் அவளுக்கு இன்னும் எவ்வளவு துயரமாயிருக்கும் என்று எண்ணியபோது தங்கத்தாலேயே தாள முடியவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் அப்போது கேட்ட கேள்வி தங்கத்தை மேலும் குலைவதாயிருந்தது.

''இங்குள்ளவர்கள் யாரிடமும் நடராசன் போவதற்கு முன்னால் எதுவும் சொல்லவில்லையா?'' என்று கேட்டார், பண்டிதர்.

யாரும் பதில் கூறவில்லை.

மறுபடியும், அவர் தங்கத்தை நோக்கி, 'ஏன் தங்கம், உன்னிடம்கூட நடராசன் எதுவும் கூறவில்லையா?'' என்று கேட்டார். தங்கம் திடுக்கிட்டுத் திரும்பி அவரை நோக்கினாள். கூர்மையான அவருடைய கண்களை அவளால் சந்திக்க முடியவில்லை. சட்டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டாள். நடந்ததைக் கூறினால் மற்றவர்கள் தன் மீது கோபமும் வெறுப்பும் கொள்ளக் கூடுமென்பது உறுதி, அதிலும், முருகேச வாத்தியாருக்கு-தன்னால்தான் நடராசன் மனவருத்தப்பட்டுப் போய்விட்டான் என்ற எண்ணம் ஏற்பட்டால்—எப்படி யிருக்கும் என்று தோன்றியது. ஆகவே, 'நான் அவரைப் பார்க்கவே யில்லையே' என்று ஒரு சிறு பொய்யைச் சொல்லி வைத்தாள். அந்தப் பொய் சின்னதாயிருந்தாலும் அவளைப் பெரிய நெருக்கடியொன்றிலிருந்து தப்பச் செய்துவிட்டது.

பிறகு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான கருத்தைக் கூறினார்கள். ஆலோசனைகள் நெடுநேரம் நடந்து கொண்டிருந்தன. தங்கம் அந்தப் பேச்சுக்களின் போக்கைக் கவனித்துக் கொண்டிருந்தாளே தவிர அவற்றில் கலந்து கொள்ளவில்லை. கடைசியில் அண்ணாமலைப் பண்டிதர்தான் எல்லோரையும் சமாதானப்படுத்தினார். "நடராசன் என்ன சின்னப் பிள்ளையா? அவனுக்கிருக்கிற அறிவுக்கு அவன் எங்கே போனாலும் பிழைத்துக்கொள்வான். அவன் பிழைத்து நன்றாக இருக்கவேண்டுமென்று வாழ்த்தி விட்டுப் பேசாமல் இருங்கள். அவனுக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படாது!" என்று கூறினார். அது எல்லோருக்கும் சிறிது மனவருத்தத்தைக் குறைப்பதாக இருந்தது. அதன் பிறகு முருகேச வாத்தியார் தம் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார், அண்ணாமலைப் பண்டிதரின் விளக்க மொழிகளைக் கேட்டதனால்தான் அவர் அங்கிருந்து போனார் என்று கூற வேண்டும்.

பேச்செல்லாம் முடிந்தபிறகு, தங்கம் தோட்டத்துக்குள் நுழைந்தாள். அவள் முகம் ஒரே வாட்டமாயிருந்தது. அவள் மனம் இதற்கும் உனக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை; நடராசன் ஊரைவிட்டுப் போனதற்கு நீ எப்படிப் பொறுப்பாளியாவாய்? என்று எடுத்தெடுத்துக் கூறியபோதிலும், அவளால் துன்பத்தை வெல்ல முடியவில்லை.

வேதனை நிறைந்த உள்ளத்தோடு அவள் மல்லிகைப் பந்தலை நோக்கிச் சென்றாள். அவள் பந்தலையடைந்து அங்கே உட்கார முயன்றபோது, பின்னால் யாரோ வரும் காலடி யோசை கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

அவள்முன் அண்ணாமலைப் பண்டிதர் குறும்பாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அவரைக்கண்டவுடன் தங்கத்துக்கு உடலெல்லாம் உதற லெடுக்க ஆரம்பித்துவிட்டது.

# 14. அவனைக் காதலிக்காதே!

அண்ணாமலைப் பண்டிதரைக் கண்டவுடன் தங்கத்திற்கு உள்ளம் பதறியது. ஏனென்றால், அவர் தன்னைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார் என்ற எண்ணம்தான். அண்ணாமலைப் பண்டிதர் எப்போதும் தங்கத்திடம் சிடுசிடு வென்று நடந்துகொண்டார். அவளிடம் அன்பாகப் பேசியதே கிடையாது. ஆகவே, அவள் அவருக்குப் பணிவிடை செய்யும் நேரம் போக அவரிடம் அணுகிப் பழகியதோ பேசிக் கொண்டிருந்ததோ கிடையாது. ஆனால், அவர் தன்னைத் பற்றி தன் அந்தரங்கத்தைப் பற்றி நன்றாக அறிந்துவைத் திருக்கிறார் என்பதை அவள் பல சந்தர்ப்பங்களிலே உணர்ந் திருக்கிறாள்.

மற்றவர்களுடைய அந்தரங்க விஷயங்களிலே தலை யிடுவது மனிதத் தன்மையல்ல. அதிலும் அண்ணாமலைப் பண்டிதர் போன்ற ஒரு பெரிய மனிதரிடம் இவ்வளவு அற்பமான குணம் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஒரு சிலர் இருக்கிறார்கள்; அவர்களுக்குத் தங்கள் வேலை களைப் பார்க்கவே சரியாக நேரமிருக்காது. ஆனால், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் எவருடன் கூடுகிறார்கள், பேசுகிறார்கள், குலவுகிறார்கள்

எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்றெல்லாம் ஊடுருவிப் பார்ப்பார்கள். இதையெல்லாம் தெரிந்து கொள்வதால் அவர்களுக்கு ஏதேனும் பயனிருக்குமா என்றால் அதுவும் இருக்காது. என்ன பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு ஒரே ஒரு பலன் மட்டும் இப்படிப்பட்ட உளவறி தொழிலால் உண்டு. அது என்னவென்றால், பிறருடன் இதைப் பற்றிப் பேசிப் பொழுதுபோக்குவதாகும். ஒரு சிலர் இந்தப் பலனைக்கூட அனுபவிப்பதில்லை. மற்றவன் நலமாக வாழ்வதைப் பார்த்துப் பார்த்து உள்ளத்திற்குள்ளே பொறாமைப்பட்டுப் பொறாமைப்பட்டு வெளியிலும் சொல்ல மாட்டாமல், உள்ளுக்குள்ளும் அடக்கமாட்டாமல் பொருமிப் பொருமி வெந்து நொந்து செத்துக்கொண்டிருப்பார்கள்.

அண்ணாமலைப் பண்டிதர் இப்படிப்பட்ட அற்பக்குணம் படைத்தவரல்ல என்பது எல்லோருக்கும் தெரியும்; தங்கத்துக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அவர் தன்னிடம் மட்டும் பெரிய மனிதராக நடந்துகொள்ளவில்லை என்பதை நெடுநாளாகவே தங்கம் உணர்ந்து வருகிறாள். இப்போதும் அவருடைய நடவடிக்கை அதற்கு விதிவிலக்கல்ல.

தன்னிடம் நடராசன் எதுவும் கூறிவிட்டுப் போக வில்லையா என்று அவர் கேட்டபோதே. அவன் கூறிவிட்டுப் போயிருக்கிறான் என்பதை அவர் நன்றாக அறிந்திருக்கிறார் என்பதைத் தங்கம் புரிந்துகொண்டாள். இப்போது திரும் பவும் அதுபற்றிக் கேட்டுத் தன் உள்ளத்தைப் புண்ணாக்கிக் கண்டு மகிழவே அவர் தன்னைத் தொடர்ந்து வந்திருக்கிறார் என்ற எண்ணம் தங்கத்திற்கு உண்டாகியது. ஆகவே தான் அவர் என்ன கேட்பாரோ என்னவோ என்ற அச்சம் அவளுக்கு ஏற்பட்டது.

அண்ணாமலைப் பண்டிதர் அவளைக் குறும்பாகப் பார்த்துக்கொண்டே, "தங்கம், உண்மைதானா? நடராசன் உன்னிடம் எதுவும் சொல்லிவிட்டுப் போகவில்லையா?" என்று கேட்டார்.

தங்கம் எதுவும் பதில் சொல்ல வில்லை. பதில் சொல்லக் கூடிய நிலையில் அவள் இல்லை.

அண்ணாமலைப் பண்டிதர் அமைதியாக நின்று கொண்டிருந்தார்.

தங்கம் வாய் திறவாது தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்திற்குள்ளே பலமான போராட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அது மெல்ல மெல்ல அடங்கியது. அவளும் தாழ்ந்து குனிந்திருந்த தலையை மெல்ல மெல்ல நிமிர்த்தினாள். அப்போதும் அண்ணாமலைப் பண்டிதர் அங்கேதான் நின்று கொண்டிருந் தார். இப்போது அவர் முகத்திலே குறும்பு விளையாட வில்லை. சற்றுமுன் தோன்றிய அந்த அற்பத் தனமான குதர்க்கவாதப் புன்சிரிப்பு அப்போது அவர் முகத்திலே தென் படவில்லை. கருணையே வடிவான புத்தர் பிரானின் முகத்திலே தோன்றிய அந்த அமைதி நிறைந்த புன்சிரிப்பு அப்போது அண்ணாமலைப் பண்டிதரிடத்திலும் காணப் பட்டது. சாந்தி மார்க்கத்தை உலகுக்கெல்லாம் போதித்த காந்தியண்ணலின் பொக்கைவாயிலே மிளிர்ந்த அந்தப் பொன்மலர் பூத்தசொத்த மென்மையான புன்சிரிப்பு அப்போது அண்ணாமலைப் பண்டிதரின் இதழ்களுக்கிடையே மின்னித் தோன்றியது. அந்த அழகிய புன்சிரிப்புடன் கூடிய அவருடைய முகத்தைப் பார்த்ததும் தங்கத்திற்கு மனத்திற் குள்ளே ஒரு சலனம் ஏற்பட்டது. மனத்தகத்துக்குள்ளே போராடிப் போராடிக் கடைசியாக அவர் எது கேட்டாலும் சொல்வதில்லையென்ற தீர்மானமான முடிவுக்கு வந்து தலை நிமிர்ந்த தங்கம் இப்போது அவர் எது கேட்டாலும் சொல்லக் கூடிய பச்சைக் குழந்தையாக மாறிவிட்டாள். நொடி நேரத்தில் அவளுடைய முடிவை மாற்றிக் கொள்ளச் செய்யும் படியான ஆற்றல் அவருடைய அந்தப் புன்னகைக்கிருந்தது!

"தங்கம்! என்னிடம் உள்ளதைக் கூறிவிடு! நான் உனக்குக் கெடுதல் செய்யமாட்டேன்" என்று பரிவோடு கூறினார் அண்ணாமலைப் பண்டிதர்.

அந்தப் பரிவு தங்கத்தை ஆட்கொண்டுவிட்டது, அவரிடம் என்றும் ஏற்படாத ஒரு நம்பிக்கையை அவளுக்கு ஏற்படும்படி செய்து விட்டது.

தன்னைப் பெற்ற தாயிடம்கூட இதுவரை கூறக் துணியாத இரகசியங்களைத் தங்கம் அவரிடம் கூறத் தயாராகிவிட்டாள்.

"ஆம். என்னிடம் சொல்லிவிட்டுத் தான் போனார். ஆனால், ஊரைவிட்டுப் போவதாகச் சொல்லிவிட்டு போக வில்லை" என்றாள் தங்கம்.

"வேறு என்ன சொன்னான்?" என்று கேட்டார் பண்டிதர்.

"அவர் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம். எனக்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

"நீ என்ன சொன்னாய்?"

"நான் என்ன சொல்லுவேன். எனக்கு நோக்கமில்லை என்றுதான் சொன்னேன்?"

"ஏன், அப்படிச் சொன்னாய்?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும், தங்கத்தின் வாய் அடைத்துப் போய் விட்டது.

"தங்கம், அவன் நல்ல பையனாயிற்றே! ஏன்.. உனக்கு அவனைப் பிடிக்கவில்லையா?"

இதற்கும் தங்கம் பதில் சொல்லவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் மெல்ல அவளருகிலே நெருங்கினார். அவள் முதுகை அன்போடு தடவிக் கொடுத்த

படி, "மகளே, உனக்கு வேறு யார் மீதும் அன்பு இருக்கிறதா? இருந்தால் சொல்!" என்று கேட்டார்.

தங்கத்தால் அந்த நேரத்தில் அவருக்குப் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை, என்னவோ தெரியவில்லை அவர் தன்னைத் தம் சொல்லுக்குக் கட்டுப்படுத்தி விட்டதாகத் தோன்றியது. ஆமென்ற தோரணையில் அவள் தலையை அசைத்தாள்.

"மகளே, தங்கம், யார் உன் அன்புக்குப் பாத்திரமானவன்!" என்று மெல்லக் கேட்டார்.

அவருடைய இதமான கேள்விகள் ஒவ்வொன்றும். பிடாரன் ஒருவன் பாம்பைப் பிடிப்பதற்கு மகுடி வைத்து ஊதுவதைப்போல் இருந்தன. மகுடிக்கு வசப்பட்டு ஆடுகிற பாம்பு போல் ஆகிவிட்டாள் தங்கம் அவள் தன் நிலையில் இல்லாதவளாய், அவர் சுண்டிவிட ஆடுகின்ற விசைப் பொம்மையாய் இயங்கிக்கொண்டிருந்தாள், கண்கள் தரையை நோக்கக் கால் பெருவிரல் மண்ணைத் தோண்ட, வெட்கத்தோடு குனிந்து நின்று கொண்டு, நினைத்த நெஞ்சு மகிழ, சொல்லும் வாய் மகிழ "அத்தான் சுந்தரேசன்" என்ற வார்த்தைகளை இனிமையான குரலில் இசைத்தாள்.

அந்தப் பெயரைக் கேட்டதும் அண்ணாமலைப் பண்டிதர் பாம்பை மிதித்ததுபோல் திடுக்கிட்டுப் போனார். என்ன? அவனையா? அந்த அயோக்கியனையா? அந்தக் கூத்திக் கள்ளனையா நீ காதலிக்கிறாய்? தங்கம் உனக்கென்ன பைத்தியமா?" என்று சீறினார் அவர். இவ்வளவு நேரமும் முற்றிலும் புதிய மாதிரியாக நடந்து கொண்ட பண்டிதர் இப்போது பழையபடி சீற்றமே உருவாக மாறியதைக் கண்ட தங்கம் அஞ்சித் தலை நிமிர்ந்து அவரை நோக்கினாள். அண்ணாமலைப் பண்டிதரின் உதடுகள் துடித்தன. அவருடைய உறுப்புக்கள் ஒவ்வொன்றும் நடுங்கின. அவருடைய நெற்றியில் வியர்வை யரும்பி நின்றது. கண்கள்

நன்றாகச் சிவந்துவிட்டன. அவர் ஏதோ சிந்திப்பவர்போல் வானத்தை நோக்கிக்கொண்டு நின்றார். பிறகு தங்கத்தைக் கூர்ந்து நோக்கினார். பையப் பைய அவருடைய சீற்றம் தணிந்தது. பிறகு மறுபடியும் சாந்த உருவினராய் மாறி விட்டார்.

''தங்கம், உன் மனத்தைப் புண்படுத்திவிட்டேனா?'' என்று வருத்தப்படுபவர் போல் கேட்டார்.

தங்கம் அவர் முகத்தை ஆவலுடன் நோக்கினாள்.

''மகளே, நான் சுந்ரேசனைப்பற்றி ஒரு மாதிரியாகச் சொல்கிறேனென்று எண்ணாதே! அவனுக்கு ஏற்கனவே ஒரு மனைவியிருக்கிறாள். போதாக் குறைக்கு வைப்பாட்டி வேறு வைத்திருக்கிறான். அதுவும் போதாதென்று, பாவம், ஒன்றும் அறியாத பேதைப் பெண்ணாகிய உன் வாழ்வையும் கெடுக்கத் திட்டமிட்டுவிட்டான் போலிருக்கிறது! மகளே, உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், நீ அவனுடைய வெறிக்கு இரையாகி விடாதே!'' என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர். இந்த எச்சரிக்கை மொழிகள், தங்கத்திற்கு ஒருவிதமான சந்தேகத்தை எழுப்பின. ஆனால் அண்ணமலைப் பண்டிதர் தொடர்ந்து சொன்ன வார்த்தைகள் அவளுடைய சந்தேகத்தைக் களைந்துவிட்டன.

''தங்கம், நீ நடராசனை மணந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் சுந்தரேசன் மீது அவதூறு சொல்லுவதாக எண்ணாதே! நடராசனை மணப்பதும் மணவாமல் இருப்பதும் உன் விருப்பம். கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கும் அறிவீனர்களின் கொள்கையை நான் ஆதரிப்பவனல்ல. ஆனால், கண்ணை மூடிக்கொண்டு கட்டாந்தரையில் முட்டிக்கொள்ளும் குருட்டுத் தனத்தை வெறுப்பவன் நான். மகளே, சுந்தரேசனைப்பற்றி நான் சொல்லுகிற வார்த்தை ஒவ்வொன்றும் உண்மை. இதை விரைவில் நான் உனக்கு மெய்ப்பித்துக் காட்டுவேன், என்ன

ஆனாலும் சுந்தரேசனிடம் நீ பற்று வைக்காதே! அவனை மனிதனாக நீ மதிக்கவேகூடாது. அவன் மனிதத் தன்மையே யில்லாதவன்! மிருகங்களுக்குள்ள ஒவ்வொரு நற்குணங்கள் கூட இல்லாதவன். மிகவும் பொல்லாதவன். மான அவமானம் பாராதவன்! தன்னுடைய சுகத்தையே பெரிதாகக் கருதுவானேயல்லாமல், மற்றவர்கள் எப்படிப் போனாலும் சரியென்று எண்ணுபவன். அவன் வலையில் நீ விழுந்து விடாதே! மகளே! இந்தப் பயங்கர மிருகத்திடமிருந்து நீ தப்பிவிட்டாய் என்ற நிலை ஏற்பட்டால்தான் எனக்கு அமைதி ஏற்படும். உன் தாய் தந்தையருக்கு இப்போது இருக்கின்ற அமைதி போகாமல் இருக்கும்! தங்கம் நான் சொல்வதைக் கேள்! உன் நன்மைக்காகச் சொல்லுகிறேன்; உன் குடும்ப கௌரவத்துக்காகச் சொல்லுகிறேன், இனி அவனை மனத்தாலும் நினைக்காதே!'' படபடவென்று சொல்லிவிட்டு அண்ணாமலைப் பண்டிதர் விடுவிடுவென்று வீட்டை நோக்கிச் சென்றுவிட்டார்.

தங்கம் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள். அண்ணாமலைப் பண்டிதர் அத்தான் சுந்தரேசன் மேல் ஏன் இத்தனை தூரம் வெறுப்பாகப் பேசுகிறார் என்று அவள் எண்ணிப் பார்த்தாள், சில சமயம் அவர் பேச்சைக் கேட்ட போது ''ஆம்! அவர் சொல்வது உண்மைதான்'' என்று தோன்றியது. சில சமயம், ''சேசே! அப்படியிருக்காது!'' என்று தோன்றியது

இருந்தாலும், தன் உள்ளத்தில் பதிந்துவிட்ட அத்தான் சுந்தரேசன் உருவத்தை அவளால் நீக்க முடியவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த தங்கம், அவர் வீட்டுக்குள் சென்று மறைந்ததும் தரையில் சிறிது நேரம் உட்கார எண்ணிக் குனிந்த போது அவள் தோளை யாரோ பிடிப்பது போலிருந்தது. தங்கம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்,

# 15. "தங்கம் உன் தங்க நகைகளைக் கொண்டுவா!"

தோளை யாரோ பிடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்த தங்கம், அத்தான் சுந்தரேசனைக் கண்டு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தாள்! "ஆ! அத்தான்!" என்று கூச்சலிட இருந்த அவள் வாயைச் சுந்தரேசன் தன் கையால் மூடிவிட்டான்.

உணர்ச்சிப் பெருக்கம் படிப்படியாகக் குறைந்து தங்கம் அமைதியான நிலையை அடைந்த பிறகுதான் சுந்தரேசன் தன் கையை எடுத்தான். தங்கம் அவனை ஆவலோடு பார்த்துக் கொண்டே, அத்தான்! உங்கள் நடவடிக்கைக ளெல்லாம் மர்மமாகவும் வியப்பாகவும் இருக்கிறதே! அன்று திடீரென்று புறப்பட்டுப் போனீர்கள்! இன்று திடீரென்று இங்கே வந்து தோன்றுகிறீர்களே!" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம், நீதானே திடீரென்று காணாமற் போய் விட்டாய்! பிறகு எப்படியோ திரும்பி வந்துவிட்டாய்! அன்று உன்னிடம் சொல்லிக்கொண்டு போகாததை நினைத்து நான் எவ்வளவு வருத்தப்பட்டேன் தெரியுமா!" என்று பதிலளித் தான் சுந்தரேசன்.

தங்கம் அவனைக் கூர்ந்து நோக்கினாள்: அத்தான் சுந்தரேசனின் அழகிய உருவத்தை நோக்க நோக்க அவளுக்குச் சற்றுமுன் அண்ணாமலைப் பண்டிதர் கூறிய கடுமையான எச்சரிக்கை மொழிகளெல்லாம் மறந்து போய் விட்டன. சுந்தரேசனுடைய கையிரண்டையும் பிடித்துக் கொண்டே, ஆர்வம் நிறைந்த புறாப்பறக்கும் இருவிழி களாலும் அவனைப் பார்த்துக் கொண்டே, "அத்தான்!" என்று இழுத்துச் சொல்லி ஒரு பெருமூச்சு விட்டாள் தங்கம், அவளுடைய காதல் இப்போது புது மெருகேறியிருந்தது, நடராசனை ராதா காதலிக்கிற செய்தியையறிந்த பிறகு, அவள் எவ்வளவு தூரம் அவனை மேலாக எண்ணுகிறாள் என்பதைக் கண்ட பிறகு அவளுக்கு அத்தான் சுந்தரேசனைப் பார்க்கப் பார்க்க ஆர்வம் பொங்கி எழுந்தது. அந்த ஆர் வத்தின் பொங்கல் காரணமாக அவளுடைய நெஞ்சு ஏறி இறங்கியது அவள், தன்னை நோக்கிய பார்வையையும் அதில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த காதலையும் விம்மி எழுந்த அவளுடைய மார்பகத்தையும், அதில் கனலாய்த் தகித்துக்கொண்டிருந்த காதல் உணர்ச்சியையும் கண்டு கொண்ட சுந்தரேசன், அவள் வகையாகத் தன்னிடத்தே அகப்பட்டுக் கொண்டாள் என்பதையறிந்து மெல்லப் புன்னகை புரிந்தான்.

அவனுடைய புன்னகையைக் கண்ட தங்கம் அதன் உட் பொருளை யறியாமல் அவன் தன்னைப் பதிலுக்குப் பதில் காதலிப்பதன் அறிகுறியாக அதை எண்ணிக்கொண்டு மேலும் அவன்மீது அன்பைப் பொழியத் தயாரானாள்.

தன்னிடம் வசமாகக் காதல் வலையில் சிக்கிக்கொண்ட தங்கத்தை ஆட்டிப் படைக்க முடிவு கட்டிக் கொண்டான் சுந்தரேசன்.

"தங்கம்! உண்மையில் நீ என்னைக் காதலிக்கிறாய் அல்லவா?" என்று கேட்டான்.

''ஆம்!'' என்று சொல்லிவிட வேண்டுமென்று தங்கத்தின் இதயம் துடித்தது. ஆனால், அவளுடைய நாணமும் அடக்கமும் எதையும் திடீரென்று செய்துவிடாத இயல்பான தன்மையும் சேர்ந்து அந்தச் சம்மதச் சொல்லைச் சொல்லாமல் செய்து விட்டன. சில சமயங்களில் நம் உணர்ச்சிகள் எப்படி நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். வழியில் பாம்பு குறுக்கே ஓடுவதைக் காண்பவன், ''ஐயோ! பாம்பு!'' என்று அலற எண்ணுவான். ஆனால், குரல் வளையை விட்டு அந்தச் சத்தம் வெளிப்படாது. அவனுடைய மிதமிஞ்சிய பயத்தின் காரணமாக வாய் ஒலியெழுப்பும் சக்தியை இழந்துவிடுகிறது. அது ஒருவகையில் நன்மையாக முடிந்து விடுகிறது! அவன் கூச்சலிட்டிருந்தால், தன் வழியில் போய்க்கொண்டிருந்த அந்தப் பாம்பு அவன் மீது சீறிப்பாய்ந்து தீண்டிக் கொன்றுவிடவும் நேரிடக்கூடும். அது போல்தான் எப்போதாவது வீட்டில் கன்னக்கோல் போட்டு நுழைந்த திருடர்களைக் காணுகிறபோது, மூலையில் முடங்கிப் படுத்துக் கொண்டிருக்கும் வேலைக்காரன், ''ஐயோ திருடன்! திருடன்!'' என்று கத்தி உறங்குபவர்களை எழுப்ப எண்ணுவான். ஆனால், திருடர்களைத் திடுமென்று கண்ட உணர்ச்சியால், அவன் வாய் திறந்த போதிலும் சத்தம் வெளிப்பட்டுத் தோன்றாது. அச்சம் சிறிது குறைந்து அவன் கத்தியிருப்பானேயானால், மூலையில் முடங்கிக் கிடந்த அவனைக் கவனிக்காமல் இருந்த திருடர்கள் கவனிக்க முற்பட்டு, அவனுடைய சத்தத்தை நிறுத்துவதற்காகச் சமயத்தில் கொன்று போட்டுக்கூட விடுவார்கள். அப்போது மிதமிஞ்சி ஏற்படுகிற அந்த உணர்ச்சி அந்த வேலைக்காரனை அடி வாங்காமலோ, கொலையுண்ணாமலோ காப்பாற்றி விடுகிறதென்றுதான் சொல்ல வேண்டும். அதுபோலத்தான் தங்கத்தின் இதயத்தில் எழுந்த மிதமிஞ்சிய காதல் உணர்ச்சி, ''ஆம் நான் உங்களைக் காதலிக்கிறேன்.'' என்று

சொல்லிவிட நினைத்தாலும் வார்த்தைகள் வெளிப்பட வில்லை, அது அவளைப் பின்னால் ஏற்படக்கூடிய பெரிய சிக்கலிலிருந்து ஓரளவு பாதுகாப்பாகத் தப்புவித்தது என்று தான் சொல்ல வேண்டும். சுந்தரேசன் அவள் தன்னைக் காதலிக்கிறாளா என்று கேட்டபோது, அவள் உணர்ச்சி மிகுதியால், பார்வையிலே ஆர்வம் பொங்கப் பார்த்து அவனை விழியாலேயே விழுங்கக் காத்திருப்பவள்போல் நின்றாளே தவிர ஆம் என்று கூற வில்லை.

அவள் கூறினாலும் கூறாவிட்டாலும் தன்னை மிக மிக உண்மையாக அவள் காதலிக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட சுந்தரேசன், "தங்கம் அண்ணமலைப் பண்டிதர் என்ன சொன்னார்! அவர் சொன்னதை எல்லாம் நீ உண்மை யென்று நம்புகிறாயா?" என்று கேட்டான். அவன் இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே தங்கத்திற்குச் சற்றுமுன் அண்ணாமலைப் பண்டிதர் கூறிய வுரைகள் இலேசாக ஞாபகத்துக்கு வந்தன. அவர் கூறியபோது என்னவோ அவையெல்லாம்-தன் அத்தான் சுந்தரேசனைப் பற்றி அவர் கூறிய கருத்துக்களெல்லாம் உண்மையாகவே இருக்கும்போல் தான் தோன்றியது. ஆனால், ஆசைக்கு ஆசையாய்க் காதலிக்கும் அந்த அத்தானின் மலர்ந்த முகத்தைக் கண்ட வுடனே அவையாவும், வீண் குற்றச்சாட்டுகளாய். வேண்டு மென்றே கூறப்பட்ட வெற்றுரைகளாய் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தன. ஆனால், அவள் தன் கருத்து எதனையும் வெளிப்படக் கூறவில்லை. சுந்தரேசனே, தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"தங்கம்! அண்ணாமலைப் பண்டிதர் பேச்சு எதையும் நீ நம்பாதே! அவர் ஒரு மதவாதி! பார்ப்பதற்கு அவர் ஒரு சம்சாரியைப் தோன்றுகிறாரே தவிர உண்மையில் அவர் ஒரு துறவி. நான் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டது உண்மையா யிருந்தால். அவர் வாழத் தெரியாதவர் என்றேசொல்வேன்.

அவர் கொண்ட மனைவியையும், பெற்ற பிள்ளையையும் விட்டுவிட்டு ஓடிவந்து தன்னந்தனியாக உண்டு திரிந்துவருகிற ஒரு சந்நியாசிதான்! வாழத்தெரியாத அவரிடத்திலே வாழத்துடிக்கின்ற நாம் உபதேசம் கேட்டால் எப்படியிருக்கும். காதல் என்பதையே வாழ்க்கையில் அனுபவியாமலும் உணராமலும், கடவுளே கதியென்று கிடக்கின்ற அவரைப் போன்ற மரக்கட்டைகளுக்கு வேண்டுமானால் அவருடைய உபதேசம் சரியாகப் பொருந்தலாம். நமக்கும் அவருக்கும் வெகுதூரம். புதுயுகம் காணத் துடிக்கும் இளைஞர்களிடையே இந்தப் பழங்கிழங்கள் மிகப் பழங்கருத்துக்களைப் புகுத்த முயல்கின்றன. நன்மை நலம் உதவி என்ற பல பெயர்களால் இன்பவாழ்வுக்கு இடையூறு செய்கின்ற இத்தகைய பெரிய மனிதர்களைக் கண்டாலும் எனக்குப் பிடிப்பதில்லை, நீ என்ன நினைக்கிறாய் தங்கம்?" என்று கேட்டான் சுந்தரேசன்.

தங்கம்நினைப்பதற்கு என்னஇருக்கிறது? அவன் நினைத்தோ நினைக்காமலோ சொன்னவற்றை யெல்லாம் தானும் அப்படியே நினைப்பதாகத்தான் அவள் எண்ணினாள். அவன் சொல்லுவதையெல்லாம் ஏற்றுக் கொண்ட பாவனையில் அவள் பேசாமல் நின்றாள்.

அவன் இந்த வகையில் அண்ணாமலைப் பண்டிதரின் கருத்தை அவள் சிறிதுகூட ஏற்றுக்கொள்ளாதபடி செய்துவிட்டோம் என்று மனநிறைவு கொண்டான். பிறகு, அவன், அவளைத் தன்வயப்படுத்தத்தக்க காதல் பேச்சுக்களை மெல்ல மெல்லப் பேச ஆரம்பித்தான். அவனுடைய இனிமையான அந்தப் பேச்சுக்கள், பூவின்மேல் உட்கார்ந்து தேன் குடிக்கவந்த வண்டின் ரீங்கார இன்னிசை போல் அவளுடைய செவிகளிலே இன்பச் சுவையை உண்டாக்கின மதுக்குடித்த மயக்கத்தில் சுழலுகின்ற நிலையில் அவள்

இருந்தாள். சுந்தரேசன் சொல்லிய இனிய காதல் மொழிகள் அவளிடம் அப்படிப்பட்ட ஒருவிதமான மயக்க உணர்வை உண்டாக்கின. நெடு நேரம் அவனுடன் பேசிக்கொண்டு அந்த இன்ப நிலையிலேயே இருந்த தங்கம், கடைசியில் வீட்டு நினைவு வந்தவளாய் ''அத்தான், வாருங்கள்! வீட்டுக்குப் போவோம்!'' என்று அழைத்தாள். ஆனால், சுந்தரேசன், அவளைப் பார்ப்பதற்காக வந்தானே தவிர, அவளுடைய வீட்டுக்குள் போக வரவில்லை. அதுவும், அண்ணாமலைப் பண்டிதர் முகத்தில் விழிக்க அவனுக்கு அப்போது துணிவு மில்லை. அத்தனை நிகழ்ச்சிகள் சென்னையிலே நடை பெற்றிருக்கின்றன. ''இல்லை, தங்கம், நான் இப்பொழுது அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது இன்னொரு முறை வருகிறபொழுது அப்பா அம்மாவைச் சந்திக்கிறேன்'' என்றான் சுந்தரேசன்.

''என்ன? இன்னொரு முறையா? அப்படியானால், இப் போது நீங்கள் போனால் எப்போது திரும்பி வருவீர்கள்?'' என்று வேதனையோடு கேட்டாள் தங்கம்.

''கூடிய சீக்கிரம்! ஏன், நாளைக்கே திரும்பி வருகிறேன் தங்கம்!'' என்று சொல்லி அவளைக் குறிப்பாக உற்று நோக்கினான் சுந்தரேசன். அந்த ஒரு நாள் பிரிவைக்கூடத் தாங்கமுடியாது போலிருந்தது அவளுக்கு என்பதை அவளுடைய முகத் தோற்றத்தைக் கொண்டே புரிந்து கொண்டான் சுந்தரேசன்.

பிறகு ஆறுதல் கூறுபவன்போல் சுந்தரேசன், ''என்ன, தங்கம், நாளைக்கேதான் திரும்பி வந்துவிடப் போகிறேனே? இதற்கென்ன இப்படி மலைக்கிறாய்?'' என்று இதமாகச் சொன்னான்.

தங்கம் ஒருவாறு மனம் தேறினாள். பிறகு சுந்தரேசன் அவளிடம்-மறுபடியும் ஆறுதலாகப் பல வார்த்தைகள் சொல்லி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

நான்கைந்தடி போனபின், அவன் மீண்டும் திரும்பி வந்து, "தங்கம்.. !" என்று இழுத்துக்கொண்டு நின்றான்.

என்ன வேண்டும் என்று கேட்பது போல் "அத்தான்...?" என்றாள் தங்கம்.

"தங்கம்...நீ எனக்கோர் உதவி செய்வாயா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் சுந்தரேசன்.

"என்ன உதவி அத்தான்? சொல்லுங்கள் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்!" என்றாள் தங்கம்.

இல்லை. வேண்டாம். வேண்டாம்... உன்னால்முடியாது, உனக்கு ஏன் வீண் தொல்லை?" என்று தான் அவளிடம் தவறுதலாகப் பேச்சை ஆரம்பித்துவிட்டவன்போலப் பேசினான் சுந்தரேசன்.

"அத்தான், சொல்லுங்கள் என்னால் முடிந்தவரை நான் உங்களுக்கு உதவாமல் இருப்பேனா? என்ன கஷ்டம்? என்ன ஆபத்து எதற்காக என் உதவியை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம்! உள்ளபடிதான் சொல்லுகிறாயா? உன்னிடம் நான் உதவியை எதிர்பார்க்கலாமா?" என்று மறுபடியும் கேட்டான் சுந்தரேசன்.

"என்ன அத்தான்? திரும்பத் திரும்ப இப்படியே சந்தேகப்பட்டுக் கொண்டு?" என்று பரிவோடும், தன் காதலனுக்குத் தான் ஒரு நன்மை செய்ய வாய்ப்புக் கிடைக்கப் போகிறதே என்ற நம்பிக்கையோடும் கேட்டாள் தங்கம்.

"தங்கம், ஒன்றுமில்லை. அவசரமாக ஓர் இரண்டாயிர ரூபாய் வேண்டும். மிக அவசரம். அதற்காகத்தான் நான் திடீரென்று சென்னைக்குப் போனேன். நீ ஏதாவது உதவி செய்வாயா என்று முதலில் எதிர்பார்த்தேன். பாவம் நீ ஒரு சின்னப் பெண். உன்னால், இவ்வளவு பெரும் தொகை எப்படிக் கொடுக்க முடியும்?" என்று சொன்னான் சுந்தரேசன்.

"அத்தான், வீட்டுக்கு வாருங்கள் அத்தான். அப்பா விடம் சொன்னால் எப்படியாவது, யாரிடமாவது கேட்டு வாங்கித் தந்துவிடுவார். இன்னொருவர் துன்பத்தை அவர் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்- வாருங்கள் அப்பாவிடம் கேட்போம்."

"பைத்தியம்! சின்னப்பெண் என்பதை அப்படியே காட்டிக் கொள்கிறாய். எனக்காக உன் அப்பா இவ்வளவு பெரிய பொறுப்பை எப்படி ஏற்றுக் கொள்ளுவார். பாவம்! அவரே அன்றாடம் செலவுக்குத் திண்டாடுகிறார், இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்ககூடிய நிலையில் இருந்தால், உனக்குத் தான் எப்போதோ திருமணம் நடத்தி முடித்திருப்பாரே!" என்றான் சுந்தரேசன். அவன் தன் அப்பாவைக் குறைவாகப் பேசியபோது தங்கத்திற்குத் துணுக்கென்றிருந்தது. ஆனால், அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல், "வேறு என்னதான் செய்வது அத்தான்?" என்று கேட்டாள்.

"சொன்னால், நீ செய்வாயா? செய்வாயானால்தான் சொல்லலாம்!" என்றான் சுந்தரேசன்.

"அத்தான்! வழியிருந்தால் சொல்லுங்கள்! நான் உங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருக் கிறேன்"

"உண்மைதானா தங்கம்? நீ சொல்வது உண்மை தானா?" என்று ஆவலாகவும் பரபரப்பாகவும் கேட்டான் சுந்தரேசன்.

ஆமென்று தலையாட்டினாள் அவள்.

சுந்தரேசன் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவன் சிந்தனை பலமாக வேலை செய்து கடைசியாக ஒரு தீர்மனத்துக்கு வந்தது.

"தங்கம், உன் நகைகளைக் கொண்டு வந்து தந்தால், நான் அவற்றை அடைமானமாக வைத்து இப்போது ரூபாய் பெற்றுக்கொள்வேன். பிறகு எனக்கு ரூபாய் கிடைத்தவுடன் அந்த நகைகளைத் திருப்பித் தந்துவிடுவேன். கொண்டு வருகிறாயா தங்கம்?" என்று கேட்டான் சுந்தரேசன்.

"இவ்வளவுதானா? இதோ கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வீட்டை நோக்கி ஓடினாள் தங்கம்.

"தங்கம்! தங்கம்! கொஞ்சம் நில்!" என்றான் சுந்தரேசன்.

தங்கம் நின்றாள். திரும்பிப் பார்த்தாள்.

"யாருக்கும் தெரியாமல் எடுத்துவா!" என்று கட்டளை யிட்டான் சுந்தரேசன். தன் எண்ணம் மிக எளிதாக நிறை வேறப்போகிறது என்று எண்ணிக் கொண்டே.

தங்கம் தயங்கினாள்.

"என்ன தங்கம்? போய் எடுத்துவா!" என்று அவசரப் படுத்தினான் அவன்.

"தெரியாமல் எப்படி அத்தான் எடுத்து வருவது?' என்று கேட்டாள் தங்கம்.

"இதுகூடத் தெரியாதா? மண்டு யாரும் பாராதபோது புடவைத் தலைப்புக்குள்ளே மறைத்து, எடுத்துக் கொண்டு வா!" என்று செல்லமாக அதட்டி வழி கூறினான் சுந்தரேசன்.

"அது சரி, அத்தான். ஆனால், அம்மாவுக்குக்கூடவா தெரியாமல் எடுத்து வரவேண்டும்?" என்று கேட்டாள், அவள்.

"ஆம்! யாருக்கும் தெரியக்கூடாது!" என்று பதிலளித்தான் சுந்தரேசன்.

"அது எப்படி முடியும்? அம்மாவிடம் தானே எல்லா நகையும் இருக்கிறது!" என்று தங்கம் சொன்னாலும் சொன்னாள் சுந்தரேசன் முகத்தில் அசடு வழிந்துவிட்டது. இருந்தாலும் அவன் சமாளித்துக்கொண்டு, "அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்துவர முடியாதா?" என்று கேட்டான்

"அத்தான் உங்களுக்குப் பணம் வேண்டும். அதைப் பெற நகை வேண்டும். அவ்வளவுதானே? அம்மாவிடம் கேட்டே வாங்கிக்கொண்டு வருகிறேன். அம்மா நான் கேட்டால், அதுவும் உங்களுக்காக என்று கேட்டால் மறுத்துரைக்கவே மாட்டாள்" என்று சொன்னாள்.

"வேண்டாம் தங்கம்! வேண்டாம். உன் நகைகள் எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று சொன்னான் சுந்தரேசன்.

"ஏன் அத்தான்! என்மேல் கோபமா?" என்று தங்கம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, சுந்தரேசன் செடிகளின் பின் மறைந்து வீதியை நோக்கி நகர்ந்து சென்றுகொண்டிருந்தான். அவன் செயலுக்குக் காரணம் தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தாள் தங்கம். அவள் திகைப்படங்க வெகு நேரமாயிற்று.

அவள் வீட்டிற்குள் திரும்பவும் நுழைந்தாள். அங்கே யாரோ ஒரு புதுப்பெண், அவள் இதுவரை முன்பின் பார்த்திராத ஓர் அயலூர்ப்பெண், தன் தாயாருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அந்தப் பெண் அடிக்கடி அழுவதும் கண்ணீர் சிந்துவதும் மூக்கைத் துடைப்பதுமாக

இருந்ததையும் மரகத அம்மாள் அவளின் கதையைப் பரிவோடும் இரக்கத்தோடும் கேட்டுக்கொண்டிருப்பதையும் அவள் கண்டாள். அந்தப் புதிய பெண் சொன்ன பரிதாபக் கதையைத் தங்கமும் கூட இருந்து கேட்டாள். அந்தப் பெண் தன் கணவனைப் பற்றியே குறை கூறிச் சொல்லிக் கொண்டிருந்தாள். தங்கத்திற்கு இது பிடிக்கவில்லை. எந்தப் பெண்ணும் தன் கணவன் எவ்வளவு தீயவனாயிருந்த போதிலும் அவனைப் பற்றிப் பிறரிடம் குறைகூறக் கூடா தென்பது தங்கம் கொண்டிருந்த கொள்கை. கணவனைக் குறைத்து மதிப்பிடுகிற பெண்கள் வாழ்க்கை வளம்பெறாது' நலமும் பெறாது என்பது அவளுடைய சித்தாந்தம். இருந் தாலும், அந்தப்பெண் சொன்ன செய்திகள் உள்ளம் உருக்கு வனவாய் இருந்தபடியால் அவள் ஆதரவான முறையில் இரக்கங்காட்டியும் இடையிடையே இச்சுக் கொட்டியும் தன் தாயோடு சேர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் சொன்ன கதை இதுதான்!

''அவருக்கும் எனக்கும் பத்து ஆண்டுகளுக்குமுன் திருமணம் நடந்தது. என்னைப் பெண் பார்க்க வந்தபோது அவருடைய அழகான முகத்தைப் பார்த்துவிட்டு நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. என் தோழிப் பெண்களெல்லாம் நான் பெரிய அதிர்ஷ்டசாலியென்று கூறினார்கள். இப்படி இன்பக்கனவுகள் கண்டு கொண்டே வாழ்க்கையை ஆரம்பித்த நான் இரண்டொரு மாதங்களி லேயே வாழ்வை வெறுக்கத் தொடங்கிவிட்டேன். காரணம் அவரும் அவருடைய போக்குந்தான். அவர் சினிமாவில் சில்லரை வேடம் போடும் ஒரு நடிகையைச் சுற்றிக் கொண்டே திரிந்தார். அவளையே வைப்பாட்டியாகவும் வைத்துக்கொண்டார். என்னிடம் இருந்த நகை பணம் எல்லா வற்றையும் வாங்கியும் பறித்தும், திருடியும் கொண்டு போய் அடமானம் வைத்தும், விற்றும் சூதாடியும் குடித்தும் பெண்

களிடம் கொடுத்தும் குடித்தனத்தைக் கெடுத்துவிட்டார். என் மாமியாரோ பெரிய பிடாரி. அவள் எப்போதும் தன் மகனை உயர்த்தியே பேசுவாள். நான் அடி வைத்ததுமுதல் தன் வீடு உருப்படவில்லை என்று என்னை ஏசுவாள். அவருடைய அரட்டும் உருட்டும் தாங்கமுடியாமல் நான் என் தாய் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டேன். இப்போது ஏழெட்டு ஆண்டுகளாக நான் தாய் வீட்டிலேயேதான் வாழா வெட்டியாக இருந்து வருகிறேன். அவர் அந்த சினிமாக் காரியோடு திரிவதும், அவளுக்காக வேலை செய்வதுமாக அலைந்துகொண்டிருந்தார். கடைசியில் அவளும் அவரிடம் இருந்த பணத்தையெல்லாம் கரைத்துக் குடித்துவிட்டு இப் போது, மேற்கொண்டு பணம் கொண்டு வந்தால் தான் ஆச் சென்று மிரட்டுகிறாளாம். இனிமேலாவது அவருக்கு நல்ல புத்தி சொல்லி, என்னுடன் குடித்தனமாக வாழும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். உங்களைத்தான் நம்பி வந்திருக் கிறேன்'' என்று சொன்னாள் அந்தப் பரிதாபத்திற்குரிய பெண்.

''அம்மா! உன் கணவர் யார்? அவர் எங்கேயிருக்கிறார் நாங்கள் அவருக்குப் புத்திமதி சொன்னால் கேட்பாரா'' என்று ஐய வினாக்களை எழுப்பினாள் மரகத அம்மாள்.

# 16. மீனாட்சி திருக்குணங்கள்

"அம்மா! உங்கள் அண்ணன் மகன் உங்கள் பேச்சைக் கேட்காமலா இருப்பார்? உங்கள் மேல் அவருக்கு அளவில்லாத அன்புண்டாமே! இப்போது கூட அந்தச் சினிமாக்காரியின் தொந்தரவுக்குப் பயந்து அவர் இங்கே உங்கள் வீட்டில் தானாமே பல நாட்களாக இருந்து வருகிறார். அம்மா! நீங்கள் நல்லாயிருப்பீர்கள். என்னை உங்களுடைய இன்னொரு மகளாகப் பாவித்து அவருக்குப் புத்திமதி சொல்லி என்னுடன் சேர்ந்து வாழ வைக்க வேண்டும். உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இப்போதே என் வாழ்க்கையில் ஏழெட்டு ஆண்டுகள் வெறும் பாலைவனமாகக் கழிந்து விட்டன." என்று கூறிக் கண்ணீர் விட்டாள் அந்தப் பெண்.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்கொன்றும் புரியவில்லையே!" என்று மரகத அம்மாள் குழம்பினாள்.

"அம்மா! உங்கள் கூடப் பிறந்த அண்ணன் வீட்டு மருமகள்தான் நான். என்னை என் கணவருடன் சேர்த்து வாழவைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. அது உங்களால் முடியும்—உங்கள் ஒருவரால் தான் முடியும்!" என்று மரகத அம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டாள் அந்தப் பெண்,

"என்ன? உண்மையாகவா? நீ சுந்தரேசன் மனைவியா? நீ திருமணமாகி ஆறாவது மாதத்திலேயே இறந்து போய் விட்டாய் என்றல்லவா சொன்னான்?" என்று தன் ஐயத்தை வெளிப்படையாகவே கேட்டாள் மரகத அம்மாள்.

இதைக் கேட்ட அந்தப் பெண், "ஆ! அப்படியா சொன்னார்?" என்று கேட்டுவிட்டுக் கோவென்று கூவியழத் தொடங்கி விட்டாள்.

அவள் தன் அத்தான் சுந்தரேசன் மனைவி என்பதை அப்போது தான் அறிந்துகொண்ட தங்கத்திற்கு ஒரே அதிர்ச்சி யாயிருந்தது, அந்த அதிர்ச்சி தாங்க மாட்டாமல் அவள் சுவரின் மேல் சாய்ந்து கொண்டு, அந்தப் பெண்ணையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க அவளுடைய மனச் சுழற்சியின் வேகம் அதி கரித்துக் கொண்டே போயிற்று!

அண்ணாமலைப் பண்டிதர் தக்க சமயத்தில் தன்னை எச்சரிக்க முன் வந்திருக்கிறார் என்பது அவளுக்கு அப்போது தான் புலப்பட்டது. தான் படுகுழியில் வீழ்ந்து பாழாகி விடாமல் காக்கவே அவர் நேரம் பார்த்துத் தன்னிடம் விஷயத்தைக் கூற வந்திருக்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும், அத்தான் சுந்தரேசன் மீது அவளுக்கேற்பட்டிருந்த பற்று உடனடியாக விலகிவிடக் கூடியதாக இல்லை. அது மட்டுமல்லாமல், அது அவள் மனோ சிந்தனையை வேறு பாதையில் திருப்பிவிடக் கூடிய சக்தி வாய்ந்ததாகவுமிருந்தது.

ஒருவேளை அண்ணாமலைப் பண்டிதருக்கு சுந்தரேசன் மீதுள்ள வெறுப்புக் காரணமாக அவர் தன்னிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி யிருக்கலா மென்றும், அதுமட்டுமல்லாமல் தன் சொல்லை மெய்ப்

பிப்பதற்காக அவர் இந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து தன் அத்தானின் மனைவியாக நடிக்கச் செய்திருக்கலாம் என்றும் ஓர் எண்ணம் கூட அவளுக்கு இடையே ஏற்பட்டது. ஆனால், அந்த எண்ணம் நிலைபெற்றிருக்கவில்லை. அண்ணாமலைப் பண்டிதரின் பெரிய மனிதத் தன்மையும் பண்பும் அவள் இப்போது பல நாட்களாக நேரடியாகக் கண்டறிந்து வருகின்றபடியால். அவரை அவ்வளவு கீழ்த் தரமாகக் கருத அவளால் முடிய வில்லை, அதுவுமில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாகத் தன் தாயின் காலடியில் வீழ்ந்து கதறுகின்ற அந்தப் புதிய பெண்ணின் கூற்றை வெறும் நாடகம்—நடிப்பு என்று அவ்வளவு எளிதாகச் சொல்லி விடக் கூடியதாக இல்லை.

மேலும் அவள் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது சற்று முன் சுந்தரேசன் தன்னிடம் நடந்துகொண்ட முறை அவள் அவன் மீது கொண்டிருந்த மதிப்பை மேலும் குறைப் பதாகவேயிருந்தது. சுந்தரேசன் சொல்லுவ தெல்லாம் சுத்தப் பொய்யாக இருக்குமோ என்றுதான் தோன்றியது.

தங்கத்தின் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு முறை சுந்தரேசன், வெறுப்புக்குரிய உருவமாகத் தோற்ற மளித்தான். மற்றொரு முறை சுந்தரேசன் விரும்புதற்குரிய வனாகத் தோன்றினான். அவன் இல்லாவிட்டால் தனக்கு வாழ்வில்லை என்று ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது. அவனோடு வாழும் நாளெல்லாம் கசப்பான நாட்களாகவே இருக்குமோ என்ற ஒரு பயம் அவளுக்கு ஒரு கணம் தோன்றியது.

அண்ணாமலைப் பண்டிதருக்குச் சுந்தரேசன்மேல் ஏன் இவ்வளவு கோபமோ, ஏன் இவ்வளவு வெறுப்போ தெரிய வில்லை. அண்ணாமலைப் பண்டிதரும் சுந்தரேசனும் ஒருவரைப் பற்றி ஒருவர் கூறிய கருத்துக்களைப் பார்த்தால்

இருவருக்கும் எத்தனையோ ஆண்டுகளாக பகையிருக்கும் போல் தோன்றியது. யார் கூறுவது உண்மை, யார் கூறுவது பொய் என்று எளிதாகச் சட்டென்று கண்டுபிடிக்க முடியாது போலிருந்தது. ஆனால், சுந்தரேசன் குணம் அவளுக்குச் சின்ன வயது முதலே தெரியும் ஆகையாலும் அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றியும் அவளுக்கு மேலான கருத்துஏற்பட்டிருந்தபடியாலும் அவள் சுந்தரேசனைப்பற்றி- அவன் ஒழுக்கத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர முடிந்தது. ஆனால், அவளுடைய மனத்தின் ஒருபகுதி அந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தயங்கியது. என்ன இருந்தாலும் அவன் குற்றவாளி என்று அது ஒப்புக்கொள்ள மறுத்தது!

இதோ எதிரில் இருக்கும் பெண்ணின் கண்ணீரைக் கண்ட பிறகுகூட, ''என் வாழ்வு பாலைவனமாகிவிட்டது; அதைச் சோலைவனமாக்க ஒரு வழிசொல்லுங்கள்'' என்று தன் தாயின் காலடியில் விழுந்து கதறுகின்ற அந்தப் பெண்ணின் பரிதாபத் தோற்றத்தைக் கண்ட பிறகும்கூட, திருமணம் நடந்த ஆறு மாதங்களிலேயே செத்துப்போய் விட்டாள் என் மனைவி என்று அத்தான் சுந்தரேசன் கூறியிருக்க இல்லை, அவர் கொடுமையால் விரட்டியடிக்கப்பட்டு நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறேன் என்று சோக உருவோடு வந்து நிற்கும் அந்த வாடியுலர்ந்த கொடிபோன்ற பெண்மணியைக் கண்ட பிறகும்கூட அவளால் தன் அத்தானை அலட்சியப் படுத்தி விட முடியவில்லை. அவ்வளவு தூரத்திற்குச் சுந்தரேசன் அவள் இதயத்தில் இடம் பிடித்திருந்தான். இருந்தாலும் அவள் இனிமேல் அவனை மறந்துவிட வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தாள். எத்தனைதான் தன் இதயத்தைக் கவர்ந்தவனாயிருந்தபோதிலும், எத்தனைதான் தன்னால் அவனின்றி வாழமுடியாது என்ற நிலையிருந்தபோதிலும், இன்னொரு பெண், அவனுக்கு வாழ்க்கைப்பட்டதன் காரண மாகத் தன் வாழ்வை வீண் ஆக்குவதை அவள் விரும்ப

வில்லை. அந்தப் பெண்ணின் வாழ்வைக் கடைத் தேற்ற வேண்டியது தன் பொறுப்பு என்று அவளுக்குத்தோன்றியது. வாழ்க்கைப்படாத ஒரு பெண்ணாக அவள் இருந்திருந்தால், தன்னைப்போலவே சுந்தரேசனைக் காதலிக்கிறவளாக அவள் இருந்திருந்தால், தங்கம் அவள் மீது போட்டியுணர்ச்சியும் பொறாமையும்தான் கொண்டிருப்பாள். ஆனால் அவள் அவனைக் கணவனென்று கைப்பிடித்த பின் அவன் அவளுக்கே உரியவன் என்ற எண்ணம் தங்கத்திற்கு ஏற்பட்டது. பத்தாண்டுகளாக மணம் புரிந்தும் வாழ்வில்லாத நிலையில் வாடித் தவிக்கின்ற அந்தப் பெண்ணுக்குப் புதுவாழ்வு அளிக்கவேண்டியது தன் கடமை என்று தங்கம் உணர்ந்தாள். இத்தனை எண்ணங்களும் தன் இதயத்திலே எழுந்து எழுது தோன்றத் தங்கம் சுந்தரேசனைத் தன் காதலனாக இனி எண்ணுவதில்லை என்ற முடிவுக்கு வந்தாள். அப்படி முடிவுக்கு வந்தபோதும்கூட அவள் தான் எப்படி இந்த முடிவை நடை முறையில் கையாளுவது என்று புரியாமல் திண்டாடினாள். சுந்தரேசனுடைய அழகிய புன்னகையரும்பிய முகத்தை மனத்தால் எண்ணிப் பார்க்கும் போது கூட அவளுக்குத் தன்னால் அவனை ஒதுக்கிவிட்டு இருந்துவிட முடியாதென்றுதான் பட்டது. ஆனால், ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வு பாழாகப் போவதற்குத் தான் காரணமாக இருக்கக்கூடாதென்று அவள் உறுதி பூண்டாள்.

அதுவரையிலும் அந்தப் பெண்ணையே உற்றுநோக்கிக் கொண்டிருந்த தங்கம், திடீரென்று அந்தப் பெண்ணின் கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு 'நான் உங்களுக்கு உதவி செய்வேன். அத்தானை நான் உங்களிடம் சேர்த்து வைப்பேன்'' என்று உறுதியான குரலில் கூறினாள்.

தன்மகளின் இந்தத் திடீர்ச் செயலைக் கண்டு மரகத அம்மாள் அதிசயப்பட்டுப்போனாள்.

"அம்மா, சற்று முன்னால்தான் அத்தான் தோட்டத்திற்கு வந்திருந்தார். அவர் இப்போது ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாராம். இரண்டாயிரம் ருபாய் இருந்தால் அதிலிருந்து தப்பிக்க முடியும் என்று சொன்னார். தங்கம் உன்னால் உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்" என்றாள் தங்கம். அதற்கு மேல் பேசிய விவரங்களை அவள் சொல்லத் துணியவில்லை.

"எங்கே அவர்? இப்போது இங்கே தான் இருக்கிறாரா?" என்று அந்தப் புதிய பெண் ஆவலோடு கேட்டாள்.

"இல்லை, பேசிக்கொண்டே யிருந்தார். திடீரென்று புறப்பட்டு விட்டார் என்ன காரணமோ தெரியவில்லை. என்னால் உதவி செய்ய முடியவில்லை, என்ற கோபமோ என்னவோ?" என்று தங்கம் கூறினாள்.

"ஆ! இல்லை, உன்மேல் அவர் கோபம் கொண்டு போக வில்லை, நான் வீட்டுக்குள் வந்ததை அவர் கவனித்திருக்க வேண்டும். அதனால் தான் திடீரென்று போயிருக்கிறார்" என்று விளக்கம் சொன்னாள் அந்தப் பெண். தொடர்ந்து அவள், "அந்தச் சினிமாக்காரிக்கு அள்ளிக் கொட்டுவதற்காகத்தான் அவர் ரூபாய் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அப்படி மட்டும் இல்லாமல் வேறு ஏதாவது ஆபத்தில் அவர் சிக்கிக் கொண்டிருந்தால், நான் நிச்சயம் என்னிடம் மிகுந்துள்ள நகைகளையாவது விற்றுக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்." என்றாள்.

"மீனாட்சி, நீ நினைப்பது சரிதான் அவன் அந்தச் சினிமாக்காரிக்காகத் தான் பணத்துக்கு அலைகிறான்" என்று மாடிப் பக்கம் இருந்து ஒரு குரல் வந்தது. பெண்கள் மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அண்ணாமலைப் பண்டிதர் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். அவரை முன்பின் பார்த்தறியாத அந்தப்

பெண், அவர் தன்னைப் பெயரிட்டு அழைத்துக் கொண்டு வந்ததையும், தன் கணவனைப் பற்றி அவ்வளவு உறுதியான தகவல் தெரிவிப்பதையும் கண்டு திடுக்கிட்டுப் போனாள்,

அண்ணாமலைப் பண்டிதருக்குத் தெரியாத விஷயமே இருக்காதோ என்று மரகதமும் தங்கமும் ஆச்சரியப் பட்டார்கள்.

"தங்கம், சுந்தரேசனைப் பற்றி நான் சொல்லிய செய்திகள் உண்மையென்று மெய்ப்பிக்கிறேன் என்று முன் உன்னிடம் சொல்லியது நினைவிருக்கிறதல்லவா? இதோ பார், இந்த மீனாட்சி தான் அவனுடைய மனைவி," என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர்.

அவருடைய பேச்சைக் கேட்டு மரகதம்மாள் மலைத்துப் போனாள். தங்கத்துக்குச் சுந்தரேசனைப் பற்றி ஏன்—எதை மெய்ப்பிக்க விரும்புகிறார் என்று எண்ணி அவள் குழம்பினாள். அந்தக் குழப்பம் ஏற்பட்டு அவள் மனம் கலங்கித் தெளிவடைந்தபோது அவளுக்கு உண்மை விளங்கத் தொடங்கியது. அதாவது தான் இதுவரை தங்கத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். தன் கவனத்தை மீறித் தங்கம் சுந்தரேசனிடம் காதல் கொண்டு வந்திருக்கிறாள் என்பதை மரகதம்மாள் யூகித்துணர்ந்து கொண்டாள். அண்ணாமலைப் பண்டிதர்-இதோ பார் இந்த மீனாட்சிதான் அவனுடைய மனைவி என்று கூறிய அந்த சொற்றொடர் அவளுக்குப் பலப் பலவற்றைப்புரியவைத்தது. தங்கம்—சுந்தரேசன் காதல் விவகாரம் எப்படியோ அண்ணாமலைப் பண்டிதருக்குத் தெரிந்து அவர் அதைத் தவிர்க்க முற்பட்டிருக்கிறார் என்ற விவரத்தையும் அது அவளுக்குத் தெளிவாகப் புரியவைக்காமல் போகவில்லை. எப்படியோ தங்கம் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து தப்பி விட்டாள் என்று அவள் மன அமைதியடைந்தாள்.

தனக்கு முன் பின் அறிமுகமில்லாத அந்தப் பெரிய மனிதர் தன்னைப் பற்றியும் தன் கணவனைப்பற்றியும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருப்பதைக் கண்டு மீனாட்சி என்ற அந்தப் புதிய பெண்ணும் மிக வியப்படைந்தாள். அண்ணாமலைப் பண்டிதர் படியை விட்டுக் கீழே இறங்கி வந்ததும் மீனாட்சி எழுந்து சென்று அவர் காலடியில் விழுந்து "நீங்கள் தான் என்னை வாழவைக்க வேண்டும்!" என்ன வேண்டிக்கொண்டாள்.

"பல நாட்களாக நான் அதற்காகத் தான் முயன்று கொண்டிருக்கிறேன், எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா? பொறுத்திரு!" என்று பெரிய ஞானவானைப்போல் பதிலளித்தார் பண்டிதர்.

அதன் பிறகு அவர் மரகத அம்மாள் பக்கம் திரும்பி, மரகதம் இந்தப் பெண்ணை வாழவைக்க வேண்டியது உன் பொறுப்பு. அவள் கணவன் அவளை ஏற்றுக்கொள்ளும் வரை நீதான் அவளைப் பராமரித்துக் காப்பாற்ற வேண்டும். செய்வாயா?" என்று உரிமையுள்ளவர்போல் கூறினார்.

மரகதம்மாள் அவர் பேச்சுக்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால், அவர்களுடைய குடும்பச் செலவு மட்டும் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதையும், கந்தசாமி வாத்தியார் எங்கெங்கோ போய்க் கடன் வாங்கிச் சமாளித்து வருவதையும், அவள் அந்தச் சமயம் எண்ணிப்பாராமல் இல்லை.

மீனாட்சி என்ற அந்தப் பெண்ணும் அவர்கள் வீட்டில் இருக்க ஆரம்பித்த பிறகு, மீனாட்சியும் தங்கமும் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். பக்கத்து வீட்டு ராதாவும்கூட மீனாட்சியுடன் பழக ஆரம்பித்தாள். ஆனால், பழகப் பழக மீனாட்சியின் குணத்திற்கும், தங்கத்திற்கும்-ஏன் ராதா விற்கும் கூட ஒத்து வரவில்லை. தங்கம் சுந்தரேசன் காதல்

விவகாரம் ராதாவுக்கோ மீனாட்சிக்கோ தெரியாது. அது ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. இல்லா விட்டால், மீனாட்சி தங்கத்தை ஏசுவதற்கு ஒரு தகுந்த காரணம் அவளுக்கு கிடைத்துவிட்டிருக்கும்.

மீனாட்சி எப்பொழுதும் தன் பிறந்த வீட்டுப் பெருமையைப் பற்றியே பேசுவதும், தன்-தாய் தந்தையர் தனக்குக் கொடுத்துவந்த செல்லத்தைப் பற்றிப் பெருமை யாகக் கூறுவதும், சுந்தரேசனைப் பற்றிப் பற்பலவாறு அவதூறு சொல்வதுமாக இருந்தாள்.

திருமணமான தொடக்கத்தில் சுந்தரேசன் தான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார் என்றும், எப்போதும் தனக்கு அடங்கித்தான் நடப்பார் என்றும், தான் தன் மாமியோடு சண்டை போடும்போதுகூட அவர் தன்னை எதிர்த்துத் தம் தாய் பக்கம் சேரப் பயப்படுவார் என்றும், அப்படிப் பட்டவரை அந்தச் சினிமாக்காரி எப்படியோ வசிய மருந்து போட்டு மயக்கிவிட்டாள் என்றும், தான் அவரோடு கோபமாகப் போய்விட்டதாகவும் அவள் அடிக்கடி தன்னைப் பற்றிப் பேசிக் குறிப்பிடுவாள், அவள் பேச்சுக்களையெல்லாம் கவனித்துவந்த தங்கம், தன் அத்தான் உள்ளபடியே தீ ய கு ண ம் பொருந்தியவராயிருந்தபோதிலும், இந்த மீனாட்சியின் குணமும் போக்குமே அவரை மேலும் தூர்த் தராக்க வழிகோலியிருக்க வேண்டும் என்று எண்ணினாள். கணவன் குறிப்பறிந்து அவன் கருத்துக்கிசைந்து நடந்து வாழ வேண்டியது பெண்களின் கடமை. கணவனே தன் தலைவனெனக்கொண்டு அவன் மனங்கோணாமல் நடந்து அவனைத் தங்கள்மீது பற்றுக்கொள்ளச் செய்து வாழ்வை இன்ப மயமாக்க வேண்டியது பெண்களின் கடமை அதை விட்டு விட்டு இந்த மீனாட்சி என்ற பெண் தன்கணவன் தன் விருப்பப்படி ஆடினார் என்று பெருமை பேசுவதும், சினிமாக்

ம—10

காரி வசியப்படுத்தி விட்டாள் என்று முகாரி பாடுவதும் தங்கத்திற்குச் சிறிது கூடப் பிடிக்கவில்லை. நல்ல வேளையாக அவளைக்குத் தான் அவளுடைய கணவன் காதலுக்குப் பாத்திரமான பெண் என்று தெரியவில்லை. என்று உள்ளூர மகிழ்ச்சியடைந்தாள் தங்கம். இல்லா விட்டால், தன்னையும் அந்தச் சினிமாக்காரியின் தரத்தில் வைத்து இந்த மீனாட்சி பேச ஆரம்பித்துவிடக்கூடும் என்றும் பயந்தாள்.

மனத்துக்கினியவளும் தன்னைப் போலவே கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவளுமான ராதா வுடனேயே இதுநாள்வரை பழகிவந்த தங்கத்திற்கு இப்போது இந்தப் புதுமாதிரியான போக்குடைய மீனாட்சியுடன் பழகுவது சிரமமாயிருந்தது. வெடுக்வெடுக்கென்று பேசுவதும் எதையும் தவறாகவே புரிந்துகொள்வதும், பிறர் கூறுகின்ற வார்த்தைகளுக்கெல்லாம் புதுப்பொருள் காண்பதும் இப்படியாக எதற்கும் மாறுபாடான தன்மையிலே வாதம் புரிவதுமாக இருந்தாள் அந்த மீனாட்சி.

தங்கம் அவளுடைய போக்குக்கெல்லாம் வளைந்து கொடுத்துக் கொண்டு தான் வந்தாள். தன் வீட்டில் விருந்தாளியாக வந்துள்ள ஒருத்தியுடன் சண்டை பிடித்துக் கொள்ளக் கூடாதென்று தான் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தாழ்ந்து போனாள். மீனாட்சி மேல் தனக்கு உள்ளூர ஏற்பட்டிருந்த வெறுப்பை எல்லாம் எவ்வளவோ உறுதிகொண்டு அடக்கிக்கொண்டாள்.

ஆனால், ஒருநாள் அவள் அடக்கிவைத்திருந்த தெல்லாம் வெடித்துக் கிளம்பும் படியான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

மீனாட்சி தங்கத்தைப் பலவாறு பழித்துப் பேசி விட்டு அவர்கள் வீட்டை விட்டுக் கோபமாய்ப் புறப்பட்டுப்]போய் விட்டாள். அவள் அவ்வாறு போகும்படி நேர்ந்த நிகழ்ச்சி இதுதான்!

# 17. ராதா, ஒரு மேதை யானாளோ?

புகைவண்டி வேகமாகப் போகும் போது பார்த்தால் பக்கவாட்டில் இருக்கின்ற மரங்கள் எல்லாம் வெகுவேகமாக வண்டிக்கு எதிர்ப்புறமாக ஓடுவதுபோல் தோன்றும். சற்று நிதானமாகத் தன் நினைவோடு கவனித்தால்தான், அவை ஓடவில்லை; வண்டி ஓடுவதால் அவ்வாறு தோன்றுகின்றன என்று அறியமுடியும். மனிதன் மன நிலைக்குத் தகுந்தபடி தான் இயற்கைப் பொருள்களின் தோற்றம் அமைகிறது.

கவலையாக இருக்கின்ற மனிதன் தேய்பிறை நிலவைக் காணும்போது, தன் சுகங்கள் தேய்ந்து வருவது போல அதுவும் தேய்ந்து வருவதாக எண்ணுகின்றான், வளர்பிறை நிலவைக் காணும்போதோ, தன் துன்பங்களைப் போல் அதுவும் வளருவதாகக் கற்பனை செய்கிறான். சிலர் மாறு பாடாக நினைப்பதுமுண்டு.

காதலன் தன்னோடு இருக்கின்ற போது குளிர்ந்த பாலொளி வீசும் நிலவைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்துகின்ற காதலி அவனைப் பிரிந்திருக்கும் போது அது தன்னைச் சுடுவதாகக் கருதி வருந்துவதுண்டு.

நிலவும் மற்ற இயற்கைப் பொருள்களும் எப்போதும் போல்தான் இருக்கின்றன. அவற்றிற்கு இயற்கை விதித்த

முறைப்படி சுழலுவதல்லாமல், வேறு வாழ்வும் தாழ்வும் சுகமும் துக்சமும் கிடையாது, ஆனால், மனிதன் தன் மன நிலைக்கு ஏற்ப அவற்றின் தோற்றத்தைத் தன் போக்குக்கு ஏற்ற முறையிலோ மாறுபட்ட நிலையிலோ இருப்பதாக எண்ணிக் கற்பனை செய்து கொள்ளுகிறான்.

தங்கம் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் பூக்க வேண்டிய பருவத்தில் பூப்பதும், பூக்காத காலத்தில் பூக்கா மலிருப்பதுமாகத் தன் இயற்கைப்படி தான் இருந்து வந்தது. ஆனால், அவள் அந்த மல்லிகைப் பந்தல் பூத்துக் குலுங்கிய காலத்திலெல்லாம் தான் இன்பமாக இருந்ததாகவும், இப்போது தான் அடிக்கடி மனக் குழப்பமடைந்து எப்போதும் கவலையாக இருப்பதைக் கண்டு அந்த மல்லிகைச் செடியும் பூக்காமல் இருப்பதாகவும் எண்ணி வருந்தினாள்.

பொதுவாக மக்கள் தாம் இன்பமாயிருக்கும்போது வேறு எதைப்பற்றியுமே எண்ணிப் பார்ப்பதில்லை. தங்களுக்கு ஏதாவது துயரம் வந்தால் தான் மற்றவர்களைப்பற்றியோ, மற்ற பொருள்களைப்பற்றியோ, எண்ணிப் பார்ப்பது வழக்கம். இன்று உலகத்திலே மிகப் பெரிய மேதைக ளென்றும் மகான்கள் என்றும் போற்றப்படுகிறவர்களெல்லாம் தாங்கள் ஒரு வகையான துன்பத்தை யடைந்தபோது தான், தங்களைப்போல மற்ற மக்களுள்ளும் பலர் இவ்வாறு துன்பமடைபவர்களாக இருக்கிறார்கள் என்பதை யுணர்ந்து அரும்பெரும் தொண்டு புரியத் தொடங்கியவர்களாக இருக்கக் காண்கிறோம்.

தங்கம் அப்போது அடைந்திருந்த துன்பமெல்லாம், வெறும் மனத்துயரம் தான். நாம் மிக எளிதாக வெறும் மனத்துயரம்தான் என்று கூறிவிடுகிறோம். ஆனால், அதை அனுபவித்த அவளைக் கேட்டால்தான் அதன் வலிவும் சுமையும் எவ்வளவு என்பது புரியும்.

தங்கம் அந்த மல்லிகைப் பந்தலின் அடியில் இருந்தபடி எத்தனையோ விதவிதமான உணர்ச்சிகளுக்காளாகியிருக்கிறாள். எத்தனையோ மாதிரியான சிந்தனைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறாள். அத்தனைக்கும் அந்த மல்லிகைப் பந்தல் தன்னியல்பான சில மாறுதல்களை அடைந்த தல்லாமல் வேறு மாறுபாடு எதுவும் அடையாமல் அன்றிருந்த படியேதான் இன்றும் இருந்தது. ஆனால், அது தன் மனம் போலவே வெறிச்சென்று இருப்பதாகக் கருதினாள் தங்கம்

அவள், தன் அத்தான் சுந்தரேசனைக் கண்டது முதல் அவனிடம் தன் மனம் கொண்ட ஈடுபாட்டினை எண்ணி யெண்ணிப் பார்த்தாள். அத்தான் சுந்தரேசன் தனக்காகவே பிறந்திருப்பதாகக்கூட அவள் எண்ணி மகிழ்ந்த சமயங்கள் எத்தனையோ இருந்தன. தன் மனம் அவனிடம் ஈடுபட்டது போலவே அவன் மனமும் தன்னிடம் வயப்பட்டிருப்பதாக அவள் எண்ணி இன்பமடைந்த நாட்கள் எத்தனையோ இருந்தன, ஆனால் இன்று அவ்வளவும் பொய்யாய், வெறுங் கனவாய்-கானல் நீராய்ப் போய்விட்டன என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவளால் அந்த உணர்ச்சியைத் தாங்கமுடிய வில்லை.

அத்தான் சுந்தரேசன் தன்னை ஏமாற்றியதை நினைக்க நினைக்க அவளுக்குத் துன்பமாயிருந்தது. அவன்மீது பதிந்த தன் மனத்தை மீட்டுக்கொள்வதும் அவளுக்கு அரிதா யிருந்தது.

இப்போது அவனுக்கு ஒரு மனைவி இருக்கிறாள் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகு அவனைப் பற்றி நினைப்பதில் அர்த்தமில்லை என்று அவள் மனம் வாதாடிக் கொண்டிருந்தது. ஆனால், அவனைப் பற்றி நினைக்காமல் அவளால் இருக்க முடியவில்லை, அவள் அவனை மறக்க முயன்ற போதெல்லாம், நடராசனுடைய உருவமும் அவள்

முன்னே தோன்றியது. ஆனால், நடராசனுடைய ஒற்றைக் கையில் இருந்த ஊனத்தை நினைக்கும் போதெல்லாம் அவள் மனம் பின்னடைந்தது. அதுவுமல்லாமல், அந்த ஊனத்தை மறந்து அவனுடைய குண நலன்களையே சீர்தூக்கிப் பார்க்கின்ற போதும் அவள் மனம் நடராசனை ஏற்றுக்கொள்ளப் பின் வாங்கியது. ராதாவின் காதலன் அவன் என்பதை எண்ணும்போது அவனைப்பற்றித் தான் சிந்திக்க முற்படுவதே தவறு என்று அவளுக்குப் பட்டது.

இப்படி அவள் சுந்தரேசனையும் நடராசனையும் மாற்றி மாற்றித் தன் மனக் கண் முன்னே கொண்டு வந்து குழம்பிக் கொண்டிருந்தபோது, பின்னாலிருந்து யாரோ அவளுடைய கண்களைப் பொத்தினார்கள்.

"என்ன விளையாட்டடி ராதா!" என்று செல்லமாகக் கடிந்து கொண்டே அந்தக் கைகளைத் தன் கைகளினால் விலக்கினாள் தங்கம். அந்தக் கைகள் முரடாயிருப்பதைக் கண்டு திகைப்படைந்து அவள் திரும்பிப் பார்த்தபோது அங்கே அவள் அத்தான் சுந்தரேசன் நின்று கொண்டிருந்தான்.

தங்கம் திடுக்கிட்டுப் பின்வாங்கி, "அத்தான் நீங்களா?" என்று நடுங்கும் குரலோடு கேட்டாள்,

"ஏன் தங்கம் நடுங்குகிறாய்? என்றுமில்லாமல் இன்று உன் உடம்புக்கு என்ன வந்துவிட்டது? என்று கேட்டுக் கொண்டே. அவள் நெற்றியில் கை வைத்துப் பாாக்க முன்னால் நெருங்கி வந்தான் சுந்தரேசன்.

தங்கம் மேலும் விலகி நின்று கொண்டாள்.

"அத்தான்! உடம்புக்கு ஒன்றுமில்லை. ஆனால் நீங்கள் என்னிடம் நடந்து கொள்ளும் முறைதான் நன்றாக இல்லை" என்றாள் தங்கம்,

"என்ன தங்கம் இப்படிப் பேசுகிறாய்! என்றுமில்லாத மாதிரியாக இருக்கிறதே உன் பேச்சு! என் ஆருயிர்க் காதலி தங்கம் இப்படியா என்னிடம் பேசுகிறாள்!" என்று தனக்குத் தானே பேசிக் கொள்ளுபவன் போல் நடித்தான் சுந்தரேசன்.

"அத்தான். இனிமேல் அந்த மாதிரி நீங்கள் பேச வேண்டாம். உங்கள் காதலை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். உண்மையில் நீங்கள் என்மேல் அன்பு வைத்திருந்தால், உங்கள் மனைவியுடன் ஒற்றுமையாக வாழ முற்படுங்கள். அதுதான் நான் விரும்புவது!" என்றாள் தங்கம்.

"என்ன தங்கம் உளறுகிறாய்! எனக்கா, மனைவியா? ஆம்! இனிமேல் நீதான் மனைவி! உன்னுடன் நான் ஒற்றுமையாக வாழாமலா போய் விடுவேன்." என்று மேலும் அருவருக்கத் தக்க முறையில் பேசினான் சுந்தரேசன்.

"அத்தான்! நீங்கள் என்னிடம் சொன்னதெல்லாம் சுத்தப் புளுகென்று தெரிந்து கொண்டு விட்டேன். இதோ உங்கள் மீனாட்சி வந்திருக்கிறாள். வாருங்கள் அவளிடம் உங்களை ஒப்படைத்து விடுகிறேன்." என்று அவன் கையை எட்டிப் பிடித்து வீட்டுப் பக்கமாக இழுத்தாள்.

"தங்கம், நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே!" என்று சுந்தரேசன் கூறிக்கொண்டிருந்தான்.

அப்போது, வீட்டின் கொல்லைப் பக்கக் கதவு வாசலில் மீனாட்சி தோன்றினாள் அவளைக் கண்டவுடனே சுந்தரேசன், தங்கத்தின் பிடியிலிருந்த தன் கையை உதறிக் கொண்டு வாசற் பக்கமாக ஓடிப் போய்விட்டான்.

மீனாட்சி விடுவிடுவென்று தோட்டத்திற்குள்ளே வந்தாள்.

தங்கத்தை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள்,

"அடி மானங்கெட்டவளே, உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் கணவரோடு கை கோர்த்துக்கொண்டு உலாவியிருப்பாய்!" என்று தங்கத்தைப் பார்த்துக் கடு நஞ்சு போன்ற சொற்களை உதிர்த்தாள்.

"அக்கா, நடந்தது என்னவென்று தெரியாமல் நீங்கள் கோபப்படுகிறீர்களே" என்று முதலில் அமைதியாகத் தான் மறுத்துரைத்தாள் தங்கம்.

ஆனால், மீனாட்சி அவளை வெறுப்போடு நோக்கிக் காதால் கேட்கமுடியாத வார்த்தைகளால் அர்ச்சனை புரிய தொடங்கி விட்டாள்.

அவள் தன்னை அவமதிப்பாகப் பேசப் பேசத் தங்கத்திற்கு உள்ளம் எரிமலையாய்க் குமுறியது. தான் அதுவரை அந்த மீனாட்சியைப்பற்றி மனத்திற்குள் அடக்கி வைத்திருந்த எண்ணத்தையெல்லாம் தங்கம் வெளிக்கக்கி விட்டாள். கணவனோடு வாழத் தெரியாதவள் என்று தான் கருதியிருந்ததைத் தங்கம் அப்படியே சொல்லிவிட்டாள். உடனே மீனாட்சி அதைப் பெரிதுபடுத்தி, "எனக்குக் கணவனோடு வாழத் தெரியாவிட்டால், உன்னையா என் கணவனோடு வந்து வாழ்ந்து காட்டச் சொன்னேன்?", என்று கேட்டு இன்னும் பலவாறு பேசிவிட்டு தோட்டத்திலிருந்தபடியே புறப்பட்டுப் போய் விட்டாள்.

அன்று முழுவதும் தங்கத்தின் இதயம் துடித்துக் கொண்டேயிருந்தது. வீட்டில் மீனாட்சி திடீரென்று புறப்பட்டுப் போய் விட்டதைப் பற்றிக் கேட்டபோது தங்கம் ஏதோ சொல்லிச் சமாளித்துக் கொண்டாள். ஆனால் அந்த மீனாட்சி தன்னைக் கேட்ட ஒவ்வொரு வாசகத்தையும் நினைக்க நினைக்க அவளுக்கு அழுகையாக வந்தது. நல்லவர்கள் வாய்விட்டுச் சொல்ல அஞ்சும்படியான

வார்த்தைகளால் அந்த மீனாட்சி தங்கத்தின் இதயத்தைக் கொத்திக் கொத்திப் புண்ணாக்கி விட்டுப் போய் விட்டாள்.

இன்பத்துக்கும் துன்பத்துக்கும் தன் இதய உணர்ச்சிகளோடு பங்கு கொள்ளக் கூடிய ஒரே ஒருத்தியான ராதாவின் வீட்டுக்குத் தங்கம் சென்றாள். தனக்கும் மீனாட்சிக்கும் நடந்த வாக்கு வாதத்தையும் மீனாட்சி தன்னைப் பழித்து விட்டுப் போனதையும் கூறிப் பொருமினாள் தங்கம்.

ராதா தங்கத்திற்காக, வருத்தப் பட்டாள், ''நடந்தது சரி, வீட்டை விட்டு அவள் போனதும் நல்லது தான். இல்லாவிட்டால் நெடுக அவளுடன் மன்றாடிக்கொண்டு கிடக்க வேண்டும். அவளுடைய வார்த்தைகளை நீ பெரிதாக மதிக்க வேண்டாம் என்று பலவாறு சொல்லி ஆறுதல் அளித்தாள் ராதா.

தங்கம் சுந்தரேசன் மீது காதல் கொண்டிருந்ததை அப்போதுதான் முதன் முதலில் அறிந்துகொண்ட ராதா, தங்கத்திற்காக மிகவும் பரிதாபப் பட்டாள். பாவம், கண் தெரியாத நிலையில்-கலியாணமான ஒருவனிடம் காதல் கொண்டு. அதில் தோல்வி கண்டு துயரப்பட்டுக் கொண்டிருக்கும் தங்கத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பாவமாயிருந்தது.

தங்கம் இவ்வளவு நாளும் தன் உணர்ச்சிகளை மறைத்து வைத்திருந்தாலும், இன்று அவளுடைய காதல் வெறும் ஏமாற்றமாக முடிந்ததை எண்ணி அவளுக்காக இரக்கப்பட்ட ராதா அவள் உள்ளம் அமையும் முறையில் ஆறுதல் கூறித் தேற்றினாள்.

சுந்தரேசனை இனிமேல் மறந்துவிட வேண்டும் என்று ராதா வற்புறுத்திக் கூறினாள்,

"ராதா, நான் அவரை மறக்கத் தான் முயலுகிறேன். ஆனால், திரும்பத் திரும்ப அவருடைய நினைவு வந்து என்னை வாட்டுகிறது! காதல் என்பதே பொய்யென்றுதான் நான் எண்ணுகிறேன். ஆனால் அது என்னை இப்படித் துன்பப்படுத்துவதற்கென்றே தோன்றியுள்ளதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது!" என்றாள் தங்கம்.

"தங்கம், காதல் என்றும் பொய்யானதல்ல; ஒத்த பருவமும், ஒத்தகுணமும், ஒத்த அன்பும் உடையவர்களிடம் ஏற்படுகின்ற காதல் எப்போதும் மறையாது. அவர்கள் மறைந்தாலும் அவர்கள் காதல் மறையாது. காவியங்களிலே காட்டப்படுகின்ற அந்த நிலையான காதல், வெறும் கற்பனையல்ல! அந்த உயிரான காதல் உண்மையில் உள்ளது தான்! உண்மையில் நிகழ்ந்த காதலாக இருப்பதால் தான் அந்த உயர்ந்த காதல் காவியங்களிலே நிலையான இடத்தைப் பெற்று விட்டது. அழியக்கூடிய தன்மையுள்ளதாக இருந்திருந்தால்-அந்தக் காதலை-வெறும் மாயத் தோற்றமாக இருந்திருந்தால்-அந்தக் காதலை - எந்தக் கவிஞனும் எடுத்துப் பாடியிருக்கமாட்டான். ஆனால், எல்லாருக்கும் எப்போதும் ஏற்படுகின்ற காதல் எல்லாம் உயிர் நிலையை அடைந்துவிடமுடியாது!" என்று ராதா பெரிய அறிவாளிபோல் பேசினாள்.

"உண்மைதான் ராதா, ஆனால் அந்த உயர்ந்த காதலுக்கும் நமக்கும் வெகு தூரம்" என்று சலிப்போடு பதில் சொன்னாள் தங்கம்.

"இல்லை, நல்லவர்கள் இதயத்தில் எழுகின்ற காதல் என்றும் நாசமடைவதில்லை. அந்தக் காதல் நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும் அது அவர்கள் இதயத்திலும், வாழ்விலும் ஒளி வீசிக்கொண்டேயிருக்கும்.

அந்த ஒளியின் நிழலில் வாழும் காதலர்களின் இதயம் என்றும் அமைதியிலும் இன்பத்திலும் தோய்ந்திருக்கும்!'' என்றாள் ராதா.

தங்கம் ராதா சொல்வது புரியாமல் அவளைத் தன் கண்களால் அகல விழித்து நோக்கினாள்.

'தங்கம்! ஓர் உயிர் மற்றோர் உயிரை நேசிக்கின்ற போது, ஏற்படுகின்ற உணர்ச்சிக்குத் தான் அன்பு என்று பெயர். ஆணும் பெண்ணுமாகிய இருவரிடையே ஏற்படும் இந்த அன்பைக் காதல் என்று நாம் சொல்லுகின்றோம். தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்படும் இந்த உயிருணர்வைப்பாசம் என்று சொல்லுகிறோம். நண்பர்களுக்கிடையே ஏற்படும் இந்த உணர்வை நட்பு என்கிறோம், எந்த நிலையில் எந்தப் பெயரோடு இருந்தாலும் இந்த அன்பு தன்னைக் கொண்டவர்களை இன்பத்துடன் இருக்கச் செய்யும் சக்தி வாய்ந்தது. நேசிக்கும் இருவரிடையேயும் ஒத்த அன்பு இருந்தால் அதற்கு நிகரான ஆனந்தம் வேறில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் ஒருவரிடம் மட்டும் இந்த அன்பு இருந்தாலும் கூட அது இருவருக்கும் நலம் சேர்ப்பதும் இன்பம் உண்டாக்குவதும் உண்டு.

பெற்ற பிள்ளை அன்பு காட்டாவிட்டாலும் தாய் அவனைக் கடைசிவரை நேசிக்கிறாள். அவள் காட்டுகின்ற அன்பு என்றும் அழிவில்லாததாயிருக்கிறது. அவள் அன்பு ஒரு பக்க அன்பாக இருந்தாலும், அந்த அன்பால் பிள்ளை நலமாக இருப்பது கண்டு தாயும் இன்ப மனடகிறாள். இவ்வாறு இருவருக்குமே நலமும் இன்பமும் பயக்கும் இயல்புடையது இந்த அன்பு.

ராதா இவ்வாறு சொல்லி வரும் போதே தங்கம் இடைமறித்தாள்.

"ராதா நீசொல்ல நினைப்பது என்னவென்று எனக்குப் புரிகிறது. தன் காதலுக்குரியவர் தன்னை உண்மையாகக் காதலிக்கா விட்டாலும், அவர் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும்; அவர் அடைகின்ற இன்பத்தையே தன் இன்பமாகக் கொள்ளவேண்டும். அவரோடு வாழ முடியா விட்டாலும், அவர் நன்றாக வாழ வேண்டும்மென்று எண்ண வேண்டும்—அவருடைய நல் வாழ்வு கண்டு ஆனந்தப் பட வேண்டும்—அப்போதுதான் தான் கொண்ட காதல் உண்மைக் காதல் என்று கருதலாம்—ராதா இதுதானே உன் கருத்து?'' என்று கேட்டாள் தங்கம்.

"ஆம்' அன்பு என்பதே பிறர் நலம் கண்டு இன்பம் காணும் உணர்ச்சிதான். எவரிடத்தில் தன் அன்பு பாய் கிறதோ, அவர் இன்பங்கண்டு தானும் இன்பம் காண்பது தான்!' என்றாள் ராதா.

அன்று, ராதாவிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பி வந்த தங்கம், ஒரு புதுப் பெண்ணாக வந்தாள் என்றே சொல்லலாம். தன் மனக்குழப்பங்களுக்கெல்லாம் மருந்தருந்தி ஒரு தீர்வு கண்டு வந்த தங்கம் ராதாவின் பேச்சுக்களை எண்ணி எண்ணிப் பார்த்தாள் அப்போதெல்லாம்' ராதா விடம் இவ்வளவு அறிவுக் கருத்துக்கள் எங்கிருந்து வந்தன என்று அவள் மிகவும் ஆச்சரியப் பட்டாள். பட்டிக் காட்டுப் போக்கும் பழைய குருட்டு நம்பிக்கைகளும் ராதாவிடம் அதிகம் உண்டு என்பது தங்கத்திற்குத் தெரிந்த செய்தி. ஆனால், ஒரு பெரிய தத்துவமேதை போல அவள் பேசியதைத் தங்கம் அப்போது தான் முதன்முதலாகக் கண்டாள். ஒருவேளை, காதல் தன் வயப்பட்டவர்களை மேதைகளாய் ஆக்கிவிடக்கூடிய சக்தியுள்ளதாயிருக்குமோ? என்று கூட அவள் எண்ணினாள்.

வீட்டிலே இப்படிப் பல சிந்தனைகளிலே ஈடுபட்டிருந்த தங்கம் அண்ணாமலைப் பண்டிதரின் குரல் கேட்டு அவர் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தாள். மீனாட்சி போய் விட்டதைப் பற்றி அவர் எதுவும் கேட்பாரோ என்று தங்கம் எதிர் பார்த்தாள். ஆனால், மீனாட்சியை வீட்டிலே வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று முதலில் அம்மாவிடம் கூறிய பண்டிதர் இப்போது அவள் போனதைப் பற்றி இலட்சியப் படுத்திப் பேசவேயில்லை. ஒரு வேளை. எல்லாம் தெரிந்த அவர் மீனாட்சியின் குணத்தையும் தெரிந்துவைத்திருந்தாரோ என்னவோ?

அண்ணாமலைப் பண்டிதர், குரல் கேட்டதும் தங்கம் அவர் பக்கம் திரும்பிப் பார்த்தாள், அவளை வரும்படி. கையைக் காட்டி விட்டு அவர் சமையலறைக்குள்ளே நுழைந்தார்.

அங்கே மரகத அம்மாள் மோர் கடைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். திரண்டு வரும் வெண்ணெயின் மீதே கண்ணாயிருந்த மரகத அம்மாள் அண்ணாமலைப் பண்டிதரின் குரல் கேட்டுத் திடுக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

''மரகதம்! முன்னெல்லாம், நான் கதலிப் பட்டணத்துக்குப் போனால், நடராசன் கூட வருவான் இப்போது நாளைக்குப் நான் போய்வர வேண்டியிருக்கிறது. துணைக்கு ஓர் ஆளிருந்தால் நல்லது. தங்கத்தையும் என்னோடு அனுப்புகிறாயா?'' என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

அண்ணாமலைப் பண்டிதர் சொல்லி மரகத அம்மாள் எதையும் மறுத்ததில்லை. அவளுக்கு ஏதோ அவரிடம் மதிப்பு இருந்தது. அதுமட்டுமல்ல அவரிடம் பயம் கலந்த ஓர் அன்பும் இருந்தது. அவள் அவரைத் தன் சொந்த அண்ணனைப் போல் மதித்துப் போற்றி வந்தாள்.

''இதோ தங்கத்தைக் கூப்பிட்டுச் சொல்லிவிடுகிறேன். அண்ணா!'' என்றாள் மரகத அம்மாள்.

அதற்குள் தங்கமும் அடுக்களைக்குள் வந்துவிட்டாள்.

''தங்கம் நாளைக்கு அண்ணாவுடன் கதலிப்பட்டணம் போய் வருகிறாயா?'' என்று கேட்டாள்.

மரகத அம்மாள் தன் மகளிடம் எப்பொழுதும் இப்படித் தான் அவளைக் கேட்பதுபோல் கட்டளையிடுவாள், தங்கமும் சரியென்று சொல்லுவதுதான் வழக்கம், வழக்கத்தை மீறி நடக்கவில்லை தங்கம்.

''போய் வருகிறேன் அம்மா!'' என்று மலர்ந்த முகத்துடன் கூறினாள்.

''தங்கம், சும்மா வந்தால் போதாது எனக்கு வண்டி ஓட்டிக் கொண்டு வரவேண்டும் தெரியுமா?'' என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

ஏதோ விளையாட்டுக்குச் சொல்லுகிறார் என்றுதான் தாயும் மகளும் எண்ணினார்கள்.

ஆனால் மறுநாள் புறப்படும்போது தான் அவர் சொன்னது வேடிக்கையல்ல என்று தெரிந்தது.

மறுநாள் காலை சரியாக எட்டு மணிக்கு முருகேச வாத்தியார் வழக்கமாக நடராசன் ஓட்டிக்கொண்டு வரும் ஜமீந்தார் வீட்டு மாட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தார்.

வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றதைக் கண்டவுடனே ''தங்கம்! தங்கம்!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அண்ணாமலைப் பண்டிதர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

தங்கம், குளித்து முழுகி புத்தாடை பூண்டு சீவிச் சடைப் பின்னிக் கொண்டு தயாராக இருந்தாள். மரகத அம்மாளிடம் சொல்லிக்கொண்டு அவள் வாசலுக்கு ஓடி வந்தாள்.

வண்டியை வாசலில் நிறுத்திய முருகேச வாத்தியார் அண்ணாமலைப் பண்டிதரைக் கண்டவுடன், வண்டியைக் கொண்டு வந்து விட்டேன் நான்போய் வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டார்.

ஓட்டுவாரில்லாத அந்த வில் வண்டியில், ஏறிக்கொண்ட அண்ணாமலைப் பண்டிதர், தங்கத்தையம் ஏறிக்கொள்ளச் சொன்னார். அவள் வண்டியில் ஏறிப் பின்புறமாக உட்கார்ந் தாள்.

''தங்கம் முன்னால் வந்து வண்டியை ஓட்டு!'' என்று கட்டளையிட்டார் அண்ணாமலைப் பண்டிதர். பண்டிதர் தன்னிடம் விளையாடுகிறார் என்றுதான் தங்கம் முதலில் எண்ணினாள், ஆனால், அவர் திரும்பத் திரும்பக் கண்டிப் பான குரலில் அவளே வண்டி யோட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார். தங்கத்திற்கோ வெட்கம் பிடுங்கித் தின்றது. மரகத அம்மாள் வேறு வாசலில் வந்து நின்றுகொண்டிருந் தாள். கந்தசாமி வாத்தியார் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த படியால் அங்கு வழியனுப்ப வரவில்லை.

கடைசியாகத் தங்கம் வண்டியின் முன்புறத்திற்கு வந்து சேர்ந்தாள். கயிற்றையும் கையில் பிடித்தாள்,

''சும்மா வெட்கப்படாதே! தட்டி ஓட்டு! நாளைக்குக் காரோட்ட வேண்டிய கையல்லவா!'' என்று சொல்லிச் சிரித்தார் பண்டிதர்.

தங்கம் எப்படியோ, தன் வெட்கத்தையெல்லாம் மறைத்துக்கொண்டு ஹேற! ஹேற! என்று மாடுகளைத் தட்டி விட்டாள்.

# 18. ஜமீந்தார் மாளிகை

அண்ணாமலைப் பண்டிதர் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய கோபத்திற்குப் பயந்தே தங்கம், தனக்கு விருப்பமில்லாவிட்டாலும், மாடுகளின் கயிற்றைத் தளர்த்திப் பிடித்து அவற்றின் முதுகில் தார்க் கம்பினால் தட்டி ஹே! ஹே! என்று சத்தமிட்டு ஓட்டிக்கொண்டு போனாள். மாடுகள் கொஞ்சம் அயர்ந்து நடக்க ஆரம்பித்தாலும் உள்ளேயிருந்தபடியே அண்ணா மலைப் பண்டிதர், ''தங்கம், தட்டி ஓட்டு! தட்டி ஓட்டு!'' என்று தூண்டிக்கொண்டிருந்தார். வீதியில் இந்த விந்தைக் காட்சியைக் கண்ட மக்களெல்லாம் அதிசயந் தோன்றும் முகபாவத்தோடு திரும்பிப் பார்த்துத் தியங்கி மயங்கி நின்றார்கள்! ''ஆ! ஒரு பொம்பிளை வண்டி ஓட்டுறா! என்று தங்கள் ஆச்சரியத்தை வாய் விட்டு வெளிப்படுத்தினார்கள் சில பெண்கள்.

தாவாடையில் கைவைத்துத் தங்கள் வியப்புணர்ச்சியில் அது தரையில் விழுந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள் சில பெண்கள்.

காலம் கலிகாலமோன்னோ! கன்னிப் பெண்கள் கூட இப்படித் துணிஞ்சிட்டாங்க! என்று காலத்தைப் பழித்துப் பேசினார்கள் சில வைதிகர்கள். இப்படியாக ஊரெல்லாம்

வைதிகர்கள்! இப்படியாக ஊரெல்லாம் பார்த்துச் சிரிக்க, உள்ளத்திலே வேதனை பொங்க, அந்த அண்ணாமலைப் பண்டிதர் ஒருவருடைய மனம் மட்டும் கோபத்தால் குமுறாமல் இருந்தால் போதும் என்ற எண்ணத்தோடு தங்கம் மாடுகளைத் தட்டி ஓட்டினாள்.

நெய்யூரிலிருந்து கதலிப் பட்டணம் வரும் வரையிலே வழி முழுவதும், அந்த வண்டியைப் பார்த்தவர்கள் தங்கள் ஆச்சரியத்தையும் அங்கலாய்ப்பையும் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. அவ்வப்போது சின்னஞ்சிறுவர்கள்வண்டியைத் தொடர்ந்து தொட்டுக்கொண்டு ஓடிவந்தார்கள். அண்ணாமலைப் பண்டிதர் அவர்களையெல்லாம் வண்டியைப் பிடித்திருக்கும் கைகளை எடுத்துவிடும்படி அதட்டி விரட்டியடித்தார். வழியில் தென்பட்ட வாலிபர்கள் அதிலும்குறும்பு மிகுந்தவர்கள், பலே! பலே! லேடி! சபாஷ்!'' என்று தங்கள் போக்கிரித் தனத்தோடு கூடிய பாராட்டுரைகளை வெளிப்படுத்தினார்கள். ஆனால், அண்ணாமலைப் பண்டிதரின் முகத்தைப் பார்த்தவுடனே அந்தக் குறும்பர்களின் வாலாட்ட மெல்லாம் எங்கே போய் ஓடி ஒளிந்தனவோ தெரியாது.

இப்படியாக வழி முழுதும் கேலியும் கெக்கலிப்பும் ஏற்பட வண்டியோட்டிக் கொண்டு வந்த தங்கம் கடைசியாகக் கதலிப் பட்டணத்துக்குள்ளே வந்து சேர்ந்தாள். அங்கும் வீதிகளில் இது போன்ற நிகழ்ச்சியே நடைபெற்றது.

அண்ணாமலைப் பண்டிதர் வலம்—இடம் என்று கூறக் கூற அவள் அந்தந்த வீதிகளிலே வண்டியைத் திருப்பி ஓட்டிக் கடைசியாகக் கதலிப் பட்டணம் ஜமீந்தார் அவுர்களுடைய மாளிகையின் முற்றவாசலிலே கொண்டுவந்து வண்டியை நிறுத்தினாள்.

வண்டி நின்றவுடனே, அண்ணாமலைப் பண்டிதர் கீழே இறங்கினார். அவர் கீழே இறங்குவதற்குமுன் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து மாட்டுக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு "ஐயா! இறங்குங்கள்!" என்று கூறி நிமிர்ந்தவன், "ஆ!" என்று வியப்புக்குரல் எழுப்பினான். பிறகு அவன் மிகவும் தாழ்ந்த குரலில், 'அம்மா! இறங்குங்க" என்று கூறினான். தங்கம் வண்டியிலிருந்து இறங்குவதற்கு முன்னாலே, மாளிகையின் உட்புறத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு கிழவர், "பண்டிதரே! வந்துவிட்டீர்களா? ஆ! இந்தப் பெண்ணு தானா தங்கம்! தங்க விக்கிரகம்போல யிருக்காளே!" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

அவருடைய மேனி மினுக்கும், குரலின் கம்பீரமும், நெடிய உருவமும் பார்க்கும்போதே அவர் உயர்குடிப் பிறந்த செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்த ஒரு மனிதர் என்பதை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன.

பஞ்சக் கச்சம் வைத்துக் கட்டிய துல்லியமான வெள்ளை நிறமுள்ள தங்கச் சரிகை வேட்டியும், தோளில், சலவை கலையாதபடி மடித்துப் போட்டிருந்த துண்டும், இடையில் தடியாகவும், கழுத்தில் சன்னமாகவும் அழகிய கோவை வேலைப்பாட்டுடன் கூடிய தங்கச்சங்கிலிகளும், அந்தக் கழுத்துச் சங்கிலியில், நட்டநடுவில் வைரமும் அதைச் சுற்றிலும் நவரத்தினங்களும் பதித்துச் செய்யப்பட்டிருந்த மயில் உருவமுடைய பதக்கமும், கையில் கட்டியிருந்த வைரத் தடையமும், கழுத்தில் குறுகிய வட்டமுள்ளதாகப் போட்டிருந்த தங்கப்பூண்களுடன் கூடிய உருத்திராக்க மாலையும், அவர்தம் பழுத்த மேனியிற் பூசியிருந்த சந்தனமும், நெற்றியில் தீட்டியிருந்த மூன்று வரிகளாலாகிய திருநீற்றுப்பட்டையும் கண்ட தங்கம், அவர்தான் கதலிப் பட்டணம் ஜமீந்தாராக இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டாள்.

அண்ணாமலைப் பண்டிதரை முதன் முதல் பார்த்த போது ஏற்பட்ட ஒரு பயபக்தியான மரியாதையுணர்ச்சி போலவே, அந்த ஜமீந்தாரைப் பார்த்தபோதும் அவளுக்கு ஒரு பணிவுணர்ச்சி ஏற்பட்டது.

அவர் தங்கத்திடம் மிகவும் அன்பாக நடந்துகொண்டார். அண்ணாமலைப் பண்டிதர் தங்கத்திற்கு, ''அம்மா இவர் தான் ஜமீந்தார் கருணாகரர்'' என்று கதலிப்பட்டணம் ஜமீந்தாரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

உடனே தங்கம், தன் இருகையும் சேர்த்துக் கூப்பி ஜமீந்தாருக்கு வணக்கம் தெரிவித்தாள்.

'வா! அம்மா!'' என்று கனிந்த குரலோடு வரவேற்ற கருணாகரர், 'உளளே உன் மாமியிருக்கிறாள், அங்கே போயிரு!'' என்று சொல்லி அவளுக்குக் கதவுப் பக்கம் கைகாட்டினார், தங்கம், அந்தப் பக்கம் திரும்பிய அதே நேரத்தில் இரண்டு பணிப்பெண்கள் ஓடிவந்து, ''அம்மா, பெரியம்மா உள்ளே யிருக்கிறார்கள் வாருங்கள்!'' என்று மிகவும் பணிவாகக் கூறி அவளை அழைத்துச் சென்றார்கள்.

தங்கத்திற்கு எல்லாம் புரியாத புதிராக இருந்தது. அண்ணாமலைப் பண்டிதர் கதலிப் பட்டணத்திற்கு அழைத்த போது, அவர் தம் வீட்டிற்குத் தான் அழைக்கிறார் என்று அவள் எதிர் பார்த்தாள். அண்ணாமலைப் பண்டி தருக்குத் தனியாக ஒரு வீடு இருக்கிறதென்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அங்கு தனியாக இருக்கப் பிடிக் காமல் தான், தங்கள் வீட்டிலே அவர் தங்கி விட்டார் என்றும் அவள் அறிந்திருந்தாள், இப்போது ஏதோ நூல் எழுதவோ, ஆராய்ச்சி செய்த குறிப்புக்களைத் திரட்டவோ தான் அவர் தன்னைத் துணைக்கழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்று எண்ணிய தங்கம் ஜமீந்தார் வீட்டிற்கு

அவர் தன்னை அழைத்துக் கொண்டு வந்த காரணம் புரியாமல் திகைத்தாள்.

திகைத்த நெஞ்சத்துடனிருக்கும் போதே, பணிப் பெண்கள் அவளை ஜமீந்தாரிணி அம்மாள் முன்னிலையில் கொண்டு வந்து விட்டார்கள்.

இரத்தினச் சமுக்காளம் ஒன்றின் மீது திண்டின் மீது சாய்ந்து ஒய்வாக இருந்த அந்த அம்மாள் தங்கத்தைக் கண்டவுடன் எழுந்து வந்து ஆர்வத்தோடு அவளைக் கட்டியணைத்து. "வந்தாயா என் தங்கம்!" என்று அன்பு குழைய வரவேற்று அவள் கன்னத்தைப் பிடித்திழுத்து ஒரு முத்தமும் இட்டாள். தங்கத்தைக் கண்டபோது சுருங்கி யிருந்த அந்தப் 'பெரியம்மாளுடைய முகம் மலர்ந்து விரிந்தது. இலேசாகக் குழிந்திருந்த அந்தக் கண்களிலும் ஒளி பெருகியது.

ஜமீந்தார் கருணாகரரும், ஜமீந்தாரிணி பெரியம்மாவும் வரவேற்ற பாணிப்பைக் கண்டபோது அவர்கள் தான் வருவதை முன்கூட்டியே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல் தங்கத்திற்குத் தோன்றியது. எல்லாம் அண்ணாமலைப் பண்டிதரின் ஏற்பாடாகத் தான் இருக்கவேண்டும் என்று எண்ணினாள் அவள். ஆனால், ஏன் தன்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தார் என்பது அவளுக்குப் புரியாமல் இருந்தது. அண்ணாமலைப் பண்டிதரின் காரியங்கள் எல்லாமே புரியாத புதிராகத்தான் தோன்றின. தங்கமோ அவரை மீறி நடக்கவோ, ஏனெதற்கு என்று கேட்டுச் செய்யவோ சக்தியில்லாத வளாயிருந்தாள். போகப் போகப் புரிந்துகொள்வோமென்று பேசாமலிருந்தாள்.

ஜமீந்தாரிணியம்மாள் தங்கத்தை உட்காரச்சொன்னாள். தங்கம், ஒதுங்கிப்போய்த் தூணோரத்தில் உட்கார்ந்தாள்.

உடனே அந்தப்பணிப்பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள். "தங்கம், இப்படி வா அம்மா!' என்று அந்தப் பெரியம்மா தன் அருகில் இரத்தினச் சமுக்காளத்தில் வந்து உட்காரச் சொல்லியழைத்தாள். தங்கம் பயத்துடன் நெருங்கிப்போய் அந்தச் சமுக்காளத்தின் ஓரத்தில் உட்கார்ந்தாள்.

அதன்பின் 'பெரியம்மா' ஏற்கனவே பத்துப் பதினைந்து வருஷப் பழக்கம் உள்ளவள்போல், தங்கத்தின் குடும்பத்தினரைப் பற்றியும் அவர்கள் நலங்களைப் பற்றியும் விசாரித்தாள், தங்கம், ஏதோ தனக்கு ஒவ்வாத ஓர் உலகத்தில் தெரியாத நிலையில் புரியாதவளாகப் புகுந்துவிட்டதுபோல் எண்ணிக் கொண்டிருந்தபடியால் அந்த அம்மாளோடு கலகலக்கப் பேசவில்லை, அந்த அம்மாள் கேட்ட கேட்ட கேள்விகளுக்குச் சட் சட்டென்று ஒன்றிரண்டு சொற்களிலேயே பதிலளித்து அமைந்து விட்டாள்.

இவ்வாறு பேசிக்கொண்டே அவர்கள் இருக்கும்போது பகல் மணி பனிரெண்டடித்துவிட்டது. உடனே வேலைக்காரப்பெண்கள் அங்கு ஓடிவந்து, சாப்பிட அழைத்தார்கள்

சாப்பாட்டுக் கூடத்தில், பெரியம்மாவும் தங்கமும் நுழைந்தபோது அங்கு ஏற்கனவே ஜமீந்தார் கருணாகரரும் அண்ணாமலைப் பண்டிதரும் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முன்னாலே மேசை மீது வெள்ளித்தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. மேசையின் மறு பக்கத்தில் இருந்த இரு நாற்காலிகளுக்கும் எதிரில் மற்றும் இரண்டு வெள்ளித்தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவை, தனக்காகவும் ஜமீந்தாரிணி அம்மாளுக்காகவும் வைக்கப் பட்டிருக்கின்றன என்று தங்கம் தெரிந்துகொண்டாள்.

அண்ணாமலைப் பண்டிதர் தங்கள் வீட்டில் தரையில் போடப்படும் தடுக்கிலேயே தான் உட்கார்ந்து சாப்பிடு

வதைக் கண்டிருக்கிறான். தளிர் வாழையிலையில்தான் அவருக்கு அவர்கள் இதுவரை சாப்பாடு போட்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது மேசையின்மீது வெள்ளித் தட்டில் அவர் சாப்பிடப் போவதைக் கண்டு தங்கம் வியப்படைந்தாள். நிலைமைக்கும் இடத்திற்கும் தகுந்தாற்போல் அவர்தம் பழக்க வழக்கங்களை எவ்வளவு எளிதாக மாற்றிக் கொண்டு விடுகிறார் என்று எண்ணி ஆச்சரியப்பட்டாள் தங்கம். ஜமீந்தாரிணி அம்மாள் தன்னையும் அழைத்துக் கொண்டு போய், அவர்களுடன் உடனிருந்து உணவு கொள்ளத் தொடங்கியதும், தங்கத்தின் வியப்புணர்ச்சி மேலும் பெருகியது. அவர்கள் வீட்டில் எப்போதும் ஆடவர்கள் முதலில் உணவருந்திய பிறகுதான் பெண்கள் உணவுட் கொள்வது வழக்கம். ஆண்களும் பெண்களும் ஒன்றாக இருந்து உண்பதே கிடையாது. இங்கு எல்லாம் மாறுபாடாக நடக்கக் கண்டு அவள் வியப்படைந்தாள்; திகைப்புமுற்றாள்.

தங்கம் சரியாகச் சாப்பிடவேயில்லை. அவள் இதற்குமுன் இப்படிப்பட்ட இடங்களில் இருந்ததுமில்லை, இப்படிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டதுமில்லை. இப்படிப் பட்ட உயர்தரமான சாப்பாட்டைச் சாப்பிட்டதுமில்லை.

மேசையின் மீது ஒவ்வொருவருக்கும் எதிரில் ஒவ்வொரு வெள்ளித்தட்டு இருந்தது. அதில் பணிப்பெண்கள் சோறு போட்டார்கள், அந்த வெள்ளித் தட்டுகளைச் சுற்றி ஏழு ஏழு கிண்ணங்கள் இருந்தன, அவையும் வெள்ளியாலானவையே. அவற்றில் நான்கு விதமான காய்கறிகள் இருந்தன. கிண்ணங்களில் ஒரு கிண்ணத்தில் ரசமும் மற்றொரு கிண்ணத்தில் பாயசமும் இருந்தன, ஏழாவது கிண்ணத்தில் பொரித்த அப்பளம் இருந்தது, இவைபோதாவென்று சாப்பிட்டவுடனே எதிரில் வாழைப்பழங்களும், மாம்பழங்களும், பலாச்சுளைகளும் வெள்ளித்தட்டுகளில் கொண்டுவந்து வைத்தார்கள். தங்கம் எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்துவிட்டு வைத்து

விட்டாள், கிழவர்கள் இருவரும் கிழவியும் தொண தொண வென்று பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். தங்கம் அவர்கள்பேச்சில் கலந்து கொள்ளவில்லை, அந்தப் பேச்சுக்கள் அவளுக்குச் சம்பந்தமில்லாத செய்திகளில் ஓடின.

சாப்பிட்டபின், ஜமீந்தாரிணி அம்மாள் தங்கத்தை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய கூடத்துக்குச் சென்றாள். அங்கே அவர்களுக்காக மெத்தை விரித்து வைக்கப் பட்டிருந்தது. "தங்கம் கொஞ்ச நேரம் உறங்கு!" என்றாள் அந்த அம்மாள்.

தங்கம், சாப்பிட்ட பிறகு உறங்கிப் பழக்கமில்லை. அவள் எனக்கு உறக்கமே வரவில்லை என்று சொல்லி விட்டாள். "அப்படியானால், இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்று பெரியம்மா கேட்டாள்.

'போய்ப் பாத்திரங்களை விளக்கி வைத்து விட்டு வருகிறேனே!" என்றாள் தங்கம்.

"அதற்கெல்லாம் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள், நீ பேசாமல் சும்மா இரு!" என்றாள் பெரியம்மா.

"சும்மா எப்படி இருப்பது?" என்று கேட்டாள் தங்கம்.

உடனே ஜமீந்தாரிணி அம்மாளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. "தங்கம் நீதான் இதற்கு முன் இங்கே வந்ததில்லையே! மாளிகையையும் தோட்டத்தையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வாயேன்" என்றாள்.

தங்கத்திற்கும் அது சரியென்று படவே தலையை ஆட்டினாள். உடனே பெரியம்மா ஒரு பணிப்பெண்ணை அழைத்து மாளிகை முழுவதும் சுற்றிக் காட்டும்படி கூறினாள்.

அவ்வாறே தங்கமும் வேலைக்காரியும் கிளம்பினார்கள். தங்கம் அந்த மாளிகை முழுவதும் ஒவ்வோரிடமாகப் பார்த்துக் கொண்டே போனாள். அந்த மாளிகையைப் பார்க்கப் பார்க்க அவளுக்குத் தான் முற்றிலும் புதுமையான ஒருலகத்தில் இருப்பதுபோலவே தோன்றியது. தரைமுழுவதும் கருப்பும் வெள்ளையுமான சதுர வடிவமுள்ள பளிங்குக்கற்கள் பதித்து வழவழவென்று விளங்கியது. கரும்பளிங்குத் தூண்கள் ஒவ்வொன்றும் பிருமாண்டமாக இருந்தன சுவர்கள் எல்லாம், வண்ணப் பளிங்குக் கற்களால் ஒளி பொருந்தித் திகழ்ந்தன. சுவர்களின் உச்சியில் வரிசையுறப் பல் வண்ணங் குழைத்துத் தீட்டிய ஓவியப் படங்கள் இருந்தன. கூடங்களில் உச்சித்தளத்திலிருந்து குளோப்புகளும் ரசக் குண்டுகளும் தொங்கிக் கொண்டிருந்தன. அறைகளுக்கும் கூடங்களுக்கும் நுழைவாயிலில் இருந்த மரக்கதவுகள் மிகப் பருத்தனவாகவும் சிற்ப வேலைச் சிறப்பு மிக்கனவாகவும் இருந்தன. மாளிகையின் மேல் தளத்தில் பெரிய பெரிய கூடங்கள் இருந்தன. அவற்றின் தரைப்பகுதி மட்டும் மரத்தாலாகியிருந்தது. சுவர்கள் எல்லாம் பளிங்குமயமாகவே இருந்தன. தோட்டத்துக் காற்று சிலு சிலுவென்று அங்கே வீசிக் கொண்டிருந்தது.

பிறகு தங்கம் தோட்டத்திற்குப் போனாள். அங்கு வேப்ப மரங்களடர்ந்து நல்ல நிழல் கொடுத்துக் கொண்டிருந்தன. தோட்டத்தில் ஆங்காங்கே பலவிதமான பூஞ்செடிகளும் சீமைக் குராட்டன்ஸ் செடிகளும் வரிசையுற வைக்கப் பட்டிருந்தன. சில குரோட்டன்ஸ் செடிகள் அடர்த்தியாக இருந்தன. அவை பலவிதமாத உருவங்கள் பெறும்படியாகக் கத்திரித்து விடப்பட்டிருந்தன. ஆனால், இவ்வளவு பெரிய தோட்டத்தில் ஒரு மல்லிகைச் செடிகூட இல்லை, பின்னால் பெரியம்மாவைப் பார்க்கும்போது தங்கம் இந்தக் குறையைச் சொன்னாள், அதற்கு ஜமீந்தாரிணி அம்மாள் ''உங்கள்

வீட்டிலிருந்து ஒரு செடி கொண்டுவந்து வைத்துவிடு'' என்று கூறினாள்.

இதற்கிடையில் தங்கம் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தபோது அங்கே அண்ணாமலைப் பண்டிதர் வந்து சேர்ந்தார்.

''தங்கம், மாளிகை எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார் பண்டிதர். ''அரண்மனை மாதிரியிருக்கிறது! அழகாயிருக்கிறது!'' என்றாள் தங்கம்.

''இந்த மாளிகையே உன் சொந்தமாளிகையாயிருந்தால் எப்படியிருக்கும்!'' என்று கேட்டார் பண்டிதர்.

அவர் கேட்பதன் பொருள் புரியாமல் திகைத்து நின்றாள் தங்கம்.

# 19. இரவில் கேட்ட ஓசை.

அண்ணாமலைப் பண்டிதர் கேட்ட கேள்வியின் பொருள் தெரியாமல் திகைத்து நின்றுகொண்டிருந்த தங்கத்தை நோக்கி அவர் மறுபடியும் கேட்டார், "தங்கம் உனக்கு இந்த மாளிகை பிடித்திருக்கிறதல்லவா? இதுவே உன் சொந்த மாளிகையாக இருந்தால்—உனக்கே உரிய மாளிகையாக இருந்தால் நல்லதல்லவா?" என்று கேட்டார்.

"நான் அதைப்பற்றிக் கற்பனை செய்து பார்க்கக்கூட அருகதையற்றவள்! எனக்கெதற்கு இதெல்லாம். அரச பரம்பரையிலே பிறந்தவர்களுக்கும், செல்வக்குடியிலே சிறந்திருப்பவர்களுக்கும்தான் அந்த எண்ணமெல்லாம் ஏற்பட வேண்டும். என்னைப் போன்றவர்கள், இருக்கின்ற இடத்தில் ஒழுங்காக இருந்தால் போதும். இந்த மாளிகை வாசமெல்லாம் எனக்குத் தேவையில்லை." என்று தங்கம் மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள். தன் மனத்தில் ஓடிய எண்ணங்களை அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை, அண்ணாமலைப் பண்டிதரின் எதிரில் அவ்வளவு துடுக்காகப் பேசக்கூடிய தைரியம் அவளுக்கு எழவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், அண்ணாமலைப் பண்டிதர் அவள் நெஞ்சிலோடிய அந்த எண்ணங்களை அப்படியே அறிந்துகொண்டார். அனுபவ மிகுந்த அவருடைய கூரிய கண்கள், அவள் இதயத்தினுள் நடைபெற்ற எண்ண ஓட்டத்தை வெகு துல்லிதமாகக் கணக்கிட்டு விட்டன.

"தங்கம், திருமணமே ஆக வழியில்லாத பெண்ணுக்கு மாளிகை வாசத்திலே ஆசை எப்படி ஏற்படும்? என்று தானே சிந்திக்கிறாய்?" என்று கேட்டார் பண்டிதர்.

ஆம் என்று ஒப்புக்கொள்வதுபோல் தங்கம் பேசாமலிருந்தாள்.

"மகளே, தகுதிக்கு மீறிய சிந்தனைகள் கூடாதென்று எண்ணியவர்கள் கோடானு கோடியாய் வாழ்ந்து மடிந்து மண்ணோடு மண்ணாய்ப் போயிருக்கிறார்களே யல்லாமல் சிறந்து விளங்கினார்கள் என்று சொல்வதற்கில்லை.

"பேராசை பெரு நஷ்டம் என்று கதைகள் சொல்லிச் சொல்லிச் சருத்துக் குருடர்களாய், வாழ்வில் வசதியற்றோராய் வாழ்ந்து மாண்டவர்கள் கோடி கோடி. ஆனால், உயர்வான எண்ணங் கொண்டவர்களும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற நெறியில் நின்றவர்களும் தான் வாழ்விலே முன்னேறி யிருக்கிறார்கள். இந்த வையகம் புகழும் அளவு, அவர்களுடைய சிறப்புப் பொலிந்து விளங்கி யிருக்கிறது.

"மகளே, இறக்கையா நமக்கிருக்கிறது? நம்மால்எப்படிப் பறக்க முடியும் என்று எண்ணிக்கொண்டிருந்தவன் இன்னும் பெருச்சாளி வாகனத்தைத் தான் சுமந்துகொண்டு ஊரைச் சுற்றி வருகிறான். இறக்கையில்லாவிட்டால் என்ன, இந்த வையகத்துக்கும் மேலேயுள்ள வெட்ட வெளியில் பறந்து பார்ப்போம் என்று முயன்றவர்களின் பரம்பரை இன்று உலகத்தையே சுற்றி வருகிறது. உலகத்தை மட்டுமல்ல, மற்ற அண்டகோளங்களுக்கும் போய் வரவேண்டுமென்ற ஆசை மனிதனுக்கு உண்டாகியிருக்கிறது. பெண்ணே, இந்த ஆசையெல்லாம் பேராசை யென்று மனிதன் ஒதுக்கித் தள்ளியிருந்தால் இன்று இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியுமா?'

என்று புரட்சி முரசுகொட்டும் இளைஞர்களைப் போல் பேசினார் பண்டிதர்.

"அதற்காக நான் மாளிகை வாசியாக வேண்டுமென்று ஆசைப்படச் சொல்கிறீர்களா?" என்று துணிந்து வாய்திறந்து கேட்டு விட்டாள் தங்கம்.

"ஆசைப்பட வேண்டாம், தங்கம். ஆனால், அந்த மாளிகை வாசம் தானாக உன்னைத் தேடி வந்தால் அதை நீ ஒதுக்கித் தள்ளாமலாவது இருப்பாயல்லவா?" என்று கேட்டார்.

தங்கம் அவரை நிமிர்ந்து நோக்கினாள். அண்ணாமலைப் பண்டிதர் ஏதோ புதிர் போடுகிறார் என்று அவளுக்குத் தெரிந்தது. ஆனால், அதன் பொருளை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவள் குழப்பமான நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

"தங்கம், நான் நினைத்தால் உன்னை இந்த மாளிகைக்கே அரசியாக்கி விடுவேன், நீ சம்மதமென்றால் போதும்" என்று மற்றுமொரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போனார் அண்ணாமலைப் பண்டிதர்.

அவர் மரஞ் செடிகளுக்கிடையிலே நுழைந்து மாளிகையை நோக்கிச் சென்றார். சென்றுகொண்டிருந்த அவரையே பார்த்துக்கொண்டு குழம்பிய சிந்தனையோடு நின்று கொண்டிருந்தாள் தங்கம்.

பாவம்! தங்கம்! வயதுப் பெண்ணான அவளுக்கு மனத்தில் எவ்விதமான சலனமும் இன்றி அமைதியாக இருந்தோமென்ற நிம்மதியே கிடையாது. எங்கே போனாலும் எப்படியாவது ஏதாவது ஒரு புதுப் பிரச்சினை வந்து அவள் உள்ளத்தை அலைமோதவைத்துவிடுவதே இயல்பாகி

விட்டது. சிலசமயம், தங்கம்தான் பிறந்த வேளை சரியில்லையோ என்றுகூட எண்ணிக் கொள்ளுவாள். பிறகு அதுமூட மதியினரின் எண்ணம் என்று அந்தக் கருத்தை விலக்கிக் கொள்ள முயலுவாள்.

மாளிகையின் அழகையும், கவர்ச்சியையும், உயர்வையும் சிறப்பையும் கண்டு மகிழ்ச்சியடைந்தாள் தங்கம். எந்தப் பொருளும் சிறந்த பொருளாக இருந்தால், அது யாருடைய பொருளாக இருந்தாலும் அதைக் கண்ட அளவானே ஓர் இன்பம் பிறக்கிறது. செவ்விய உடலும் கவர்ச்சியான தோற்றமும், குறுகுறுக்கும் விழிகளும், துருதுருப்பான இயக்கமும், கற்கண்டு மழலையும் பொருந்திய சிறு குழந்தைகளைக் கண்டால் அவற்றைக் கண்ட மாத்திரத்தானே தூக்கி வைத்துக் கொண்டு அவற்றுடன் உரையாட வேண்டும் என்ற எண்ணம்தோன்றும்-அவற்றின் செக்கச் சிவந்த கன்னத்திலே முத்தமிட்டுச் சித்தங் குளிர வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அந்தக் குழந்தைகளை ஒருமுறையாவது தோளில் தூக்கிவைத்துக் கொள்ளவேண்டும் என்று ஆசை தோன்றும். இவ்வளவு தோன்றாவிட்டாலும், அவை துருதுருவென்று அங்குமிங்கும் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கவாவது ஆசை யுண்டாகும். அந்தக் குழந்தை யாருடைய குழந்தை. அதன் பிறப்பென்ன, வளர்ப்பென்ன என்றெல்லாம் நினைக்கத் தோன்றுவதில்லை. அதுபோலவே தான் அழகான இயற்கைக் காட்சி எதையாவது கண்டால் அதையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போல் ஓர் ஆசை மனத்தகத்தே எழுதுவதுண்டு. அதற்காக அந்த இயற்கைக் காட்சியை எப்பொழுதும் நிலையானதாகத் தன் வீட்டினுள்ளே கொண்டுவந்து விடவேண்டுமென்று எண்ணினால் முடியுமா? வேண்டுமானால், கைதேர்ந்த ஓவியன் அப்படிச் செய்ய முடியும்.

தங்கம் அந்த மாளிகையின் அழகைக் கண்டு தன்னகத்தே கொண்ட மகிழ்ச்சி, காட்சியளவால் பெற்ற இன்பத்தினால் ஏற்பட்டதுதான். அந்த மகிழ்ச்சியோடு அவள் தோட்டத்துக் குளிர் தென்றலையும் நிழலையும் சற்று நேரம் அனுபவித்து இன்பமாக இருக்கலாம் என்று வந்தாள். ஆனால், அண்ணா மலைப் பண்டிதர் சொன்ன செய்திகள் அவளை அந்த இன்பங் களை அனுபவிக்க விடாமல், உள்ளத்தைச் சிந்தனைப் பாதையிலே திருப்பி விடுவதாக அமைந்துவிட்டன.

அண்ணாமலைப் பண்டிதர் என்ன கருத்தோடு அவ்வாறு சொன்னர் என்று எண்ணிப் பார்த்தாள்.

''மாளிகையாவது, தனக்குச் சொந்தமாவதாவது! அது கனவிலும் நடக்கக்கூடிய காரியமல்ல!'' என்று தான் அவளுக்குத் தோன்றியது, மாளிகைக்கு உரியவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் இறந்த பின் தனக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்றால் அவள் அவர் களின் உறவுக்காரியும் அல்ல. அவர்களுக்குப் பிள்ளையிருக் கிறதா இல்லையா என்பதும் அவளுக்குத் தெரியாது. அப்படியே பிள்ளை யில்லாதவர்களாய் இருந்தாலும், அவர்களுடைய தத்துப் பிள்ளைகளாய் வரலாமென்று ஆண் பிள்ளைகள் அதிலும் சொந்தக்காரப் பிள்ளைகள் எதிர்பார்ப் பதிலே பொருள் உண்டு.

தான் ஒரு பெண்பிள்ளை; அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? என்றெல்லாம் பற்பலவாறு எண்ணிக் குழம்பினாள் தங்கம்.

நேரம் பாடு போய்க்கொண்டிருந்தது.

பணிப்பெண் ஒருத்தி தங்கத்தைத் தேடி வந்தாள், சிற்றுண்டி யருந்த அழைப்பதற்காக.

தங்கம் கூடத்தினுள் நுழைந்த போது, கூடத்தின் மத்தியில் விரித்திருந்த அழகான இரத்தினக் கம்பள விரிப்பின் மீது ஜமீந்தார் கருணாகரர், அண்ணாமலைப் பண்டிதர் பெரியம்மா மூவரும் அமர்ந்திருந்தார்கள். ஜமீந்தாரின் முன்னால் வெல்வெட்டு உரையினால் முடிய சிறு சிறு மரப் பெட்டிகள் இரண்டு மூன்று இருந்தன. அவற்றைப் பார்த்த உடனே அவை நகைப் பெட்டிகள் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. ஏதோ நகைகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தங்கம் எண்ணிக்கொண்டு தூரத்திலேயே நின்றாள்.

அவள் கூடத்து வாசலில் நுழைந்தவுடனேயே நிமிர்ந்து பார்த்த ஜமீந்தார், ''வாம்மா, தங்கம் வா! உன்னைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!'' என்று வரவேற்றார். தங்கம். அருகில் நெருங்கிச் சென்று ஒதுங்கி நின்று கொண்டாள்.

''தங்கம், இங்கே வா!'' என்று ஜமீந்தாரிணி யம்மாள் அவளை அழைத்துத் தன்னருகில் விரிப்பின்மீது வந்து அமரச் சொல்லி யழைத்தாள். தங்கம் தட்டமாட்டாமல் அருகே போய் அமர்ந்தாள்.

ஜமீந்தார், நகைப்பெட்டி ஒன்றினுள்ளிருந்து வைர வடச் சங்கிலி ஒன்றை எடுத்து, ''இந்தா, தங்கம்! இதை உன் கழுத்தில் அணிந்துகொள்'', என்றார்.

தங்கம் வெறித்துப் பார்த்தாள். அவர்கள் செயல் அவளுக்குப் புரியாததாயிருந்தது.

''தங்கம்! போய் வாங்கிக் கொள்ளம்மா!'' என்று பெரியம்மா பக்கத்திலிருந்து வலியுறுத்திக் கூறினாள்.

ஜமீந்தார் வீடென்றால் என்ன, தங்கமும் வைரமும் சுண்டல்போலவா அள்ளிக் கொடுப்பார்கள்!

''இல்லை, இதெல்லாம் எனக்கு அணிந்து பழக்கமில்லை. வேண்டாம்!'' என்று குழறிக் குழறிக்கொண்டே தங்கம் பதில் கூறினாள்.

''தங்கம், உனக்கு இதையெல்லாம் போட்டுப் பார்க்க வேண்டுமென்று எங்கள் ஆசை! எங்கள் ஆசையை நிறை வேற்றக் கூடாதா?'' என்று வேண்டுதலாகக் கூறினார் கருணாகர ஜமீந்தார்.

''கண்ணல்ல! போட்டுக் காண்பியம்மா!'' என்று பெரியம்மா கூடப் பாடினாள்.

அண்ணாமலைப் பண்டிதர் வாய் அசைக்கவே யில்லை.

''பண்டிதரே! நீங்கள் கொஞ்சம் இந்தப் பெண்ணுக்குச் சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார் ஜமீந்தார்.

''தங்கம்,, அவர்கள் ஆசையைத் தான் நிறைவேற்றி வையேன்! பெரியவர்கள் இவ்வளவு வேண்டுகிறார்கள்—சும்மா யிருக்கிறாயே!'' என்று அண்ணாமலைப் பண்டிதர் கூறினார்.

கடைசியில் தங்கம் மறுக்க முடியாமல் அந்த வைர வடச் சங்கிலியை எடுத்துக் கழுத்தில் அணிந்துகொண்டாள். உடனே கருணாகர ஜமீந்தாரும் ஜமீந்தாரிணி யம்மாளும் 'ஆகா! என்ன அழகு! என்ன அழகு! இவளுக்கும் இந்த வைர மாலைக்கும் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!' என்று பாராட்டிப் பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அந்தக் கூடத்தின் கோடியில் ஒரு நீண்ட பெரிய சுவர்க்கண்ணாடி யிருந்தது. ஜமீந்தாரிணியம்மாள் தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் அந்தக் கண்ணாடியின் முன்னால் நிறுத்தினாள்.

"பார்த்தாயா தங்கம் இந்த வைர வடமாலையைப் போட்டதும் எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று பாராட்டிப் பேசினாள்.

தங்கம், தன் முல்லைப்பற்கள் தெரிய ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்தாள். உண்மையிலேயே அந்த வைர வடமாலையைத் தன் கழுத்திலே யணிந்த பின் தனியழகு ஒன்று தனக்குப் புதிதாக ஏற்பட்டிருப்பது போல்தான் தங்கத்திற்குத் தோன்றியது. வைத்த கண்வாங்காமல் நிலைக் கண்ணாடியில் தோன்றிய தன் புத்தழகு உருவத்தை அவள் பார்த்துக்கொண்டு நின்றாள்.

'தங்கம் உனக்கு இது நல்லாப் பொருத்தமாயிருக்கு! இதை நீயே வைத்துக்கொள்' என்றாள் ஜமீந்தாரிணி பெரியம்மாள்.

அவ்வளவுதான் தங்கம், தன் கழுத்தில் இருந்த வைர வடச்சங்கிலியைச் சட்டென்று கழற்றினாள்; விருட்டென்று திரும்பி வந்தாள். கருணாகரர் முன்னால் இருந்த ஒரு மரப் பெட்டியைத் திறந்து அதில் வைத்துப் படக்கென்று மூடினாள். அந்தப் பெட்டியை அவர் எதிரே வைத்துவிட்டுப் பின் வாங்கி நின்றுகொண்டாள். அவள் முகம் உம்மென்றிருந்தது. சிவ்வென்று சிவந்து போயிருந்தது.

அவள் கோபங் கொண்டிருக்கிறாள் என்பதை எல்லோரும் கண்டுகொண்டார்கள்.

ஜமீந்தார் கருணாகரர் அவளுடைய கோபத்தைக் கண்டு வருத்தப்பட்டவர் போல், நகைப் பெட்டிகளை மூடி வைத்தார். அவற்றையெல்லாம் இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு எழுந்திருந்தார். அவர் சாப்பாட்டுக் கூடத்தை நோக்கிச் செல்ல, அண்ணாமலைப் பண்டிதரும் பின் தொடர்ந்தார்.

ஜமீந்தாரிணி பெரியம்மாள் தங்கத்தின் அருகில் வந்து ''தங்கம், கோபமா? '' என்று கெஞ்சுதலாகக் கேட்டு— அலணைவாகப் பிடித்து, 'உனக்குப் பிடிக்கவில்லையென்றால், நான் இனிமேல் அந்தமாதிரி செய்ய மாட்டேனம்மா! வா, இப்போது சாப்பிடப் போகலாம்'' என்று தயவாக அழைத்தாள்.

'நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே. சீரொழுகு சான்றோர் சினம்'' என்று ஒரு பழம்பாடல் கூறுகிறது.

ஜமீந்தாரிணியம்மாளின் தயவான வார்த்தைகளைக் கேட்டவுடன் தங்கத்தின் கோபம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது.

பிறகு இருவரும் சிற்றுண்டி யருந்தப் போனார்கள்.

சிறிதுநேரத்திற்கு முன் தான் வயிறு நிறையச் சாப்பிட்டபடியாலும், பசியில்லாததாலும், மாலையில் சிற்றுண்டி உண்டு பழக்கமில்லையாகையாலும் தங்கத்தால் நன்றாகத் தயாரிக்கப்பட்டிருந்த அந்தச் சிற்றுண்டியைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. அவளுக்கு அப்போது சிற்றுண்டியின் மீது விருப்பம் எழவில்லையானாலும், எங்கே தான் இன்னும் கோபமாக இருப்பதாக நினைத்து மற்றவர்கள் வருத்தப் படுவார்களோ என்று பயந்து மற்றவர்களைப்போலவே அதைச் சாப்பிடலானாள்.

சிற்றுண்டியுண்டு காப்பி குடித்து வெற்றிலை போட்டுக் கொண்ட பிறகு, அண்ணாமலைப் பண்டிதர் ஜமீந்தாரிடம் விடைபெற்றுக் கொண்டார். தங்கமும் கருணாகரரிடமும், பெரியம்மாளிடமும் விடை பெற்றுக் கொண்டாள். பண்டிதரும், தங்கமும் ஜமீந்தார் வீட்டார் பின் தொடர வெளியில் வந்தபோது, அங்கு அவர்கள் வந்த மாட்டுவண்டி பூட்டித் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியைக் கண்டவுடன், மறுபடியும் தான் தான் அதை ஓட்டிச் செல்ல

வேண்டுமோ என்று மனஞ்சலித்துக் கொண்டாள் தங்கம். ஆனால், நல்லவேளையாக, "கருப்பா, ஐயாவைப் போய் இறக்கிவிட்டு விட்டு வா!" என்று ஜமீந்தார் தம் வேலைக் காரனுக்கு அப்போது உத்தரவு கொடுத்தார். தங்கம் மனம் அமைதியடைந்தது. அவள் வண்டியில் ஏறி உட்கார்ந்த பிறகு ஏதோ சிறையிலிருந்து விடுபட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அண்ணாமலைப் பண்டிதரும் கருப்பனும் வண்டியில் ஏறியபின் வண்டி புறப்படப் போகுமுன் ஜமீந்தாரிணி பெரியம்மாள், "தங்கம், அடிக்கடி இங்கு வாம்மா!" என்று கூவினாள். தங்கத்திற்கு திரும்ப அங்கு வர நோக்கம் இல்லையானாலும், "சரி" என்று தலையை யாட்டினாள். "வருகிறேன்" என்று வாய்விட்டுச் சொன்னாள்.

வண்டி புறப்பட்டது. வண்டி ஓடிக் கொண்டிருக்கும் போது வழியில் அண்ணாமலைப் பண்டிதர் தங்கத்திடம் எதுவும் பேசவில்லை. கருப்பன் அவர்களை நெய்யூரில் கந்தசாமி வாத்தியார் வீட்டில் இறக்கி விட்டுவிட்டு வண்டியைத் திருப்பிக்கொண்டு போய் விட்டான்.

வண்டியிலிருந்து இறங்கிய அண்ணாமலைப் பண்டிதர், கால் முகம் கழுவி விட்டு நேராக மாடியில் உள்ள தம் அறைக்குச் சென்று விட்டார். தங்கம், நேராக அடுக்களைக் கட்டிற்குச் சென்று தன் தாயைச் சந்தித்தாள். மரகத அம்மாள் அப்போது, பருப்புப் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அதாவது பருப்பிலிருந்து கல் முதலிய வற்றை எடுத்தகற்றிக் கொண்டிருந்தாள். அவசரமாக வந்து நுழைந்த தங்கத்தைக் கண்டவுடன் அவள் ஏதோ தன்னிடம் சொல்ல விருப்புடையவளாய் இருக்கிறாள் என்பதை அறிந்துகொண்ட மரகத அம்மாள், "வா, தங்கம்! இப்போதுதான் வந்தாயா? இந்தப் பருப்பைக் கொஞ்சம்

பொறுக்கு!" என்று சொன்னாள். தங்கம் உட்கார்ந்து பருப்புப் பொறுக்க ஆரம்பித்தாள். தான் வண்டியோட்டிச் கொண்டு போனதைப்பற்றிக் குறைப்பட்டு ஏதாவது சொல்லுவாள் தங்கம் என்று எதிர்பார்த்தாள் மரகத அம்மாள். ஆனால் அவள் கேட்டதெல்லம் புதுமையா யிருந்தது!

ஜமீந்தார் வீட்டில் தான் போய் இறங்கியது முதல் திரும்ப வண்டியேறியது வரை, ஒரு சிறு நிகழ்ச்சிகூட விட்டுப் போகாமல் சொல்லி முடித்தாள் தங்கம். அத்துடன் நில்லாமல், "அம்மா! பண்டிதர் ஏதோ திட்டம் போட்டு வேலை செய்வதுபோல் இருக்கிறதம்மா! எல்லாம் மர்மமாக இருக்கிறது!" என்று ஒரு வரியும் சேர்த்துக் கூறினாள்.

மரகத அம்மாளுக்கும், அப்படித்தான் தோன்றியது. "தங்கம், பண்டிதர் நல்லவர். அவர் எது செய்தாலும் நமது நன்மைக்குச் செய்வாரேயொழிய வேறு காரணமாகச் செய்ய மாட்டார்" என்று தன் மகளிடம் சொன்னாள். இந்தச் சொற்கள் தங்கத்தின் மனத்தில் ஆழமாகப் பதிந்தன.

அண்ணாமலைப் பண்டிதர் தீயவர் என்று அவள் ஒரு கணம்கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால், அவர் ஏன் எல்லாச் செயல்களையும் மர்மம் என்று படும்படியாகச் செய்கிறார் என்று அவளுக்குப் புரியவில்லை. இவ்வளவு நல்ல மனிதர் வெளிப்படையாகத் தோன்றும்படி ஏன் எந்தச் செயலையும் செய்யவில்லை என்று அவள் எண்ணினாள். ஆனால் அவள் தன் எண்ணத்தை வெளிப்படுத்தவில்லை.

ஆரம்பத்தில் எல்லாம் அண்ணாமலைப் பண்டிதருக்கும் சுந்தரேசனுக்கும் என்ன தொடர்பு அல்லது பகை என்ன என்று தெரியாமல் குழம்பிய தங்கம், அவர் நடராசன்மீது அக்கறை காட்டியபோதெல்லாம், அவருக்கும் நடராசனுக்கும்

என்ன உறவு என்று தெரியாமல் வியந்த தங்கம், இப்போது இந்த ஜமீந்தார் வீட்டுக்கும் இவருக்கும் என்ன தொடர்பு அல்லது உறவு என்று தெரியாமல் கலங்கினாள்.

மரகத அம்மாளுக்கும் இப்படிப்பட்ட சந்தேகங்கள் இருந்தாலும் அவள் அண்ணாமலைப் பண்டிதரிடம் தன்னை யறியாமல் வைத்திருந்த பெருமதிப்பு அவர் செயலில் சூது இருக்கும் என்று எண்ண இடங்கொடுக்கவில்லை. ஒளிவு மறைவு இருக்கிறதென்றாலும் சூழ்ச்சி வஞ்சம் அதிலே இருக்காதென்று நிச்சயமாக நம்பினாள். அதனால்தான் அவள் தன் மகளிடம் அவர் தங்களுக்கு நன்மையே செய்வார் என்று வலிதாகக் கூறினாள்.

அன்று இரவு உண்ட பின் எல்லோரும் உறங்கச் சென்றார்கள். ஆனால், தங்கத்துக்கு என்னவோ இரவு முழுவதும் சரியாக உறக்கம் வரவேயில்லை. ஜமீந்தார் வீட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தன. ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு தடவையும் அவள் ஒவ்வொரு பொருள் கற்பித்துக்கொண்டு இன்ன முடிவுக்கு வருவதென்று தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்தாள். ஆகவே தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவு நேரம் எல்லோரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள், தங்கத்தைத் தவிர! வீடு முழுவதும் எவ் விதமான ஓசையுமில்லாமல் இருந்தது.

சிந்தனை வயப்பட்டுக் குழம்பிய நிலையில் புரண்டு கொண்டிருந்த தங்கம், தன் சிந்தனையை மறந்து ஒரு விஷயத்தைக் கவனிக்கும்படியாக நேர்ந்தது. அதற்கு அவள் காதிலே பட்ட ஒரு வகை ஓசைதான் காரணம் அந்த

ஓசையை அவள் முதன்முதலில் கவனிக்க நேர்ந்தபோது, திடுக்கிட்டாள். பிறகு நெஞ்சைப் பிடித்துக்கொண்டு ஊன்றிக் கவனித்தாள்.

யாரோ வீட்டுக்குள்ளே இருட்டில் மெதுவாக நடந்து செல்வதுபோன்ற ஓசை கேட்டது. தட்டுத் தடுமாறி அந்தக் காலடிகள் நடப்பதுபோலவும்-அதே சமயம், ஓசைப்படாமல் செல்ல முயல்வதுபோலவும் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் அந்தக் காலடி மாடிப் படியில் ஏறிச் செல்வதுபோல் தோன்றியது. மாடிப்படியில் ஏறிய அந்தக் காலடியோசை சிறிதுநேரம் வரை நின்றிருந்தது போலவும், திரும்பவும் இறங்கியதுபோலவும் இருந்தது. பின்னர் அது தெருக் கதவை நோக்கிச் சென்றதுபோலவும் இருந்தது.

பயந்து துடித்து அடித்துக்கொண்டிருக்கும் நெஞ்சை ஒற்றைக் கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு சன்னல் அருகே மெல்ல நகர்ந்து சென்றாள் தங்கம். மெல்ல எட்டி வாசற் பக்கம் நோக்கினாள். அவர்கள் வீட்டு வாசற் படியிலிருந்து ஓருருவம் வீதியை நோக்கி நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. மெல்ல மெல்ல நகர்ந்த அந்த உருவம், வீதியை அடைந்ததும் வேகமாக நடந்தது. அந்த உருவத்தைக் கூர்ந்து நோக்கியபோது அது ஓர் இளைஞனுடைய உருவமாக இருந்தது.

இப்போது வீட்டிற்கு வந்து போனது யார்—எதற்காக இந்த நள்ளிரவில் தன் வீட்டிற்குள் வர வேண்டும். அது மேலே ஏன் சென்றது. அண்ணாமலைப் பண்டிதரை அது சந்திக்கச் சென்றதா? அப்படியானால், அவருடைய அறைக் கதவு தட்டப்படும் சத்தமோ, அல்லது பேச்சுக் குரலோ ஏன் ஏற்படவில்லை. வந்த அந்த உருவம் உடனடியாக ஏன் திரும்பி விட்டது. அதற்கு யார் கதவு திறந்து விட்டார்கள்? என்பது போன்ற சந்தேகங்கள் அவள் உள்ளத்தைக் குடைந்தன.

# 20. பூட்டிக் கிடந்த மாளிகை

யாரோ வீட்டினுள் நடமாடிய சத்தம் கேட்டது. வெளியில் சென்ற உருவமும் தெரிந்தது. ஆனால், தெருக்கதவு திறந்த சத்தமோ சாத்திய சத்தமோ கேட்காததனால் கதவு எப்படி யிருக்கிறது என்று பார்த்துவர வேண்டுமென்று தங்கத்திற்குத் தோன்றியது. ஆனால் சென்று பார்க்க அச்சமாகவும் இருந்தது. கடைசியில் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தாள். கதவை நோக்கிச் சென்றாள். மின் விளக்கைத் தட்டி விட்டாள். கதவு உட்புறம் தாழிட்டபடியே இருந்தது.

''வெறும் மனத்தோற்றம்'' என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டு விளக்கை யணைத்துவிட்டுத் தன் அறைக்குத் திரும்பினாள்.

படுக்கையில் அவள் சாய்ந்த மறுகணம், மீண்டும் யாரோ வீட்டிற்குள் நடமாடுவதுபோலவும் மாடி நோக்கிச் செல்வது போலவும் ஓசை கேட்டது.

தங்கம் கூர்ந்து கவனித்தாள். அதற்குப் பிறகு ஓசையே எழவில்லை.

"பொல்லாத மனம்!" என்று நினைத்துக்கொண்டே, போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்க முயன்றாள். ஆனால் தூக்கம் வரவில்லை.

மீண்டும் ஜமீந்தார் மாளிகை எண்ணங்கள் அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டன.

ஃ

இவ்வளவு நாளும் அண்ணாமலைப் பண்டிதர் கந்தசாமி வாத்தியாரின் வீட்டில் தங்கியிருந்தார். இடையிடையே கதலிப்பட்டணம் போய்வந்தார். இப்போது திடீர் என்று ஒரு நாள் அவர் தான் சென்னைக்குப் போய் வரவேண்டிய வேலையிருக்கிறதென்றுசொன்னார். இதைக் கேட்டதும் கந்தசாமிப் பண்டிதர் அதிர்ந்துபோனார். யார்மீதும் பண்டிதருக்குக் கோபமோ என்றுகூட அவர் எண்ணி அதைக் கேட்கவும் முடியாமல் தத்தளித்தார், ஆனால், அண்ணாமலைப் பண்டிதர் தாம் ஓர் அவசர வேலையாகப் போக வேண்டியிருக்கிறதென்றும், போய் அந்த வேலையை முடித்துக்கொண்டு வந்து தகவல் தெரிவிப்பதாகவும், திரும்பிவர நான்கைந்து நாட்கள் ஆகுமென்றும் தெரிவித்தபடியால், உண்மையாகவே ஏதோ வேலையாகத்தான் போகிறார் என்று நம்பிக்கை கொண்டார் கந்தசாமி வாத்தியார்.

அண்ணாமலைப் பண்டிதர் சென்னைக்குப் புறப்படுகிற அன்று கதலிப் பட்டணம் ஜமீன்தாருடைய மாட்டு வண்டி வரவில்லை. அண்ணாமலைப் பண்டிதரும், கந்தசாமி வாத்தியாரும். முருகேச வாத்தியாருமாக வீட்டிலிருந்து புறப்பட்டு நெய்யூர் நடுத்தெருவுக்குச் சென்றார்கள்.

நெய்யூர் நடுத்தெருதான் அயலூர்களை இணைத்துக் கொண்டு ஓடுகின்ற பெருந்தெரு. அதன் வழியாகத் தான் கதலிப்பட்டணம் போகின்ற பேருந்து வரும். அந்தப்

பேருந்தில் ஏறிக்கொண்டால், நேராகக் கதலிப்பட்டணம் புகைவண்டி நிலையத்தில் போய் இறங்கிக்கொள்ளலாம்.

நடுத்தெருவிலே போய் நின்றதும், அண்ணாமலைப் பண்டிதரைப் பார்த்து அறிமுகமாகியிருந்தவர்களும், அறிமுகமே யாகாதவர்களும், அந்த ஊர் மக்கள் பலர் நெருங்கி வந்து வணக்கம் செலுத்தி நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படியாகப் பொழுது போய்க் கொண்டிருந்தபோது, பேருந்து வந்துவிட்டது அங்கே வழக்கமாக நிற்கின்ற இடத்தில் பேருந்து வந்து நின்றவுடன் "சரி கந்தசாமி! முருகேசர்! நான் போய்வருகிறேன். உங்கள் அன்புறவை விட்டுப் பிரிந்து போவது எனக்கும் ஏதோ மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனால், காலத்தின் கட்டளைகளை நாம் மீறமுடியாது! உங்கள் அன்புக்கு நன்றி. வீட்டில் எல்லோருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரியுங்கள்!" என்று கூறிவிட்டு அண்ணாமலைப் பண்டிதர் பேருந்தை நோக்கி நடந்தார். அவர் பேச்சை நோக்கும்போது அவர் தங்களையெல்லாம் விட்டு நெடுநாள் பிரிந்திருக்கப்போவது போல் பேசுவதாகத் தான் தோன்றியது. கந்தசாமிப் பண்டிதருக்குத் தன் அகத்துக்குள் இந்த உணர்ச்சி தோன்றாமல் இல்லை. அவர் ஏதோ இழக்கத் தகாத பொருள் ஒன்றை இழப்பதுபோன்ற உணர்ச்சியுடன் அண்ணாமலைப் பண்டிதரை நோக்கினார்,

"கந்தசாமி! வருந்தாதே, விரைவில் திரும்பிவந்து விடுவேன்!" என்று ஆறுதல் கூறினார் பண்டிதர். அவர் கூறிய ஆறுதல் மொழி-அதன் பாவம் ஏதோ தன்னைச் சமாதானப் படுத்துவதற்காகக் கூறியதாகத் தோன்றியதே தவிரக் கந்தசாமி வாத்தியாருக்கு உண்மையானதாகப் படவில்லை. கந்தசாமி வாத்தியாரின் துயரந் தோய்ந்த

முகத்தைக் கண்ட அண்ணாமலைப் பண்டிதர், அவர் தம் மிடம் எவ்வளவு ஆழ்ந்த பற்றுதல் வைத்திருக்கிறார் என்பதை நன்றாக உணர்ந்தார். ஆதலினால் தான் பச்சைப் பிள்ளைக்குச் சொல்வதுபோல் ஆறுதல் கூறினார். முருகேச வாத்தியாரும் வருத்தப்பட்டார் என்றாலும் கந்தசாமி வாத்தியார் அளவு இல்லையென்றே சொல்லவேண்டும். அண்ணாமலைப் பண்டிதர் பேருந்தில் ஏறுகின்ற சமயம் முருகேச வாத்தியார் தாம் கையில் கொண்டு வந்திருந்த பையில் இருந்து ஒரு ரோஜாப் பூ மாலையை எடுத்துத் திடீரென்று அண்ணாமலைப் பண்டிதரின் கழுத்தில் போட்டார். உடனே பேருந்தில் இருந்த சிலரும் கீழே நின்றுகொண்டிருந்த சிலரும் கைதட்டி ஆரவாரித்தார்கள். ''இதெல்லாம் என்ன முருகேசரே! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று பண்டிதர் கடிந்து கொண்டார்.

முருகேசர் அவர் கடித்து கொண்டதைப் பாராட்டாமல் முகத்தில் ஒரு புன்சிரிப்பைத் தேக்கிக் கொண்டு, ''எங்களை யெல்லாம் மறந்து விடக்கூடாது!'' என்று கேட்டுக் கொண்டார்.

பண்டிதர் அதற்குப்பதில் சொல்லாமல், கந்தசாமி வாத்தியாரை நோக்கி. ''கந்தசாமி வீட்டில் எல்லோரிடமும் சொல்லு! தங்கத்தை எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள். உலகந் தெரியாத பெண்!'' என்று சொன்னார்.

அவர் இந்த வார்த்தைகளைக் கூறி முடித்தவுடன் பேருந்து புறப்பட்டுவிட்டது.

வெறிச் சென்ற உள்ளத்தோடு கந்தசாமி வாத்தியார் முருகேசரைப் பின் தொடர்ந்து திரும்பினார்.

பாதி வழியில் முருகேசரும் பிரிந்து போய்விட்டார்.

தன்னந் தனியாக வீட்டுக்குள்ளே நுழைந்த கந்தசாமி வாத்தியாருக்கு வீடே வெறிச்சென்று இருப்பதுபோல் தோன்றியது.

எப்போதும் வீட்டிலேயே ஓடி ஆடிக் கொண்டிருந்த குழந்தைகள் ஒருநாளைக்கில்லா விட்டால் அந்த வீடு ஒன்று மில்லாத வீடுபோல் தோன்றுவது உண்டு. ஆனால் பேசாமல் தன் அறையிலேயே குந்திப் படித்துக் கொண்டு இருக்கக் கூடிய அந்தப் பெரிய மனிதர் இல்லாததே கந்தசாமி வாத்தியாருக்கு வெறிச்சென்றிருந்தது.

மரகத அம்மாளும் கந்தசாமி வாத்தியாரைப் போலத் தான்-ஏன் கொஞ்சம் அதிகமாகவே — அண்ணாமலைப் பண்டிதர் போவதை எண்ணி வருந்தினாள். ஆனால் எதை யும் பொறுத்துக் கொள்ளும் இதயம் படைத்தவள். ஆகவே அவள் தன் துன்பத்தை அவ்வளவு பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லை. தங்கம், பண்டிதர் சென்றது பற்றி வருத்தப்படவில்லை என்றாலும் அவளுக்கும் என்னவோ போலத்தானிருந்தது.

அண்ணாமலைப் பண்டிதர் சென்னைக்குப் புறப்பட்டுப் போய் ஐந்தாவது நாள் கந்தசாமிப் பண்டிதருக்கு ஓர் அஞ்ச லட்டை வந்தது. அண்ணாமலைப் பண்டிதர்தான் எழுதி யிருந்தார்.

கந்தசாமி,

நலம் விளைக! வந்த வேலை முடிந்தவுடன் திரும்பலா மென்று தான் எண்ணம். வேலை முடியவில்லை. தாமத மாகும் போல் இருக்கிறது. மரகதம் தங்கம் இருவருக்கும் என் வாழ்த்துக்கள்,

அன்பன்,

அண்ணாமலை

இந்த அஞ்சலட்டைக்குப் பிறகு பண்டிதரிடமிருந்து எந்த விதமான தகவலும் வரவில்லை. ஏறக்குறைய ஒரு மாதம் சென்றுவிட்டது. அவர் பிரிவைப் பற்றி இருந்த துயரம் சிறுகச் சிறுகக் குறைந்துவிட்டது. இடையிடையே அவர் நினைவு வந்தாலும். அது அவர்களைத் துயரில் ஆழ்த்தும் தன்மை குறைந்ததாகவே யிருந்தது.

பிரிவின் தன்மையே இப்படித்தான் இருக்கும்போலும். முதலில் மிகவும் மனத்துக்குகந்த ஒரு பொருளையோ, ஆளையோ பிரியும்போது பெரு வேதனையாக இருந்து பிறகு படிப்படியாக அந்த வேதனை குறைந்துவிடுவது உலக இயற்கை போலிருக்கிறது.

தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் மட்டுமல்ல, நாட்டியலிலும்கூட நிலைமை இதேதான். யாராவது ஒரு நாட்டுத் தலைவர் இருக்கும்போது, அவருடைய செயற்கரும் செயல்களையும் திறமைகளையும் கண்டு இவருக்குப்பின் இனி எப்படி நாடு நடைப்பெறப்போகிறதோ என்று ஐயுறுவது மக்கள் இயல்பு அவர் இறந்தோ மறைந்தோ போய்விடும் சமயங்களில் இந்த உணர்ச்சி பெருத்த அளவில் ஏற்படுவதுண்டு. ஆனால், நாளடைவில் அவரில்லாமலே கூட நாடு இயங்கிக் கொண்டிருக்கிற தன்மையைக் கண்டபிறகு எழுந்த ஐயுறவெல்லாம் எங்கோ ஓடி மறைந்து விடுவது கண்கூடு.

அண்ணாமலைப் பண்டிதர் சென்னைக்குப் போனபிறகு, ஜமீந்தார் வீட்டிலிருந்து இரண்டு மூன்று முறை ஆளனுப்பித் தங்கத்தை அழைத்து வரச் செய்தார்கள், தங்கத்திற்கு அங்குபோக விருப்பம் இல்லையென்றாலும் மரகத அம்மாள், "ஏன் பெரியவர்களுடைய ஆசையை மறுக்க வேண்டும்?" போய் ஒருநாள் இருந்துவிட்டு வாவேன்!" என்று சொல்லித் தங்கத்தை அனுப்பிவைத்தாள். தங்கம் அங்குபோய். ஜமீந்தார் கருணாகரருடனும், ஜமீந்தாரிணி பெரியும்மாவுட

னும் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவாள். ஆனால், இந்தத் தடவைகளிலெல்லாம், ஜமீந்தார் வீட்டில், தங்கத்திற்கு அவர்கள் நகைகளோ பொருள்களோ கொடுத்துக் கோபப் படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் தங்கம் ஜமீந்தார் வீட்டுக்குப் போய்த் திரும்பி வந்தாள். வாசலில் அவளை இறக்கி விட்டுவிட்டு வண்டிக் காரன் போய்விட்டான்.

அவள் வீட்டிற்குள் நுழைந்தபோது, மரகத அம்மாளு டன், ராதா உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

தங்கத்தைக் கண்டவுடன் மரகத அம்மாள், 'ஏம்மா தங்கம், ராதா சொல்வது உண்மைதானா?'' என்று கேட்டாள்.

''ராதா என்ன?'' என்று தங்கம் அவள் பக்கம் திரும்பிக் கேட்டாள்

ராதா முதலில் தயங்கினாள். ''ஜமீந்தார் கருணாகரர் மாளிகையை யாரோ விலைக்கு வாங்கிவிட்டார்களாம். ஜமீந்தார் வீட்டார் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போய் அங்கேயே இருக்கப்போகிறார்களாம்! இப்படி ஊரில் பேசிக் கொள்கிறார்கள்.'' என்றாள் ராதா.

''எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே!'' என்று வியப்புக்குறியுடன் சொன்னாள் தங்கம்.

''உனக்கு யார் இந்தச் செய்தியைச் சொன்னார்கள்?'' என்று ராதாவை மரகத அம்மாள் கேட்டாள்.

''கோயிலில்தான் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். இன்னும் என்னென்னவோ பேசிக்கொண்டார்கள். ஜமீந்தார் பெரிய செலவாளியாம். நிறையக் கடன் வாங்கியிருந்

தாராம். அவரைக் கடனாளியாக்கியதே அண்ணாமலைப் பண்டிதர்தானாம். அந்தக் கடனையெல்லாம் அடைப்பதற்காகத்தான் இப்போது மாளிகையை விற்றுவிட்டாராம்!'' என்றாள் ராதா.

அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிக் குறிப்பிட்டதும் மரகத அம்மாள் முகம் சுளித்தது. தங்கத்திற்குத் திடுக்கிட்டது. அவர்களால் இந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. அண்ணாமலைப் பண்டிதர் ஜமீந்தாரைக் கடனாளியாக்கி யிருப்பார் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

''ஊரில் பேசுவதெல்லாம் உள்ளபடியாயிருக்கும்? யாரோ ஜமீந்தாரும் பண்டிதரும் நட்பாயிருப்பதைப் பிடிக்காமல் கதை கட்டிவிட்டிருக்கிறார்கள்!'' என்று அந்தப் பேச்சுக்கே முற்றுப்புள்ளி வைத்தாள்.

ஆனால், அதன் பிறகு நெடுநாட்களாகத் தங்கத்திற்கு ஜமீந்தார் வீட்டிலிருந்து அழைப்பு வரவேயில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் கந்தசாமி வாத்தியார் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும், தான் அன்று வாங்கிய சம்பளப்பணத்தை மரகத அம்மாளிடம் கொடுத்து, ''மரகதம், இந்த மாதம் தான் நமக்கு அதிகச் செலவில்லையே! இந்தப் பணத்தில் கொஞ்சத்தை எடுத்து கதலிப் பட்டணத்துக்குப் போய் உனக்கும் தங்கத்துக்கும் சேலையெடுத்துக்கொண்டு வாருங்களேன்!'' என்று சொன்னார்.

இன்பத்திலும் சரி, துன்பத்திலும் சரி கந்தசாமி வாத்தியார் சொன்னால் சொன்னதுதான். மரகத அம்மாள் அவர் கூறியபடிதான் நடப்பாள். அது தான் தன் கடமை என்று நினைக்கும் பெண்மணி அவள்.

மறுநாள் கந்தசாமி வாத்தியார் பள்ளிக்கூடத்திற்குச் சென்றவுடன், மரகத அம்மாள் தங்கத்தை யழைத்துக்

கொண்டு பேருந்தில் கதலிப்பட்டணத்துக்குப் புறப்பட்டாள். தங்கம், ராதாவையும் அழைத்துக் கொண்டு போவோம் என்று கூறியதன் பேரில், அவளையும் கூடக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். மூவரும் கதலிப்பட்டணம் வந்து துணிமணிக் கடைகளையெல்லாம் பார்த்துத் தங்களுக்கு வேண்டிய சேலை துணிமணிகளை வாங்கிக்கொண்டார்கள். திரும்பவும் நெய்யூருக்கு அன்று மாலையில் 4 மணிக்குத்தான் வண்டி இருந்தது. அதுவரை என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியவில்லை. கதலிப்பட்டணம், கோயிலுக்குப் போய் வரலாம் என்று மரகத அம்மாள் கூறினாள். ராதா குறுக்கிட்டு, "அம்மா! நான் இவ்வூர் ஜமீந்தார்மாளிகையைப் பார்த்ததேயில்லை. அங்கே போய்த் திரும்பலாமே!" என்றகள். மரகத அம்மாளுக்கு இது சம்மதமில்லை. ஒருவர் வீட்டுக்கு அழையாமற் போய் உபசாரம்பெறுவது அவளுக்குச் சிறிதுகூடப் பிடியாது. ஆனால் தங்கம், ராதாவுடன் சேர்ந்துகொண்டு, "ஆமா, அம்மா! அங்கே போய் வரலாம். அவர்கள் நல்லவர்கள். அப்படியெல்லாம் நினைக்கமாட்டார்கள். நாம் போனால், பெருமைப்பட்டுக் கொள்வார்கள்!" என்று சொன்னாள். சிறியவர்களான அந்தப் பெண்களின் ஆசையைக் கெடுக்க வேண்டாம் என்று மரகத அம்மாள் அவர்களுடைய பேச்சுக்கு உடன்பட்டாள்.

ஜமீந்தார் வீட்டை நோக்கி நடந்தார்கள். வழியில் ஒரு சாப்பாட்டுக் கடையிருந்தது. சாப்பாட்டு நேரத்தில் போய் அவர்களுக்குத் துன்பம் கொடுக்கக் கூடாது, இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போய் விடுவோம் என்று சொன்னாள் மரகதம்மாள்.

"அங்கே போய் அவர்கள் சாப்பிடச் சொல்லி நாம் மறுத்துரைத்தால் வருத்தப்பட மாட்டார்களா?" என்று தங்கம் கேட்டாள்.

"அப்படிச் சொன்னால், மாலையில் காப்பி மட்டும் சாப்பிட்டுவிட்டு வரலாம். இப்போது நாம் சாப்பிட்டு விட்டுப் போவது தான் நல்லது" என்று மரகத அம்மாள் திரும்பவும் கூறினாள்.

தங்கம் ஒருத்திதான் ஜமீந்தார் வீட்டுக்கு அறிமுக மானவள். ஆகவே ராதாவும் சாப்பாட்டுக்குப் பிறகு அங்கு போவது தான் நல்லதென்று எண்ணினாள். ஆகவே, அவர்கள் சாப்பாட்டுக் கடையில் நுழைந்து பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்குள் சென்று சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தார்கள்.

சாப்பிட்டுவிட்டு வெயிலில் நடப்பது துன்பமாயிருந்தது. இருந்தாலும் "இதோ வந்துவிட்டது! அதோ வந்துவிட்டது! என்று சொல்லிக் கொண்டே வீதிகளைக் கடந்து கடைசியில் ஜமீந்தார் வீட்டு மாளிகையை அடைந்தார்கள்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் தங்கத்திற்கு யாரோ அவள் இதயத்தில் சம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மரகத அம்மாளும் திகைப்படைந்து போனாள். ராதாவால் பேசவே முடியவில்லை,

ஜமீந்தார் வீட்டு காம்பவுண்டு வாசல் கம்பிக் கதவு இழுத்துப் பூட்டப்பட்டுக் கிடந்தது. உள்ளே எட்டிப் பார்த்த போது மாளிகை முன் கதவும் சாத்தப்பட்டிருந்தது. உள்ளே ஆள் நடமாட்டமே தென்படவில்லை. மூன்று பெண்களும் மூச்சுப்பேச்சில்லாமல் திகைப்புடன் அதைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் திகைப்படங்க அதிக நேரம் பிடித்தது.

பிரமித்துப்போய் நின்று கொண்டிருந்த அவர்கள் யாரோ ஒரு கிழவனுடைய குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்,

"தங்கம்மா! எங்கே வந்தீங்க?" என்று அந்தக் கிழவன் கேட்டான். அவன் கையில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் பூவாளி இருந்தது அவன் ஜமீந்தார் வீட்டுத் தோட்டக்காரன் என்று அவனைப் பார்த்தவுடன் தங்கம் தெரிந்து கொண்டாள்.

"தோட்டக்கார ஐயா, ஜமீந்தார் ஐயா இங்கே இல்லையா?" என்று கேட்டாள் தங்கம்;

"பட்டணத்துக்குப் போயிருக்காங்க அம்மா!" என்றான் கிழவன்.

"எப்போ வருவார்கள்?"

"என்னம்மா இப்படிக்கேக்கறீங்க? உங்களுக்கு உண்மையிலேயே தெரியாதா? ஐயாதான் இந்த அரண்மனையை வித்துட்டாங்களே! இனிமே பட்டணத்துலே தான் இருப்பாங்க!" என்றான் தோட்டக்காரக் கிழவன்.

"உண்மை தானா? எனக்குத் தெரியாதே! விலைக்கு வாங்கியவங்க யாரு தெரியுமா?"

"அதாம்மா தெரியலே. யாரோ பட்டணத்துலேயிருக்கிறவங்க வாங்கியிருக்காங்கன்னு பேசிக்கிறாங்க!" என்றான் கிழவன்.

"மாளிகையைப் பார்த்துக் கொள்ள ஆளு யாரும் இல்லையா?"

"நான்தாம்மா சாவியெல்லாம் வைத்திருக்கிறேன். ஜமீந்தாரையா போன போது சாவியையெல்லாம் என்கிட்டேக் கொடுத்திட்டுப் போனாரம்மா!" என்றான் கிழவன்.

தங்கம் அவன் சொன்னதையெல்லாம் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'ஏம்மா, வெயிலிலே நிக்கறீங்களே, உள்ளே வந்து உட்காருங்க!' என்று சொல்லிக் கம்பிக் கதவைத் திறந்தான் சுப்பையாக் கிழவன்.

"இல்லே, போய் வருகிறோம்" என்றாள் தங்கம்.

"தங்கம், சாவிதான் இவரிடம் இருக்கிறதே! நாம் மாளிகையை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டுப் போனால் என்ன?" என்று ராதா கேட்டாள்.

தோட்டக்காரக் கிழவன் சுப்பையாவும் வற்புறுத்தவே, அவர்கள் மூவரும் மாளிகைக்குள் நுழைந்தார்கள். தோட்டக் காரன் தன் வீட்டிலிருந்து அவர்களுக்குக் குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தான். மாளிகை முழுவதும் திறந்து காண்பித்தான்.

மரகத அம்மாளும், ராதாவும் வியப்புடன் மாளிகையைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தார்கள். மாளிகையின் ஒரு பெரிய கூடத்தின் நடுவில் சுவரில் மாட்டியிருந்த ஒரு பெண்மணியின் படத்தைப் பார்த்ததும், "அம்மா!" என்று கதறிக்கொண்டே அதை நோக்கி ஓடினாள் மரகத அம்மாள். பிறகு அதைப் பார்த்தபடி நின்று கொண்டே மாலை மாலை யாகக் கண்ணீர் கொட்டினாள்.

# 21. விற்ற மாளிகையில் விருந்து

மரகத அம்மாள் "அம்மா!" என்று கூவிக் கதறியதைக் கேட்ட தங்கமும் ராதாவும் அங்கே ஓடி வந்தார்கள். அவர்கள் இருவரும் வேறு படங்களைப் பார்த்துக்கொண்டு வந்தபடியால், மரகத அம்மாள். அந்தக் குறிப்பிட்ட படத்தைப் பார்த்துவிட்டுக் கதறினாள் என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், அருகே வந்து பார்த்தபோது மரகத அம்மாள் சுவரில் மேலே சற்றுச் சாய்வாக மாட்டப் பட்டிருந்த படத்தையே பார்த்துக்கொண்டிருப்பதையும் அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் சிந்திக்கொண்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டார்கள்.

சுவரில் மாட்டியிருந்த படத்தைப்பார்த்த தங்கத்திற்குத் தன் உள்ளத்திலிருந்த திகைப்பை அடக்கவே முடியவில்லை, ராதாவும் பெரிதும் திகைப்படைந்தாள். ஏனெனில், அந்தச் சுவரில் இருந்த படம் ஏறக்குறைய மரகத அம்மாளைப் போலவே இருந்தது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், மரகத அம்மாள் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பின்னால் எப்படியிருக்கக் கூடுமோ அப்படியிருந்தது.

யாரேனும் ஓவியன் வரைந்த படமாயிருந்தால், அவன் மரகத அம்மாளைப் பார்த்துவிட்டு, அவள் இன்னும்

பிறகு எப்படியிருப்பாள் என்று எண்ணிக் கற்பனை செய்து எழுதியதாக இருக்கலாம் என்று சொல்லிவிடலாம். ஆனால், சுவரில் இருந்த படம் கற்பனை ஓவியமல்ல. அசல் நிழற் படம்? ஆம், போட்டோ படம்தான்.

மரகத அம்மாள் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அம்மா என்று கூவியதால், அது மரகத அம்மாளைப் பெற்றெடுத்த அம்மாவாக இருக்க வேண்டும் என்பதை இளம் பெண்கள் இருவரும் எண்ணிப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள்.

தன்னைப் பெற்றெடுத்த தாயின் படத்தைக் கண்டவுடன், அவளைப் பற்றிய பழைய நினைவுகளெல்லாம் ஏற்பட்டு மரகதம்மாள் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். அந்தப் படம் ஜமீந்தார் மாளிகையிலே இருக்கக் காரணம் என்ன என்று தங்கம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். முன்னொரு முறைதான் ஜமீந்தார் வீட்டு வேலைக்காரியுடன் சுற்றிப் பாாத்தபோது இந்தப் படத்தைக் கவனித்ததாகத் தங்கத்திற்கு நினைவு இல்லை.

அந்தப் படத்தில் இருப்பவள் தன் தாயின் தாய் என்று கண்டு கொண்ட தங்கம், இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று எண்ணினாள். ஜமீந்தார் வீட்டுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் ஏதோ உறவு முறை இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். அதனால்தான் அவர்கள் தன்னிடம் திடீரென்று விசேஷ அன்பு காட்டியிருக்கிறார்கள் என்று அவளுக்குத் தோன்றியது.

எல்லாச் செய்திகளையும் உடனடியாகத் தெள்ளத் தெளியத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவளுக்கு ஆவலாயிருந்தது. ஆனால் தன் தாய் இருக்கும் துயரமான

நிலையில் அவளைத் தொந்தரவுபடுத்தக் கூடாதென்று அப்போது அவள் எதுவும் கேட்கத் துணியவில்லை.

சிறிது நேரம் அழுதுகொண்டிருந்த மரகத அம்மாள். தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தங்கத்தின் பக்கம் திரும்பினாள்.

''அம்மா!'' என்று ஏதோ கேட்கப் போவதுபோல் தங்கம் அழைத்தாள். ஆனால், எந்தச் சொல்லும் அதைத் தொடர்ந்து அவள் வாயிலிருந்து வெளிப்படவில்லை.

''தங்கம், வா! வீட்டுக்குத் திரும்பலாம்'' என்று சொல்லிக் கொண்டே மரகத அம்மாள் திரும்பி நடந்தாள். அவளைப் பின் தொடர்ந்து தங்கமும், ராதாவும் சென்றார்கள். தோட்டக்காரச் சுப்பையாவும் அவர்களோடு வெளியில் வந்தான்.

மாளிகையின் முன் முற்றத்துக்கு வந்ததும், சுப்பையா வெளிக் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிக்கொண்டே, ''அம்மா! கொஞ்சம் இருங்கள்! வண்டி பூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்!'' என்றான்.

''இல்லை, நாங்கள் பேருந்திலேயே போய்விடுகிறோம்'' என்றாள் தங்கம்.

''இப்போதே மணி நான்காகிவிட்டது. நீங்கள் கடைத் தெருவுக்குப் போவதற்குள் பேருந்து போய்விடும்'' என்று தோட்டக்காரன் சுப்பையா கூறியதும் அவள் வாயை மூடிக் கொண்டாள்.

தோட்டக்காரக் கிழவன், அவர்களை அங்கே நிறுத்தி விட்டு மாளிகையைச் சுற்றிக்கொண்டு பின் பக்கமாகப் போனான். சிறிது நேரத்தில் ஜல் ஜல் என்று கழுத்து மணி நாதமெழுப்ப, பின்புறத்திலிருந்து ஜமீந்தார் வீட்டு

இரட்டை மாட்டு வில் வண்டி- சில நாட்களுக்குமுன் தங்கம் ஓட்டிய அதே வண்டி, மாளிகை முன் வாசல் முற்றத்தில் வந்து நின்றது. மூன்று பெண்களும் வண்டியில் ஏறிக் கொண்டவுடன் சுப்பையா மாடுகளைத் தட்டி ஓட்டினான்.

வண்டி நெய்யூருக்கு வந்து சேர்ந்து கந்தசாமி வாத்தியார் வீட்டின் முன் நின்ற போது, அவர் அப்போது தான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார். வண்டியிலிருந்து பெண்கள் இறங்கிவந்ததைக் கண்டதும் அவர் முகத்தில் வியப்புக்குறி மேலிட்டது.

அவர்கள் இறங்கியவுடனே தோட்டக்காரக் கிழவன் வண்டியைத் தட்டிக் கொண்டு போய் விட்டான்.

"மரகதம், ஜமீந்தார் வீட்டுக்கா சென்றீர்கள்? அங்கே யாரும் இல்லையே!" என்று கேள்விக் குறி போட்டுக் கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

அங்கே ஒருவரும் இல்லை என்று உங்களுக்குத் தெரியுமா என்று வியப்புடன் கேட்ட மரகதம்மாள், மாளிகை பார்க்கப் போன செய்தியைக் கூறினாள்.

பேசிக்கொண்டே அவர்கள் உள்ளே வந்தார்கள்.

"இதோ பாருங்கள்! எல்லாம் எனக்கு ஒரே மர்மமா யிருக்கிறது. ஜமீந்தார் வீட்டிலே என் அம்மாவுடைய படம் இருக்கிறது. ஜமீந்தாருக்கும் என் அம்மாவுக்கும் என்ன சம்பந்தம் என்பதே புரியவில்லை. அவர்கள் வீட்டில் அம்மாவின் படத்தை ஏன் வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை" என்று சொன்னாள் மரகத அம்மாள்.

"மரகதம்! இதில் என்ன மர்மம் இருக்கிறது? பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது உன் அண்ணனும் ஜமீந்தாரும்

நெருங்கிய நண்பர்களாய் இருந்தார்கள் என்பதை நீ மறந்து விட்டாயா? ஜமீந்தாரும் உன் அண்ணனும் ஒன்றாகவே இருந்ததையும், எப்போதும் உன் அண்ணன் ஜமீந்தார் வீட்டிலேயே இருந்து வந்தார் என்பதையும் மறந்து விட்டாயா? முன்னால் இருந்த பெரிய ஜமீந்தார். இவர்களுடைய நட்பைக் கண்டு, உன் அண்ணனுக்காகத் தன் மாளிகையிலேயே ஓர் அறை ஒதுக்கிக் கொடுத்திருந்தார் அல்லவா! அப்போது உன் அண்ணன் உன் அம்மாவின் படத்தை அங்கு கொண்டு போய் மாட்டியிருக்கலாம்'' என்று சொன்னார் கந்தசாமி வாத்தியார்.

அண்ணனுடைய நினைவுகள் மரகத அம்மாளின் மனத்தில் தோன்றியவுடன் அவளுக்குத் தாங்க முடியாத துன்பம் ஏற்பட்டது. அவள் வாய்விட்டுப் பேசமுடியாமல் விசும்பி விசும்பி அழத் தொடங்கி விட்டாள். கந்தசாமி வாத்தியாருக்கு நாம் ஏன் இந்தச் செய்தியை இப்பொழுது சொன்னோம் என்று ஆகிவிட்டது. கட்டுக் கவலைகள் இல்லாமல் ஜமீந்தார் மகனோடு மகனாக அரசகுமாரன் போல் வாழ்ந்த தன் அண்ணன் கடைசியில் என்ன ஆனாரென்றே தெரியாமல் போய் விட்டதை எண்ணி மரகதம்மாள் அழத் தொடங்கி விட்டாள். மரகத அம்மாளுக்குத் தன் தாயிடமும், தாயைக் காட்டிலும் அண்ணனிடமும் பற்றுதல் அதிகம்.

இன்பமாக வாழ்ந்த தன் தாய் பெற்ற பிள்ளைகளைப் பேணி வளர்த்து ஆளாக்கிவிட்ட அந்த அருமை யன்னை கடைசியில் துன்பந்தாங்க முடியாமல் நெஞ்சு நொந்து நொந்து இறந்து போனதையும்- இளவரசரைப் போல் இருந்த தன் அண்ணன் கடைசியில் வாழ்வில் சலிப்பு ஏற்பட்டு எங்கோ போய் விட்டதையும் என்ன ஆனார் என்று தகவல் இல்லாமல் போய்விட்டதையும் எண்ண எண்ணப் பழைய நினைவுகளெல்லாம் வந்து அவளைப் படாதபாடு படுத்தின,

எல்லாவற்றையும் எண்ணியெண்ணி அழுவதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. தன் தாய் அழுவதைக் கண்டு நின்று கொண்டிருந்த தங்கத்திற்கும் நெஞ்சில் துயரம் மூண்டது. அவளுடைய முகத்திலும் துயர உணர்ச்சி ஏற்பட்டது. "அம்மா! அழாதே அம்மா!" என்று அருகில் நெருங்கி வந்து ஆதரவோடு மரகத அம்மாளின் அருகில் உட்கார்ந்து முகத்தைத் துடைத்து விட்டாள்.

"மரகதம்! பழைய நினைவுகளை மறந்துவிடு. எத்தனை யழுதாலும் நடந்தது திரும்பப் போவதில்லை" என்று ஆறுதல் கூறினார் கந்தசாமி.

இந்தத் துயரக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற இராதாவின் மனம் இளகியது. ஆனால் என்ன செய்வதென்று புரியாமல் அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். நெடு நேரத்திற்குப் பிறகு, மரகத அம்மாள் ஒருவாறு மனந் தெளிந்து எழுந்து வீட்டுவேலைகளைக் கவனிக்கச் சென்ற பிறகுதான் அவள் தங்கத்திடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஏறக்குறைய ஓர் ஆண்டு கழிந்து விட்டது. கதலிப்பட்டணம் ஜமீந்தார் மாளிகைக்கு ஜமீந்தாரும் திரும்பி வரவில்லை. விலைக்கு வாங்கியவர்கள் யாரும் கூட வந்து குடியிருக்கவில்லை. சென்னைக்குச் சென்ற அண்ணாமலைப்பண்டிதரிடத்திலிருந்து யாதொரு தகவலு மில்லை.

காலம் பாடு நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் ஜமீந்தார் மாளிகைத் தோட்டக்காரன் சுப்பையா கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வந்தான். அவன் கையில் ஒரு கடிதம் கொண்டு வந்திருந்தான். அதை அவன் கந்தசாமி வாத்தியாரிடம் கொடுத்தான். அதை வாங்கிப்

பிரித்துப் படித்த கந்தசாமி வாத்தியாரின் முகத்தில் வியப்புக் குறி படர்ந்தது. எதிரில் இருந்த மரகத அம்மாளும் தங்கமும் என்ன செய்தி என்று தெரிந்த கொள்ள ஆவலா யிருந்தார்கள். கந்தசாமி வாத்தியார் தம் கையில் இருந்த அந்தக் கடிதத்தைத் தங்கத்திடம் கொடுத்து. "படி', என்றார். தங்கம் படித்தாள்.

அன்புள்ள கந்தசாமி வாத்தியார் அவர்களுக்கு,

வணக்கம்.

நான் என் மாளிகையை என் நண்பர் ஒருவருக்கு விற்று விட்டேன். நாளைக் காலை அவருக்கு இந்த மாளிகையை ஒப்படைக்கப் போகிறேன். அந்த நண்பருக்கு இந்த மாளிகையை ஒப்படைக்கும் சமயம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரு விருந்து வைப்பதென்று தீர்மானித் தோம். தாங்களும் தங்கள் மனைவியாருடனும் மகள் தங்கத்துடனும் விருந்துக்கு வந்து சிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நண்பர் முருகேசரை அழைத்து வரும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்கத்தின் தோழிப் பெண்ணையும் அவள் விரும்பினால் கூட்டிக்கொண்டு வர வேண்டியது.

இப்படிக்குத் தங்களன்புள்ள

கருணாகரன்,

அழைப்பு விசித்திரமானதாயிருந்தது. கந்தசாமி வாத்தியார் தோட்டக்காரனைப் பார்த்து, "மாளிகையை யார் வாங்கியிருக்கிறார்கள்?" என்று கேட்டார். "அது தெரியலிங்க! யாரோ சென்னைப்பட்டணத்துக்காரங்களுக்கு தான் என்று சொல்றாங்க!" என்று சொன்னான் சுப்பையாக் கிழவன்.

"தங்கம், ராதா வருகிறாளா என்று கேட்டுக்கொண்டு வா, நான் முருகேசரைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

நாளைக்குப் புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று கூறி விட்டு வெளியில் சென்றார் கந்தசாமி வாத்தியார்.

யாருக்கோ மாளிகையை விற்பதற்குத் தங்களுக்கு ஏன் விருந்து வைக்க வேண்டும் என்று அவர்களுக்கு விளங்கவில்லை. இருந்தாலும் ஜமீந்தாரே அழைத்திருக்கும்போது போகாமல் இருப்பது மரியாதையல்ல என்று அவர்கள் போக முடிவு செய்தார்கள்.

தோட்டக்கார சுப்பையா விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

மறுநாள் ஜமீந்தார் மாளிகைக்கு, எல்லோரும் புறப்பட்டார்கள். நடுத்தெருவுக்கு அவர்கள் வந்து பேருந்துக் காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். கந்தசாமி வாத்தியார் முருகேச வாத்தியார், மரகத அம்மாள், தங்கம், ராதா ஆக ஐந்து பேரும், வேறு நாலைந்து பேரும் நின்றார்கள். பேருந்து வந்தது. அந்த வேற்று மனிதர்களில் இரண்டு பேர் வண்டியில் முந்திக்கொண்டு ஏறிவிட்டார்கள். பேருந்து நடத்துநர். நான்கு பேருக்குத்தான் இடமிருக்கிறதென்று கூறினான். உடனே முருகேச வாத்தியார் தான் நின்று கொள்வதாகக் கூறினார். இவர்களில் யாரும் நின்று கொள்வது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், யாராவது நின்றுகொள்ளத்தான் வேண்டும். யாரை நின்று கொள்ளச் சொல்வதென்று தெரியாமல் அவர்கள் விழித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வண்டியில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன், முருகேச வாத்தியாரிடம் வந்து, ''ஐயா! தங்களில் யாரும் நின்றுகொள்ள வேண்டாம் நான் இறங்கிக் கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் போய் வாருங்கள்'' என்று கூறினான். முருகேச வாத்தியார் அவனை உற்று நோக்கினார். அவன் யாரென்றே அவருக்குத் தெரியவில்லை.

''இல்லை தம்பி, நீ என்ன வேலையாகப் போகிறாயோ, அதற்குத் தடையாக நான் இருக்கக்கூடாது!'' என்று கூறினார்.

''ஐயா! எனக்கொன்றும் அவசர வேலையில்லை, மாலை வண்டியில் போனாலே போதும்! தயவு செய்து தாங்கள் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லி இறங்கிவிட்டான்.

நடத்துநர் ''சீக்கிரம் சீக்கிரம்'' என்று அவசரப் படுத்தவே, ராதாவும், முருகேசரும் பேருந்தில் உடனடியாக ஏறிக்கொண்டார்கள். வண்டி உடனடியாக புறப்பட்டு விட்டது. கீழே இறங்கிய அந்தப் பையனையே உற்று நோக்கினார் முருகேசர். அவனை எங்கோ பார்த்த மாதிரியிருந்தது. ஆனால் எங்கே எப்போது என்பது தான் நினைவுக்கு வரவில்லை. அவன் யார் என்பதும் தெரியவில்லை.

''வாழ்க்கையில் எப்படி எப்படியோ எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அப்படி நடக்கும் நிகழ்ச்சிகளிலே இது ஒன்று'' என்று தமக்குள் அவர் நினைத்துக் கொண்டார்.

மற்றவர்களுக்கும் கூட அந்தப் பையனை எங்கோ பார்த்தமாதிரியாக நினைவு இருந்தது. தங்கத்திற்கும் ராதாவிற்கும் அவன் குரல் கூடப் பழககப்பட்டதாகத் தோன்றியது. ஆனால் எல்லாம் உருப்படியாக இல்லாத ஓர் அனுமானமாகவே போய்விட்டபடியால் யாராலும் அவனை இன்னாரென்று தெளிவாக முடிவு கட்ட முடியாமல் போய் விட்டது.

கதலிப்பட்டணம் கடைத் தெருவில் அவர்கள் காரை விட்டிறங்கி ஜமீந்தார் மாளிகைக்கு நடந்து சென்றார்கள். மாளிகையை நெருங்கி வந்தவுடனேயே அது மிக நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது அவர்களுக்குத் தெரிந்தது.

மாளிகை முழுவதும் புதிதாக வண்ணம் பூசிச் சுண்ண மடித்துப் பார்ப்பதற்குப் புதிதாகக் கட்டப்பட்டதுபோல் தோற்றமளித்தது. எங்கும் வண்ணக் கொடிகள் தலைக்கு மேலே குறுக்கும் நெடுக்குமாகக் கட்டப் பட்டிருந்தன. காம்பவுண்டு வாசலில் இருபுறமும் குலைதள்ளிய வாழை மரங்கள் வைத்துக் கட்டப்பட்டிருந்ததுடன். மாவிலையும் பனங்கூந்தலும் தோரணமாகக் கட்டப் பட்டிருந்தன. மொத்தத்தில் அது ஒரு திருமண வீடுபோல் அலங்காரமாகக் காட்சியளித்தது.

ஜமீந்தார் கருணாகரர் மாளிகையில் எல்லாம் விசித்திர மாக நடக்கும் போலிருக்கிறது என்ற எண்ணத்துடன்தான் அவர்கள் சென்றார்கள். மாளிகையை விற்பவர் அதை யலங் கரித்து அதற்கொரு விருந்து வைத்து விற்பது இதுவரை அவர்கள் கண்டுங்கேட்டு மிராத செயலாயிருந்தது.

அவர்கள் மாளிகைக்குள் நுழைந்தவுடன், தோட்டக் காரச் சுப்பையாதான் முன்னால் வந்து வரவேற்றான்.

உள்ளே போய்ப் பார்த்தால், ஆங்காங்கே புதிதாக வந்திருந்த வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் கண்டார்களே தவிர வேறு யாரையும் வீட்டுக்காரரி விருந்தினர் எவரையும் அவர்கள் காணவில்லை. அவர்கள் ஐந்து பேரைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லாம் மூடுமந்திரமாக இருக்கிறதென்று நினைத்துக் கொண்டே, கந்தசாமி வாத்தியார் தோட்டக்காரச் சுப்பையாவை விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கூப்பிட்டார்.

அவர்கள் கூப்பிட்ட சமயத்தில் சுப்பையாக் கிழவன் அங்கேயில்லை. அவனைக் கண்டு கேட்க வேண்டுமென்று விசாரித்தபோது அவன் எங்கே போனானென்று தெரிய வில்லை என்று வேலைக்காரர்கள் சொல்லிவிட்டார்கள்,

ஒன்றும் புரியாத கந்தசாமி வாத்தியார், உள்ளேபோய்க் கூடம் ஒன்றில் விரித்திருந்த சமுக்காளத்தில் மற்றவர்களோடு உட்கார்ந்தார்.

சுப்பையா வந்தால்தான் மேற்கொண்டு ஏதாவது விவரம் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருந்தபோது மாளிகை முற்றத்தில் மாட்டு வண்டியொன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. உடனே அவர்கள் எல்லோரும் எழுந்து மாளிகை வாசலுக்கு ஓடி வந்தார்கள்.

மாட்டு வண்டியிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்த வுடன், கந்தசாமி வாத்தியார் முதலியவர்களின் முகத்தில் வெறுப்பும் வியப்புமான உணர்ச்சிகள் தோன்றின.

அவர்கள் முகத்தில் பிரதிபலித்த உணர்ச்சிகளைக் காணாமலோ கண்டும் இலட்சியப்படுத்தாமலோ, வண்டியி லிருந்து இறங்கி வந்து நலம் விசாரித்தான் சுந்தரேசன், அவனுடன் கூடவே கடுகடுத்த முகத்துடன் வந்தாள் அவனுடைய தாயார் குணவதியம்மாள்.

# 22. ஜமீந்தார் சொன்ன பழையகதை.

குணவதியம்மாளும் சுந்தரேசனும் வந்திறங்கியதைக் கண்ட கந்தசாமி வாத்தியார் முதலியவர்களின் மனத்தில், அவர்கள்தான் ஜமீன்தார் மாளிகையை விலைக்கு வாங்கப் போகிறார்களோ என்ற சந்தேகம் தோன்றியது. குணவதியம்மாள் ஏழையைப்போல் வாழ்ந்தாலும், தன் கணவர் கயிலாயத்தைக் கொடுமைப்படுத்தி ஏராளமான பணம் சேர்த்து வைத்திருந்தாள் என்று அப்போதே ஊரில் பேசிக் கொண்டார்கள். ஆனால், எவ்வளவுதான் பணம் சேர்த்து வைத்திருந்தாலும், அதையெல்லாம் விட்டுவைக்கக்கூடியவனல்ல அவன் மகன் சுந்தரேசன் என்பதும் ஊரறிந்த விஷயம். அவன் கண்ணுக்குத் தட்டுப்பட்ட பொருள்கள் மட்டுமல்லாமல், அவன் சந்தேகத்திற்கிலக்கான பொருள்களும் வீட்டில் தங்கியது கிடையாது. இருந்தாலும் குணவதியம்மாள் எப்படியோ அவனுக்குத் தெரியாமல் பொருள் சேர்த்து வைத்திருக்கலாம் என்றுதான் அப்போது ஜமீன்தார் மாளிகையை விலைக்கு வாங்கி விட்டதாக கருதப்படுகிற அந்த மர்மப் பேர்வழிகள் அவர்களாயிருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் அங்கிருந்தவர்கள் உள்ளத்திலே ஏற்பட்டது ஒருகணம். ஆனால், மறுகணமே அந்தச் சந்தேகம் போய் விட்டது. அவர்கள் வந்த அவசரத்தையும் கடுகடுப்பையும்

குணவதியம்மாளின் முகத்தில் தோன்றிய சிடுசிடுப்பையும் நோக்கியபோது அவர்கள் மாளிகையைவிலைக்குவாங்கி அதில் வாழவந்தவர்களாகத் தோன்றவில்லை; அங்கு யாருடனோ சண்டை போட வந்ததுபோல் தோன்றியது.

சுந்தரேசனாவது இறங்கி வந்தவுடன் கந்தசாமி வாத்தியார், மரகத அம்மாள், தங்கம் ஆகியோரைப் பார்த்து நலம் விசாரித்தான். குணவதி அம்மாள் அவர்களுடன் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை. மாறாக அவர்களையெல் லாம் காணவே பிடிக்காதவள் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டும் வேறுபுறம் திரும்பிக் கொண்டும் இருந்தாள்.

வாசலில் நின்ற எல்லோரையும் கூடத்தில் வந்து அமரும் படியாக ஒருவர் வந்து வரவேற்றார். அவர்தான் அந்த மாளிகையின் காரியக்காரர் என்று நினைக்கவேண்டி யிருந்தது.

எல்லோரும் கூடத்தில் விரித்திருந்த பெரிய சமுக்காளங் களில் ஒன்றில் போய் உட்கார்ந்தார்கள், அந்தக் கூடம் முழு வதும் சமுக்காளங்கள் விரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற் றின் பரப்பைப் பார்த்தபோதே அன்று சுமார் நூறு நூற்றைம்பது பேராவது விருந்துக்கு எதிர்பார்க்கப் படு கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருந்தது.

நேரம் செல்லச் செல்ல உள்ளூர் வாசிகளும் வெளியூர் வாசிகளுமான செல்வந்தர்கள் ஒவ்வொருவராகவும் குடும்பங் குடும்பமாகவும் அங்கு வந்து சேர்ந்தவர்கள். பதினொரு மணிக்கெல்லாம் அந்தக்கூடம் நிறைய ஆட்கள் கூடிவிட்டார் கள். அத்தனை பேரும் செல்வார்கள் அல்லது வியாபாரிகளாக இருந்தார்கள். ஜமீந்தாரையும். வீடு வாங்கப்போகிறவரை யும் தான் இன்னும் காணவில்லை.

சரியாக மணி பனிரெண்டடித்ததும் அதே காரியக்காரர் வந்து எல்லோரையும் சாப்பாட்டுக் கூடத்திற்கு வரும்படி அழைத்தார். எல்லாம் அன்று விசித்திரமாக நடந்தது. விருந்துவைப்பவர் ஜமீந்தாரா அல்லது மாளிகையை விலைக்கு வாங்கியவர்தானா என்று யாருக்கும் தெரிய வில்லை. யாரும் இல்லாமலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

காரியக்காரர் அழைத்தவுடன் எல்லோரும் சாப்பாட்டுக் கூடம் நோக்கிச் சென்றார்கள். ஆண்களுக்காகவும் பெண் களுக்காகவும் அங்கே தனித்தனியே பந்தி பிரித்து இலை போடப்பட்டிருந்தது. சாப்பாடு மிக உயர்ந்த வகையாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. ஜமீந்தார் வீட்டுத் தகுதிக்கேற்ற படி பத்துவகைக் கறிகளுடன். பாயாசம் சூப்பு அப்பளம் வடை ஆகியவற்றுடன் பாராட்டிப் பாராட்டிச் சாப்பிடும் படியான சுவையுடன் இருந்தது அன்றையச் சாப்பாடு.

சாப்பாடு முடித்து எல்லோரும் வரவேற்புக்கூடத்திற்குத் திரும்பிவந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கும்போது மாளிகை வாசலில் அழகான சிறிய பேபிசலூன் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஜமீந்தாரும் அண்ணாமலைப் பண்டிதரும் இறங்கிக் கூடத்திற்கு வந்தார்கள். அந்தக் காரைத் தொடர்ந்து வந்த ஒரு வானிலிருந்து, ஒரு வழக் கறிஞரும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கி வந்தார்கள். அவர்களும் ஜமீந்தாரையும் பண்டிதரையும் பின்தொடர்ந்து கூடத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் கூடத்திற்குள் நுழைந்தவுடனேயே, ''இதோ வந்துவிட்டார்! ஜமீந்தார் ஐயா வந்துவிட்டார்!'' என்று அங்கு இருந்தவர்கள், குரல் எழுப்பினார்கள். எல்லோரும் எழுந்து நின்று வாசற் பக்கம் தலை திருப்பிப் பார்த்தார்கள்.

ஜமீந்தாரும்' பண்டிதரும் வழக்கறிஞரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கூடத்தின் மத்தியில் விரித்திருந்த இரத்தினச் சமுக்காளத்தில் போய் அமர்ந்தார்கள். அவர்கள் அமர்ந்தவுடன் வந்திருந்த விருந்தினர்களும் ஆங்காங்கே அமர்ந்தார்கள்.

சிறிது நேரம் ஜமீந்தாரும் அண்ணாமலைப் பண்டிதரும் தங்களுக்குள்ளே ஏதேதோ குசுகுசு என்று பேசிக்கொண்டார்கள். பிறகு அவர்கள் கூட வந்திருந்த வழக்கறிஞரை நோக்கியவுடன் அவர் ''ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டார்.

''ஆரம்பிக்கலாமா?'' என்று அவர் கேட்ட வார்த்தை கூடியிருந்த அத்தனை பேரின் காதுகளிலும் ஒலித்தது.

எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. மாளிகையை வாங்குபவர் யாரும் இல்லாமலே இவர்கள் ஆரம்பிக்கப் போவது எதை என்று யாருக்கும் புரியவில்லை. இந்த மர்ம நாடகத்தின் அந்தரங்கமெல்லாம் இன்னும் சிறிது நேரத்தில் அம்பலமாகாமலா போய்விடும்? என்று எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

ஜமீந்தார் தலையை அசைத்ததன் மூலம் தன் சம்மதத்தைத் தெரிவித்தவுடன், வழக்கறிஞர் ''தங்கம்! தங்கம்!,'' என்று கூப்பிட்டார். அவர் தன்னை யழைப்பதன் காரணம் புரியாமல் தங்கம் திகைத்துக்கொண்டிருந்தாள். கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் கூட ஏன் தங்கள் மகள் அழைக்கப்படுகிறாள் என்பது புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கம் உடனடியாக வராமல் போகவே 'நெய்யூர் கந்தசாமி வாத்தியார் மகள் தங்கம் இருந்தால், கொஞ்சம்

இங்கே வா அம்மா!'' என்று வழக்கறிஞர் அழைத்தார். ஏன் எதற்கென்று புரியாமலே தங்கம், ராதாவின் கையைப் பிடித்துக்கொண்டு ஜமீந்தார் முதலியவர்கள் இருந்த இடத்திற்கு வந்தாள். அவள் வருவதைக் கண்ட வழக்கறிஞர் ''கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும்கூட இங்கு வந்தால் நல்லது'' என்று கூறினார். அவர்களும் தங்கத்தைத் தொடர்ந்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து குணவதியம்மாளும் சுந்தரேசனும் வந்தார்கள், அழைக்காமலே!

எல்லோரும் அருகில் வந்து சேர்ந்ததும் வழக்கறிஞர் எழுந்து நின்று கொண்டு, ''பெருங்குடி மக்களே, ஜமீந்தார் கருணாகரர் அவர்கள் இந்த மாளிகையை விற்கப்போவதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இப்போது அதன் கிரயப் பத்திரத்தை ,எழுதி முடிப்பதற்கே நாம் எல்லோரும் கூடியிருக்கிறோம். இந்த மாளிகையை இப்போது, நெய்யூர் கந்தசாமி வாத்தியார் மகளாகிய இந்தத் தங்கம்மாளுக்குக் கிரயம் செய்து கொடுக்கப் போகிறோம்'' என்று கூறிய வழக்கறிஞர் தங்கத்தின் பக்கம் தன் வலக்கை ஆள்காட்டி விரலைக் காட்டினார். அந்தக் கூட முழுவதும் வியப்பினால் வாயடைத்துப் போயிருந்தது. ஏழைக் கந்தசாமி வாத்தியாரிடம் இந்த மாளிகையை வாங்க ஏது பணம்? தங்கத்தின் திருமணத்திற்கே கையில் காசில்லாமல் இதுவரை திண்டாடிக் கொண்டிருந்த அவருக்கு இந்த மாளிகையை வாங்கக் கூடிய பணம் எங்கிருந்து கிடைத்தது என்று பற்பல வாறு எல்லோரும் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

இதெல்லாம் ஜமீந்தார்—அல்ல—அவரும் அண்ணாமலைப் பண்டிதரும் சேர்ந்து நடத்துகின்ற விளயாட்டு என்று எண்ணிப் பேசாமல் இருந்தாள் தங்கம்.

''ஜமீந்தாரையா, இது என்ன விளையாட்டு? எங்களிடம் இந்த மாளிகையை வாங்க ஏது பணம்?'' என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

"இதோ பாருங்கள்! என்று சொல்லி ஒரு சீட்டை எடுத்து நீட்டினார் ஜமீந்தார் கருணாகரர். அது ஒரு டிராப்டு (உண்டியல்) சீட்டுப் போலத் தெரிந்தது. கந்தசாமி வாத்தியார் அதை வாங்கிப் பார்த்தார். அரசாங்க பாங்கி யின் அந்த உண்டியல் சீட்டில். தங்கம் பெயருக்கு ஐம்பது லட்ச ரூபாய் கொடுக்கச் சொல்லி எழுதியிருந்தது. கந்தசாமி வாத்தியாரால் தன் கண்களையே நம்பமுடியவில்லை.

அதற்குள் ஜமீந்தார் எழுந்து நின்றார். அவர் ஏதோ பேசப் போகிறார் என்று அறிந்த வழக்கறிஞர் கீழே அமர்ந்து விட்டார். விருந்தினர்கள். வியப்புணர்ச்சியோடு கூடிய கண் களை நிமிர்த்தி ஆவலுடன் ஜமீந்தாரையே நோக்கினார்கள்.

பெருங்குடி மக்களே, பெரியோர்களே, தாய்மார்களே, நீங்கள் எல்லோரும் என்னவோ ஏதோவொன்று நினைத்துக் கொண்டிருக்கிற சந்தேகங்களையெல்லாம் இப்போது நான் போக்கிவிடுகிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால், நான் பள்ளிக் கூடத் திலே படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு உயிர்த்தோழன் ஒருவன் இருந்தான். அவன் பக்கத்திலிருக்கும் சித்திர நல்லூரைச் சேர்ந்தவன். அவனும் நானும் இணைபிரியாத தோழர்களாய் இருந்தோம். அவன் எப்போதும் என்கூடவே யிருந்தான். நான் அவன் வீட்டிற்குப் போவதும் அவன் என் வீட்டிற்கு வருவதும் இப்படியாக இரண்டு பேரும் பிரியாமலே வாழ்ந்து வந்தோம்.

அந்த நண்பன் எங்கள் அளவு செல்வம் பொருந்திய குடி யில் பிறந்தவனல்ல. ஆகவே என் தந்தையார் அவர்கள் என்னை அவன் வீட்டிற்குப் போகக்கூடாதென்று சொல்லி விட்டார்கள். ஜமீந்தார் மகனான நான் சாதாரண மனித ருடைய வீட்டிற்குப் போவதை அவர்கள் விரும்பவில்லை!

ஆனால், வேண்டுமானால் அவனை எங்கள் மாளிகையிலேயே வந்திருக்கும்படி என் தந்தை கூறியதைக்கேட்ட அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது ஆனால், அவன் எனக்காகத் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, எங்கள் மாளிகையிலேயே வந்து தங்கினான்.

ஒருநாள் நான் உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் கிடந்தேன். அப்போது அந்த நண்பன், என் தந்தையாருடன்கூட இருந்து உணவுண்ண நேர்ந்தது. என் தந்தையார் அவனை நோக்கி, ''நீயோ எங்கள் அந்தஸ்துக்கு இணையானவன் அல்ல. எங்கள் வீட்டிலே ஒருமுறை சாப்பிட்டால், உங்கள் வீட்டிலே ஒருமுறை எங்களுக்கு விருந்து வைக்க வேண்டும். ஆனால், அதற்குத் தகுதியான செல்வம் உன் வீட்டில் கிடையாது. அப்படியிருக்கும்போது நீ எங்கள் வீட்டில் சாப்பிடுவது உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கேட்டார். உடனே என் நண்பனுக்குக் கோபம் வந்து ''என் தந்தையோ, பாட்டனாரோ எனக்கு இவ்வளவு செல்வம் வைத்து விட்டுப்போகவில்லை என்பது உண்மைதான். ஆனால், அதற்காக நான் கவலையோ, தளர்ச்சியோ அடையவில்லை. இந்த நாட்டிலே உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாத நிலையிலே எத்தனையோ பேர்கள் தங்கள் குடும்பங்களை விட்டு விட்டுப் போயிருக்கும் நிலையில், என் தந்தையார் பாட்டனார் முதலியவர்கள் என்னை இவற்றிற்கெல்லாம் அலையாமல் ஓரளவு செல்வம் வைத்துவிட்டுப் போனதற்காக அவர்களை மனமாரப் போற்றுகிறேன். ஆனால், என் காலத்திற்குள் எப்படியும் உங்களுடைய மாளிகையையே நான் விலைக்கு வாங்கி விடுகிறேனா இல்லையா என்று பாருங்கள். உங்கள் காலத்திற்குள் இல்லாவிட்டாலும், என்காலத்திற்குள் நான் இதை விலைக்கு வாங்கிவிடுவேன்'' என்று சபதம் செய்தான்.

அதன் பிறகு அவன் என்னிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுப் போய்விட்டான். ஆனால். அவனில்லாததால் எனக்கு உடல்நலம் மேலும் கெட்டு நான் ஆபத்தான நிலையை எய்தியது கண்ட என் தந்தை அவன் வீட்டிற்குச் சென்று. தான் விளையாட்டாகக் கேட்ட விஷயத்தை மறந்து, பெரிய மனது பண்ணி வந்து என்னைப் பிழைக்க வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் அதன்படி அவன் திரும்பி வந்து என்னை மகிழ்வித்து, குணமாகும் வரை கூட இருந்து என் பெற்றோரையும் மகிழ்வித்தான்.

ஆனால், பாவம்! அவனுடைய இல்லற வாழ்க்கை சுகப்படவில்லை. பெரிய இலட்சியவாதியான என் நண்பனுக்கு அவன் பெற்றோர்கள், முற்றிலும் பொருத்தமான நற்குண நற் செயல்கள் பொருந்திய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். அவளோ, பொறுமையும் அடக்கமும் அன்பும் அறிவும் ஒருங்கே படைத்தவள். ஆனால், அழகு மட்டும் இல்லாதவள், சுத்தக் கருப்பு. அதனால், என் நண்பன் மிகவும் அழகுடைய பெண்ணொருத்தியைத் தானாகத் தேடிப் பிடித்து மூத்தவளின் ஒப்புதலோடு இரண்டாவது திருமணம் செய்து கொண்டான். அழகு ஒன்றையே முக்கியமாகக் கருதி அவளை மணந்துகொண்ட என் நண்பன் கடைசியில் அவளுடைய குரூர குணத்தின் கொடுமை தாங்கமாட்டாமல் ஊரைவிட்டே ஓடி விட்டான். அவன் எங்கோ சாமியாராய்ப் போய்விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். அப்போது எனக்கும் மணமாகி விட்டபடியால் நான் என் நண்பனின் பிரிவினால் அவ்வளவாகத் துன்பப் படவில்லை.

இருபது ஆண்டுகளாக என் நண்பனைப் பற்றிய செய்தி எதுவும் தெரியாமல் இருந்தது. ஆனால், ஓராண்டுக்கு முன்னால் திடீரென்று ஒரு நாள் சென்னையில் உள்ள என் வீட்டிற்கு வந்து அந்த நண்பன். "நான் உன் தந்தையிடம்

சபதம் செய்தபடி இப்போது உங்கள் மாளிகையை விலைக்கு வாங்கப் போகிறேன்'' என்றான். என்னால் நம்பவே முடிய வில்லை...

ஜமீந்தார் இந்த இடத்தில் சிறிது நிறுத்திவிட்டு வேலைக்காரன் ஒருவனைத் தண்ணீர் கொண்டு வரும்படி சொல்லிக் குடித்தார். ஜமீந்தார் கூறிய இந்தக் கதையை அக்கரையோடு கவனித்துக் கொண்டுவந்த விருந்தினர்கள், மேற்கொண்டு அவர் என்ன சொல்லப் போகிறார்? அவரு டைய நண்பர் யார்? அந்த நண்பருக்கும் தங்கத்திற்கும் என்ன தொடர்பாயிருக்கும்' என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நீர் குடித்து முடித்தவுடன் ஜமீந்தார் கருணாகரர் மேலும் தன் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார்.

இவர் இன்னாரைப் பற்றித்தான் சொல்லுகிறார் என்று கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் புரிந்து கொண்டார்கள். இருந்தாலும், தங்கள் வியப்புணர்ச்சிகளை வெளிப் படுத்தி விடாமல், முழுவதும் சொல்லி முடிக்கட்டும் என்று காத்துக்கொண்டிருந்தார்கள். ஜமீந்தாரின் கதையைப் புரிந்துகொண்டவர்கள் அங்கு இன்னும் இரண்டு பேர் இருந்தார்கள்.

அவர்களும் கதை முழுவதும் முடியட்டும் என்றுதான் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரென்றால், சுந்தரேசனும், அவனுடைய தாயார் குணவதியம்மாளும் தான்.

ஜமீந்தார் மீண்டும் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தபோது அந்த வரவேற்புக்கூடம் முழுவதும் ஒரே அமைதியாக இருந்ததால், அவருடைய குரல் கணீர் என்று ஒலித்தது.

# 23. குணவதியம்மாள் செய்த கலாட்டா

ஜமீந்தார் தன் கதையைத் தொடர்ந்தார் :—

அந்த நண்பனைத் திடீரென்று சந்தித்தால் ஏற்பட்ட ஓர் இன்ப அதிர்ச்சியுடன், அவன் கூறிய இந்தச் செய்தி என்னைத் திகைப்படையச் செய்தது.

'நண்பா, அதெப்படி நீ எங்கள் மாளிகையை விலைக்கு வாங்க முடியும்?' என்று கேட்டேன்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவனுடைய முகத்தில் கோபம் கொந்தளித்தது.

''கருணாகரா, இன்னும் என்னை நீ கையாலாகாதவன் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன் தந்தை தான் என்னை ஏளனமாக மதித்தார் என்றால், உன்னிடமும் அந்தப் போக்கு அப்படியே காணப்படுகிறதே. பெற்றவருக்குப் பிள்ளை யென்பதை அப்படியே காட்டுகிறாயோ?'' என்று கேட்டான்.

''கொஞ்சம் பொறுமையோடு கேள். நீ எவ்வளவு தான் பணம் வைத்திருந்தாலும், உரியவன் விற்க முன்வந்தால்

தானே நீ எதையும் வாங்க முடியும். நான் இப்போது என் மாளிகையை விற்கவேண்டிய அவசியம் என்ன வந்தது?'' என்று கேட்டேன்.

அப்போது தான் அவன் நான் கேட்ட கேள்வியின் பொருளைச் சரியாக உணர்ந்து கொண்டான். பிறகு அவன் என்னிடம் பணிவாகவும் குழைவாகவும் பேச ஆரம்பித்தான்.

''கருணாகரா. நீ என் இளம்பருவத் தோழனல்லவா? என்னுடைய சபதம் நிறைவேற நீ உதவி செய்ய வேண்டிய யது உன் கடமையல்லவா?'' என்று கேட்டான்.

''உண்மைதான். அது என் கடமைதான். ஆனால், நீ எடுத்துக்கொண்ட சபதம் என் தந்தையாருக்கு எதிரானதாக வல்லவா இருக்கிறது? தந்தையின் தோல்வியை ஒரு தனயன் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?'' என்று கேட்டேன் நான்.

அதன் பிறகு அந்த நண்பன் என்னிடம் மாளிகையை விலைக்கு வாங்குவது பற்றி எதுவுமே கேட்க வில்லை. உடனடியாக என்னிடம் போவதற்காகச் சொல்லிக் கொண்டான். அப்போது நான் அவனை நோக்கி, ''நண்பா எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னால் இப்போதுதான் சந்திக்கிறோம். இப்படி நீ வந்தவுடன் புறப்பட்டுச் செல்வது சரியா?'' என்று கேட்டேன். அவனை என் இல்லத்தில் சில நாட்கள் தங்கிப் போக வேண்டுமென்று வற்புறுத்தினேன், ஆனால். அவன் மிகப் பிடிவாதமாகப் போக வேண்டுமென்று கூறினான். கடைசியில் நான் அவனிடம், 'நண்பா, என் மேல் வீண் கோபம்கொள்ளாதே. இருவரும் இருந்து நன்றாகக் கலந்து ஆலோசிப்போம். அதன் பிறகு மாளிகையை யார் வைத்துக் கொள்வது என்ற முடிவு செய்வோம்!'' என்று சொன்ன பிறகுதான் அவன் என் மாளிகையில் விருந்தாளி

யாகத் தங்க ஒப்புக்கொண்டான். என் நண்பனிடம் அவன் என்னைப் பிரிந்து சென்ற இடைக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டேன்.

தன் மனைவியின் கொடுமை தாங்கமாட்டாமல் வீட்டை விட்டு ஓடிப்போன என் நண்பன், நேரே சென்னைக்கு வந்து சிங்கப்பூரிலே, வெள்ளைக்காரத்துரையொருவரிடத்திலே வீட்டுக்குக் காவல் சேவகனாகச் சேர்ந்து தன் வாழ்க்கையைத் தொடங்கினான். நல்ல கல்வியறிவும், எல்லையில்லாத சிந்தனா சக்தியும், இனிய பண்பாடும், உயர்ந்த குணங்களும் உடைய என் நண்பன் அந்த வெள்ளைக்காரத் துரையின் அன்புக்குப் பாத்திரனானான். கடைசியில் அவருடைய கண்காணிப்பிலேயே மெல்ல மெல்ல மேல் நிலைக்கு உயர்ந்த என் அருமை நண்பன் அவருடைய ஆதரவாலும் உதவியாலும் தனக்கென ஒரு கம்பெனியுடையவனாகி விட்டான். தளராத நெஞ்சும் அயராத உழைப்பும் கொண்ட என் நண்பன் தன் கம்பெனியை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடத்தி மிக விரைவில் பெரும் பணக்காரனாகி விட்டான்.

அந்தப் பணத்தைக் கொண்டுதான் இப்போது என் மாளிகையை வாங்கவேண்டும் என்று துடியாய்த் துடித்தான்.

என் நண்பன் வந்து சேர்ந்ததிலிருந்து இரண்டு மூன்று நாட்களாக நாங்கள் இருவரும் மாளிகையைப்பற்றி மறுபடியும் பேசவில்லை. ஆனால், நாங்கள் இருவரும் ஒன்றாகப் பழகத் தொடங்கியதும், எங்களுடைய பழைய நட்பு மறுபடியும் உறுதியாகப் பற்றிக் கொண்டுவிட்டது. மீண்டும் உயிர் நண்பர்களாக நாங்கள் தொடர்பு கொள்ள ஆரம்பித்து விட்டதையுணர்ந்து விட்டோம். அதனால், ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்தும் உள்ளம் கலந்தும் பேச ஆரம்பித்தோம்.

ஒரு நாள் நான் என் நண்பனிடம், "நண்பா, என் மாளிகையை விலைக்கு வேண்டுமென்று கேட்டாயே, அதை வாங்கி என்ன செய்யப் போகிறாய்? உன் மனைவி மக்களுக்குக் கொடுக்கப் போகிறாயா!" என்று கேட்டேன்.

இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே தான் என் நண்பன் சிந்திக்க முற்பட்டான்.

தன் மனைவி மக்கள் எப்படியிருப்பார்களோ. அவர்கள் குணம் எப்படி மாறியிருக்கிறதோ என்று அவன் தெரிந்து கொள்ளவேண்டும் என்றும், அதன் பிறகுதான் தான் மாளிகை வாங்குவது பற்றி முடிவுக்கு வரவேண்டுமெனவும் முடிவுக்கு வந்தான். என் நண்பன் மறைமுகமாகத் தன் குடும்பத்தைப் பற்றி விசாரணைகள் நடத்தியபோது தன் மனைவியோ, மகனோ தன் அன்பைக் கவரக்கூடிய பண்புடையவர்களாக மாறி வர வில்லை என்பதை யறிந்து கொண்டான். அதற்கிடையில் இந்தத் தங்கத்தைப்பற்றி அவன்கேள்விப்பட்டான்.

தங்கம் என்ற ஒரு நல்ல பெண், அன்பும் அறிவும் பண்பும் குணமும் உடைய பெண்ணாக இருந்தும் வறுமையில் வாடும் பெற்றோருக்குப் பாரமாக இருந்து வருவதைக் கேள்விப்பட்ட என் நண்பன், அப்படிப்பட்ட பெண், தன் சொத்துக்களை அனுபவிக்கட்டும் என்று சொல்லி என் கையிலே இந்த உண்டியல் சீட்டைக் கொடுத்து. நீங்கள் உங்கள் மாளிகையை இந்தப் பெண்ணுக்கு விற்பனைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி விட்டான். அதன்படி தான் இப்பொழுது நாம் இந்த மாளிகையைத் தங்கத்துக்கு கிரயம் செய்து கொடுக்கக் கூடியிருக்கிறோம்" என்று ஜமீந்தார் கூறினார்.

"இல்லை, எல்லாம் பொய்! இது ஜமீந்தாரும் இந்த அண்ணாமலைப் பண்டிதரும் சேர்ந்து போடுகிற நாடகம்!

நான் ஏமாளியல்ல! எனக்கு மாளிகையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்!'' என்று வெறிபிடித்தவள் போல் கூவினாள் தங்கம்.

''தங்கம். வலியவருகிற சீதேவியை உதைத்துத் தள்ளாதே!'' என்றார் அண்ணாமலைப் பண்டிதர்.

அப்போது, ''ஜமீந்தார் ஐயா!'' என்று ஒரு கரகரத்த பெண் குரல் கேட்டது. எல்லோரும் அந்தக் குரல் வந்த திசையில் திகைப்புடன் திரும்பிப் பார்த்தார்கள். ஏனென்றால் அந்தக் குரல் மிகவும் கடூரமாய் இருந்தது.

ஜமீந்தாரையா, இப்போது உங்கள் நண்பர் எங்கேயிருக்கிறார்?'' என்று சுந்தரேசனின் தாயார் குணவதியம்மாள் கேட்டாள்.

''ஏனம்மா நீயார் அதைக் கேட்க?'' என்று ஜமீந்தார் கேட்டார்.

''தொட்டுத் தாலிகட்டிய மனைவியையும், பெற்றெடுத்த பிள்ளையையும் வஞ்சிக்க நினைக்கின்ற அந்த மனுஷன் எங்கேயிருக்கிறார் என்று தான் கேட்கிறேன்.'' என்றாள் குணவதியம்மாள்.

''அம்மா, நீ யார்?'' என்று மறுபடியும் கேட்டார் ஜமீந்தார்,

''நான்தான் உங்கள் கைலாயத்தின் மனைவி. இதோ இவன் தான் அவர் பெற்ற பிள்ளை'' என்று சுந்தரேசனைக் காட்டிச் சொன்னாள் குணவதியம்மாள்.

''உங்களை யாரும் இங்கே யழைக்கவில்லையே?''என்று கேட்டார் ஜமீந்தார்.

"யார் எங்களை அழைக்க வேண்டும்? உரிமையில்லாத இடத்திற்கா நாங்கள் வந்திருக்கிறோம்?" என்று மிடுக்காகவே கேட்டாள் குணவதியம்மாள்.

அவளையும் அவளுடைய பேச்சையும் பார்த்தபோது அவளை ஒரு பெண் என்று மதிக்கும்படியாக இல்லை.

ஆனால் அவளுடைய உருவத்தைக் கண்டவர்கள் அவளிடம் இப்படிப்பட்ட கொடுமையான குணங்கள் இருப்பதைக் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது,

அவ்வளவு வயதான பின்னாலும், அவளுடைய அழகு மெருகு குலையாமல் இருந்தது. அவளுடைய சிவந்த மேனியும், களை பொருந்திய முகமும், அதற்குமேல் அவள் செய்துகொண்டிருந்த அலங்காரங்களும் சேர்ந்து அவளை, ஒரு சுந்தராங்கினியாக்கிக் காட்டிக் கொண்டிருந்தன. ஆனால், இவ்வளவு மேன்மையான அழகுடைய அந்தப் பெண் மணிக்கு ஏன் இப்படிப்பட்ட கொடூர குணமும் கரகரத்த குரலும் அமைந்தது என்று எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை அங்கு கூடியிருந்தவர்களால்.

அழகு இருக்குமிடத்தே ஆபத்தும் இருக்கும் என்று சான்றோர் சொன்ன வாக்குக்குச் சரியான சான்றாக இருந்தாள் குணவதியம்மாள்.

ஜமீந்தார் கருணாகரரிடம் அந்தப் பகுதி மக்கள் யாரும் கைகட்டி தலை வணங்கிப் பேசுவதுதான் வழக்கம். பெண்களோ அவர் எதிரில் நின்று பேசக் கூடத் துணிய மாட்டார்கள். அவ்வளவு மரியாதையாயிருந்தது. இதெல்லாம் ஜமீந்தார் விரும்பியதில்லை யென்றாலும், பரம்பரை பரம்பரையாக அவருடைய இல்லத்தினருக்கு அப்பகுதி மக்கள் இப்படிப்பட்ட மரியாதைகளைக் காட்டி வந்தார்கள்,

பணிவாகப் பேசுகின்றவர்களையே மிகுதியாகக் கண்டு வந்த ஜமீந்தார் கருணாகரர். குணவதியம்மாளின் கடுகடுப்பான பேச்சைக் கேட்டதும் பிரமித்துப் போனார். "இப்படியும் ஒரு பெண் இருப்பாளா?" என்று திகைப்படைந்தார். கடைசியில் அவளை வாயடக்குவதற்காக, "அம்மா, உன் கணவர் என்று நீ சொல்லுகிற அந்த மனிதர் சென்னையில் இருக்கிறார். ஆகவே, அவரிடம் போய் நீ கூற வேண்டியவற்றைக் கூறிக்கொள்" என்றார்.

ஜமீந்தாரையா! என்னை ஏமாற்றி விடலாமென்று நீங்கள் எண்ணியிருந்தால் அது நடக்காது. அந்த மனிதர் இங்கே வந்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம், அவர் எந்த உருவத்தில் எந்தப் பெயரில் எங்கே மறைந்திருந்தாலும் நான் கண்டுபிடித்துவிடுவேன்" என்று குணவதியம்மாள் திடமான குரலில் கூறினார்.

இவள் ஏதோ கலாட்டாச் செய்ய வந்திருக்கிறாள் என்பதைக் கூட்டத்தில் இருந்தவர்கள் புரிந்துகொண்டார்கள்.

எவர் மனத்தையும் தன் பேச்சாலேயே மாற்றும் இயல்பு படைத்தவரான அண்ணாமலைப் பண்டிதர், இவளுக்குத் தகுந்த பதிலளித்து, அமைதிப்படுத்தாமல் இருக்கிறாரே என்று எண்ணினார்கள்.

அதே சமயம் குணவதியம்மாளும் அண்ணாமலைப் பண்டிதரை உறுத்துப் பார்த்தாள்.

கடுமையான அவளுடைய பார்வையைக் கண்டு அண்ணாமலைப் பண்டிதர் எவ்விதமான கவலையும் அடையவில்லை.

"குணவதி. பேசாமல் உட்கார்!" என்று மிக உரிமையுள்ளவர்போல் அதட்டலான குரலில் கூறினார். பிறகு அவர்

கூடியிருந்த விருந்தினர்களை நோக்கி, "அன்பர்களே, ஒரு காரியம் நடைபெறும்பொழுது அதைக் கெடுப்பதற்கென்றே வந்ததுபோல் இவள் இடையிட்டுப் பேசியதை நீங்கள் கண்டீர்கள். ஆனால், இவள் பேரில் குற்றமோ. தவறோ இருப்பதாக எனக்குப் படவில்லை-ஆனால், இவளுடைய பெயருக்கேற்ற குணம் இல்லாததால் வந்ததுதான் இவ்வளவும்!" என்றார்.

இதைக் கேட்டதும் குணவதியம்மாள், சுந்தரேசன் பக்கம் திரும்பி "பாரடா! உன் அம்மாளைப் பற்றிப் பேசுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாயே!" என்று சொல்லிப் புலம்பி அழத் தொடங்கி விட்டாள்.

"கொஞ்சம் பொறு அம்மா! என்னதான் நடக்கிறதென்று பார்க்கலாம்!" என்று அருவருப்பான குரலில் கூறி அவளை அடக்கினான் சுந்தரேசன் அவன் பார்வைமுழுவதும் தங்கத்தின் மேலேயே பதிந்திருந்தது. அவனுடைய சிந்தனையில் ஏதேதோ திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன.

அண்ணாமலைப் பண்டிதர் தொடர்ந்து பேசினார்.

"அன்பர்களே! ஜமீந்தார் கருணாகரர் அவர்கள் தம் நண்பரைப் பற்றிக் கூறிய கதையைக் கேட்டீர்கள். அந்த நண்பர், தம்முடைய மனைவி மக்களின் கொடுமை தாங்க மாட்டாமல்தான் வீட்டை விட்டு ஓடினார் என்று சொன்னார். இந்தக் குணவதியோ தான்தான் மனைவியென்று உரிமை கொண்டாடுகிறாள். இவள் எப்படிப்பட்டவள் என்பதையும் நீங்கள் ஓரளவு தெரிந்துகொண்டீர்கள். இப்படிப் பட்டவளோடு அவர் எப்படி வாழ முடியும்? இப்படிப் பட்டவளுக்கு அவர் எப்படித் தன் சொத்தைக் கொடுக்க நினைப்பார், மேலும் அவர் தான் பெற்றெடுத்த மகனுக்காவது ஏதாவது கொடுக்கலாமாவென்று எண்ணினார். ஆனால்,

மூதாதையர் வழியாக அவருக்குக் கிடைத்த-தன் மனைவி யின் பொறுப்பில் இருந்த ஏராளமான செல்வங்களையெல் லாம் கரைத்தவன் இந்த மகன் என்று தெரிந்து கொண்ட பின்னால், அவனுக்கு எப்படித் தன் சொத்தைக் கொடுக்க முன் வருவார். தன் தந்தையைத் தந்தையென்று தெரிந்து கொண்ட பின்னாலும் அவரிடம் அன்போ, மரியாதையோ பேருக்குக் கூடக் காட்டாதவனுக்கு, அவர் ஏன் தன் சொத்தைக் கொடுக்க வேண்டும் என்கிறேன்?'' என்று கேட்டார் அண்ணாமலைப் பண்டிதர்.

இதைக் கேட்டதும் சுந்தரேசன் ஆவேசத்தோடு எழுந்து, ''எங்கள் உரிமையை நிலைநாட்ட வந்தோமே தவிர உங்கள் சொத்துக்காக இங்கே யாரும் ஓடி வரவில்லை. பெரிய சொத்துச் சேர்த்துவிட்டாராம் சொத்து! எல்லாம் நான் கோர்ட் மூலமாகப் பார்த்துக்கொள்கிறேன். வா. அம்மா போகலாம்!'' என்று தன் தாயாரான குணவதியம்மாளின் கையைக் கரகரவென்று இழுத்துக்கொண்டு வெளியேறினான் சுந்தரேசன். குணவதியம்மாளோ, அங்கிருந்து போகப் பிரிய மில்லாதவளாயிருந்த போதிலும். தன் மகன் கோர்ட்டு மூலம் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிய தைரிய மொழிகளைக் கேட்டு, ''சரி, பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்ற எண்ணத்துடன் அவனைத் தொடர்ந்து போனாள்.

''போடா, போ! என் சொத்தில் உனக்கு ஒரு காலணாக் கூடக் கிடைக்காது. இது உன் பாட்டன் சம்பாதித்த சொத்தா யிருந்தால்தான் கோர்ட் மூலம் பெறலாம். அத்தனையும் நான் தானாகப் பாடுபட்டுச் சம்பாதித்த சொத்து'' என்று உறுமினார் அண்ணாமலைப் பண்டிதர். அவர் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்து விட்டன.

ஆத்திரத்தில் அவர் தாம் இவ்வளவு நேரமும் மறைத்து வைத்துப் பேசி வந்ததை மறந்துவிட்டார், தான்தான் அவன்

தந்தையென்பதைக் காட்டிக் கொண்டுவிட்டார். இதை அவர் உணரவில்லை. ஆனால், மரகதம்மாள். "அண்ணா, நீங்கள்தானா?" என்று ஓடிவந்து அவரைக் கட்டியணைத்துக் கொண்டதைக் கண்ட பிறகுதான் அவர் தன் தவற்றையுணர்ந்தார்.

அண்ணாமலைப் பண்டிதர் தான் சித்திர நல்லூர் கயிலாயமா என்று அங்கு கூடியிருந்தவர் அனைவரும் வியப்படைந்தார்கள். அவர் தன் மாமன் என்பதையறிந்த தங்கம் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. கந்தசாமி வாத்தியார், தாம் இவ்வளவு பழகியும் தம் மைத்துனரை இன்னார் என்று தெரிந்துகொள்ள வில்லையே என்று வருந்தினார். அதே சமயம் தன் அன்புக்கும் மரியாதைக்கும் மட்டுமல்லாமல் உறவுக்கும் உரியவராக அவர் இருப்பதை அறிந்ததால் ஆனந்த பரவசத்தில் மூழ்கினார்.

பிறகு அண்ணாமலைப் பண்டிதர் அங்கு கூடியிருந்தவர்களுக்குத் தன்னைப் பற்றி விளக்கமாகச் சொல்ல தொடங்கினார்.

நண்பர்களே! சிங்கப்பூருக்கு நான் சென்று வந்த கதையை ஜமீந்தார் அவர்கள் கூறினார்கள். நான் சிங்கப்பூரிலேயே தான் இருந்துவிட எண்ணினேன். ஆனால், பெரிய ஜமீந்தாரிடம் செய்த சபதத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுத்தல் என் நெஞ்சில் இருந்து கொண்டிருந்தது. அதற்காகவேதான் இந்த நாட்டுக்குப் புறப்பட்டு வந்தேன். ஆனால், என் தோழர் கருணாகரர் கேட்ட கேள்வி தான் என்னை இவ்வாறு மாறு பெயரில் உலவச் செய்தது. "தன்னந்தனியாளான உனக்கு ஏன் இத்தனை பெரிய மாளிகை?" என்று கேட்டார். அத்துடன், உன் மனைவி மக்களுடன் திரும்பவும் சேர்ந்து வாழ எண்ணமிருக்கிறதா?" என்றும் கேட்டார்.

நான் சிந்தித்தேன்.

அவர்கள் திருந்தியிருந்தால், ஏன் அவர்களும் கூடிவாழக் கூடாது? என்று. ஆனால் அதையறிந்து கொள்ள நான் மறைமுகமாக வாழ்வதென்று முடிவு செய்தேன். மறைமுகமான வாழ்க்கையிலிருந்து நான் அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்ட செய்திகள் என் மனத்துக்குத் திருப்தியளிக்கவில்லை. அதே சமயம் நான் என் தங்கை வீட்டைப் பற்றிக் கேள்விப் பட்டபோது அவர்கள் பெரும் வறுமையில் வாடுவதாக அறிந்தேன். நல்லவர்களான அவர்களுக்கு என் சொத்தை யளித்து நலமாக வாழச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

ஜமீந்தார் அவர்களிடம் நான் அவர்களைப் பற்றிப் பேச்சு எடுத்தபோது, தங்கத்தைப் பற்றி குறிப்பிட்டேன். அவர்களும், ஜமீந்தாரிணியம்மாளும், தங்கத்தைப் பார்க்க விரும்பினார்கள். பிள்ளை குட்டியில்லாத ஜமீந்தார் அவர்கள், தங்கத்தை நேரில் சந்தித்து, அவளுடைய குண நலன்களை யறிந்து கொண்ட பின், தங்கத்திற்கு தன் மாளிகையைச் சும்மா கொடுக்கவே தயாராயிருப்பதாகக் கூறினார். ஆனால், நான் விலைக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதன்படிதான் இந்த ஏற்பாட்டைச் செய்து முடித்தோம்.

"தங்கம், உன் மாமனுடைய அன்பளிப்பாக இந்த மாளிகையை ஏற்றுக் கொள்ளச் சம்மதந்தானே?" என்று கேட்டார். அண்ணாமலைப் பண்டிதர்.

தங்கம் வெட்கத்தோடு தலைகுனிந்து பேசாமலிருந்தாள்.

''அண்ணா, ஜமீந்தாரையா காலத்திற்குப் பிறகு வேண்டுமானால், இந்த மாளிகையை வாங்கிக்கொள்ளலாமே இப்போது வேண்டாம்.'' என்று மெதுவாகக் கூறினாள் மரகத அம்மாள்.

இது ஜமீந்தார் கருணாகரர் காதில் விழுந்து விட்டது. ''மரகதம், நான் பரம்பரையாக இருந்து வந்த மாளிகையை விட்டு வெளியேற்றப் படக்கூடாதென்று சொல்லுகிறாள் போலிருக்கிறது! அதைப் பற்றிக் கவலையில்லை. உள்ள படியே நான் இந்த மாளிகையை விற்றுவிட்டு ஒரு தொழிற் சாலை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். அதற்குத் தோதாகக் கயிலாயமும் வந்த சேர்ந்தான்!'' என்று சொல்லி மரகத அம்மாளுடைய மனச் சஞ்சலத்தைத் தீர்த்துவைத்தார் ஜமீந்தார்.

பிறகு அவர்கள் ஊர்ப் பெரியவர்கள், அம்பலகாரர் இன்ஸ்பெக்டர், வழக்கறிஞர் ஆகியோர் முன்னிலையில் தங்கத்தின் பெயருக்கு அந்த மாளிகையைக் கிரயம் செய்து கொடுத்து, கிரயப் பத்திரத்தை நீதி மன்றத்தில் பதிவு செய்து கொடுக்கும்படி வழக்கறிஞரிடம் கொடுத்தார்கள்.

விருந்தினர்கள் எல்லோரும் மாலைச் சிற்றுண்டிக்குப் பின் விடை பெற்றுக் கொண்டு தத்தம் வீடுசென்றார்கள். ஜமீந்தார் மாளிகையில் நடந்த அதிசய நிகழ்ச்சி பற்றியே அந்த வாரம் முழுவதும் ஊரெங்கும் பேச்சாயிருந்தது.

மாலையில், தங்கமும் ராதாவும் மாளிகையைச் சுற்றிலு முள்ள தோட்டப் புறத்திற்குச் சென்றார்கள்.

இருவரும் போய்ப் புல் தரையில் உட்கார்ந்த பிறகு தங்கம் ராதாவை நோக்கிக் கேட்டாள்.

''ராதா! எல்லாம் ஒரு கனவு போல் இல்லையா!''

"ஆம்! தங்கம்! என்னால் இப்போது நடந்த நிகழ்ச்சிகளையே நம்ப முடியவில்லை. யாரோ ஒரு பண்டாரம் போல் இருந்த பண்டிதர் இப்படித் திடீரென்று பணக்காரரானார் என்ற செய்தி எனக்கு நம்பமுடியாததாகத் தோன்றுகிறது. அவர் சிங்கப்பூருக்குப் போய் வந்ததாக எனக்குத் தோன்றவில்லை!"

"அப்படியானால்... ?"

"அவர் உன் மாமனாக இருக்கக் கூடும் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால், அவரே சம்பாதித்ததாக இந்தப் பொருள் இருக்குமா என்பது தான் என் சந்தேகம். ஜமீந்தார் தான் அவர்மேல் உள்ள அன்பு காரணமாக இந்த மாளிகையைச் சும்மாவே கொடுத்துவிட்டார் என்று நான் நினைக்கிறேன்" என்றாள் ராதா.

"ராதா எல்லாம் எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது! எது பொய் எது உண்மை என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அண்ணாமலைப் பண்டிதர் என்னிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லை என்பதை நான் கண்டிருக்கிறேன். ஆனால், அவர் உள்ளத்தில் அன்பிருந்ததா இல்லையா என்று நான் எப்படித் தெரிந்திருக்க முடியும். ஜமீந்தாரும் ஜமீந்தாரிணியம்மாளும் காட்டிய அன்பையெல்லாம் நினைத்துப் பார்த்தால், அப்போது அவை போலி அன்பு போலத் தான் தோன்றின. ஆனால், இன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால், அது உண்மையான அன்பாக இருக்க வேண்டும் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. எல்லாம் போகட்டும், சுந்தரேச அத்தானுக்கு இப்படி ஒரு தாயார் வாய்த்திருக்க வேண்டாம்!" என்றாள் தங்கம்.

"அப்படி ஒரு மனைவியும் வாய்த்திருக்க வேண்டாம்" என்று தொடர்ந்தாள் ராதா.

"சுந்தரேச அத்தான் நல்லவர்தான். அவருடைய தாயாரும் மனைவியும் தான் அவரைக் கெட்டவராக்கி விட்டார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது." என்றாள் தங்கம்.

"ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் விருப்பத்தைக் கவர்ந்தவர் நல்லவராகத்தான் தோற்றமளிப்பார்!" என்று ராதா சொன்னாள்.

"ராதா, கேலியா செய்கிறாய்?" என்று கேட்டாள் தங்கம்.

ராதா பதிலளித்தாள்.

"இல்லை, உண்மையாகத்தான் சொல்கிறேன். அந்த சுந்தரேசனைப் பார்த்ததிலிருந்தே எனக்குப் பிடிக்கவில்லை. ஆள் என்னவோ அழகாகஇருக்கிறாரே தவிர, கொஞ்சங்கூடப் பண்பில்லை. பெண்களை வசப்படுத்தப் படித்திருக்கிறாரே தவிரப் பெரியோர்கள் முன்னிலையில் பணிவாக நடக்கவே பழகவில்லை. அவர் இதயத்தில் அன்புக்கு இடமில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. பணம் பணம் செலவுக்குப் பணம்! இதே குறிக்கோளாகத் தான் இருப்பார் போலிருக் கிறது. அவர் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தது கூட அந்த அண்ணாமலைப் பண்டிதரை உளவறிவதற்காகத்தான் இருக்கும். அண்ணாமலைப் பண்டிதர்தான் தன் தந்தை கயிலாயமாக இருக்கவேண்டும் என்று சந்தேகப்பட்டு அவரை நோட்டம் பார்க்கவே அவர் அங்கு வந்திருக்கவேண்டு மென்றே எனக்குத் தோன்றுகிறது! தங்கம், நீ அவரை மறந்துவிடுவதுதான் நல்லது!" என்று சொன்னாள் ராதா.

"ராதா, உண்மையாகத்தான் பேசுகிறாயா?" அவர் நல்லவரில்லையா?" என்று திகிலோடு கேட்டாள் தங்கம்.

# 24. காட்டுப் பிள்ளையார் கோயில்

தன் அத்தான் நல்லவரல்ல என்று கேள்விப்பட்ட தங்கத்திற்கு வருத்தமாயிருந்தது. ஆனால், ராதா தான் கூறிய செய்தியை மீண்டும் உறுதிப்படுத்திப் பேசினாள்.

"ஆம்! முன்னெல்லாம் அவரைப் பார்த்தபோது எனக்கு இந்த எண்ணம் ஏற்படவில்லை. இப்போது அவருடைய தாயாருடன் அவரைச் சேர்த்துப் பார்த்த போதுதான், அவர் இப்படிப்பட்டவராய் இருக்கவேண்டும் என்று தோன்றியது. மேலும் ஊரில் ஒருவர் கூட அவரைப்பற்றி நல்லெண்ணத்தோடு பேசவில்லை. அவரும் அவர் தாயாரும் ஒரே மாதிரி. அவருடைய தாயார் எவ்வளவு அழகாயிருக்கிறாளோ அவ்வளவு கொடிய நெஞ்சினளாக இருக்கிறாள். அவள் மகனும் அப்படித்தான். ஆள் பார்க்க அழகாகத் தான் இருக்கிறார். ஆனால் கொஞ்சம் கூடப் பண்பாடு என்பதேயில்லை. தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்ற சொல் இவர்கள் விஷயத்தில் நூற்றுக்கு நூறு அப்படியே பொருந்தும்" என்று வெறுப்போடு கூறினாள் ராதா.

தங்கம் அன்று வரவேற்புக்கூடத்தில் சுந்தரேசன் நடந்து கொண்ட முறைகளைத் தன் மனத்தகத்தே கொண்டு வந்து

நிறுத்திப் பார்த்தாள். ராதா சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கும்போலத் தோன்றியது. அடுத்த கணம் அவன் தன்னையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்ததை எண்ணிப் பார்த்தாள். அவன் தன்மீது கொண்டுள்ள பற்று இன்னும் குறையாதிருப்பதுபோல் தோன்றியது. ஊருக்கெல்லாம் அவன் கெட்டவன்! ஆனால், தனக்கும் அவன் கெட்டவன் தானா? தன்னிடத்தில் நல்லவனாக நடந்து கொள்ள மாட்டானா? தன்னால் அவனுடைய வாழ்விலே ஒரு மாற்றத்தை யுண்டுபண்ணமுடியாதா? இவ்வாறு குழம்பிக் கொண்டிருந்தது அவள் நெஞ்சு.

'தங்கம், இந்தத் தோட்டத்தில் எந்த இடத்தில் மல்லிகைக் கொடி கொண்டுவந்து நடப்போகிறாய்?'' என்ற கேள்வியைக் கேட்டு இரண்டு பெண்களும் திரும்பிப் பார்த்தார்கள். அந்தக் கேள்வி ஒரு பெண்ணின் மென்மையான ஆனால் தளர்ந்த குரலாயிருந்தது. வந்த பெண்மணியைக் குறித்து, "இது யார் தங்கம்?'' என்று கேட்டாள் ராதா.

''ஜமீந்தாரிணி பெரியம்மாள்'' என்று தங்கம் சொன்னாள். ஜமீந்தாரிணியம்மாள் அவர்களின் அருகில் வந்து சேர்ந்தாள்.

ஜமீந்தாரிணியம்மாளைக் கண்டதும் இரு பெண்களும் எழுந்து நின்று அவளை வரவேற்று மரியாதை செய்தார்கள். ஜமீந்தாரிணி பெரியம்மாள் அவர்களை மீண்டும் அமரச் சொல்லிவிட்டுத் தானும் புல் தரையின்மீது உட்கார்ந்தாள்.

''தங்கம், இனிமேல் இந்த மாளிகை உனக்குச் சொந்தமாகிவிட்டது. ஆகையால் நீ இங்கேயே ஒரு மல்லிகைப் பந்தல் உண்டாக்கி வைத்துக்கொண்டால்தான், அடிக்கடி பழைய வீட்டு நினைவு வராமல் இருக்கும்!'' என்று பெரியம்மாள் கூறினாள்.

"ஏனம்மா, புதிதாக வைக்கிற இந்த மல்லிகைப் பந்தலைப் பார்த்தவுடன், அந்தப் பழைய மல்லிகைப் பந்தல் நினைவு வந்து பழைய வீட்டு நினைவும் வந்துவிடாதா?' என்று இடைமறித்துக் கேட்டாள் ராதா.

'இவள்யாரடி? பெரியகுறும்புக்காரியாக இருக்கிறாள்?'' என்று பெரியம்மாள் கேட்டாள்.

"என் தோழி ராதா, பக்கத்து வீடு" என்று அறிமுகப் படுத்தி வைத்தாள் தங்கம்.

"இவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால், வேறு எந்த நினைவும் வராது போலிருக்கிறதே!'' என்று ஜமீந்தாரிணி பெரியம்மாள் கூறியதும் தங்கம் வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.

சிரித்துக் கொண்டிருந்த தங்கம் சட்டென்று அடக்கிக் கொண்டு, "ஏன்டி ராதா, நீயும் இங்கேயே வந்து இருந்து விடேன்'' என்று கேட்டாள்.

"எத்தனை நாளைக்கு அவள் உன் கூடவே இருக்க முடியும். அவளுக்குக் கலியாணம் ஆகிக் கணவன் வீட்டுக்குப் போக வேண்டாமா என்ன?'' என்று ஜமீந்தாரிணியம்மாள் கேட்டாள்.

இதற்கு அந்த இரண்டு பெண்களும் எவ்விதமான பதிலும் அளிக்கவில்லை.

பிறகு அங்கு சிறிது நேரம்வரை அமைதி சூழ்ந்திருந்தது.

அமைதியைக் கலைத்துக் கொண்டு அங்கு வந்த தோட்டக்கார சுப்பையா, "தங்கம்மா, உங்களைப் பண்டிதரையா கூப்பிடுகிறார்கள்'' என்று சொன்னான்.

தங்கம் எழுந்து, ஜமீந்தாரிணியம்மாளின் அனுமதியுடன் சுப்பையாவைத் தொடர்ந்து சென்றாள். அதேசமயம், தோட்டத்து மரஞ்செடிகளிடையே சலசலப்பு ஏற்பட்டது யாரோ ஒருவன் குனிந்து ஓடுவது போல் தெரிந்தது. ஜமீந்தாரிணியம்மாள் திகிலடைந்து, 'யாரது? சுப்பையா பார்!'' என்று கத்தியவுடன், சுப்பையா அந்த மனிதனைத் தொடர்ந்து ஓடினான். ஆனால், சுப்பையா அவனைச் சரிவர அறிந்து கொள்வதற்குள் அவன் வாசற் கதவு தாண்டி நெடுந்தூரம் ஓடிவிட்டான். சுப்பையா திரும்பவந்து தகவல் சொல்வதற்குள் அவர்கள் எல்லோரும் மாளிகைக்குள் வந்து சேர்ந்து விட்டார்கள்.

தங்கம் அண்ணாமலைப்பண்டிதர் இருந்த அறைக்குச் சென்றாள் அங்கு அண்ணாமலைப் பண்டிதர் மட்டுமே யிருந்தார்.

தங்கம் அவரிடம் அஞ்சி அஞ்சிக் கொண்டே மெல்லச் சென்றாள்.

''தங்கம், வா அம்மா!'' என்று அழைத்த அண்ணாமலை பண்டிதரின் வார்த்தைகளில் இதற்கு முன் எப்போதுமே காணப்படாத கனிவு இருந்தது.

அந்தக் கனிவு தங்கத்திற்குப் புதிய மன உணர்ச்சியை—அன்பு கலந்த ஒருவிதமான பற்றுதலை—அவர்பால் ஏற்படுத்தக் கூடிய சக்தியுடையதா யிருந்தது.

தங்கம் வந்தவுடன் அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் சொல்லிய பண்டிதர், அவளைக் கூர்மையாக உற்று நோக்கியபடி, ''தங்கம், உன் மனம் வருந்தும்படி நான் நடந்திருந்தால் அதை மன்னித்து மறந்துவிடுவாயா!'' என்று கேட்டார்.

உடனே தங்கம் பதறியெழுந்து அவர் காலைப் பிடித்துக் கொண்டு "ஐயோ மாமா அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!" என்று துயரத்தோடு கூறினாள்.

"தங்கம், நான் எதற்காக உங்களிடம் எல்லாம் உண்மையைச் சொல்லாமல் இருந்தேன் தெரியுமா?" என்று கேட்டார் பண்டிதர்.

தங்கம் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதையே ஆவலுடன் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள்.

"தங்கம், நான் என் வாழ்க்கையிலே சுகத்தைக் கண்டதில்லை. அன்புக்கினியவளாகிய ஒரு மனைவியை அடைந்தும் நான் என் ஆசையின் காரணமாக அவளுடன் இருந்து வாழ்க்கை நடத்தாமல் கெடுத்துக் கொண்டேன். பாதகியான ஒருத்தியை இரண்டாவதாக மணம்புரிந்து கொண்டு என் வாழ்க்கையை நச்சுக் குழியில் வீழ்த்திக்கொண்டேன். அந்தக் குழியினின்றும் தப்பி அயல்நாடு சென்றவன், வாழ்க்கையில் ஒரு சுகத்தையும் காணவில்லையென்றாலும், வாழ்க்கையைச் சுகப்படுத்தக்கூடிய செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு வந்துவிட்டேன். இனி, இந்த செல்வத்தையெல்லாம் நான் அனுபவிக்க முடியாது. ஏனென்றால் எனக்குக் காலம் நெருங்கிவிட்டது" என்று சொல்லிக் கொண்டே வரும்போது, "அப்படிச் சொல்லாதீர்கள் மாமா! நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து சீரும் சிறப்புமாய் இருக்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் எல்லோரும் ஆனந்தமாக இருப்போம்!" என்று சொன்னாள் தங்கம்.

"தங்கம் உனக்கு நல்ல மனசு. அதனால்தான் சாகப் போகிற என்னையும் வாழ்த்துகிறாய். இருக்கட்டும் நான் சொல்வதைக் கேள். நான் இன்னும் நெடுநாள் இருக்கப் போவதில்லை. அதற்குமுன் நான் பாடுபட்டுச் சேர்த்த

சொத்தெல்லாம், நல்லவர் கையிலே சேர்ந்து அவர்கள் நன்றாக வாழ்வதைப் பார்த்துவிட்டுச் சாக வேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்காகத் தான் உன் பெயருக்கு இந்த மாளிகையைக் கிரயம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தேன். இனிமேல் பாங்கியில் உள்ள என் பணத்தை யெல்லாம் உன் பெயருக்கு மாற்றவேண்டிய வேலையொன்று பாக்கியிருக்கிறது. அதைச் செய்து முடித்துவிட்டு உனக்கும் ஒரு திருமணத்தைச் செய்து வைத்து விட்டால் அப்புறம் நான் நிம்மதியாகச் சாவேன். தங்கம், நான் உன் மாமன் அல்லவா? உனக்குத் தருந்த மாப்பிள்ளை தேடித்தர வேண்டியது என் பொறுப்பல்லவா? ஏன் தங்கம், நான் சொல்லுகிற மாப்பிள்ளையை நீ திருமணம் செய்து கொள்வாயா?'' என்று கேட்டார் கயிலாயம்.

அவர் என்ன சொல்லப் போகிறார்? யாரையாவது மனத்திற்குள் முடிவு செய்து வைத்துக் கொண்டு தான் பேசுகிறாரா என்பது தெரியாமல் தங்கம் திகைத்தாள்.

தங்கத்திற்கு யாராக இருந்தாலும், தன் விருப்ப மில்லாமல் ஒருவருக்குத் தான் கட்டிக் கொடுக்கப் படுவ தென்பது பிடிக்கவில்லை. அது பொம்மைக் கலியாணம் என்பது அவள் நினைப்பு. இன்னும் எத்தனையாண்டுகள் ஆனாலும், தனக்கு பிடித்தமாக உள்ள மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்வது என்று அவள் உறுதிபூண்டிருந் தாள். ஆனால், அத்தான் சுந்தரேசனைப் போல் யாரேனும் தன் இதயத்தில் இனி இடம் பெற முடியுமா என்பது அவளுக்குச் சந்தேகமாகவே யிருந்தது. இப்படியெல்லாம் ஓடிக் கொண்டிருந்த மனக்குதிரையின் பின்னாலேயே தங்கத் தின் எண்ணெணங்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தன. அதை ஓரளவு யூகித்துணர்ந்த அண்ணாமலைப் பண்டிதர், 'தங்கம், உன்னுடைய மனக்கருத்துக்கு விரோதமாக நான்

மாப்பிள்ளை யாரையும் கொண்டுவந்து நிறுத்தி விடுவேன் என்று நீ பயப்பட வேண்டாம். ஆனால், நான் சாவதற்கு முன்னால் நீ திருமணம் செய்துகொண்டு நலமாகஇருப்பதைப் பார்த்து விட்டுச் சாகவேண்டும் என்பதுதான் என் ஆசை!'' என்று கூறினார்.

தங்கம் ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தாள்.

தங்கம், சுந்தரேசனிடம் காதல் கொண்டிருந்தவள் என்பது அண்ணாமலைப் பண்டிதருக்கு ஏற்கனவே தெரியும். ஆகையால், சுந்தரேசனைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைப்பதில்லை என்று முடிவு கட்டியிருக்கிறாளோ என்னவோ என்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது போலிருக்கிறது. அதையும் தெளிவு படுத்திக் கொள்வதற்காக அவர் அந்தக் கேள்வியையும் கேட்டு வைத்தார்.

''தங்கம், திருமணமே வேண்டாம் என்று வைராக்கியம் ஏதாவது வைத்திருக்கிறாயா?''

அண்ணாமலைப் பண்டிதரின் கேள்வியைக் கேட்டுத் தங்கம் மென்மையாகப் புன்னகை புரிந்தாள்.

அந்த மென்மையான புன்னகையைக் கொண்டே அவளுடைய மனக்கருத்தையும் புரிந்து கொண்ட அண்ணாமலைப் பண்டிதர் தம் சந்தேகம் சரியானதல்ல என்று முடிவு செய்து கொண்டார்.

''தங்கம், அடுத்த வாரம் நாம் சென்னைக்குப் போக வேண்டும். அங்கே போய் ஆகவேண்டிய காரியங்களை முடித்துக் கொண்டு திரும்பி வர ஒரு மாதம் ஆகலாம். ஆதலால் நீ வருகிற வெள்ளிக்கிழமையன்று சென்னைக்குப் புறப்படத் தயாராயிரு!'' என்று கூறினார். தங்கம், இது வரை சென்னைக்குச் சென்றது கிடையாது. இப்போது

செல்லவேண்டும் என்று அவர் கூறியதும் அவளுக்கு அது மகிழ்ச்சி தருவதாகவேயிருந்தது. ஆனால், தன் தாய் தந்தையரைப் பிரிந்து ஒருமாதம் வரை எப்படி இருக்க முடியும் என்று அவளுக்கு மலைப்பாயிருந்தது. ஆனால் அண்ணாமலைப் பண்டிதர் தொடர்ந்து சொன்ன சொற்கள் அவளுடைய மலைப்புணர்ச்சியை விலக்கி விட்டன. "மரகதமும் சென்னைக்கு வந்ததில்லை. அவளையும் கூட்டிக் கொண்டு போவோம். உன் தோழி ராதாவும் வேண்டு மானால் வரட்டுமே!" என்றார். கயிலாயம் கடைசியாகச் சொன்ன கருத்து தங்கத்துக்கு நிரம்பப் பிடித்திருந்தது. சென்னையில் புதிதுபுதிதாகத் தான் காணப் போகும் காட்சிகளைப் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கொள்ள ராதா இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்!

அதன் பிறகு தங்கம், கயிலாயத்தினிடமிருந்து மீண்டு வந்து மற்றவர்களோடு கலந்துகொண்டாள்.

தங்கம் மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு வந்ததைக் கண்ட ராதா, அவள் மாமனிடம் போய் வந்த காரியத்தை அறிந்துகொள்ள ஆவலுடையவள்போல் அவளை நோக்கி னாள். தங்கமும் ராதாவைக் கைகாட்டி அழைத்தாள். இருவரும் ஒரு மூலைக்குச் சென்றவுடன், தங்கம் நடந்த பேச்சுக்களைக் கூறி, ராதாவையும் தன்னுடன் சென்னைக்கு வரும்படி அழைத்தாள்.

ராதா தன் தந்தையிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வருவதாகக் கூறினாள்.

மறுநாள் காலையில் ராதா, நெய்யூருக்குத் திரும்பி விட்டாள். ஜமீந்தாரும் ஜமீந்தாரிணியம்மாளும்கூடச் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள்.

ஜமீந்தார் புறப்படும்போது, "தங்கம், எனக்குப் பிள்ளை குட்டி கிடையாது. நீதான் என் மகள்போல். உனக்கு இந்த மாளிகையை இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆனால், கயிலாயம் விடவில்லை. இருந்தாலும் நீயே என் வாரிசாக இந்த மாளிகையில் இருந்து நலம் பல பெற்று வாழ வாழ்த்துகிறேன்!" என்று உருக்கமாகக் கூறி விட்டுச் சென்றார்.

மாளிகையில் இருந்த வேலைக்காரர்களில் பல பேரைக் காரியக்காரர் அனுப்பி வைத்துவிட்டார். தேவையான நாலைந்து பேரை மட்டும் வைத்துக்கொள்ள அண்ணாமலைப் பண்டிதரிடம் அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டார். தோட்டக்காரச் சுப்பையா உட்பட ஐந்து வேலைக்காரர் களும், அண்ணாமலைப் பண்டிதர், கந்தசாமி வாத்தியார், மரகத அம்மாள், தங்கம் ஆகியோரும் தான் மாளிகையில் இருந்தார்கள்.

பொழுது மெல்லெனப் போய்க் கொண்டிருந்தது. பெரியவர்கள் ஏதேதோ வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். தங்கத்திற்கு அங்கே பொழுது போவதே அரிதாயிருந்தது. மாலைப் பொழுது வந்ததும் அவள் மாளிகைக்குள் இருக்க முடியாமல் தோட்டப் புறமாக வெளிக்கிளம்பி வந்தாள். அங்குள்ள மரஞ்செடிகளை ஒவ்வொன்றாகக் கவனித்து கொண்டே வந்து கடைசியில் புல்தரையில் உட்கார்ந்தாள்.

அப்போது திடீரென்று அவள்முன் வந்து நின்றான் சுந்தரேசன்.

சுந்தரேசன் எங்கிருந்து வந்தான் எப்படி வந்தான் எதற்காக வந்தான் என்பது தெரியாமல் திகைத்துப் போய் அவனை நிமிர்ந்து நோக்கிய தங்கத்தை நோக்கி, "தங்கம், உடனேபுறப்படு! சீக்கிரம், சீக்கிரம்!" என்றான் சுந்தரேசன்.

"அத்தான், எங்கே புறப்படச் சொல்கிறீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லையே!," என்றாள் தங்கம்.

"விளக்கமெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க நேரமில்லை. எல்லாம் பிறகு சொல்கிறேன். சீக்கிரம் வா என்னோடு!" என்று சொன்ன சுந்தரேசன் தங்கத்தின் பதிலை எதிர் பாராமல் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"என்ன அத்தான் இது? கையை விடுங்கள்!" என்று கதறினாள் தங்கம்.

அடுத்த கணம், தங்கத்தின் வாயை தனது வலது கையால் மூடியபடி இடது கையால் தோளில் சாய்த்துத் தள்ளிக்கொண்டு சென்றான். தோட்டத்தின் பின் வாசல் கதவு முன்னேற்பாடாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதன் வழியாகத் தங்கத்தைத் தள்ளிக்கொண்டு வந்த சுந்தரேசன், அங்கு தயாராகக் காத்துக்கொண்டிருந்த ஜீப் வண்டியில் அவளை ஏற்றினான்.

அவளை ஏற்றி விட்டுவிட்டு அவனும் வண்டியில் ஏறிக் கொண்டவுடன், ஜீப் வண்டியின் ஓட்டும் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த இன்னொரு மனிதன், வண்டியை ஓட்டிச் சென்றான்.

இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதை யுணர்ந்த தங்கம், ஓடும் ஜீப்பிலிருந்து குதித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், திடுதிப்பென்று ஜீப்பின் ஓரத்தை நோக்கி நகர்ந்தாள். ஆனால், சுந்தரேசன் ஏமாந்தவனாக இல்லை. விருட்டென்று தங்கத்தைப் பற்றியிழுத்தான். அந்த வேகத்தில் பின்புறம் சாய்ந்த தங்கத்தின் தலை ஜீப்பின் பின் விளிம்பில் அடிபட்டு அப்படியே அவளை மயக்கமடையச் செய்துவிட்டது.

இது சுந்தரேசனுக்கு வசதியாகப் போய்விட்டது. கவலையில்லாமல் ஜீப் ஊரைக் கடந்துகொண்டிருந்தது.

தங்கம் கண் விழித்துப் பார்த்த போது அவள் ஒரு காட்டுப் பிள்ளையார் கோயிலில் தான் இருப்பதைக் கண்டாள். முதலில் அது ஒரு கோயிலாக மட்டும் தான் தோன்றியது. ஆனால், சுந்தரேசனைப் பார்த்த பிறகு தங்கத்திற்குப் பழைய நினைவுகள் வந்தன. அவள் கோயில் வாசல் வழியாகத் தன் பார்வையை வெளியே செலுத்திய போது ஒரே இருட்டாகத் தெரிந்தது. அப்போது சூரியனும் மேற்றிசையில் சாய்ந்து கொண்டிருந்த படியால், அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள காடு முழுவதும் மேன்மேலும் இருள் பரவி அது ஒரே பயங்கரப் பிரதேசமாக மாறிக் கொண்டிருந்தது.

கோயிலின் உட்புறத்திலே பிள்ளையார் சன்னிதானத்தில் அக்கினிக்குண்டம் அமைக்கப்பட்டிருந்தது. சுற்றிலும் மாவிலையும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. தன்னையும் சுந்தரேசனையும் தவிர அங்கே கோயில் குருக்களும், காரோட்டி வந்த மனிதனும், இன்னும் இரண்டு பேர்வழிகளும் இருப்பதைக் கண்டாள் தங்கம். கோயில் குருக்கள், "ஊம், ஊம்! நாழியாகிறது; முகூர்த்த காலம் போய் விடப் போகிறது. அதோ பெண் விழித்து விட்டாள்!" இங்கே கூட்டிவாருங்கள் என்று சுந்தரேசனை நோக்கிக் கூறினார்.

சுந்தரேசன், தன்னுடன் ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்த மனிதனை நோக்கி, "அப்பண்ணா, மாலை எடுத்து வந்து விட்டாயா?" என்று கேட்டான். அவன் ஒரு தாம்பாளத்தில் அழகாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ரோஜாப் பூ மாலைகளைக் காட்டி "இதோ!" என்று எக்களிப்புடன் கூறினான்.

உடனே சுந்தரேசன் தங்கத்தின் பக்கம் திரும்பி, "தங்கம், அந்த மாலையில் ஒன்றை எடுத்துக்கொண்டு பிள்ளையார் சன்னிதானத்திற்கு வா" என்றான்.

தங்கம், அவன் கூறிய மொழிகளைக் கேட்டுத் திகைத்து மயங்கி நின்றாள். அப்போது அவளுடைய மனத்தில் பீதி நிறைந்த பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மின்னல் களைப் போல் தோன்றித் தோன்றி மறைந்தன.

"சுந்தரேசன் இவ்வளவு அயோக்கியனா? தன்னைக் கட்டாயத் தாலி கட்டித் திருமணம் செய்துகொள்வதற் காகத்தான் காட்டுக்குத் தூக்கி வந்தானா? ராதா சொன்ன படி, கயிலாய மாமாவின் சொத்தை அபகரிப்பதற்குத் தான், இவன் இப்படித் தனக்குக் கட்டாயத் தாலி கட்ட முயல்கிறான். தன்னை மனைவியாக்கிக்கொண்டு விட்டால், சொத்தெல்லாம் தானாகச் சேர்ந்துவிடும் என்று எண்ணு கிறான் போலிருக்கிறது. இப்படிப்பட்ட தீயவனின் மேல் எனக்குக் காதல் ஏற்பட்டதே!" என்று தன்னைத் தானே நொந்துகொண்டாள் தங்கம்.

தங்கம் சுந்தரேசனைச் சாதாரணத் தீயவன் என்றுதான் எண்ணினாள். ஆனால், அவள் எண்ணியதற்கும் மேற்பட்ட அளவு பொல்லாதவனாக இருந்தான் அந்தத் தீயவன்.

கோயில் குருக்கள் சூடத்தைக் கொளுத்திக்கொண்டே "ஊம், ஊம் நேரமாகிறது!" என்று மறுபடியும் கூவினார்.

சுந்தரேசன் தரதரவென்று தங்கத்தைப் பிள்ளையார் சன்னிதானத்திற்கு இழுத்துக்கொண்டு வந்தான். நல்லவர்கள் நல்ல செயல்களைச் செய்கிறபோது பார்த்துக்கொண்டு கல்லாக வீற்றிருந்த அந்தக் காட்டுப் பிள்ளையார் அந்தத் தீயவன் செய்த காரியங்களையும் பார்த்துக்கொண்டு கல்லாகத் தான் சமைந்திருந்தது.

தங்கத்தை அந்தக் கல்லுப் பிள்ளையாரின் எதிரிலே இழுத்துக்கொண்டு வந்த சுந்தரேசன், "தங்கம் இப்போது தான் நல்ல முகூர்த்தம்! எடு மாலையை! சொன்னபடி கேளாவிட்டால் நான் சும்மா பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்!" என்று உறுமினான்.

தங்கம், தான் சொல்வதைக் கேட்கமாட்டாள் என்ற எண்ணம் அவனுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தபடியால், அவன் இந்த வார்த்தைகளைக் கூறும் போது அவன் கண்கள் உருண்டு திரண்டு உறுத்து நோக்கின. அவன் முகம் நன்றாகச் சிவந்து போயிருந்தது.

தங்கம் தன் கையைக்கூட அசைக்கவில்லை. அவள் ஒரே தீர்மானமாக இருந்தாள். செத்தாலும், அவனுக்கு மாலையிடுவதில்லை என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சுந்தரேசனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"அவள் போடாவிட்டால் போகிறது, அப்பண்ணா எடு அந்த மாலையை" என்று உத்தரவிட்டான் சுந்தரேசன்.

அப்பண்ணா என்பவன் ஒரு மாலையைக் கையில் எடுத்து கொண்டு வந்தான்.

"அப்பண்ணா, தாலிக் கயிற்றையும் தயாராக எடுத்துக் கொண்டு வா. மாலையைப் போட்டவுடன் தாலிகட்டி விடலாம்" என்றான் சுந்தரேசன்.

அவ்வாறே அப்பண்ணா மஞ்சள் தாலிக் கயிற்றையும் எடுத்துக் கொண்டு வந்தான்.

"நான் இவளைப் பிடித்துக் கொள்கிறேன். மாலையைப் போட்டுத் தாலியைக் கட்டிவிடு" என்று சுந்தரேசன் கூறினான்.

அப்பண்ணா இரு கைகளிலும் மாலையையும் தாலியையும் எடுத்துக் கொண்டு தங்கத்தை நோக்கி நடந்து வந்தான். சுந்தரேசன் பின்னால் நின்றபடி அவளுடைய தோள்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். பூசாரி பிள்ளையாருக்குத் தீபங்காட்டிக் கொண்டிருந்தான்.

"அத்தான் உங்கள் கொடுந்தன்மைக்கு எல்லையே கிடையாதா?" என்று சோகமயமான தீனக்குரலில் தங்கம் கேட்டாள்.

"கிடையாது! கிடையாது! அப்பண்ணா சீக்கிரம் காரியத்தை முடி!" என்று வெறிபிடித்தவன் போல் கத்தினான் சுந்தரேசன்.

அப்பண்ணா, மாலையைத் தங்கத்தின் கழுத்தில் போடுவதற்காக அவள் தலைக்கு மேலே தூக்கினான்.

தூக்கிய அந்த மாலை விர்ரென்று காற்றில் பறந்து கோயில் வாசலில் போய் விழுந்தது. அந்த சமயம், தங்கத்தைப் பிடித்திருந்த சுந்தரேசன் தலையில் பலமான அடியொன்று விழுந்தது. அப்பண்ணாவும், பூசாரியும் மீதியிருந்த இரண்டு பேர்வழிகளும் பேய் பிசாசைக் கண்டவர்கள் போல் அரண்டு கோயில் வாசலை நோக்கித் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினார்கள்.

# 23. வலைக்குத் தப்பிய மான் வழியில் சிக்கியதுபோல்

திடீரென்று ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் கண்டு தங்கம் திக்பிரமையடைந்து நின்றாள். காட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு வெளியே நின்ற ஜீப்கார் புறப்படும் சத்தம் கேட்ட பிறகுதான் தங்கம் தன்னிலையடைந்தாள். அவளுக்கு எதிரில் ஏழெட்டுப் பேர் கையில் துப்பாக்கிகளுடன் நின்று கொண்டிருந்தார்கள். அத்தனையும் வேட்டைத் துப்பாக்கிகள். அந்த மனிதர்களின் நடுவிலே நின்ற ஒருவன் தங்கத்தின் பார்வையிலே பட்டபோது அவனை எங்கோ பார்த்த மாதிரியாக இருந்தது. அவனோடு நெடுநாள் தொடர்பு கொண்டு பழகியிருப்பது போலவும் தங்கத்துக்குத் தோன்றியது. எங்கே? எங்கே? என்று யோசித்துப் பார்த்தாள் - தெரியவில்லை. அவன் யார்? யார்? என்று எண்ணிப் பார்த்தாள் —தெரியவில்லை. அவள் வேறு எங்கும் போனதில்லை. போன இடங்களில் யாரும் ஆடவருடன் பழகியதுமில்லை ஆனால், யாரோ ஒருவனைத் திடீரென்று தன்முன் வந்து நிற்கும் அவனை, எங்கோ பார்த்தது போலவும், பழகியது போலவும் தனக்குத் தோன்றியது கண்டு தங்கம் வியப்படைந்தாள். நெடு நேரம் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்த தங்கத்திற்குக் கடைசியாக ஒரு சிறு நினைவு தோன்றியது.

ஆம், ஜமீந்தார் மாளிகைக்கு அவர்கள் புறப்பட்டு வந்த போது, பஸ் ஏற முனைந்த சமயம், ஒருவருக்குத் தான் இடமிருந்தது என்று கண்டக்டர் சொன்னானே, அந்தச் சமயம் இறங்கிக் கொண்டு இடங்கொடுத்த இளைஞன் இவனேதான்! அப்போது கூட அவனை எங்கோ பார்த்த நினைவாக இருந்தது, தங்கத்திற்கு நினைவில் மாறாமல் இருந்தது. ஆனால் அது மட்டுமா அதற்கு முன் அவனை எங்கே பார்த்திருக்கிறோம் என்பது மட்டும் அவளுக்கு இப் போதும் சரி அப்போதும் சரி சற்றேனும் நினைவுக்கு வர வில்லை.

தன்னையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண் டிருக்கும் தங்கத்தைப் பார்த்து, "அம்மா, நீங்கள் யார்? எப்படி இங்கே வந்து சேர்ந்தீர்கள்? அந்த முரடர்கள் யார்?" என்று அந்த இளைஞன் கேட்டான்.

அவன் குரல் கூட அவளுக்கு மிகவும் பழக்கப்பட்டதாகத் தோன்றியது.

அவன் கேட்ட கேள்விகளுக்கு அவள் பதிலளித்தாள். நடந்த விஷயங்களை நடந்தவாறு கூறினாள்.

"ஆ! அப்படியா செய்தி? சிறிது நேரத்திற்கு முன் எனக்கு இது தெரியாமல் போய்விட்டதே. இல்லாவிட்டால் அந்தப் பாவிப்பயல்களைச் சுட்டே கொன்றுவிட்டிருப்பேனே!" என்று கொதிப்படைந்தவன்போல் கூறினான் அந்த இளைஞன்.

அப்போது தங்கம் சற்றே திரும்பிப் பின்னால் பார்த் தாள். அங்கே தரையில் தன்னினைவற்றுக் கிடந்தான் சுந்தரேசன்.

ஆ! இந்தப் பாவி இன்னும் இங்கேதான் கிடக்கிறானா? என்று பின்னால் நின்ற துப்பாக்கிக்காரர்களிலே ஒருவன் கூறிக் கொண்டே முன்னால் ஓடி வந்தான். அவன் வந்த வேகத்தைப் பார்த்தால், அப்படியே, கீழே கிடக்கும் சுந்தரேசனை அடித்துக் கொன்றுவிடுவான் போலிருந்தது. ஆனால், அந்த இளைஞன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

''நண்பரே. அவன் கிடக்கட்டும், உணர்வற்றுக் கிடப்பவனை நாம் என்ன செய்தாலும் பயனில்லை முதலில் இந்தப் பெண்ணை இவளுடைய வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டு வருவோம்!' என்று கூறினான் இளைஞன்.

எல்லோரும் இதற்கு இசைந்த பாவனையாகக் காணப் பட்டவுடன், அவன் ''அம்மா, நீங்கள் வாருங்கள். உங்களை மாளிகையிலே கொண்டுபோய்விட்டுவிடுகிறோம்'' என்றான்.

எல்லோரும் அந்தக் காட்டுப் பிள்ளையார் கோயிலை விட்டு வெளியில் வந்தார்கள். இருட்டில் அந்தக் காடு முழுவதும் ஒரே பயங்கரப் பிரதேசமாகக் காட்சியளித்தது.

ஆங்காங்கே நிழல்கள் ஆடுவது - ஏதேதோ பயங்கரமான உருவங்கள் பேயாட்டம் போடுவதுபோல் காட்சியளித்தன. மரவண்டுகளின் இடை விடாத ஓசையும் அங்கும் இங்குமாக ஏதோ ஊர்வதாலும் - மிருகங்கள் சில நடமாடுவதாலும் திடுதிப்பென்று ஏற்படுகின்ற சலசலப்பு ஓசையும். பயங்கரத் தன்மையை அதிகப்படுத்துவதாக இருந்தன. தங்கம், இது போன்ற ஒரு காட்சியை இதற்குமுன் கண்டதேயில்லை. அவளுக்கு மனத்துக்குள் ஒரே திகிலாயிருந்தது. ஆனால் அவள் அதை வெளிப்படுத்தவேயில்லை. கோயிலுக்கு வெளியில் வந்ததும், அந்த ஆட்களில் ஒருவன் தீப்பெட்டியை உரசினான். சிறிது நேரத்தில் அவர்கள் கையில் ஒரு தீப்பந்தம்

எரிந்துகொண்டிருந்தது. இளைஞன் அந்த ஆளை நோக்கி, "ஏது இந்தத் தீவட்டி?" என்று கேட்டான்.

"கோயிலில் ஒரு தூணருகில் சாற்றியிருந்தது. நான் எடுத்துக்கொண்டேன். நமக்கு வழிபார்த்துப் போகப் பயன் படுமே?" என்றான் அந்த ஆள்.

"உன் மூளை படுமூளைதான்!" என்று அந்த இளைஞன் அவனைப் பாராட்டிப் பேசினான். அந்தத் தீவட்டியின் வெளிச்சம் அவர்களுக்குப் பாதை காட்டப் பயன்பட்டது. ஆனால், பயங்கரம் அதனால் அதிகமாகியது என்றுதான் சொல்ல வேண்டும்.

தீவட்டியின் ஒளிநாக்கு காற்றில் அசையும் போதெல் லாம் காட்டு மர நிழல்கள் அங்குமிங்கும் ஆடிய காட்சி, அந்தப் பயங்கர உருவங்கள் நெருங்கி நெருங்கி வரமுயல்வது, போலவும், கையைக்காலை ஆட்டிக்கொண்டு விழுங்கவருவது போலவும் தோன்றியது.

தீவட்டி வெளிச்சத்தின் உதவியால், அவர்கள் அந்த அடர் காட்டின் ஊடே சிறிது தூரம் நடந்து சென்றார்கள். அந்த இளைஞனும் தங்கமும் முன்னே செல்ல மற்ற நண்பர் கள் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு, அவர்கள் ஒரு பெரிய ஆலமரத்தடியை அடைந்தார்கள். அங்கே ஏழெட்டுக் குதிரைகள் சேணத்துடன் கட்டிக் கிடந்தன. ஆளுக்கொரு குதிரையை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள்.

"அம்மா, உங்களுக்குக் குதிரைச் சவாரி தெரியுமா?" என்று கேட்டான் அந்த இளைஞன்.

தங்கம் பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

''வண்டியெல்லாம் ஓட்டுறாங்க - குதிரையா ஓட்டத் தெரியாது'' என்று அந்த வேட்டைக்கார நண்பர்களிலே ஒருவன் கேட்டான்.

தங்கம் பரிதாபமாக அந்த இளைஞனைப் பார்த்தாள்.

அந்தப் பார்வையே அவளுக்குக் குதிரைச் சவாரி தெரியாது என்பதைப் புலப்படுத்துவதாக இருந்தது.

இதைக் கண்ட அந்த இளைஞன் பெருஞ்சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

அவர்கள் எல்லோருக்கும் ஆளுக்கொரு குதிரையிருந்தது தங்கத்திற்குக் குதிரைச் சவாரி தெரியுமானால், அவளை ஒரு குதிரையில் ஏறிவரச் செய்து விட்டு மற்றவர்களில் யாராவது இருவரை ஒரு குதிரையில் வரச் சொல்லலாம். அப்போது அவளுக்குத் தெரியாது என்பதால், கூட ஒரு குதிரையிருந்தாலும் பயனில்லை என்று எண்ண வேண்டியிருந்தது.

அவன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த போது. வேட்டைக்கார நண்பர்களிலே ஒருவன், அந்த இளைஞனை நோக்கி, உங்கள் குதிரையில் ஏற்றிக் கொள்ளலாம் என்றான். அந்த இளைஞன் தங்கத்தை நோக்கினான். ''அம்மா, என் குதிரையில் வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

தங்கம் அவனைக் கூர்ந்து நோக்கினாள். அந்த முகத்திலே எவ்விதமான களங்கமும் காணப்படவில்லை. அந்த முகத்திலே எவ்விதமான தீய நோக்கத்தின் தன்மையும் பிரதிபலிக்கவில்லை. மேலும், அந்த முகம் - அவளுக்கு ஏதோ முன் தொடர்புடையது போலவும் - ஏதோ தனக்கு உறவுடையது போலவும் தெரிந்ததால் அவள், அந்த இளைஞனுடன்

ஒரே குதிரையில் செல்வதால் தவறு ஒன்றும் ஏற்படாது என்ற முடிவுக்கு வந்தாள். அந்த முடிவுக்கு வருவதைத் தவிர அவளுக்கு அப்போது வேறு வழியும் எதுவும் இல்லை. அவள் அந்த இரவில் அந்தப் பயங்கரமான காட்டை விட்டுத் தப்பித் தன் தாய் தந்தையரிடம் போய்ச் சேர இருந்த ஒரே ஒரு மார்க்கம் அவனுடன் குதிரையில் போவதுதான். அதை விட்டால், அவள் அந்தக் காட்டிலேயே தங்க வேண்டியதுதான். ஏழெட்டு ஆள்கள் கூட இருக்கும்போதே இதயமும் உடலும் நடுக்கமடையச் செய்துகொண்டிருக்கிற அந்தக் காட்டில் அவள் தன்னந் தனியாக எப்படியிருக்க முடியும்? அதுவும் தவிர, கோயிலில் மூர்ச்சையாகக் கிடக்கும் சுந்தரேசன் கண் விழித்தால் என்ன செய்வானென்று சொல்ல முடியாது. அவன் எண்ணம் நிறைவேறவில்லை என்ற ஆத்திரத்தில் என்ன கேடு வேண்டுமானாலும் செய்வான். இந்த நிலையில் நல்லெண்ணமுடையவனைப் போல் தோற்றமளிக்கிறவனும், ஏதோ முன் தொடர்பு உள்ளவன் போல் காணப்படுகிறவனுமாகிய அந்த இளைஞனுடைய குதிரையில் ஏறிச் செல்ல தங்கம் ஒப்புக் கொண்டாள்.

"வருகிறேன்!" என்று அவள் வாய் திறந்து வார்த்தை சொன்னவுடனே அவன் தன் குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்து அருகில் நிறுத்தினான். தங்கம் அதன்மேல் தாவி ஏறி உட்கார்ந்தாள். அவளுக்குப் பின்புறமாக ஏறி உட்கார்ந்து கொண்டான் அந்த இளைஞன். வலது கையால் லகானைப் பிடித்துக்கொண்டு இடது கையால் அவளை அணைத்துப் பிடித்தபடி குதிரையைத் தட்டிவிட்டான்.

முன்னால், தீவட்டியுடன் ஒரு குதிரை செல்ல அதைத் தொடர்ந்து அந்த இளைஞனும் தங்கமும் ஏறியிருந்த குதிரை சென்றது. மற்ற குதிரைகள் பின்னால் வந்தன.

பயங்கரமான காட்டு வழியில் இருட்டில் எந்தெந்தப் பக்கமோ குதிரைகள் வளைந்து வளைந்து சென்றன. அவை

ஓடவில்லை - மெல்ல நடந்துதான் சென்று கொண்டிருந்தன. போகப் போகக் காடு நீண்டுகொண்டிருப்பது போலவும், மேலும் மேலும் அடர்ந்திருண்ட காட்டுக்குள்ளேயே செல்வது போலவும், அந்தக் காட்டு வெளியின் மையத்தை நோக்கியே சென்றுகொண்டிருப்பது போலவும் தங்கத்திற்குத் தோன்றியது. தான் விழுந்துவிடாமல் இருப்பதற்காக அந்த இளைஞன் தன்னை அணைத்துக்கொண்டிருந்தான் என்ற போதிலும் தங்கத்திற்கு உடலை என்னவோ செய்வதுபோலிருந்தது. ஆனால், போகப்போக அந்த உணர்ச்சி மங்கிவிட்டது. குதிரை நடக்கும்போது அவன் மார்பின் மீது தன் உடல் மோதும் போதெல்லாம் இன்னதென்று சொல்லமுடியாத ஓர் உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. அது இன்பமா துன்பமா என்பதே புரியாமலிருந்தது. சில சமயம் அவளுக்கு அவன்மீது சந்தேகம் ஏற்படும். இவனும் ஒரு சுந்தரேசனாக இருப்பானோ என்று தோன்றும். ஆனால், சே! சே! அவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை என்று மறுகணமே மனம் உறுதி கொள்ளும்.

சுமார் ஒரு மணி நேரம் அந்தக் குதிரைப் பயணம் நடந்தது. அந்த ஒரு மணி நேரமும் ஓர் ஆண்டுபோலத் தோன்றியது. கடைசியில், காடு குறைந்து - தீவட்டி வெளிச்சம் தெரியும் தூரத்தில் வீடுகளும் குடிசைகளும் கண்ணுக்குத் தென்பட ஆரம்பித்தன. பிறகு, ஊரே வந்து விட்டது. முதல் இரண்டு வீதிகளில் செல்லும் வரை தங்கம் ஏதோ புது ஊருக்குள் நுழைந்துவிட்டதாகவே எண்ணிக் கொண்டாள். ஆனால் மூன்றாவது வீதியைக் குதிரைகள் கடந்து செல்லும் போதுதான் "இது கதலிப்பட்டணம்!" என்று அறிந்து அவள் உள்ளம் அமைதியும் ஆனந்தமும் அடைந்தது. எப்படியோ ஒரு பெரிய இடரிலிருந்து தப்பினோம் என்ற மன நிம்மதி அவளுக்கு அப்போதுதான் முழுமையாக ஏற்பட்டது.

வீதிகளைக் கடந்து வந்த குதிரைகள் ஜமீந்தார் மாளிகையிருக்கும் வீதி முனை வந்ததும் டக்கென்று நின்றன. அந்த இளைஞன் தங்கத்தை நோக்கி, "அம்மா இனிமேல் நாங்கள் வந்தால் வீண் சந்தேகத்திற்கு இடமாகும். ஏனென்றால் இப்பொழுதே உங்களைத் தேட ஆரம்பித்திருப்பார்கள். இங்கேயிருந்து நீங்கள் மட்டும் தனியாகப் போய்விடமுடியுமா? அல்லது நான் கூட வந்து மாளிகை வரையில் விட்டு விட்டு வர வேண்டுமா?" என்று கேட்டான்.

"இல்லை, நானே போய்விடுகிறேன்!" என்று தங்கம் தைரியமாகக் கூறினாள். உடனே அந்த இளைஞன் அவளைக் குதிரையிலிருந்து கீழே இறக்கிவிட்டான். அவள் இறங்கியவுடன் அந்தக் குதிரைகள் வேறு வீதியில் திரும்பி வேக நடை போட்டுப் பாய்ந்து சென்றன.

தங்கம் தெருவோரமாக மெல்ல மெல்ல மாளிகையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

வீதி முழுவதும் ஒரே அமைதியாக இருந்தது. பெற்றவர்கள் எங்கெங்கே தேடுகிறார்களோ, என்னென்ன நினைக்கிறார்களோ என்று பதறிக்கொண்டே நடந்தாள், அவள் மனம் விரைந்தது. ஆனால் நடை விரையவில்லை. அடிக்கடி கால்கள் தடுமாறின. வீதியில் கிடந்த பரற் கற்களில் காற்பெரு விரல் மோதிச் சில சமயம் வலியும் கொடுத்தது.

எதிரில் ஒரு நாய் வந்தது. அது தன்னைக் கண்டால் குரைக்குமோ என்று பயந்தாள் தங்கம். அது இவளை நோக்கியே வந்தது. சட்டென்று நின்றாள். நல்ல வேளை! அது சிறிது நேரம் அவள் பக்கத்தே வந்து முகர்ந்து பார்த்து விட்டுத் தன்பாட்டில் நடை போட்டது.

பிறகு தங்கம் தன் நடையைத் தொடர்ந்தாள்.

ஜமீந்தார் மாளிகை வந்து விட்டது. ஆனால், தங்கம் தயங்கினாள். அங்கே மாளிகை வாசலில்-நின்று கொண்டிருந்தது ஒரு ஜீப் கார் · தங்கத்தைத் தூக்கிக் கொண்டோடிய அதே ஜீப் கார் தானோ அங்கே மாளிகை வாசலில் நின்று கொண்டிருக்கது?

தங்கம் தயங்கினாள். ஒரு சுவர் ஓரமாக நிழலிலே ஒண்டிக் கொண்டு நின்றாள்.

அந்தப் போக்கிரிகள், தன்னை மடக்கிப் பிடிக்கத் தான் அங்கு வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிய தங்கம் அங்கே நிற்பது கூடச் சரியில்லை என்று எண்ணினாள்.

திரும்பிப் போகலாம் என்றால், எங்கே போவது? அந்த இளைஞனும் வேட்டையாடும் நண்பர்களும் அப்போதே அந்த இடத்தை விட்டுப் போய் விட்டார்கள், அவர்களுடனும் சேர்ந்து கொள்ள முடியாது. அருகில் இருக்கும் வீட்டுக்காரர்களில் யாரும் அவளுக்குத் தெரிந்தவர்கள் கிடையாது. மேற்கொண்டு இருட்டில் கதவு தட்டுவதும் சரியல்ல.

அப்போது ஓர் உருவம் மாளிகையிலிருந்து வெளிப்பட்டு ஜீப்பை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஜீப் புறப்பட்டால், அதன் முன் விளக்கின் ஒளியில் தான் இருப்பதைக் கண்டு பிடித்து விடமுடியும். இனிமேல் அந்த இடத்தை விட்டு ஓடுவதும் முடியாது. வழியில் போகும் போதே ஜீப்பில் இருப்பவர்கள் தன்னைக் கண்டுபிடித்துவிடுவார்கள்.

போகவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் தங்கம் விழித்துக் கொண்டு, பித்தம் பிடித்தவளைப் போல் அங்கே நின்றுகொண்டிருந்தாள். அப்போது இன்னும் இரண்டு பேர் அந்த ஜீப்பில் ஏறினார்கள்.

ஆச்சு! ஜீப் புறப்படப் போகிறது. 'ஸ்டார்ட்' செய்து இயந்திரத்தின் சத்தமும் கேட்க ஆரம்பித்து விட்டது அதோ முன் விளக்கையும் தட்டிவிட்டான் காரோட்டி. அந்த ஒளி நேரே தங்கத்தின் மீது பட்டது. அவள் கண் கூசியது.

"ஐயோ! மீண்டும் இந்தப் பாவிகள் கையில் சிக்கிக் கொண்டு விட்டோமே என்ற நினைப்பு தங்கத்திற்கு ஏற் பட்டது.

"ஐயோ!" என்று கத்தினாள். அவ்வளவுதான் தெரியும்.

அடுத்த கணம் அவள் உணர்வற்றுத் தெருவில் விழுந்தாள். ஜீப்பிலிருந்த ஆட்கள் ஸ்டார்ட் செய்தபடியே அதை நிறுத்திவிட்டு அவள் விழுந்த இடத்தை நோக்கி ஓடினார்கள்.

# 26. பட்டணத்துத் தோழி மலர்க்கொடி

தங்கம் நெடுநேரம் உணர்வற்றிருக்கவில்லை. திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சி கலந்த அச்சத்தால் அவள் உணர் விழந்து வீழ்ந்தாள் எனினும் விரைவில் அவளுக்குத் தன்னினைவு ஏற்பட்டு விட்டது.

தங்கம் கண்விழித்துப் பார்த்த போது, இரண்டு ஆட்கள் அவளைத் தூக்கிக் கொண்டு போவதை உணர்ந்தாள். மெல்லத் தன் கண்களைத் திறந்த தங்கம் மேலும் அகலமாக அவற்றை விரித்து, என்ன நடக்கிறது என்பதை யறிய முற்பட்டாள்.

அவர்கள் தங்கத்தை மாளிகையை நோக்கியே தூக்கிக் கொண்டு போனார்கள். சுந்தரேசனுடைய ஆட்களாக இருந்தால் அவர்கள் மாளிகைக்குத் தன்னைத் தூக்கிச் செல்வது அருத்தமற்றது என்பதை அறிந்த தங்கம் தன்னைத் தூக்கிச் செல்லும் ஆட்களைக் கவனித்தாள். ஆனால் இருட்டில் அவர்களுடைய உருவம் சரியாகப் புலப்படவில்லை.

மாளிகை வாசலை யடைந்து அவர்கள் கதவைத் தட்டிய போது, கந்தசாமி வாத்தியார் தான் வந்து கதவைத் திறந்தார். அவர்கள் யாரையோ தூக்கிக் கொண்டு

வந்ததைப் பார்த்த அவர் அது தங்கமாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகித்துக் "கண்டுபிடித்து விட்டீர்களா? என் தங்கம் எப்படியிருக்கிறாள்?" என்று பதட்டத்தோடு கேட்டார். தூக்கி வரப்பட்ட நிலையில் தங்கத்திற்கு ஏதாவது விபத்து அல்லது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று அவர் பயப்பட்டார். ஆனால் தூக்கி வந்தவர்கள், "கவலைப் படாதீர்கள்! ஆபத்து ஒன்றுமில்லை. இலேசான மயக்கம். அவ்வளவு தான்!" என்று கூறிக் கந்தசாமி வாத்தியாரைச் சமாதானப் படுத்தினார்கள்.

பிறகு உள்ளே கொண்டு போய் விளக்கெரிந்து கொண்டிருந்த ஓர் அறையில் தங்கத்தைப் படுக்க வைத்தார்கள். தன்னைத் தூக்கி வந்தவர்கள் யார் என்று அறிந்து கொள்வதற்காகத் தங்கம் மீண்டும் கண்களை அகலத் திறந்தாள்.

அவளைத் தூக்கி வந்தவர்கள் வேறு யாருமல்ல, போலீஸ்காரர்கள்! போலீஸ்காரர்கள் கையில் அகப்பட்டதைப் பற்றித் தங்கம் மகிழ்ச்சியடைந்தாள். தங்கம் கண் விழித்ததைப் பார்த்ததும் அந்த அறைக்கு வந்திருந்த மரகத அம்மாள், "தங்கம், எங்கள் யாரிடமும் சொல்லாமல் எங்கேயம்மா போனாய்?" என்று விசாரித்தாள்.

தங்கம் நடந்தவற்றையெல்லாம் சொன்னாள். ஆனால், சுந்தரேசனைப் பற்றி மட்டும் எதுவும் கூறவில்லை. அவன் பெயரை மறைத்துவிட்டு யாரோ ஒருவன் யாரோ ஒருவன் என்றே தெரியாத பாவனையாகக் குறிப்பிட்டுப் பேசினாள் தங்கம். சுந்தரேசன் மீது அவளுக்கு இன்னும் ஏதோ ஒரு விதமான பிரேமையிருந்தது என்பதையே அவளுடைய போக்கு எடுத்துக் காட்டியது. ஆனால், அது மற்றவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தங்கத்தைத் தேடியதுபற்றி அவள கேட்காமலே மரகத அம்மாள் கூறினாள். அவர்கள்

தங்கத்தைத் தேடிகொண்டிருந்த விஷயம் எப்படியோ, அந்தவூர் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்து, அவர் போலீஸ்காரர்களை விட்டுப் புலன் விசாரிக்கச்சொல்லியிருக்கிறார். அப்படி விசாரணையில் ஈடுபட்ட போலீசார் தான், யாரோ ஒரு கிராம வாசியின் மூலம் தங்கம் காட்டு வழியாகக் கடத்திச் செல்லப்பட்ட விஷயத்தை யறிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கத்தைக் கண்டு பிடிக்கக் காட்டை யலசிக் கொண்டிருந்த போது வழியில், காட்டுப் பிள்ளையார் கோயிலிலிருந்து திரும்பிய ஜீப்பை வழிமறித்திருக்கிறார்கள். அந்த ஜீப்பும், அதில் இருந்த பொருள்களும், அது வந்த வேகமும் போலீஸாரின் சந்தேகத்திற்கிடமளித்திருக்கிறது. உடனே அவர்கள் ஜீப்பிலிருந்த ஆட்களை, போலீஸ் நிலையத்தில் அடைத்துவிட்டு மீண்டும் அந்த ஜீப்பிலேயே தங்கத்தின் வீட்டில் விசாரணை செய்ய வந்திருக்கிறார்கள். இதிலே தங்கம் கேட்டதிசயித்த விஷயம் என்னவென்றால், தான் சுந்தரேசன் பெயரை மறைத்தது போலவே அந்த ஆட்களும், போலீசார் அடிதடிக்குப் பயந்து எல்லா விஷயங்களையும் உளறிய போதிலும் சுந்தரேசன் பெயரை மறைத்தே சொல்லியிருக்கிறார்கள்.

விசாரித்து விட்டுக் கிளம்பிய போலீஸ்காரர்கள் தான் தங்கத்தைத் தேடிவருவதற்காக ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு போக வெளியே வந்திருக்கிறார்கள். ஆனால், தேடிப் போன பொன்னே தம்மைத் தேடி வந்ததைப் போல், தங்கமே தங்கள் எதிரில் வந்து நிற்பதைக் கண்டு அவர்கள் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

கடைசியில் அந்தப் போலீஸ்காரர்கள் தங்கத்தை ஒப்படைத்து விட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். கந்தசாமிப் பண்டிதரும், மரகத அம்மாளும், தங்கம் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து தப்பியதை எண்ணி மகிழ்ச்சிப்

பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கத்தைக் காப்பாற்றிய அந்த இளைஞனைப் பற்றி நினைக்கும் போது அவர்களுடைய உள்ளத்திலே ஏதோ ஒரு விதமான கிளர்ச்சி ஏற்பட்டது. தங்கம் சொல்லிக் காட்டிய பிறகு அன்று காரில் முருகேச வாத்தியாருக்கு இடங்கொடுத்து விட்டுப் போன இளைஞன் அவனாக இருக்கக் கூடும் என்று எண்ணம் தெரிவித்த பிறகு அவர்கள் அவனுடைய உருவத் தோற்றத்தை நினைத்து நினைத்துப் பார்த்தார்கள். ஆனால் அந்த இளைஞன் யார் என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தங்கம் காணாமற்போய், இன்னலுக்காட்பட இருந்து திரும்பி வந்த நினைப்பு இரண்டொரு நாட்கள் வரையில் அவர்கள் உள்ளத்தில் குறுகுறுப்பாகவும் உறுத்தலாகவும் இருந்துகொண்டிருந்தது. ஆனால், அதன் பிறகு பையப் பைய அதன் வேகம் தணிந்துவிட்டது. அதைப் பற்றிய எண்ணமே கூட மறைந்து மறக்கப்பட்டுப் போய்விட்டது.

தங்கம் காணாமல் போய்விட்ட செய்தியறிந்தபின் அண்ணாமலைப் பண்டிதர் - (அதுதான் கயிலாயம்) மனத்தை யலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், யாரோ முரடர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு போய்க் கட்டாயத் திருமணம் செய்ய முற்பட்டார்கள் என்ற செய்தி கேட்டவுடன், இது சுந்தரேசன் ஏற்பாடுதான் என்று அவர் யாரும் சொல்லாமலே தெரிந்து கொண்டார். பாம்பறியும் பாம்பின் கால் என்றது போல், தனக்குப் பிறந்தவனுடைய குணத்தை அவர் நன்கு தெரிந்துகொண்டுவிட்டார். ஆனால், அவர் மற்றவர்களைப் போல் கண்கலங்கவில்லை. என்றாலும், தங்கம் காணாமற் போய்த் திரும்பி வந்தது முதல்,சிறிதும் கலகலப்பில்லாமலும் சிந்தனையே வயப்பட்டவராகவும் இருந்துகொண்டிருந்தார்.

வெள்ளிக்கிழமை வந்துவிட்டது. சொல்லிச் சென்றபடி ராதாவும் நெய்யூரிலிருந்து தன் தாய் தந்தையரிடம் அனுமதி

வாங்கிக்கொண்டு வந்து விட்டாள். அண்ணாமலைப் பண்டிதர் சென்னை செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். மரகத அம்மாளும், கொண்டு செல்வதற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்து வைத்துப் பெட்டி படுக்கைகள் தயாரித்துக்கொண்டிருந்தாள். இரவு புறப்படும் இரயிலுக்குப் போக அவர்கள் அதிகாலையிலிருந்தே அணியமானார்கள்.

இரவு எட்டு மணிக்கு வண்டி, அதற்கு ஆறு மணிக்கே மாட்டு வண்டிகளில் அவர்கள் புறப்பட்டார்கள். கந்தசாமி வாத்தியார் மட்டும் தான் மாளிகையில் மீதி. அவரும், மறு நாள் தாம் நெய்யூருக்குப் போய் விடப் போவதாகச் சொல்லி விட்டார். மறுபடியும் தோட்டக்காரச் சுப்பையா வசம் மாளிகையை ஒப்படைத்து விட்டு, எல்லோரும் இரயிலடிக்குப் போனார்கள்.

கந்தசாமி வாத்தியார் பிளாட்பாரத்தில் நிற்க, கயிலாயம், மரகதம், தங்கம், ராதா, ஆகியவர்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். மரகத அம்மாள் தான் வாழ்க்கைப் பட்ட பிறகு ஒரு முறைகூடத் தன் கணவனை விட்டுப் பிரிந்ததேயில்லை. ஆனால் இப்போது புதிதாக அவரைப் பிரிந்து போவது அவளுக்குப் பெருந் துக்கமாயிருந்தது. கந்தசாமி வாத்தியாரைப் பார்த்து மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள். அவளுக்கு வண்டியை விட்டு இறங்கிக் கொண்டு விடலாமா என்றுகூடத் தோன்றுகிறது. ஆனால் கந்தசாமி வாத்தியார் பல மாதிரியாகச் சமாதானம் சொல்லி அவளைத் தங்கத்துடன் அனுப்பி வைத்தார். வாத்தியார் உறுதி குலையாதவராகத் தான் இருந்தார். ஆனால், வண்டி நகர்ந்த பிறகு அவருக்கும் இரண்டு சொட்டுக் கண்ணீர்

ஊறித் துளிர்த்து விட்டது. தெரியாமலா, பிரிவு பெருந் துன்பம் என்று நூலோர்கள் கூறியிருக்கிறார்கள்!

சென்னைக்கு வந்ததும், அண்ணாமலைப் பண்டிதர் முதலில், தங்கத்தை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வக்கீல் வீட்டுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்குமாக அலைந்தார். மரகத அம்மாளும், ராதாவும் ஜமீந்தார் கருணாகரருடைய பட்டணத்து மாளிகையிலேயே தங்கி யிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் மாலையில் வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் தங்கம், தான் போய் வந்தது பற்றி அவர்கள் இருவருக்கும், ஏன் ஜமீந்தாரிணியம்மாளுக்கும் கூடச் சொல்லுவாள். மீதி நேரமெல்லாம், மரகத அம்மாளுக்கும், ராதாவுக்கும் ஜமீந்தாரிணியம்மாளுக்கு வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வதிலேயே கழிந்தது.

எல்லா வேலைகளும் முடிந்த பிறகு ஒருநாள், வக்கீல் வேலாயுதம் அவர்கள் எல்லோரையும் தமது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். ஜமீந்தார் கருணாகரர் ஜமீந்தாரிணி பெரியம்மாள், கயிலாயம், மரகத அம்மாள், தங்கம், ராதா எல்லோரும் வழக்கறிஞர் வேலாயுதம் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றார்கள். விருந்துக்கு அவர்கள் மட்டுந்தான் சென் றிருந்தார்கள் என்று சொல்ல முடியாது. வழக்கறிஞருக்கும், ஜமீந்தாருக்கும், பழக்கமானவர்கள் பலர் குடும்பங்குடும்பமாக வந்திருந்தார்கள். ஆனால், அன்று விருந்தில் உபசாரத்திற்கு நடுநாயகமாக விளங்கியவர்கள் கயிலாயமும், கருணாகரரும் தான்!

விருந்து இரவு நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழக்கறிஞர் மாளிகையின் வாசல் வளைவிலேயே பன்னிற மின்னொளி விளக்குகள் அதியற்புதமான வண்ணக் கதிர் களை வீசிக் கொண்டிருந்தன. மாளிகையின் உட்புறத்திலோ

வரவேற்புக் கூடம், விருந்து மண்டபம் முதலிய இடங்கள் பட்டப் பகலென ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தன. ஆடவரும் பெண்டிரும் அலங்காரமான அணிமணிகளும் அணிந்து, உல்லாச இன்பத்துடன் திகழ்ந்தனர். கூடிக் கூடிப் பேசுவோரும், கோதையரைத் தேடிச் சென்று பேசிச் சிரிப்பாரும், இன்னும் பலவிதமான முறையில் ஒருவரை யொருவர் நலம் விசாரிப்பாருமாக ஆண்களும் பெண்களும் ஒருவருடன் ஒருவர் கூடி யுறவாடிய காட்சி இனிமையான தாக விருந்தது.

விருந்துச் சாப்பாடு அருமை அருமையென்று பாராட்டும் படியாக அமைந்திருந்தது. விருந்துமுடிந்தவுடன் வழக்கறிஞர் வேலாயுதத்தின் மகள், பதினெட்டு வயதான பச்சைப் பசுங் கொடி போன்ற மலர்க்கொடி, இனிய பாடல்கள் பாடி, வந்திருந்த விருந்தினரை மகிழ்ச்சியுறச் செய்தாள்.

இவள் பாடுவதாக முன்னேற்பாடு ஒன்றும் கிடையாது. ஆனால், அங்கு வந்திருந்தவர்கள் அவள் பாட்டுப் பயிற்சி யும், இனிய குரலும் உடையவள் என்பதை யறிந்து, வற்புறுத்தியதன் பேரில், முதலில் நாணிக் கோணி மறுத்துக் கடைசியில் பாடத் தொடங்கினாள். அப்படியொன்றும், போற்றிப் புகழ்ந்து பாராட்டக்கூடிய அளவு அவள் அழகி யல்ல என்றாலும், பருவப் பூரிப்பு அவள் முகத்திற்கு அலாதி யான ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது, ஆனால் அவள் குரலோ நாள் முழுவதும் கேட்டுக்கொண்டே யிருக்கும்படி உள்ளத்திலே வேட்கையை எழுப்பக் கூடிய அளவு இனிமை பொருந்தியதாக இருந்தது. இதுபோன்ற இனிய இசையை தங்கம் இதற்குமுன் எங்கும் கேட்டதில்லை. மலர்க்கொடியின் அமுத மயமான இசைக் குரலில் தங்கம் அப்படியே சொக்கிப் போய்விட்டாள்.

மலர்க்கொடி பாடிய நேரம் முழுவதும் தங்கம் அவள் வாயையே பார்த்துக்கொண்டு அங்காந்தபடியிருந்தாள். அவள் இவ்வுலகையே மறந்துவிட்டாள் - மலர்க்கொடியின் பாட்டில் - அதன் இசையில் அப்படியே கலந்து போய் இருந்தாள் என்றே சொல்ல வேண்டும்.

மலர்க்கொடியின் முகத்தில் வைத்த கண் மாறாது உட்கார்ந்திருந்த தங்கம், திடீரென்று, தான் பார்த்துக் கொண்டிருந்த முகத்தில் ஓர் உணர்ச்சி - இன்பத்தை யள்ளித் தெளிப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி மின்னிட்டுத் தோன்றுவதைக் கண்டாள். மலர்க்கொடி, அந்த மண்டபத்திற்குள் நுழைந்த யாரையோ, மனங்கனிந்து இன்பந் துள்ளிக் குதிக்கும் ஆனந்த உணர்ச்சியுடன் வரவேற்பது போலிருந்தது. பாடிக்கொண்டிருந்தபோதே அவள் முகத்தில் வெளிப்பட்ட அந்தக் குறிப்பைக் கண்ட தங்கம் சட்டென்று மண்டப வாயிற் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

இதென்ன இது! உண்மைதானா? இல்லை, தங்கம் கனவு காண்கின்றாளா? அவள் கண்டது யார்? அந்த இளைஞன் தான்! தன்னைத் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிய அந்த மர்ம இளைஞன் தான் அவன்!

இவன் எப்படி இங்கே வந்தான்! மலர்க்கொடி அவனை ஏன் இப்படி ஆனந்தம் பொங்க, பாட்டுக்கு மத்தியிலும் அன்புடன் வரவேற்க வேண்டும்! அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவோ!

திரும்பிப் பார்த்த தங்கத்தின் உள்ளத்தில் இத்தனை கேள்விகளும் எழும்பின. ஆனால், அவற்றிற்கெல்லாம் தக்க பதில்தான் கிடைக்கவில்லை.

வந்த அந்த இளைஞன் விருந்தினரிடையே வேறு யாரும் கவனியாமலே அமர்ந்துவிட்டான். தங்கமும், பின்னால்

திரும்பிய தன் முகத்தை மீண்டும் மலர்க்கொடியின் பக்கம் திருப்பிக் கொண்டாள். பாட்டு முடிந்தவுடனே, தங்கம் ஆவலோடு பின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். ஆனால், அவள் ஏமாற்றத்தைத் தான் சந்திக்க நேர்ந்தது. ஏனென்றால் அந்த இளைஞன் அங்கே காணப்படவில்லை.

தங்கத்திற்கும் ராதைக்கும் மலர்க்கொடி மிகுந்த நட்புடையவளாகி விட்டாள். மற்ற விருந்தினரெல்லாம் சென்றபின் அவர்கள் ஒருவருடன் ஒருவர் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சிறிது நேரத்திற்குள்ளேயே அவர்களுக்கிடையே வலுவான நட்பு ஏற்பட்டு விட்டது. ஆயிரம் ஆண்டுகள் பழகியவர்களைப் போல அவர்கள் ஒருவருடன் ஒருவர் மனம் விட்டுப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். மூன்று பெண்களும் பேசிக் கொண்டிருந்த போது அந்தப் பக்கமாக வந்த கயிலாயமும் வழக்கறிஞர் வேலாயுதமும், இந்தப் பெண்கள் எப்படித்தான் இவ்வளவு சீக்கிரமாகப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்களோ என்று பெண்கள் இயல்பைப் பற்றியே ஓர் ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தார்கள்.

அவர்கள் இருவரையும் கண்டவுடன், மலர்க்கொடி தன் தந்தையை, நோக்கி, "அப்பா இவர்கள் இருவரும் இதற்கு முன் பட்டணத்துக்கே வந்ததில்லையாம். ஊர்சுற்றிப் பார்க்க வேண்டுமாம்" என்று செல்லமாகக் குழைவான குரலில் கூறினாள். 'உன் காரில், நாளை அவர்களை ஏற்றிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றிக் காண்பித்துவிட்டு வாயேன்!" என்று வழக்கறிஞர் கருத்துரைத்தார்.

உடனே மலர்க்கொடி தங்கத்தையும், ராதாவையும் நோக்கி, "அப்படியானால், நாளைக்கு என்னோடு வருகிறீர்களா?" என்று கேட்டாள்,

'சரி' என்பதைத் தவிர அவர்கள் அந்த அன்பழைக்கு வேறு மறு மொழி என்ன சொல்ல முடியும்!

மறுநாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் அவர்கள் புறப்படுவதென்று பேசிக் கொண்டார்கள். அதன்படி மறு நாள் காலையில் மலர்க்கொடி வீட்டில் அவர்களைக்கொண்டு போய் விடுவதற்காக கயிலாயமும் அவர்களுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மரகத அம்மாளைக் கூப்பிட்டதற்கு அவள், தலை நோவதால், தான் வரவில்லை என்று கூறி விட்டாள், கயிலாயத்துடன், தங்கமும் ராதாவும் புறப்பட்டு வீதிக்கு வந்து வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு போவதற்காக ஏதாவது கார் வருமா என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்கள் எதிரில் அழகான ஒரு கார் வந்து நின்றது. அதை ஒரு பெண் ஓட்டிக் கொண்டு வந்தாள், அவர் காரிலிருந்து இறங்கிய பிறகு தான் அது மலர்க்கொடி என்று தெரிந்து கொண்டார்கள். உடனே தங்கமும் ராதை யும் அவளை ஓடிப் போய்க் கட்டிக் கொண்டார்கள். ''மலர்க்கொடி உனக்குக் காரோட்டக் கூடத் தெரியுமா?'' என்று வியப்புடன் கேட்டாள் ராதா.

பதிலுக்கு ஒரு புன்னகையைத்தான் உதிர்த்தாள் மலர்க் கொடி.

'சரி, நீங்கள் போய் வாருங்கள்!' என்று கூறிவிட்டு கயிலாயம் வீட்டின் உள்ளே போய்விட்டார்.

தங்கமும் ராதாவும், காரில் பின்புறமாக ஏறிக் கொள்ள, மலர்க்கொடி முன்னால் ஏறி உட்கார்ந்து காரை ஓட்டிச் சென்றாள்.

சிறிது தொலைவு சென்றதும், ''எங்கே போக வேண்டும்?'' என்று மலர்க்கொடி கேட்டாள்.

"எங்களுக்கென்ன தெரியும்? நீதான் எங்காவது கூட்டிக் கொண்டு போக வேண்டும்" என்று தங்கம் சொன்னாள்,

"ஜூவுக்குப் போகலாமா?" என்று கேட்டாள் மலர்க் கொடி.

"ஜூவா? அது என்ன?" என்று ராதா புரியாமல் கேட்டாள்.

"விலங்குக் காட்சி சாலை" என்று மலர்க்கொடியிட மிருந்து பதில் வந்தது.

உடனே தங்கமும் ராதாவும் அங்கே போகலாம் என்று கூறினார்கள்.

கார் விலங்குக் காட்சி சாலைக்கு வந்து சேர்ந்தது.

மூன்று பெண்களும், விலங்குக் காட்சி சாலையில் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார்கள், அதில் பாதிப் பொழுது போய் விட்டது.

"சரி, போதும் வீட்டுக்குப் போகலாம்" என்றாள் தங்கம்.

"இன்னும் மற்றதெல்லாம் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"பார்க்கலாம். போய்ச் சாப்பிட்டு விட்டு வர வேண்டாமா?" என்று கேட்டாள் ராதா,

"சரி, போவோம் வாருங்கள்" என்று சொல்லி மலர்க் கொடி அவர்களை வெளியில் கூட்டி வந்தாள். மறுபடியும் காரில் அவர்கள் ஏறிக் கொண்டதும் அது கிளம்பியது.

கார் எந்தெந்தப் பாதையிலோ சுற்றி நெடுநேரம் ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு விலங்குக் காட்சி சாலைக்கு வரக் கால் மணி நேரம் கூடப் பிடிக்கவில்லை. ஆனால், இப்போது கார் அரைமணி நேரத்திற்கு மேல் ஓடியும் வீடு அருகில் இருப்பதாகத் தோன்றவில்லை. ''மலர்க்கொடி எங்கே காரை ஓட்டுகிறாய்?'' என்று பின்னாலிருந்து கேட்டார்கள். ''சாப்பாட்டுக்குத்தான்போகிறோம்!'' என்று முன் புறம் இருந்தபடியே பதிலளித்தாள் மலர்க்கொடி.

மலர்க்கொடி, பாதை தவறி விட்டாள் என்று தான் அந்தப் பெண்கள் இருவரும் எண்ணினார்கள். அதற்குத் தகுந்தாற்போல், காரும் பட்டணத்துச் சந்தடிகள் இல்லாத அமைதியான ஒரு பாட்டை வழியாகச் சென்று கொண்டிருந்தது.

கடைசியில் கடற்கரையை அடுத்த ஒருசோலை வனத்தின் மத்தியிலே ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினாள் மலர்க்கொடி.

தங்கமும் ராதாவும் திகைப்படைந்து போய் இருந்தார்கள். ஆனால், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், தங்கம் மலர்க்கொடியை நோக்கி, ''காரை இங்கே நிறுத்தி விட்டாயே சாப்பிடப் போக வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''சாப்பாடு! சாப்பாடு! சாப்பாடு எதற்கு வேண்டியிருக்கிறது! ஒருநாள் சாப்பிடாமல்இருந்தால் என்ன?'' என்று கேட்டுக் கொண்டே கீழே இறங்கினாள் மலர்க்கொடி.

அவள் போக்கின் பொருள் புரிபடாமல் தங்கமும் ராதாவும் கீழே இறங்கினார்கள்.

“ஆகா! இந்த வெயிலுக்கு இந்த இடம் எவ்வளவு குளுமையாக இருக்கிறது!” என்று சொல்லிக்கொண்டே, மலர்க்கொடி அவர்கள் இருவரையும் நோக்கினாள். அவளைப் பார்த்தால் வழி தவறிவிட்டோமே என்றோ, சாப்பாட்டிற்கு வீட்டிற்குப் போக வேண்டுமே யென்றோ வருத்தப்படு பவளாகத் தோன்றவில்லை. அவள் தங்களிடம் ஏதோ விளையாடுகிறாள் என்று தங்கம் புரிந்து கொண்டாள். ஆனால், ராதா அதைப் புரிந்து கொள்ளவில்லை.

“சிறிது நேரம் அதோ அந்த மரத்தடியில் போய் உட்கார்ந்திருங்கள். நான் இந்தக் காரைப் பழுது பார்த்து விட்டு வருகிறேன்” என்று சிரிக்காமல் சொன்னாள் மலர்க் கொடி.

இரண்டு பெண்களும் அவள் குறிப்பிட்ட ஓர் ஆலமரத் தடியை நோக்கிச் சென்றார்கள். களைப்பாக இருந்ததால், அதன் அடியில் அமர்ந்து தொலைவிலே கொந்தளித்துக்கொண் டிருக்கும் கடலையும், மேலே கீச்சிட்டுக்கொண்டிருக்கும் குருவி முதலிய பறவைகளையும் பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

நெடுநேரம் அவர்களால் பொழுதைப் போக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை. சுமார் பத்து நிமிடங் களுக்குப் பிறகு, அவர்கள் வயிற்றுப் பசி தாங்காமல் தங்கள் கவனத்தைத் திருப்ப வேண்டி வந்தது. அவர்கள் மலர்க் கொடி காரை நிறுத்திய பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அப்போது மலர்க்கொடி அவர்களை நோக்கி வந்தாள்.

சிரித்துக்கொண்டே, “சாப்பிடப் போவோமா?” என்று கேட்டாள். தங்கமும் ராதாவும் எழுந்திருந்தார்கள்.

சிறிது தூரம் வந்ததும் அவர்கள் அப்படியே நின்று வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள். அங்கே மரத்தடியில் ஒரு

பாய் விரித்து, அதன் மேல் மூன்று இலைகள் போடப்பட்டிருந்தன. எதிரில் சின்னதும பெரியதுவான சட்டிகளில் சோறும் கறிகளும் இருந்தன.

''மலர்க்கொடி இதெல்லாம் என்ன?'' என்று வியப்புடன் கேட்டாள் தங்கம்.

''சாப்பாடு!'' என்றாள் மலர்க்கொடி. அந்தப் பதில் தங்கத்தின் சந்தேகங்களைத் தீர்க்கக் கூடியதாக இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட மலர்க்கொடி 'தங்கம் நான் புறப்படும் போதே அம்மா சோறு கட்டிக்கொடுத்துவிட்டார்கள். இப்போது நாம் சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறுவோம். இங்கிருந்து மியூசியத்திற்குப் போய்ப் பார்த்துவிட்டு மாலையில் மெரினாவுக்கு போகலாம்'' என்றாள் மலர்க்கொடி.

பிறகு மலர்க்கொடியின் குறும்பைப் பற்றிப் பேசிக் கொண்டே அந்தப் பெண்கள் மூவரும் உணவுண்டார்கள்.

இளைப்பாறி முடிந்து அவர்கள் புறப்பட்டுச் சென்ற போது, வழியில் ஒரு பயங்கரமான கார் விபத்து ஏற்பட்டது.

# 27. பொல்லாத இதயம் இது அம்மா!

மலர்க்கொடி கடற்கரைச் சாலையில் காரை ஓட்டிக் கொண்டு சென்றாள். அப்போது அந்த நிகழ்ச்சி நடந்தது. அவர்கள் காரைக் கடந்து ஒரு மோட்டார் சைக்கிள் சென்றது. அதைக் கண்டவுடன் ராதா, தங்கத்தின் இடுப்பில் இடித்து, 'தங்கம், அதோ பார்த்தாயா, உன் அத்தான் சுந்தரேசன்'' என்று சுட்டிக் காண்பித்தாள். தங்கம் அந்த மோட்டார் சைக்கிள் பக்கம் தன் பார்வையைச் செலுத்திய போதுதான் அந்த விபத்து நடந்தது. எதிர்ப் பக்கமாக ஒரு கார் வந்தது. சாலையைக் குறுக்கே கடந்து கொண்டிருந்த ஒருவன், அந்தக் காருக்குத் தப்புவதற்காக விலகினான். அதே சமயம், சுந்தரேசனுடைய மோட்டார் சைக்கிள் அந்த மனிதன் மீது பாய்ந்தது. அந்த மனிதன், மோட்டார் சைக்கிள் தன்னை மோதிய வேகத்தில் சுற்றிச் சுழன்று கீழே விழுந்தான். அவன் விழுந்ததைப் பற்றிச் சிறிதும் இலட்சியப் படுத்தாமல், சுந்தரேசன் வெகு வேகமாக மோட்டார் சைக்கிளை விட்டுக்கொண்டு சென்றுவிட்டான்.

தரையில் அந்த மனிதன் விழுந்த அதே நேரம் மலர்க் கொடியின் கார் அந்த இடத்தை நோக்கி வந்தது. நல்ல வேளை! மலர்க்கொடி அழுத்தமாக ஒரு பிரேக் போட்டுக் காரை அப்படியே சிறிது தள்ளியே நிறுத்திவிட்டாள்.

இல்லாவிட்டால், கீழே விழுந்து கிடந்த அந்த மனிதன் மீது அவள் கார் ஏறியிருக்கும்.

அடிபட்டவன் அருகில் நின்றால், அகப்பட்டுக்கொள்ள நேரும் என்று பயந்துதான் சுந்தரேசன் வேகமாகச் சைக்கிளை விட்டுக்கொண்டு போய்விட்டான் என்று எண்ணினார்கள் அந்தப் பெண்கள். ஆனால், அருகில் வந்து கீழே யிறங்கி அடிபட்டுக் கிடந்த ஆளைப் பார்த்த பிறகுதான் சுந்தரேசன் அவ்வளவு வேகமாக ஓடியதன் பொருள் அந்தப் பெண்களுக்கு விளங்கியது. ஒருவேளை சுந்தரேசன் வேண்டு மென்றே கூட அந்த ஆளை அடித்துச் சாய்த்திருப்பானோ என்றுகூட எண்ணம் ஓடியது தங்கத்திற்கும் ராதாவிற்கும்.

காரை நிறுத்தியதும், மூன்று பெண்களும் விரைவாகக் கீழே ஓடி வந்து அடிபட்ட ஆளைக் கவனித்தார்கள். உடனே அந்த மூன்று பெண்களுக்கும் வியப்பும் திகைப்பும் அதிர்ச்சியும் ஆகிய உணர்ச்சிகள் ஒரே மட்டாக எழுந்தன.

''ஆ! நீங்கள்?'' என்று அலறினாள் மலர்க்கொடி.

''ஐயோ! நீங்கள்தானா?'' என்று பதறினாள் தங்கம்.

''ஐயோ! உங்களுக்கா இப்படி நேரிட்டது?'' என்று கூவினாள் ராதா.

அடிபட்டுக் கிடந்த மனிதனைக் கண்டதும் அந்த மூன்று பெண்களுக்கும் இதயத்தில் ஏற்பட்ட துன்பம் ஒரே மாதிரி யாக இருந்தது. அந்த மனிதனை அவர்கள் மூவரும் அறிவார்கள்.

மலர்க்கொடி உடனடியாக அவனுடைய உடலைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டாள். அவள் கண் களிலிருந்து நீர் பொலபொலவென்று உதிர்ந்தது. இருப்பினும்

அந்தக் கண்கள். அவனுக்கு எங்கே எந்த இடத்திலே அடி அல்லது காயம்பட்டிருக்கிறது என்று ஆராயத் தவறவில்லை?.

அடிபட்டு விழுந்த அந்த மனிதனின் ஆசனப் பக்கத்தில் ஊமைக்காயம் ஒன்று ஏற்பட்டிருந்தது. வலதுமுழங்கை தரையில் அடிபட்டுத் தோல் உரிந்து காயம் ஏற்பட்டு இரத்தமும் சலமும் கசிந்து கொண்டிருந்தன. இடதுகையோ- அதுதான் பார்க்கப் பொறுக்க முடியாத காட்சியாக இருந்தது. இடது கையில் மணிக்கட்டு அளவில் கை துண்டிக்கப்பட்டதுபோன்ற காயம் அந்த வெட்டுக் காயத்தினின்றும் இரத்தம் கொத கொதவென்று வடிந்து தரையை ஈரச் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடனே மலர்க்கொடியின் பதற்றம் மேலும் அதிகமாகியது. உடனே தன் சேலைத் தலைப்பைக் கிழித்து அந்த வெட்டுக் காயத்தில் சுற்றிக் கட்டினாள். பிறகு தங்கத்தை நோக்கி ' தங்கம், இவரை நாம் உடனே மருத்துவ விடுதிக்குக் கொண்டு செல்ல வேண்டும். தூக்கிக் காரில் கொண்டு போய்க் கிடத்தலாமா'' என்று கேட்டாள்.

அடிபட்ட அந்த மனிதனோ தன்னுணர்வு அற்றுக் கட்டை போலக் கிடந்தான்.

தங்கம் அவனை உற்று நோக்க நோக்க அவளுக்குப் பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டன. அந்த மனிதன் தான் தன்னைக் காட்டுப் பிள்ளையார் கோயிலில் சுந்தரேசனிட மிருந்து மீட்டுக் காப்பாற்றியவன் என்று தங்கம் தெரிந்து கொண்டாள். அந்த மனிதன் தான் இராதாவும் முருகேச வாத்தியாரும் நெய்யூரில் காரில் இடங் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருந்தபோது இடங்கொடுத்தவன் என்று தெரிந்து கொண்டாள். அந்த மனிதன்தான் முதல்நாள் மலர்க்கொடி பாடிக்கொண்டிருக்கும்போது வந்துஅவளுடைய

கவனத்தை இழுத்தவன் என்றும் தெரிந்துகொண்டாள். ஆனால், இதற்கெல்லாம் முன்னால் எல்லாவற்றுக்கும் முன்னால் அவனைத் தான் எங்கோ சந்தித்திருப்பதாக ஓர் உணர்வு மீண்டும் அவளுக்கு வராமல் இல்லை. அந்த உணர்வு இப்போது அவளுடைய உள்ளத்தில் புகுந்து ஒரு கற்பனையை உருவாக்கியது. அது இதுதான்! மணிக்கட்டுக்கு கீழே கையில்லாத அந்த நிலையில் உள்ள மற்றொருவனின் உருவம் அவள் மனக்கண்முன் தோன்றியது. அந்த உருவம் தான் முருகேச வாத்தியாரின் வளர்ப்புப் பிள்ளையாக இருந்த நடராசனின் உருவம். அந்த உருவத்துடன் இந்த இளைஞனை ஒப்பிட்டுப் பார்த்தாள் தங்கம், இரண்டும் ஒரே மாதிரியாக இருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது அவளுக்கு! இல்லை, அப்படியிருக்கமுடியாது என்று அவள் அறிவு வாதாடியது. நடராசனைப் பார்த்து எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டது. அவன் உருவம் அவள் மனத்திரையில் மங்கலாகத்தான் தெரிந்தது. அந்த உருவம்போல் இந்த இளைஞனும் இருக்கிறான் என்று அவள் எப்படி முடிவுகட்ட முடியும். ஆனால், கையளவிலே இருவரும் ஒரு நிலையில் தான் இருந்தனர். நடராசன் ஆரம்பத்திலிருந்தே கையிழந்த வனாகத்தான் அவளுக்கு அறிமுகமானான். ஆனால், இப்போது அடிபட்டுக் கிடக்கும் இந்த இளைஞனோ, இப்போதுதான் கையை இழந்திருக்கிறான்; சைக்கிளில் அடிபட்டு அவன் கை எப்படியோ வெட்டுப்பட்டிருக்கிறது. இதற்குமுன் தான் பார்த்தபோதெல்லாம் அவனுக்குக் கை யிருந்தது. ஆகவே, இவன் நடராசன் அல்ல. ஆனால், இவனை முன்னரே பார்த்திருப்பது போல் தனக்கு மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் என்ன? இது புரியாமல் தான் தங்கம் திகைத்துக் கொண்டிருந்தாள்.

மலர்க்கொடியின் குரல் கேட்டுத் தங்கத்தின் சிந்தனை பட்டென்று அறுந்தது. மலர்க்கொடி என்ன சொன்னாள்

என்பதே அவள் காதில் விழவில்லை. ஆனால், அவள் தன்னை அழைத்தது மட்டும் தெரிந்தது. திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல் அவள் பேசினாள்.

"மலர்க்கொடி, இவரை நாம் மருத்துவ விடுதிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் என்ன?"

அந்த நேரத்தில் வீதியில் யாரும் இல்லை. ஆகவே பெண்கள் மூவரும் தாங்களாகவே தான் எல்லாம் செய்ய நேரிட்டது.

மூன்று பேருமாகச் சேர்ந்து அந்த இளைஞனைத் தூக்கிக் கொண்டு வந்து காரில் கிடத்தினார்கள். பிறகு, பின் சீட்டில் ஓர் ஓரமாக இருந்து அவனைக் கவனித்துக் கொள்ளும்படி ராதாவை இருக்கச் சொல்லி விட்டு தங்கமும் மலர்க்கொடியும் முன் பக்கமாக இருந்து கொண்டார்கள்.

மலர்க்கொடி, காரை யோட்டிக் கொண்டு சென்றாள்.

பெரிய மருத்துவவிடுதியில் கொண்டு போய் நடந்த விவரங்களைச் சொல்லி, அந்த இளைஞனை டாக்டர்கள் வசம் ஒப்படைத்தார்கள். ஆனால், சுந்தரேசன் பெயரை மட்டும் கூறவில்லை. தங்கம், மலர்க்கொடி, ராதா மூன்று பேருமே ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமலே இந்த முடிவுக்கு வந்திருந்தார்கள். அடித்து வீழ்த்தி விட்டுப் போனவன் யாரோ தெரியவில்லை என்றே கூறினார்கள்.

அந்த மட்டுக்குச் சுந்தரேசன் தப்பினான். ஆனால், கடைசிவரை தன் அத்தான் சுந்தரேசன் அகப்பட்டுக் கொள்ளாமல் இருப்பானா என்று தங்கத்திற்குச் ஐயமாகவே யிருந்தது.

ஏனென்றால், அடிபட்டு உணர்வற்றுக் கிடக்கும் அந்த இளைஞன் தன்னுணர்வு பெற்றுக்கண் விழித்ததும் என்னைத் தள்ளிச் சென்றவன் இவன் என்று சொல்லி விட்டால், சுந்தரேசன் மீது வழக்குத் தொடுக்காமலா விடுவார்கள்?.

மருத்துவ விடுதிக்கு வந்து சேர்ந்த அரைமணி நேரத்திற்குப் பிறகு அந்த இளைஞன் கண் விழித்தான். விழித்த உடனே அவன் கண்ணுக்கு முதலில் மலர்க்கொடி தான் தெரிந்தாள்போலிருக்கிறது தன் வேதனையெல்லாம் மறந்து, ''ஆ! மலர்க்கொடி! நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று முகத்தில் ஒளி மின்ன உற்சாகத்தோடு கேட்டான்.

''ஆம்! ராஜு!'' என்று அதே ஆர்வத்தோடு பதிலளித் தாள் மலர்க்கொடி.

அவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட அந்த அன்பும் ஆர்வமும் கலந்த உரையாடலைக் கேட்ட தங்கத்திற்கு என்னவோ மாதிரியிருந்தது. அவன் கண்ணில் படாமல் விலகி நின்று கொள்ள முயன்றாள். ஆனால் அதே சமயம் அந்த இளைஞன் தங்கத்தைப் பார்த்துவிட்டான்.

''ஆ! நான் என்ன கனவு காண்கிறேனா? இதோ தங்கம், பக்கத்திலே அவர்களின் தோழி ராதா! மலர்க்கொடி நான் காண்பதெல்லாம் உண்மைதானா?'' என்று கேட்டான்.

''ஆ! இது தங்கம்தான்! இது ராதாதான்! இவர்கள் என் தோழிமார்கள், ஏன் இவர்களை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?'' என்று கேட்டாள் மலர்க்கொடி.

அதற்கு அந்த இளைஞன் பதில் கூறவில்லை.

அவ்வளவு நேரமும் ஆழ்ந்த சிந்தனையோடு அந்த இளைஞன் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த

தங்கம் தன் பெயர் குறிப்பிடப்பட்டதும் திடுக்கிட்டுத் தன் சிந்தனையை விட்டு நிலையான தன்மைக்குத் திரும்பினாள்.

இந்தச் சமயத்தில் அங்கு வந்த நர்சு ஒருத்தி, மூன்று பெண்களையும் பார்த்து, "அம்மா, இனிமேல் நீங்கள் இங்கு இருக்கக் கூடாது. பார்க்க வேண்டுமானால் நாளை மாலை நான்கு மணிக்கு மேல் வாருங்கள்" என்று புறப்படச் சொல்லி வற்புறுத்தினாள். மலர்க்கொடி வேண்டா வெறுப்பாக அந்த இளைஞனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே நடந்தாள். தங்கமும் இராதாவும் நகரும் கற்சிலைகளைப்போல் அவளைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

வெளியில் வந்தபோது மலர்க்கொடியின் முகம் கூம்பிய தாமரையைப்போல் காட்சியளித்தது.

"தங்கம் இன்று நாம் புறப்பட்ட நேரம் சரியில்லை. அவருக்கு இந்த மாதிரி ஏற்பட்டு பாவம் கை வேறு போய் விட்டது;" என்று தளதளத்த குரலில் கூறினாள். மலர்க் கொடி.

தங்கம் ஆற்ற முடியாத துயரத்தோடு மலர்க்கொடியை நிமிர்ந்து நோக்கினாள். ஆனால், அவள் எதுவும் வாய் திறந்து சொல்லவில்லை. சொல்லக் கூடிய நிலையில் அவள் இல்லை. அவள் நெஞ்சகத்துக்குள்ளே தான் அப்போது எத்தனை யெத்தனை குழப்பம்!

காரில் ஏற்றிக் கொண்டு வந்து தங்கத்தையும் ராதாவை யும் ஜமீந்தார் வீட்டில் இறக்கி விட்டுவிட்டுப் போனாள் மலர்க்கொடி. கார் மறைந்தவுடன் தங்கத்தை நோக்கி ராதா 'ஏன் தங்கம். அந்த ராஜூவும் நம்ம நடராசனும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள் இல்லையா?' என்று கேட்டாள்,

"அப்படியா?" என்று திரும்பிய தங்கம், ராதாவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். ராதாவின் உள்ளத்திலும் தனக் கேற்பட்டிருப்பது போலவே சிந்தனைக் குழப்பம் ஏற்பட் டிருக்கிறது என்று தெரிந்து கொண்டாள் தங்கம். உடனே, தங்கம் தன் உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டாள். ராதா வின் உள்ளக் கிடக்கையை அறிய வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

"அப்படியா; கைதான் இருவருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. முகமுமா அப்படியிருக்கிறது?" என்று கேட்டாள் தங்கம்.

இந்த வார்த்தைகள் ராதாவின் உள்ளத்தில் சுருக் கென்று முள்ளைப்போல் தைத்திருக்க வேண்டும். இதைக் கேட்டதும் அவள் முகத்தில் எத்தனை வேதனையான சுளிப்புகள் ஏற்பட்டுவிட்டன!

"தங்கம் மனிதர்களின் உடலில் உள்ள ஊனங்களால் அவர்களுடைய பெருமை குறைந்துவிடுவதில்லை. அவர் களுடைய உள்ளத்தின் நேர்மையே உயர்வையும் சிறப்பையும் உண்டாக்கும். அந்த உள்ளத்தின் தன்மை அவர்கள் முகத் திலே விளங்கித் தோன்றும். இந்த ராஜூ நடராசனைப் போல் உருவத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் ஒற்றுமையுள்ள வர் என்பதை அவருடைய கள்ளங்கபடமற்ற முகமே நமக்குக் காட்டுகிறது. ஆனால், ஒரே ஒரு வேற்றுமை. நடராசன் முகத்தில் கபடமில்லாத அசட்டுத்தனத்தைக் கண்டிருக் கிறோம். இந்த ராஜூவின் முகத்தில் குறையில்லாத உறுதிப் பண்பு வெளிப்பட்டுத் தெரிகிறது!" என்று ராதா விவரித் தாள்.

"அப்படியானால், நடராசனைவிட இவர் சிறந்தவர் என்று சொல்லுகிறாயா?" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம், ஒரே மாதிரியான இரண்டு பொருள்களை வைத்துக் கொண்டு ஒன்றைவிட மற்றொன்று உயர்வு என்று எப்படித் தீர்மானிக்க முடியும்;" என்றாள் ராதா.

"ஒன்றும் தெரியாத அசடைவிட உறுதிப் பண்புள்ள ஒருவர் உயர்ந்தவரில்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

"உனக்கு எப்போதும் நடராசனைப் பிடிக்காது!" என்றாள் ராதா.

"உனக்கு எப்போதும் நடராசனைத்தான் பிடிக்கும்!" என்று தங்கம் சொன்னவுடன் ராதாவின் முகத்தில் ஏற்பட்ட அந்த ஒளி-கதிரவனிடம் கூட இல்லையென்று சொல்லலாம்.

"நடராசனைப் பிடிக்கும்!" என்ற அந்தச் சொல்தான் அவள் இதயத்தில் எத்தனை மலர்ச்சியை உண்டாக்கி விட்டது. அந்த இதய மலர்ச்சியின் அடையாளமாக அவள் முகம்தான் எவ்வளவு விரிவாக மலர்ந்துவிட்டது. மலர்ந்த அந்த முகத்தில் நாணம் தோன்றியபோது அது எவ்வளவு அழகாகச் சிவந்துவிட்டது! ராதாவை அந்த நிலையிலேயே புகைப்படம் பிடித்து வைத்திருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று தங்கம் எண்ணினாள்.

அவ்வளவு இன்பத்தை அந்த ஒரு சொல் உண்டாக்கி விட்டது.

ராதா நடராசன் மேல் கொண்டிருந்த தூய அன்பின் தன்மையைத் தங்கம் அப்போது மீண்டும் உணரும்படி நேரிட்டது.

மரகத அம்மாளின் வருகையால் அவர்களின் பேச்சு, அந்த மட்டோடு தடைப்பட்டுவிட்டது.

அன்று இரவு முழுவதும் தங்கத்திற்குத் தூக்கமே வர வில்லை. திரும்பத் திரும்ப அந்த இளைஞன் ராஜுவின்

முகமே அவள் நினைவுக்கு வந்து நின்றது. ஒருபுறம் ராஜுவின் முகம் அதையடுத்தாற்போல் இன்னொரு புறம் நடராசனின் முகம், இரண்டுக்கும் எவ்விதமான வேற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை. அதோ நடராசனின் அருகிலே ராதா வந்து நின்றாள். அதே சமயம் ராஜுவின் அருகிலே மலர்க்கொடி வந்து நிற்கிறாள். ராதாவை நடராசன் தனது இடதுகையில் அணைத்துக் கொள்கிறான். மலர்க்கொடியை ராஜு தன் இடதுகையினால் அணைத்துக்கொள்கிறான். இரண்டு பேருடைய இடது கையும் மணிக் கட்டுவரைதான் இருக்கின்றன. உள்ளங்கையுமில்லை. விரல்களுமில்லை. ஆனால் அந்த இரண்டு முகங்களிலேயும் தான் எத்தனை மலர்ச்சி! அந்த இருவருடைய அணைப்பிலும் தான் அந்த இரு பெண்களும் எத்தனை இன்பம் காணுகிறார்கள். மலர்க்கொடியையும் ராதாவையும் பார்க்கும்போது தங்கத்திற்கு அவர்கள்மேல் பொறாமையாக இருந்தது. ஆகா! இரண்டு பேரும் தங்கள் இதயத்துக்குகந்த காதலர்களை அடைந்து எத்தனை சுகமாக, எத்தனை ஆனந்தமாக இருக்கிறார்கள். தனக்கு மட்டும்...அன்பு காட்ட யாருமில்லை. தன் காதல் மட்டும் ஏன் இப்படித் தோல்வியாகப் போக வேண்டும்.

அத்தான் சுந்தரேசன் அழகிலே குறைச்சலா, அறிவிலே குறைச்சலா, நாகரிகத்திலே குறைச்சலா? இருந்தாலும் தான் அவர்மீது கொண்ட காதல் ஏன் இப்படித் துன்பக் காதலாக முடியவேண்டும்? தான் தேர்ந்தெடுத்த அந்த அழகு சுந்தரேசர் ஏன் இன்னொருத்தியின் கணவராக இருக்க வேண்டும்.

அதோடு நில்லாமல் ஏன் அவர் வேறு வேறு பெண்களை நாடியோடுபவராகவும், நல்லவர்கள் வெறுத்துரைக்கும் படி நடக்கும் இயல்பினராகவும் இருக்க வேண்டும். தன் தோழி

கள் எல்லாம், மனத்திற்குகந்த காதலர்களைப் பெற்று மகிழ்ந்திருக்கும் போது, தான்மட்டும்' ஏன் தோல்வியடையக் கூடிய காதலுக்காளாக வேண்டும்? எதிரில் தோன்றிய அந்த உருவங்களைக் காணக் காணத் தங்கத்திற்கு இந்த மாதிரி யான ஆயாசமான எண்ணங்கள் ஏற்பட்டன. திடீரென்று அந்த உருவங்கள் வானை நோக்கிச் சென்றன. அப்படியே ஆகாயத்தோடு ஆகாயமாய் மறைந்து விட்டன.

நடராசன், ராஜு, ராதா மலர்க்கொடி எல்லோரும் மறைந்து விட்டார்கள். தங்கம் கண்ணைச் கசக்கிக் கொண்டு பார்த்தாள். இருட்டடைந்த அறையிலே இருந்த சன்னல் வழியாக வெளியில் தெரிந்த நீல நிறமான வானத் திலே நான்கு நட்சத்திரங்கள் தான் சுடர் விட்டுக் கொண்டி ருந்தன.

அத்தனையும் கனவு!

# 28. ராதாவுக்கு வந்த கடிதம்

தங்கத்தின் எண்ணம் அவள் அறிவின் பிடியிலிருந்து நழுவியது. அது திரும்ப அந்தப் புதிய இளைஞன் ராஜுவின் மீதே போய்ப் படிந்தது. ஏதோ என்று அவள் உள்ளத்தை அவன் நினைப்பிலேயே சுழன்றாடும்படி செய்து கொண்டிருந்தது.

அத்தான் சுந்தரேசன் மீது அவளுக்குத் தடுக்கமுடியாத ஓர் அன்பு ஏற்பட்டது. அவனும் அவளை விரும்புவதாகக் காட்டிக் கொண்டான். ஆனால், ஒவ்வொரு முறையும் அவனை அவள் எண்ணிய போதும், ஒவ்வொரு முறையும் அவளுடைய உள்ளம் அவன் பால் ஈடுபட்டபோதும் அவனைக் காதலிப்பது தவறு தவறு என்று ஏதோ ஒன்று இடித்துக் கொண்டேயிருந்தது.

நடராசன் அவள்மீது ஆசை கொண்டிருந்தான். அவளும் அவனைக் காதலித்திருப்பாள்! ஆனால் அந்தக் கையில் இருந்த ஊனம் அவளுக்குப் பெருங் குறையாகப் பட்டது. அதுவே அவள் நடராசன் மீது கொண்ட காதலை வளர விடாமல் தடுத்து நிறுத்தியது.

இப்பொழுதோ அவளுடைய எண்ணம் இந்தப் புதிய இளைஞன் ராஜுவின் மீது படிகிறது. இவனும் கையை

இழந்தவன்தான். ஆனால், கைங்கூடவிருக்கும் போதும் இவனை இரண்டொரு முறை தங்கம் பார்த்திருந்தபடியால் அந்த ஊனம் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால், இவன் மீது எப்படி உள்ளம் ஈடுபட்டது என்று எண்ணிப் பார்க்கப் பார்க்க அவளுக்கு விந்தையாகவே யிருந்தது. இவனை முதலில் பார்த்த போதே எங்கோ பார்த்தது போன்ற பிரமை தோன்றுவானேன். இவனைப் பார்த்தபோதே இவனுக்கும் தனக்கும் நெடு நாள் தொடர் பிருப்பது போன்ற எண்ணம் ஏற்படுவானேன்? தங்கத்திற்கும் ஒன்றும் புரியவில்லை ஆனால் இந்தக் காதலும் நிறை வேறு மென்ற நம்பிக்கை தங்கத்துக்கில்லை. அந்த ராஜூ வும் மலர்க்கொடியும் அவ்வளவு அன்பாகவும் ஆர்வமாகவும் பழகுவதைப் பார்த்த பிறகு, தான் இதில் இடையில் புகுவது நேர்மையாகவோ நியாயமாகவோ, பொருத்தமாகவோ அவளுக்குப் படவில்லை.

இதிலும் ஏமாற்றங் காண நேரிடுவதற்கு முன்னால், தன் உள்ளத்தை அணைபோட்டு அந்தப் பக்கம் திரும்பாத படி தடுத்து விடவேண்டுமென்று எண்ணினாள்.

ஆனால், எண்ணமோ திரும்பத் திரும்ப ராஜூவைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அன்று இரவு முழுவதும் அவள் சரியாகத் தூங்கவேயில்லை. அதனால், அவள் காலையில் நெடுநேரம் சென்றே எழுந்திருந்தாள். எழுந்தவுடன், ராதாவின் அறைக்குச் சென்றாள். அவளோ. அப்பொழுது தூங்கிக் கொண்டிருந்தாள். பாவம்! இரவு அவள் உள்ளம் எவ்வளவு தூரம் குழம்பியதோ!

அன்று மாலை நான்கு மணிக்கு, மருத்துவ விடுதியில் போய் அந்த இளைஞனைப் பார்த்து வரலாமா என்று தங்கம் ராதாவைக் கேட்டபோது, அவள் மிகுந்த ஆவலோடு ஒப்புக் கொண்டாள்.

இருவரும் சரியாக மூன்றேமுக்கால் மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி ஒரு வாடகைக்காரை யமர்த்திக்கொண்டு பெரிய மருத்துவ விடுதிக்குச் சென்றார்கள்.

அங்கே ஏற்கனவே மலர்க்கொடியின் கார் வந்து நிற்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படவில்லை. உள்ளே வார்டில் ராஜு தன் படுக்கையில் கைக்கட்டுடன் அமர்ந்து, எதிரில் முக்காலியில் அமர்ந்திருந்த மலர்க்கொடியுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்.

தங்கத்தையும் ராதாவையும் கண்டவுடன், ராஜு தங்கத்துடன் மிக அன்பாகப் பேசினான். அவர்கள் தன்னைச் சரியான சமயத்தில் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டான். ராதாவிடம் அவன் அவ்வளவாகப் பேசவில்லை.

தங்கம் ராஜுவிடம் நிறையப் பேச வேண்டும்; நெடு நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் நினைத்துக் கொண்டு வந்தாள். ஆனால் ஐந்து பத்து நிமிடங்களுக்கு மேல் பேசுவதற்குச் செய்தி அகப்படவில்லை. ஆனால், மலர்க்கொடி மட்டும் அவனுடன் விடாமல் பேசிக் கொண்டிருக்கிறாளே? அப்படி என்ன விஷயம் பற்றி இப்படித் தொடர்ந்து பேசிக் கொள்வார்கள் என்று தங்கத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் மூவரும் புறப்பட்டார்கள்.

வெளியில் வந்ததும், "தங்கம் நீங்கள் இரண்டு பேரும் மருத்துவ விடுதிக்கு வருவதாகச் சொல்லவில்லையே, சொல்லியிருந்தால் நானே வந்து கூட்டிக் கொண்டு வந்திருப்பேனே!" என்று கேட்டாள்.

"மலர்க்கொடி, நீ வருவாயென்று எங்களுக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டாள் ராதா.

உடனே மலர்க்கொடியின் முகம் சிவந்தது.

அவள் சமாளித்துக் கொண்டாள்.

"தங்கம், நாளையிலிருந்து நான் வந்து உங்களைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். நீங்களாகப் புறப்பட்டு விடாதீர்கள்!" என்றாள்.

தங்கம் "சரி" என்றாள்.

தினமும் அந்த மூன்று பெண்களும் அந்த ராஜுவைத் தவறாமல் வந்து வந்து பார்த்து விட்டுப் போனார்கள். அத்தோடு, மலர்க்கொடியும் பலப்பல புதிய இடங்களுக்கு அவர்களைக்கூட்டிக் கொண்டு போய்க் காண்பித்தாள்.

ஒரு நாள் மலர்க்கொடி, "தங்கம், நீயும் கார் ஓட்டப் பழகிக் கொள்ளேன். சொந்தத்தில் ஒரு கார் வாங்கி வைத்துக் கொண்டால் மிகவும் பயனாக இருக்குமே!" என்றாள்.

"ஏன்? கார் வாங்கி ஒரு டிரைவர் சேர்த்து வைத்துக் கொண்டால் என்ன?" என்று ராதா குறுக்கே கேட்டாள்.

"குடும்பப் பெண்களைப் பொறுத்தவரை அது விரும்பத் தக்கதல்ல. குடும்பப் பெண்கள் தாங்களே தங்கள் காரை ஓட்டிக் கொண்டு போவதுதான் சிறந்தது என்று மலர்க் கொடி பதில் சொன்னாள்.

தங்கம் தான் கார் ஓட்டப் பழக விரும்பவில்லை என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால், மலர்க்கொடி விடவேயில்லை. "எப்படியாவது நீ காரோட்டப் பழகியே தீரவேண்டும்" என்று சொல்லியதோடு நில்லாமல் அவ்வப் போது கொஞ்சம் கொஞ்சமாக உடன்வைத்துக் கொண்டு பழக்கிக் கொடுத்து விட்டாள். ஆள் நடமாட்டமில்லாத வீதிகளில் போகும் போது, தங்கத்தையும் ராதாவையும்

மாற்றி மாற்றி ஓட்டச் செய்து நன்றாகப் பழக்கி உரிமச் சீட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டாள்.

இந்தச் செய்தியைக் கேட்டுக் கயிலாயம் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

இதற்கிடையில், மருத்துவ விடுதியில் இருந்த ராஜுவும் பூரண குணமடைந்துவிட்டான். அவனை மருத்துவ விடுதியிலிருந்து அனுப்பும் நாளன்று, மலர்க்கொடி தன் தோழிமாருடன் அவனை அழைத்துச் செல்லக் கார் கொண்டு வந்திருந்தாள்.

மருத்துவ விடுதியிலிருந்து புறப்படும்போது, மலர்க்கொடி முன்னால் ஓட்டும் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். ராதா அவளுக்குப் பக்கத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள். பின்னால் ராஜு உட்கார்ந்திருந்தான். கடைசியாகக் காரில் ஏறவந்த தங்கம், ராதாவை இடித்துக்கொண்டு முன் பகுதியிலேயே ஏறி உட்கார்ந்தாள்.

''நெருக்கமாக இருந்தால் எனக்குக் கை இடிக்கும். ஒருத்தி பின்சீட்டிலே போய் உட்காருங்கள்'' என்றாள் மலர்க்கொடி, ஓரத்தில் இருந்தவள் தங்கம். அவள்தான் பின்னால் உட்காரவேண்டியிருந்தது. அவளுக்கு மிகவும் வெட்கமாயிருந்தது. ஆனால், அவள் தான் பின்னால் போகவேண்டியிருந்தது.

சங்கடப் பட்டுக்கொண்டே அவள் பின்னால் போய் உட்கார்ந்தாள். ராஜு அவளுடன் மிகவும் மரியாதையாகப் பேசினான். காரில் வரும்போதே அவன் ஏதேதோ சொல்லிக் கொண்டு வந்தான். அவையாவும் அவள் காதில் தேனாக ஓடியது. அவள் ஒருவிதமான மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

கார் போகும்போது, வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவன் பக்கத்தில் தன்னுடன் வந்து கொண்டிருந்த

மற்றொரு சிறுவனிடம் "இதோ பாரு, மாப்பிள்ளையும் பெண்ணும் ஊர்கோலம் போகுது" என்று அவர்களைச் சுட்டிக் காட்டினான். அது தங்கத்தின் காதில் விழுந்தது.

அந்தச் சிறுவனின் வாக்குப் பலிக்கக் கூடாதா! தன் இதயப் போராட்டங்களுக்கு ஒரு முடிவு உடனடியாக ஏற்படக் கூடாதா என்று அவள் மனம் ஏங்கியது. ஆனால், மலர்க்கொடியைப் பார்க்கும்போதெல்லாம் தன் இதயக் கனவுகள் எதுவும் நிறை வேறாது என்றே அவளுக்குத் தோன்றியது.

இப்படிப்பட்ட மனப் போராட்டங்களுடன் தன்னை மறந்திருந்த தங்கம், கார் ஒரு குலுங்கிக் குலுங்கி நின்ற போது தன் நினைவு பெற்றாள். மலர்க்கொடியின் வீடு வந்து விட்டது.

எல்லோரும் இறங்கினார்கள். ராஜூ அவனுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து அவனை நலம் விசாரித்தார்கள். பிறகு தங்கமும் ராதாவும் ஜமீந்தார் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள்.

கடற்கரைக்கு உலாவப் போகலாம் என்று அழைத்துச் செல்வதற்காக தங்கத்தையும் ராதாவையும் தேடி ஒரு நாள் மலர்க்கொடி வந்தாள். தங்கத்துக்கு அன்று தடிமன் பிடித்திருந்ததாலும் இலேசாக மண்டை யுடைத்துக் கொண் டிருந்ததாலும் வரவில்லை என்று கூறிவிட்டாள். ராதாவும் மலர்க்கொடியும் மட்டும் சென்றார்கள்.

அடுத்த நாளும் ராதாவும் மலர்க்கொடியும் மட்டுமே கடற்கரைக்குப் போயிருந்தார்கள். தங்கத்திற்குத் தடிமன் விடாததால் அன்றும் அவள் அவர்களுடன் போகவில்லை. தங்கம் மாளிகையின் முன்பகுதியில் உள்ள வராந்தாவில்

வந்து அங்கு கிடந்த சாய்வுப் பிரம்பு நாற்காலியொன்றில் சாய்ந்து கொண்டு ஒரு கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே ஒரு சிறுவன் ஓடி வந்து, ''ராதா அக்கா இருக்காங்களா?'' என்று கேட்டான்.

அந்த சிறுவனைப் பார்த்தால், வசதியான குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவனாகத் தோன்றியது.

''என் தம்பி? என்ன வேண்டும்?'' என்று தங்கம் கேட்டாள்.

''இந்தாங்க, இதை உங்ககிட்டே கொடுத்திட்டு வரச் சொன்னாங்க'' என்று உறையிடப்பட்ட கடிதம் ஒன்றைக் கொடுத்தான் அந்தச் சிறுவன்.

''யார் கொடுத்தது?'' என்று தங்கம் கேட்டு முடிக்கும் போது அந்தச் சிறுவன் வீதியை அடைந்து விட்டான்.

கடிதத்தின் உறை ஒட்டப்பட்டிருந்தது அதன் மேல் எதுவும் எழுதப்படவில்லை.

அந்தக் கடிதத்தைப் பார்க்கப் பார்க்க அதில் ஏதோ மர்மச் செய்தி அடங்கியிருப்பதுபோல் தோன்றியது. அதைப் பிரித்துப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அதில் அப்படி என்ன எழுதியிருக்கும்? யார் இப்படி இரகசியக் கடிதத்தை இராதாவுக்கு எழுதுவார்கள் என்றெல்லாம் தங்கத்தின் மனம் அலைபாய்ந்தது.

ஆனால், தங்கம் கடைசிவரையிலும் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கவில்லை.

நினைத்திருந்தால் அவள் படித்துப் பார்த்திருக்கலாம். கடிதத்தின் உறையைக் கிழித்தெடுத்து படித்துவிட்டு மறுபடியும் ஓர் உறையில் ஒட்டி இராதாவிடம் கொடுத்திருக்கலாம். ஆனால் தங்கம் அப்படிச் செய்யக் கூடியவளல்ல.

கடற்கரையிலிருந்து இராதா திரும்பி வந்தவுடன், தங்கம் அவளைத் தனியே அழைத்து, கடிதத்தைக் கொடுத்து அது கிடைத்த விவரத்தையும் கூறினாள்.

கூறிவிட்டுத் தங்கம் வெளியில் வந்து விட்டாள்.

இராதா வியப்புடன் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது அவள் நெஞ்சு படபடத்தது. அதைப் படித்து முடித்ததும் அவள் தாங்க முடியாத துயருடன் பித்துப் பிடித்தவளைப்போல் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் அடைந்த வேதனையின் மிகுதி அவளை அழக் கூட விடவில்லை. எவ்வளவு நேரம் அவள் இந்த நிலையில் இருந்தாள் என்பது அவளுக்கே தெரியவில்லை. ஆனால், வெளியே காத்துக் கொண்டிருந்த தங்கத்திற்கு அவ்வளவு நேரமும் மிகப் பெரிய நூற்றாண்டு ஒன்று கழிவது போலத் தெரிந்தது. ஏதேனும் முக்கியமான அல்லது அதிசயமான அல்லது வியப்பான செய்தியாக இருந்தால் இராதா தன்னிடம் உடனே சொல்லி விடுவாள் என்பது தங்கத்துக்குத் தெரியும். ஆனால், கடிதம் கொடுக்கப்பட்டதிலிருந்து அவளிடமிருந்து எவ்விதமான அழைப்பும் வராததோடு அவளும் வெளியே வராதது தங்கத்தின் ஆவலுணர்ச்சியை மேலும் தூண்டுவதாயிருந்தது.

ஆனால், அழைக்கப் படாமல் உள்ளே நுழைய தங்கம் முற்படவே இல்லை. அழைப்பு வரட்டும் என்றே காத்திருந்தாள். கடைசியில் இரவுச் சாப்பாட்டு நேரம் வந்து ஜமீந்தாரிணியம்மாளும் மரகத அம்மாளும் அவர்களை உணவுண்ண அழைத்த பிறகுதான், தங்கம் இராதாவை அழைக்க அந்த அறைக்குள்ளே நுழைந்தாள்.

உள்ளே தலைநீட்டியவுடனேயே ராதா இருந்த நிலையைப் பார்த்து தங்கத்தின் உள்ளம் ஆட்டங்கண்டு விட்டது.

ராதா இருந்த நிலையைப் பார்க்க அவளால் பொறுக்க முடியவில்லை. ஏதோ பிரமை பிடித்தவள் மாதிரி கண்களை அகலத் திறந்து கொண்டு உச்சித் தளத்தைப் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் ராதா. அவள் கண்கள் அகன்றிருந்தனவே தவிர அவற்றிலே ஒளியில்லை.—எதிரில் வருவாரை அறியும் ஆற்றலை அவை இழந்திருந்தன.

தங்கம் ஓடிச் சென்று ராதாவைக் கட்டியணைத்துக் கொண்டு, "ராதா ராதா? ஏன் இப்படியிருக்கிறாய்?" என்று பதைப் பதைப்பான குரலுடன் கேட்டாள்.

இராதாவின் காதில் அந்த வார்த்தைகள் விழவேயில்லை. அவள் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்.

தங்கத்திற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

பயந்து போய் "அம்மா! அம்மா!" என்று கத்தினாள்.

மரகத அம்மாளும் ஜமீந்தாரிணியம்மாளும் விரைந்து வந்தார்கள்.

ராதா இருந்த நிலை அவர்களையும் கதிகுலையச் செய்தது.

டாக்டருக்கு உடனே ஆளனுப்பினார்கள்.

வீடு முழுவதும் ஒரே பரபரப்பாக இருந்தது.

அந்தப் பரபரப்பினிடையே தங்கம் ஒரு வேலை செய்தாள்.

ராதாவுக்கு வந்த கடிதம் எங்கேயென்று தேடித் தரையில் ஒரு புறம் விழுந்து கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்துத் தன் இடுப்பிலே செருகி வைத்துக்கொண்டாள்.

டாக்டர் வந்து பார்த்து, ஏதோ மன அதிர்ச்சியின் காரணமாக ராதாவுக்கு இப்படி ஏற்பட்டிருக்கிறது என்றும், நேரம் ஆக ஆகச் சரியாகப் போய்விடும் என்றும் சொல்லி மருந்து கொடுத்துவிட்டுச் சென்றார்.

இரவில் தன் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்த தங்கம் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபோது அவளுடைய உள்ளத்தில் பலமான போராட்டம் ஒன்று எழுந்தது. அந்தப் போராட்டம் நின்று அவள் ஒரு முடிவு காண்பதென்பது இயலாத காரியமாயிருந்தது.

இராதாவின் மன நிலைமையை அந்தக் கடிதம் மாற்றியது வியப்பிற்குரியதல்ல என்று நிச்சயித்துக் கொண்டாள்.

# 29. மாப்பிள்ளை வருகிறார்!

அன்புள்ள ராதா,

வீணான கற்பனைகளில் நீ மனத்தை அலட்டிக் கொண்டிருக்க வேண்டாம் என்பதற்காகவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உன் உயர் குணங்களை நான் மதிக்கிறேன்; அன்பும் செலுத்துகிறேன். ஆனால், நீ என்னிடம் காதல் கொண்டிருப்பது நேற்று வரை எனக்குத் தெரியாது. நேற்றுத் தற்செயலாக நான் கடற்கரையில் உட்கார்ந்திருந்த போது, சிறிது தூரத்தில் நீயும், உன் பணக்காரத் தோழி ஒருத்தியும் பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் என் காதில் விழுந்தன. பிறர் பேசுவதை நான் காதுகொடுத்துக் கேட்கும் வழக்கம் கிடையாது. ஆனால், நேற்றைய உங்கள் உரையாடலில் அடிக்கடி என் பெயர் அடிபட்டதால் நான் சற்று கூர்மையாகக் கவனிக்க நேர்ந்தது. ராதா! உன் இதயத்தின் காதல் பீடத்தில் நீ எனக்கு நிறைய இடம் ஒதுக்கியிருக்கிறாய். ஆனால், அந்த இடத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவனாக நான் இல்லை. அதிர்ச்சியடைந்துவிடாதே! மனத்தைக் கட்டுப் படுத்திக் கொள், உனக்கு ஏற்ற கணவன் ஒருவனைக் கூடி நீ இல்லற வாழ்வில் இனிது ஈடுபடவேண்டும் என்பதே என் விருப்பம்.

நீ என்னைப் பற்றிய நினைப்பை விட்டுவிட வேண்டிக் கொள்கிறேன். இதற்கு காரணம் என்னவென்றால், உன்னைப் போலவே என் இதயத்தை நான் இன்னொருத்திக் காகத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறேன். அவள் என்னை விரும்பாததுபோல் தோன்றினாலும், விரைவில் அவள் என் அன்புக்குக் கட்டுப்படுவாள் என்று நான் முழு நம்பிக்கையோடு இருந்து வருகிறேன். அவளை நினைத்த நெஞ்சால், இன்னொருத்தியை என்னால் நினைக்க முடிய வில்லை. ராதா என்னை மன்னித்துக்கொள். நான் காதலிக் கும் பெண் எப்படிப்பட்டவள் என்று நீ அறிந்து கொள்ள ஆசைப்படக்கூடும். அதற்காகவே சொல்லுகிறேன், அவள் தான் உன் தோழி தங்கம்.

ராதா! இனி நீ என்னை மறந்துவிடு! வீண் மனக் கோட்டைகள் எழுப்பிக் கடைசியில் நீ துன்பத்தில் சரிந்து விழுந்துவிடக்கூடாது என்பதற்காகவே நான் இப்பொழுதே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்,

அன்புள்ள
நடராசன்.

தங்கம், இந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபோது அவள் சிந்தனை குழம்பியது. என்ன முடிவுக்கு வருவதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

நடராசன் சென்னையில்தான் இருக்கிறான். அதுவும் தன்னை மறவாமல் இருக்கிறான் என்ற நினைப்பு அவள் உள்ளத்தில் ஏதோ ஒருவிதமான உணர்ச்சியை உண்டாக் கியது.

அவள் மனம் சுற்றிச் சுற்றி வந்தது. அவள் வாழ்க்கை யில் எதிர்ப்பட்டவர்கள் மூன்றுபேர். அத்தான் சுந்தரேசனைப் பற்றி நினைப்பதே பாவம்! அவன் அத்தகைய கொடிய

வனாக இருக்கிறான் என்பதைத் தங்கம் புரிந்து கொண்டு விட்டாள். ஆகவே அவனை ஒதுக்கிவிட வேண்டியதுதான். அத்தானுக்கு முன்அவள் கண்ணில் தட்டுப்பட்டுக் கருத்தைக் கவர்ந்தவன் நடராசன்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் கருத்தில் புகுந்த சிறிது நேரத்திலேயே தங்கம் அவன் எண்ணத்தைத் தள்ளிவிட்டாள். அதற்குக் காரணம் அந்த அரைகுறையான கை. ஆனால், இப்போது அவனைப் போலவே வெட்டுண்ட கையோடு இருக்கும் ராஜுவிடம் கூடத் தன் மனம் அலைபாய்கிறதே, இது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை.

ராஜுவும் மலர்க்கொடியும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்றுதான் தங்கம் நினைத்தாள், அவர்கள் காதலுக்குக் குறுக்கே தான் நுழைவது சரியல்ல என்று அவள் அறிவு உணர்த்தியது.

கடைசியாகத் தனக்கு மிஞ்சுபவன் நடராசன்தானா? தங்கம் இந்தக் கேள்வியைத் தன் இதயத்துக்குள்ளே கேட்டுப் பார்த்துக் கொண்டாள்.

நடராசனுடைய பழைய உருவத்தை அவள் தன் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தாள். அது தெளிவாகத் தெரியவில்லை. பார்த்து அதிக நாளாகி விட்டதல்லவா?

நடராசனுடைய கபடமற்ற பேச்சுக்களும், இனிய குணங்களும் அவள் கருத்தில் தோன்றின. தன்னையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவன் அப்போது தொடங்கிச் சொன்ன சொற்கள் அவள் காதுகளிலே மீண்டும் ஒலித்தன. கடைசியாக அவள் கையிலிருந்த கடிதமும் அவன் காதலை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

திரும்பவும் ராஜு அவள் மனக்கண் முன்தோன்றினான். தங்கம் ராஜுவையும் நடராசனையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். இருவருக்குமே நல்ல குணம், ஏறக்குறைய ஒரே மாதிரியான உருவம் ஒரே மாதிரியான கையூனம், இருந்த வேற்றுமை யொன்றேயொன்றுதான்! நடராசன் பட்டிக் காட்டான், ராஜு பட்டணத்தான். நடராசன் தன்னை மனதார நேசிக்கிறான்-ராஜுவின் நேசமோ மலர்க்கொடியிடம் திரும்பியிருக்கிறது. தன் உள்ளம் ஏன் இப்படி நீதி நியாயத்திற்குக் கட்டுப்படாமல் என்னென்னவோ எண்ணுகிறது என்று தங்கத்திற்குப் புரியவில்லை.

ஒருமுறை நடராசனைப்பார்க்கவேண்டும் போலிருந்தது. எங்கே பார்க்கலாம்? கடிதத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். முகவரி எதுவும் அதில் எழுதப்படவில்லை. கடிதம் கொண்டுவந்த சிறுவனைத் தான் எதுவும் விசாரிக்காமல் அனுப்பியது தவறு என்று எண்ணினாள், ஆனால், இனி அதை எண்ணிப் பயனில்லை. நடராசன் இருக்குமிடம் தெரியாதது அவளுக்கு என்னவோ மாதிரியிருந்தது.

திடீரென்று அவளுடைய சிந்தனை புது மாதிரியான திசையில் வேலை செய்ய ஆரம்பித்தது. காதல் அன்பு ஆசை என்பதெல்லாம் வெறும் மாயை.

காதல் உண்மையென்றால், அது இரண்டுபுறமும் அன்பும் விருப்பும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். உலகத்தில் எங்கே அதுபோல் இருக்கிறது? ராதாவுக்கு நடராசன் மேல் ஆசை நடராசன் என்னை விரும்புகிறான். எனக்கோ ராஜு கவர்ச்சியாகத் தென்படுகிறான். ராஜு மலர்க்கொடியிடம் அன்பாயிருக்கிறான். மலர்க்கொடி...? அவள் ராஜுவிடம் அன்பாயிருக்கிறாளே, அது உண்மையான காதல்தான்! அப்படி இருந்தால் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஆடவர்களைப் பற்றி நினைப்பதே கூடாது.

நான் ஏன் அவரையும் இவரையும் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்? இவ்வளவு நாட்கள் இருந்தது போல இனியும் இருந்து விட்டால் என்ன? அப்பா அம்மாவுக்கு வருத்தம் ஏற்படும், நம் பெண் திருமணமாகாமல் இருக்கிறாளே, நம்மால் திருமணம் செய்து வைக்க முடியாமல் போய் விட்டதே என்று வருத்தப் படுவார்கள், அதற்குத் தான் பார்க்க வேண்டிருக்கிறது.

இவ்வளவு நாளும், கையில்செல்வமில்லாத காரணத்தால் திருமணம் நடக்காமல் இருந்தது. கையில் செல்வமிருந்தும், திருமணம் தடைப்படுகிறது என்ற நிலைமை வந்தால் அவர்கள் மனம் எவ்வளவு வேதனைப் படும்.

இதற்கு என்னதான் முடிவு? தனக்கோ, மனம் பற்று வைக்கிற இடமெல்லாம் ஒட்டுறவு ஏற்படாத இடமாக மாறிவிடுகிறது. ஒருவகையில் இல்லாவிட்டால் ஒருவகையில் தன் காதல் தோல்விப் பாதையிலேயே போகிறது.

இப்படிப்பட்ட காதல் ஏற்படுவதைக் காட்டிலும் ஏற்படாமல் இருந்தால் நல்லதல்லவா?

என்னை யார் காதலிக்கச் சொன்னார்கள்? நானாகத் தானே எல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு வேதனைப் படுகிறேன். காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று சட்டமா? இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்திலே காதல் திருமணங்களுக்குத்தானே எதிர்ப்பு இருக்கிறது. நான் யாரையாவது, உறுதியாகக் காதலித்து இவரைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று சொன்னால், அது அப்பா, அம்மாவுக்குப் பிடிக்காமல்கூட இருக்கலாம். கயிலாய மாமாவுக்குக்கூடப் பிடிக்காமல் இருக்கலாம். ஏன் இந்த வம்பெல்லாம்?

இனிமேல் இந்த மனத்தில் காதலைப் பற்றியே சிந்திக்கக் கூடாது. வீண் போராட்டங்களுக்கு இடங்கொடுத்தால் கடைசியில் ராதாவைப்போல் மனதாரக் காதலித்து அது கைகூடாவிட்டால் சித்தப்பிரமைகூட ஏற்படக்கூடும். இந்த வம்பெல்லாம் வேண்டாம்.

நடராசனை ராதாவே திருமணம் செய்துகொள்ளட்டும், ராஜுவை மலர்க்கொடியே மணந்துகொள்ளட்டும்.

நான் சும்மாயிருக்கிறேன்.

திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன்.

அப்பாவும், அம்மாவும் மாமாவும் வருத்தப்பட்டால், "வருத்தப்படாதீர்கள்! நீங்கள் பார்க்கிறமாப்பிள்ளையையே கட்டிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிடுகிறேன். இதில் வம்பில்லையல்லவா? யாரைக் கணவனாகப் பெற்றாலும், மனத்தை அவர்மீது செலுத்தினால், அவர் பதிலுக்குக் காதலிக்காமலா இருக்கப்போகிறார்? இதுதான் சரியான முடிவு.

இப்போது காதலும் வேண்டாம், கத்திரிக்காயும் வேண்டாம். எல்லாம் திருமணத்திற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், ஆனால், நடராசன், என்னைக் காதலிப்ப தாகச் சொல்லுகிறானே! பாவம்! ஏற்கனவே அரைப் பைத்தியமாக இருந்தவன். மாமா உதவியால் தெளிவு ஏற்பட்டது, இப்போது அவன் என்மீது கொண்டுள்ள காதலில், ஏமாற்றமடைந்து, ராதாவைப்போலவே அதிர்ச்சி யடைந்து மீண்டும் பைத்தியமாகிவிட்டால்..? ஐயோ! பாவம்! அப்படி யாகும்படி விடக்கூடாது.

அதற்காக அவனைக் கட்டிக் கொள்வதா? அப்படி யானால் ராதாவின் கதி! ராதா, பாவம் மிகவும் நல்லவள்,

நான் ஏன் அவரையும் இவரையும் எண்ணிக் கொண் டிருக்க வேண்டும்? இவ்வளவு நாட்கள் இருந்தது போல இனியும் இருந்து விட்டால் என்ன? அப்பா அம்மாவுக்கு வருத்தம் ஏற்படும், நம் பெண் திருமணமாகாமல் இருக் கிறாளே, நம்மால் திருமணம் செய்து வைக்க முடியாமல் போய் விட்டதே என்று வருத்தப் படுவார்கள், அதற்குத் தான் பார்க்க வேண்டிருக்கிறது.

இவ்வளவு நாளும், கையில்செல்வமில்லாத காரணத்தால் திருமணம் நடக்காமல் இருந்தது. கையில் செல்வமிருந்தும், திருமணம் தடைப்படுகிறது என்ற நிலைமை வந்தால் அவர்கள் மனம் எவ்வளவு வேதனைப் படும்.

இதற்கு என்னதான் முடிவு? தனக்கோ, மனம் பற்று வைக்கிற இடமெல்லாம் ஒட்டுறவு ஏற்படாத இடமாக மாறிவிடுகிறது. ஒருவகையில் இல்லாவிட்டால் ஒருவகையில் தன் காதல் தோல்விப் பாதையிலேயே போகிறது.

இப்படிப்பட்ட காதல் ஏற்படுவதைக் காட்டிலும் ஏற்படாமல் இருந்தால் நல்லதல்லவா?

என்னை யார் காதலிக்கச் சொன்னார்கள்? நானாகத் தானே எல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு வேதனைப் படுகிறேன். காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று சட்டமா? இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்திலே காதல் திருமணங்களுக்குத்தானே எதிர்ப்பு இருக்கிறது. நான் யாரையாவது, உறுதியாகக் காதலித்து இவரைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று சொன்னால், அது அப்பா, அம்மாவுக்குப் பிடிக்காமல்கூட இருக்கலாம். கயிலாய மாமாவுக்குக்கூடப் பிடிக்காமல் இருக்கலாம். ஏன் இந்த வம்பெல்லாம்?

இனிமேல் இந்த மனத்தில் காதலைப் பற்றியே சிந்திக்கக் கூடாது. வீண் போராட்டங்களுக்கு இடங்கொடுத்தால் கடைசியில் ராதாவைப்போல் மனதாரக் காதலித்து அது கைகூடாவிட்டால் சித்தப்பிரமைகூட ஏற்படக்கூடும். இந்த வம்பெல்லாம் வேண்டாம்.

நடராசனை ராதாவே திருமணம் செய்துகொள்ளட்டும், ராஜுவை மலர்க்கொடியே மணந்துகொள்ளட்டும்.

நான் சும்மாயிருக்கிறேன்.

திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன்.

அப்பாவும், அம்மாவும் மாமாவும் வருத்தப்பட்டால், "வருத்தப்படாதீர்கள்! நீங்கள் பார்க்கிறமாப்பிள்ளையையே கட்டிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிடுகிறேன். இதில் வம்பில்லையல்லவா? யாரைக் கணவனாகப் பெற்றாலும், மனத்தை அவர்மீது செலுத்தினால், அவர் பதிலுக்குக் காதலிக்காமலா இருக்கப்போகிறார்? இதுதான் சரியான முடிவு.

இப்போது காதலும் வேண்டாம், கத்திரிக்காயும் வேண்டாம். எல்லாம் திருமணத்திற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், ஆனால், நடராசன், என்னைக் காதலிப்ப தாகச் சொல்லுகிறானே! பாவம்! ஏற்கனவே அரைப் பைத்தியமாக இருந்தவன். மாமா உதவியால் தெளிவு ஏற்பட்டது, இப்போது அவன் என்மீது கொண்டுள்ள காதலில், ஏமாற்றமடைந்து, ராதாவைப்போலவே அதிர்ச்சி யடைந்து மீண்டும் பைத்தியமாகிவிட்டால்..? ஐயோ! பாவம்! அப்படி யாகும்படி விடக்கூடாது.

அதற்காக அவனைக் கட்டிக் கொள்வதா? அப்படி யானால் ராதாவின் கதி! ராதா, பாவம் மிகவும் நல்லவள்,

அவள் துயரப்படும்படி விடக்கூடாது, எப்படியாவது நடராசனை அவளோடு சேர்த்து வைத்துவிட வேண்டும்.

மாறி மாறித் தங்கத்தின் சிந்தனை சுழன்று கொண் டிருந்தது. இரவு வெகுநேரம் வரை அவள் தூங்கவேயில்லை. பலதரப்பட்ட எண்ணங்களோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

நள்ளிரவில் யாரோ தன் அறைக்கதவை இலேசாகத் தட்டுவது போலிருந்தது. முதலில் தங்கம் அதைக் கவனிக்க வில்லை. பிறகு, மீண்டும் அந்த ஓசை காதில் விழுந்த போது தங்கம் கவனித்தாள். வேறு எங்கோ ஏதோ சத்தம் ஏற்படு கிறதென்று நினைத்துக் கொண்டாள். மூன்றாவது தடவை யாகக் கதவு தட்டப் பட்டபோது, தன் அறைக் கதவைத் தான் யாரோ தட்டுகிறார்கள் என்று நிச்சயித்துக் கொண்டாள். ''தங்கம், தங்கம்'' என்று யாரோ தன்னை அழைப்பது போலவும் இருந்தது.

தங்கத்திற்குப் பயமாயிருந்தது, இருட்டில் யார் அப்படித் தன்னை அழைக்கக் கூடும் என்று அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. ஆனால், விட்டுவிட்டுக் கதவு தட்டப் படும் அந்த இலேசான ஓசை கேட்டுக் கொண்டேயிருந்த தால், கதவைத் திறந்து பார்த்து விடுவதென்று முடிவு செய்தாள்.

நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள, உடல் வெடவெட வென்று நடுங்க அவள் மெல்ல எழுந்து சென்று, விளக்கைத் தட்டினாள்.

கதவின் தாளை அகற்றினாள்.

உடனே ஓசைப்படாமல் மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் ராதா! ராதாவைக்கண்டதும் தங்கத்திற்கு உடம்பு பதறியது.

பிரமை பிடித்த நிலையில் அவள் என்னென்ன செய்வாளோ? அதுவும் இந்த நள்ளிரவில் தன்னந்தனியாகத் தான் இருக்கும் போது அவள் காதலுக்குரியவன் தன்னைக் காதலிக்கிறான் என்ற எண்ணத்தால் ஏற்பட்ட சித்த பேதத்தோடு வந்துள்ள அவள் என்னென்ன செய்வாளோ என்று தங்கம் அஞ்சினாள்.

பயத்தோடு அவள் ராதாவை நிமிர்ந்து நோக்கினாள் வெளிச்சம் ராதாவின் முகத்திற்கு நேராக அடித்துக் கொண்டிருந்தது. அந்த முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

அந்த தெளிவான தோற்றம் தங்கத்தின் பயத்தைப் போக்கடித்து விட்டது.

''தங்கம், இங்கே வா!'' என்று ராதா அவளைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து கட்டிலின் மேல் உட்கார வைத்தாள்.

ராதா என்ன சொல்லப் போகிறாள் என்று தங்கம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

''தங்கம், நான் ஒன்று சொல்லுகிறேன், அதன்படி கேட்பாயா?''

''சொல்லு''

''கேட்கிறேன் என்று உறுதி சொன்னால்தான் சொல்லுவேன்.'',

''ராதா உனக்காக நான் எதையும் செய்வேன். ஆகவே, சந்தேகப்படாமல் சொல்லு!'' என்றாள் தங்கம்.

''அதெல்லாம் எனக்குத் தெரியும். தங்கம், உன் குணத்தை நான் அறியாதவளா என்ன? ஆனால், இப்போது நீ வாக்குறுதி கொடுத்துத்தான் ஆகவேண்டும்.''

''சரி, நீ சொல்லுகிறபடி கேட்கிறேன். செய்தியைச் சொல்லு'' என்றாள் தங்கம்.

ராதா நிறைவுடன் சொல்லத் தொடங்கினாள்.

''தங்கம், உன்னிடம் வாக்குறுதி கேட்டிருக்க வேண்டியதில்லை. ஆனால், அந்த உறுதி கேட்காமல் என் மனம் அமைதிப்படவில்லை. இப்போது நீ உறுதி சொல்லிவிட்டபடியால், நான் துணிந்து சொல்லுகிறேன். உன் தோழிக்காக நீ இந்த உதவியை உறுதியாகச் செய்துதான் ஆகவேண்டும். ஆம்! உன் ஆருயிர்த் தோழியின் இதய விருப்பத்தை நிறைவு செய்வதற்காக நீ நான் சொல்லுகிறபடி செய்யத்தான் வேண்டும். தங்கம், எனக்காக—இதைச் செய்! நீ அவரை—நடராசனைத் திருமணம் செய்துகொள்!'' என்றாள் ராதா.

தங்கம் பதறினாள்!

''ராதா, என்ன உளறுகிறாய்?'' என்று கோபத்தோடு கேட்டாள். ராதாவின் பைத்தியம் இன்னும் தெளியவில்லை என்று நினைத்துக்கொண்டாள்.

ஆனால், ராதா தெளிவான குரலில் தொடர்ந்து கூறினாள்.

தங்கம், உனக்கு அவரைப் பிடிக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் அவரைக் காதலிக்கிறேன் என்பதும் உனக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் தெரியுமா? தங்கம், அவர் இன்பமாக இருக்க வேண்டும் என்பது தான் என் குறிக்கோள். நீ அவரைக் காதலிக்காவிட்டாலும் அவர் உன்னைக் காதலிக்கிறார். நான் எவ்வளவு தூரம் அவரைக் காதலிக்கிறேனோ

அவ்வளவு தூரம் அவர் உன்னைக் காதலிக்கிறார். தங்கம், நான் ஒரு பெண். என்னால் இந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்ளமுடியும்.

ஏமாற்றத்தைப் பெண்கள் இதயம் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால், அவர் ஓர் ஆண். அதிலும், ஏற்கனவே அவருடைய இதயம் பைத்தியக்கார நிலையில் இருந்தது. இதுபோன்ற ஏமாற்றத்திற்கு அவர் ஆளானால் பாவம்! மீண்டும் பைத்தியக்காரர் ஆகிவிடுவார். தங்கம், உனக்குத் தெரியாது அவர் உன்னைக் காதலிக்கிறார் என்று. அவர் எனக்கு எழுதியிருக்கிறார். அவர் என்னை விரும்பா விட்டாலும் என் இதய பீடத்தில் என்றும் வாழுகிறார். அவர் துயரப்பட்டால் என் உள்ளம் துடிக்கும். அவர் இன்ப மாக வாழ்ந்தால் என் இதயம் களிக்கும், தங்கம் அவருக்கு வாழ்வளித்து எனக்கு மனநிறை வளிக்க நீ அவரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். செய்து கொள்ளு வாயா தங்கம்'' என்று கேட்டாள் ராதா.

தங்கம்- ராதாவை நோக்கித் திருதிருவென்று விழித்துத் கொண்டிருந்தாள். என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. ராதாவின் போக்கு ஒவ்வொன் றும் வியப்பூட்டுவதாக இருந்தது.

ராதாவின் உள்ளத்தில் படிந்திருந்த தூய்மையின் மேம்பாட்டை எவ்வளவு முயன்றாலும் தன்னால் எட்டிப் பிடிக்க முடியுமா என்று அவளால் எண்ணிப்பார்க்கக் கூட முடியவில்லை

''தங்கம், அவர் கையில் உள்ள ஊனத்தையே பெரிதாக எண்ணிக் கவலைப்படாதே! அவருடைய உள்ளத்தூய்மையும் குணச் சிறப்பும் அறிவு நலமும் உனக்குத் தெரியாததல்ல. அவரை மணம் புரிந்து கொள்வதால் உனக்கு ஒன்றும் குறை

வந்துவிடப் போவதில்லை; மகிழ்ச்சியே உண்டாகும். நாளடைவில், அவர் நல்ல குணங்கள் உன்னைத் தன் வயப் படுத்திவிடும். ஆனால், இதை நீ மறுத்தால், இரண்டு பேருடைய துன்பத்திற்குக் காரணமாவாய். தங்கம், உன்னை யடையாவிட்டால் அவர் இன்பம் காணப்போவதில்லை. அவர் துயரப்பட்டால் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!''என்றுமீண்டும்ராதா தங்கத்தை வற்புறுத்தினாள்.

தங்கம் பேசாமலிருந்தாள். என்ன பதில் சொல்லுவ தென்றே அவளுக்குப் புரியவில்லை.

''என்ன தங்கம்? ஏன் பேசாமலிருக்கிறாய்? நான் சொல்லுவது உனக்குப்பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள் ராதா.

''ராதா, நானே நடராசனைப் பார்த்து உன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறேன். நீ வீணாக அலட்டிக் கொள்ளாதே'' என்றாள் தங்கம்.

''தங்கம், இன்னும் அவர் கை ஊனத்தைப் பற்றி நீ குறைப்பட்டு கொண்டுதான் இருக்கிறாயா?'' என்று சினத்தோடு கேட்டாள் ராதா.

''இல்லை ராதா! ஆனால், உன்னால் நேசிக்கப்பட்ட அவரை உன்னோடு சேர்த்து வைத்துப் பார்க்க ஆசைப்படு கிறேன்! இது தவறா?'' என்று திருப்பிக் கேட்டாள் தங்கம்.

''தங்கம், அது உன்னால் முடியாது. நீ வீணாக என்னைக் குழப்பாதே, அவர் உன்னைக் காதலிக்கிறார். நீ அவரை ஏற்றுக் கொள், நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவே எனக்குத் திருப்தி'' என்றாள் ராதா.

ராதா தன் முடிவை மாற்றிக் கொள்வாள் என்று தோன்றவில்லை. தன்னைப் போல் எதிலும் ஒரே குழப்பமாக

இராமல், எப்போதும் சரியான ஒரு முடிவுக்கு ராதா வந்துவிடக் கூடியவள் என்பதைத் தங்கம் பல சமயங்களில் கண்டிருக்கிறாள். ஆகவே, அவள் ராதாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

கடைசியில் ஒரு தெளிவான முடிவுக்கு வராமலேயே, தங்கம் ராதாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றித் தருவதாகச் சொன்னாள்.

ராதாவின் முகத்தில் அப்போது ஒரு விதமான சாந்தியொளி பிறந்தது. கட்டுக் கவலையற்ற பேரறிவாளர்களின் அகத்திலும் முகத்திலும் காணப்படுகின்ற அந்த ஒளி அவள் அகத்திலும் முகத்திலும் நிறைந்திருந்தது.

ராதாவை உற்று நோக்கிய தங்கத்திற்கு அவள், மிக உயர்ந்தவளாகக் காணப்பட்டாள். மனித குணத்தின் உயர்வான நிலையில் ராதா சஞ்சரித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ராதா, தன்னிடம் விடைபெற்றுக் கொண்டு அறையை விட்டுச் சென்ற பின் விளக்கை யணைத்து விட்டுத் தங்கம் படுக்கையில் வந்து சாய்ந்தாள்.

அந்த அறை இருளில் மூழ்கிக் கிடப்பது அவளுக்குத் தெரியவில்லை. அங்கே தியாக வடிவமான ஒரு பேரொளி நிறைந்து அது உலகத்தைத் தெளிவாக்கிக் காட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ராதாவின் தியாக உள்ளத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்கத் தங்கத்திற்குத் தானும் தியாக வாழ்வு வாழ வேண்டும் போல் தோன்றியது. தான் நடராசனை விரும்பா விட்டாலும், ராதாவிற்காக அந்தத் தியாக வாழ்வை ஏற்றுக் கொள்ள வேண்டும்போல் தோன்றியது.

இனித் தான் குழப்பமடைய வேண்டியதில்லை,

இனித்தான் எவ்விதமான உணர்ச்சிகளுக்கும், ஆட்பட்டுத் தவித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை

ஒரே முடிவு!

நடராசனைத் திருமணம் புரிந்து கொண்டுவிட வேண்டும்.

இதில் மாற்றமில்லை.

இவ்வாறு உறுதி செய்து கொண்டு தங்கம் கண்ணை மூடினாள்.

மனக்குழப்பத்திற்கெல்லாம் ஒரு முடிவு கண்டுவிட்ட அவளைத் தூக்கம் உடனே வந்து தழுவிக்கொண்டது.

காலையில் தங்கம் எட்டு மணிக்குத் தான் எழுந்தாள். குளித்து முடித்து விட்டு அவள் தலைவாரிக்கொண்டிருந்த போது, மலர்க்கொடி வந்து சேர்ந்தாள். மலர்க்கொடியின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றிலும் ஆனந்தம் துள்ளிக்குதி போட்டுக்கொண்டிருந்தது.

அறைக்குள் நுழையும்போதே, "தங்கம்! ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

"அப்படி என்ன? திருமணச் செய்தியா!" என்று கேலியாகக் கேட்டாள் தங்கம்.

"உனக்கு முன்னாலே தெரியுமா? யார் சொன்னது?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"யாரும் சொல்லவில்லை. எதுவும் தெரியாது. ஆமாம், என்ன செய்தி?" என்று விசாரித்தாள் தங்கம்.

"தங்கம்...எனக்கு...திரு...நிச்சயமாகிவிட்டது" வெட்கத்தால் சொற்கள் வெளிவரவில்லை. சொல்லி முடிப்பதற்குள் மலர்க்கொடியின் முகம் குங்குமம்போல் சிவந்து விட்டது.

"திருமணமா? காதல் திருமணம் தானே?" என்று கேட்டாள் தங்கம்.

மலர்க்கொடியின் முகம் மேலும் சிவந்தது, "ஏண்டி, உனக்கு எல்லாம் தெரியும் போலிருக்கிறதே! யாரடி சொன்னார்? அவர் யாரென்றுகூடத் தெரியுமா உனக்கு?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"தெரியுமே, சொல்லட்டுமா?" என்றாள் தங்கம்.

"சொல்லேன்!" —தன் காதலர் பெயரைக் காது குளிரக் கேட்கவேண்டும் என்ற ஆவலோடு கேட்டாள் மலர்க்கொடி.

"சொல்லுகிறேன், அவர் தான் ..அவர் ..தான் ..உன்... காதலர்!" என்று விளையாடினாள் தங்கம்.

தங்கம் விஷயத்தைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறாள் என்று மலர்க்கொடி எண்ணி, மேற்கொண்டு விவரங்கள் கூறத் தொடங்கினாள்.

"தங்கம், நாளைக்குத்தான் அவர் சீமையிலிருந்து வருகிறார். அவரை வரவேற்க மீனம்பாக்கத்திற்குப் போகிறோம். தங்கம், நீயும் ராதாவும் என்னோடு வருகிறீர்களா!" என்று ஆசையோடு கேட்டாள் மலர்க்கொடி.

"சீமையிலிருந்தா? யாரது?" என்று கேட்டாள் தங்கம். இதுவரை மலர்க்கொடியின் காதலன் ராஜு என்று எண்ணிக் கொண்டிருந்தாள் தங்கம். மலர்க்கொடியின் பதில் அந்த எண்ணத்தைத் தூளாக்கிவிட்டது.

# 30. நம்பமுடியவில்லையே!

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? பெரிய ஆளடி நீ! எல்லாந் தெரிந்தவள்போல் காட்டிக்கொண்டாயே. என் அத்தை மகன் இரத்தினசாமி சீமைக்குப் படிக்கப் போயிருந்தார். அவர் இப்போது திரும்பி வருகிறார். அவர் வந்தவுடனேயே திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கப் போகிறார்கள். இன்னும் ஒரு மாதத்திற்குள் திருமணம் நடந்துவிடும்" என்று மலர்க்கொடி கூறினாள். அப்பொழுது அவள் முகமெல்லாம் இன்ப உணர்ச்சியால் மலர்ந்திருந்தது.

தங்கத்தினால் இந்தச் செய்தியை நம்பவே முடியவில்லை. அப்படியானால், ராஜுவை...? ராஜுவை மலர்க்கொடி காதலிக்கவில்லையா? காதல் ஜோடிகள்போல் அவர்கள் நடந்துகொண்டதெல்லாம் அர்த்தமற்றவை தானா? இவ்வாறு அவளுடைய சிந்தனைப் பொறி இயங்கிக் கொண்டிருந்தது

"என்னடி தங்கம், பேசாமலிருக்கிறாய்? நாளைக்கு மீனம்பாக்கத்திற்கு வருகிறாயா, இல்லையா?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"அப்படியானால் ராஜு...?" என்றாள் தங்கம்.

"அதானே பார்த்தேன். நான் சந்தேகப்பட்டது உண்மையாகிவிட்டது. ராஜு இல்லாமல் தங்கம் வரலாமா? ராஜு நிச்சயம் வருகிறார். அதுமட்டுமல்ல, இலக்கியக் கழகத்தின் சார்பாக என் அத்தானுக்கு மாலையிட்டு வரவேற்புப் பத்திரம்கூட வாசித்தளிக்கப் போகிறார் உன் ராஜு" என்றாள் மலர்க்கொடி.

மலர்க்கொடி பேசிய போக்கு தங்கத்தை மேலும் அதிர வைத்தது.

"மலர்க்கொடி, என்ன பேசுகிறாய்?" என்று கடுமையான குரலில் கேட்டாள் தங்கம். அவள் கடுமையைச் சிறிது புரிந்து கொண்டாள் மலர்க்கொடி.

"ஏண்டி தங்கம்? ஒவ்வொரு தடவையும் நீ அவரை ஏக்கப் பெருமூச்சோடு பார்ப்பதையும் அவருடன் கலகலப்பாகப் பேசாமல், நாணித் திரும்புவதையும் நான் கவனிக்கவில்லையென்றா நினைக்கிறாய்? அவரைப் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்று நீ ஆசைப்படுவதும், உன் நாணம் அதற்குத் தடை போடுவதும் எனக்கு யூகிக்கத் தெரியாதென்றே நினைத்தாய். தங்கம், நானும் ஒரு பெண் தானடி!" என்றாள் மலர்க்கொடி.

தங்கம் இந்தச் சொற்களைக் கேட்டதும் மலைத்துப் போய்விட்டாள்.

மலர்க்கொடி ராஜுவைக் காதலிக்கிறாள் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்க, தான் ராஜுவைக் காதலிப்பதாக அவள் நினைத்துக்கொடிருக்கிறாள். இதில் எது உண்மையென்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. மலர்க்கொடியும் ராஜுவும் கலகலப்பாகப் பழகிய விதம், அவர்கள் ஒருவரையொருவர் காதலிப்பதாக எண்ணும்படி இருந்தது, ஆனால், கலகலப்பாகப் பழகாததே காதலுக்குச் சாட்சியென்று மலர்க்கொடி இப்போது சொல்லுகிறாள்.

தன்னைப் பொறுத்தவரையில் சில சமயம் ராஜுவிடம் தன் மனம் பாய்ந்ததைத் தங்கம் மறக்கமுடியாது. ஆனால், ராஜுவும் மலர்க்கொடியும் காதலர்கள் அல்ல என்பதையும் அவளால் நம்பமுடியவில்லை.

''மலர்க்கொடி. ராஜுவை நீ...'' என்று தங்கம் முழுவதும் கேட்காமல் விட்டுவிட்டாள். மலர்க்கொடி ராஜுவை நீ உண்மையில் காதலிக்கவில்லையா? என்றுதான் அவள் கேட்க எண்ணினாள். ஆனால், மலர்க்கொடி அந்த அரைகுறையான வார்த்தைகளைக் கேட்டு வேறு விதமாகப் பொருள் கொண்டு விட்டாள்.

''ஓ! அவரையும் நான் நேரே கேட்டு விட்டேன். ''உள்ளதைச் சொல்லுங்கள். தங்கத்தை நீங்கள் காதலிக்கிறீர்களா இல்லையா?'' என்று. அவர்தான் உன்னை நினைத்து நினைத்து உருகுகிறாரே!' என்றாள் மலர்க்கொடி.

தங்கத்தின் எண்ணம் கலங்கியது, அவளால் ஒரு நிலையில் நிற்க முடியவில்லை. சுவர் ஓரமாக இருந்த ஒரு நாற்காலிக்குச் சென்று அதில் அவள் சாய்ந்துகொண்டாள். இரவு அவள் கொண்டிருந்த அமைதியை மலர்க்கொடி பறக்கடித்து விட்டாள். தங்கத்தின் நிலையைக் கண்ட மலர்க்கொடி பயந்து விட்டாள். ''தங்கம் நான் ஏதும் தவறாகச் சொல்லி விட்டேனோ?'' என்று அவள் பரிவோடு கேட்டாள்.

''இல்லை. மலர்க்கொடி இல்லை. நீ ராஜுவைப் பார்த்தால் சொல்லிவிடு, வீணாக அவர் என்னை நினைத்து உருக வேண்டாம் என்று சொல்லி விடு. இந்த உதவியை மட்டும் எனக்குச் செய்!'' என்று ஆயாசத்தோடு கூறினாள் தங்கம்.

மலர்க்கொடிக்கு இது பெரும் வியப்பளித்தது. மேலும் கேள்விகள் கேட்டுத் தங்கத்தைத் துன்புறுத்தக் கூடாதென்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

"தங்கம், அப்படியே சொல்லுகிறேன். நாளை நீயும் இராதாவும் மீனம்பாக்கத்திற்கு அவசியம் வரவேண்டும்!" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

தங்கம் அவள் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மலர்க்கொடியும் ராஜூவும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்று அவள் நம்பிக் கொண்டிருந்ததால் தான், முதல் நாள் இரவு தான் இராதாவிற்கு நடராசனை மணம் புரிந்து கொள்வதாக உறுதி கூற முடிந்தது. இப்போதோ அவள் மனம் மீண்டும் குழப்பமடைந்தது, ஆனால் அவள் ராதாவிற்குக் கொடுத்த வாக்குறுதியை மீற விரும்பவில்லை. ஏற்கனவே முடிவு செய்தபடி தான் தியாக வாழ்வு வாழ்வ தென்று உறுதி பூண்டு விட்டாள். அந்த உறுதியின் பலனாகத்தான் அவள் மலர்க்கொடியிடம், ராஜூவைச் சந்தித்தால் வீணாகத் தன்னை நினைத்து உருக வேண்டாம் என்று சொல்லி விடும்படி வேண்டிக்கொண்டாள்.

அன்று முழுவதும் தங்கம், மீண்டும் தன் மனத்துக்கு வேலை வைக்காத முறையில் வேறு வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபடலானாள். தன் தாயாருக்கு உதவியாகச் சமையல் வேலையில் ஈடுபட்டாள். மாலை நேரம் வந்ததும், ராதாவை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனாள். அங்கு ராதாவுடன் ஊர்க் கதைகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்பினாள். ராதாவின் மன உறுதியைப் பார்க்கும் போதெல்லாம் தங்கத்திற்கு வியப்பாக இருந்தது. ராதாவின் மனவுறுதி கலங்கும்படியாகத் தான் நடந்து கொள்ளவே கூடாது என்று அவள் தன் மனத்திற்குள் அடிக்கடி சொல்லிக்கொண்டாள்.

மறுநாள் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் செல்வதற்காக அவர்களை அழைத்துச் செல்ல மலர்க்கொடி கார் ஓட்டிக்கொண்டு வந்தாள். அதன்பின் சீட்டில், ராஜு அமர்ந்திருந்தான். மலர்க்கொடி, காரை வெளியில் நிறுத்தி விட்டு வீட்டிற்குள் ஓடி வந்து தங்கத்தையும் ராதாவையும் அழைத்துக் கொண்டு வந்தாள். வந்த வேகத்தில் தங்கமும் ராதாவும் பின் சீட்டில் ஏறுவதற்காகத் திரும்பியவர்கள் அங்கு ராஜுவைக் கண்டவுடன் சட்டென்று முன் பக்கத்துக் கதவை திறந்து கொண்டு அதிலே ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். முன் சீட்டில் மூன்று பெண்களும் நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள் பின் சீட்டில் ராஜு மட்டும் உட்கார்ந்திருந்தான் மலர்க்கொடி மற்ற சந்தர்ப்பங் களாக இருந்தால், ஏதாவது சொல்லி யாராவது ஒருத்தியை ஏன் தங்கத்தையே பின் சீட்டில் ராஜுவுடன் உட்கார வைத்திருப்பாள். ஆனால், அப்போது அவள் எதுவும் பேசவில்லை.

எதிரில் காரின் மேற்பகுதியில் நடுமையத்தில் இருந்த சின்னஞ் சிறிய கண்ணாடிக்குள் ராஜுவின் முகம் தெரிந்தது. அதைச் சில சமயங்களில் தங்கம் தற்செயலாகக் கவனிக்க நேர்ந்தது. அந்த முகத்தில் எந்தவிதமான கலக்கமோ துக்கமோ தென்படவில்லை, மலர்க்கொடி இன்னும் தான் சொன்ன செய்திகளை அவனிடம் சொல்லவில்லை போலிருக் கிறது என்று தங்கம் எண்ணிக்கொண்டாள்.

விமானத்தில் வந்திறங்கிய மலர்க்கொடியின் அத்தை மகன் இரத்தினசாமி அவளுக்கு எல்லா விதத்திலும் பொருத்த மானவனாகவே காணப்பட்டான்.

சற்றுச் சிவந்த நிறமாகவும் வாட்டசாட்டமாகவும் வெள்ளையர் உடுப்புகளுடனும் விளங்கிய அவன் நாகரிகப்

பாணியில் வளர்ந்து விட்ட மலர்க்கொடிக்கு முற்றிலும் தகுந்த கணவனாக இருந்தான்.

விமானத்திலிருந்து இறங்கி நிலையத்துக்குள் வந்து நுழைந்தவுடன் மலர்க்கொடி துள்ளிப் போய் அத்தான் நலமா? என்று மலர் முகத்தோடு நலம் விசாரித்து வரவேற்றாள். அவன், ''ஆ! மலர்க்கொடி நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! எவ்வளவு பெரியவளாகி விட்டாய்?'' என்று கேட்டுக்கொண்டே ஆசையோடு அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். பிறகு அங்கு வந்திருந்த ஒவ்வொரு வருடனும் அவன் நலம் விசாரித்துக் கை குலுக்கி அன்போடு பேசினான்.

எல்லோரும் வழக்கறிஞர் வீட்டுக்கு வந்து விருந் துண்டார்கள். அதன்பிறகு விருந்தினர்கள் தத்தம் வீடு களுக்குத் திரும்பினார்கள். தங்கமும் இராதாவும் ஜமீன்தார் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மரகத அம்மாள் விமானம் பறந்து வந்ததைப் பற்றியும், மற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் தன் மகளிடமிருந்தும் இராதாவிடமிருந்தும் விசாரித்துத் தெரிந்து கொண்டு பெரும் வியப்படைந்தாள்.

அன்று மாலைவரை தங்கம் ஓய்வில்லாமலே பொழுதைக் கழித்து விட்டாள். ஆனால், இரவு படுக்கைக்குச் சென்ற பிறகு அவள் இதயம் மீண்டும் பலவிதமான சிந்தனைகளில் ஈடுபட்டது. திரும்பத் திரும்ப நடராசனும், ராஜுவும் அவள் மனத்திரையிலே வந்து வட்டமிட்டனர்.

ஒருமுறை தன் உறுதிமொழியை மீறி நடக்கக் கூடாது என்று தங்கம் நினைப்பாள். இன்னொரு முறை தன் வாழ் நாள் முழுவதும் இப்படிப்பட்ட மனப் போராட்டத்தோடு

எப்படிக் கழிப்பதென்று எண்ணுவாள். ஒருமுறை பாவம், ராதா! அவள் இன்ப ஆசை நிறைவேறாவிட்டாலும் அவள் இலட்சிய விருப்பமாவது நிறைவேற வேண்டும் என்று கருதுவாள். மீண்டும் நடராசனும் ராஜுவும் ஒன்றாக வந்து நின்று அவள் மனத்தில் கடமை வாழ்வு பெரிதா காதல்வாழ்வு பெரிதா என்ற விவாதத்தைத் தொடக்கி வைப்பார்கள். அவள் தன் மனத்திற்கு அறிவுரை கூறுவாள். வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய். நடராசன் தான் உனக்கென்றே பிறந்தவன். நீ வேண்டாமென்று ஓடினாலும் அவன் உன்னை நோக்கியே தள்ளப் படுவான். தன் முயற்சி யில்லாவிட்டாலும், காலம் அவனை உன்னிடம் தள்ளிக் கொண்டு வந்து சேர்க்கத் தயங்குவதாகத் தெரியவில்லை. பேசாமல், இனி உன் கணவன் காதலன் எல்லாம் அந்த நடராசன் ஒருவனேயென்ற நினைப்போடிரு! என்று அவள் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொள்வாள்.

இப்படியே இரவுப் பொழுதெல்லாம் ஒவ்வொன்றாகக் கழிந்தன. ஐந்தாறு நாட்கள் சென்ற பிறகு அவளுக்கு நடராசனை ஒரு முறை பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால், அவன் எங்கேயிருக்கிறான் என்று தெரியாததால் என்ன செய்வது? ராதாவிடம், 'ராதா! நடராசன் எங்கே யிருக்கிறார், தெரியுமா?' என்று கேட்டாள்.

"தங்கம், நீதானே அன்று கடிதம் கொடுத்தாய். அதைத் தவிர வேறு எனக்கொன்றும் தெரியாதே!' என்று ராதா கூறிவிட்டாள். உண்மைதானே, எங்கிருந்தாலும் அவளும் தானும் ஒன்றாகவே இருக்கும்போது, அவளுக்கு மட்டும் தனக்குத் தெரியாத செய்தி வேறு ஏதேனும் புதிதாகத் தெரிந்து விடவா போகிறது என்று எண்ணினாள் தங்கம்,

நாட்கள் வீண் பொழுதுகளாகக் கழிந்துக்கொண்டிருந் தன. தங்கத்திற்குப் பட்டணத்தில் இருந்தது போதும் என்று

தோன்றியது கயிலாய மாமாவிடம், அனுமதி வாங்கிக் கொண்டு நெய்யூருக்குப் போய்விட வேண்டும் என்று எண்ணினாள். அவள் எண்ணியதற்குத் தோதாக அவரே வந்து, 'தங்கம் நாளைக்குக் கதலிப்பட்டணம் புறப்படப் போகிறோம். நீ இங்கேயே இருக்கிறாயா? எங்களோடு வருகிறாயா?'' என்று கேட்டார்!

''வருகிறேன்' என்று தங்கம் பதில் சொன்னாள்.

''தங்கம், அம்மா தான் அங்கே அப்பாவைமட்டும் தனியாக விட்டு விட்டு வந்துவிட்டதாக வருத்தப்படுகிறாள். நீ இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருந்துவிட்டுப் போனாலென்ன'' என்று ஜமீந்தாரிணி பெரியம்மாள் கேட்டாள்.

''அம்மா, எனக்கும் அப்பாவைப் பார்க்க வேண்டுபோலிருக்கிறது!'' என்று தங்கம் சொன்னாள்.

மறுநாள் அவர்கள் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். அன்று மாலை ஜமீந்தாரிணியம்மாள் தங்கத்தையும் ராதாவையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு சைனா பஜாருக்கு சென்றாள். தங்கத்தையும் ராதாவையும் ''இது நல்லாயிருக்கிறதா'' என்று கேட்டு வகை வகையாகப் புடவைகள் துணி மணிகள் வாங்கினாள். எல்லாம் வாங்கியதும் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். மறுநாள் அவர்கள் ரயிலுக்குப் புறப்படும்போது தங்கள் சாமான்களோடு ஒரு புது டிரங்குப்பெட்டி இருப்பதைத் தங்கம் கண்டாள்.

அது கயிலாய மாமாவுடையதாக இருக்கும் என்று தங்கம் எண்ணிக் கொண்டாள்.

ஆனால், அவர்கள் கதலிப்பட்டணம் மாளிகைக்கு வந்து சேர்ந்த பிறகு, எல்லோரும் ஒன்றாக இருக்கையில் கயிலாயம் அந்தப் பெட்டியைத் திறந்தார். அதில் ஜமீந்தாரிணியம்மாள்

வாங்கிய புடவை துணிமணிகள் அத்தனையும் இருந்தன. அதில் தனியாக ஒரு சிறு கட்டு இருந்தது. அதைத் தனியாக எடுத்து இராதாவிடம் கொடுத்தார் கயிலாயம்.

''இதெல்லாம் ஜமீந்தாரிணியம்மாளுடைய தாயிற்றே!'' என்று தங்கம் கேட்டாள்.

''தங்கம், ஜமீந்தாரிணியம்மாள் உங்களுக்காக வாங்கியது தான் இவையெல்லாம்'' என்றார் கயிலாயம். அந்தச் சிறு கட்டை எடுத்து ராதாவிடம் கொடுத்து 'இந்தா, ராதா! ஜமீந்தாரிணியம்மாள் இதையுனக்குக் கொடுக்கச் சொன்னாள்'' என்றார்.

ராதா அதை வாங்க மறுத்து விட்டாள். தங்கமும் ''ஜமீந்தாரிணியம்மாள் நமக்கு ஏன் இதையெல்லாம் வாங்கித் தரவேண்டும்?'' என்று கோபித்துக் கொண்டாள்.

''அம்மா, அன்புடையவர்கள், தங்கள் அன்பை எப்படி யாவது காட்டிக் கொள்ளத் துடிப்பது உலகத்து இயற்கை. கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்குக் கூடச் சர்க்கரையோ சாம்பிராணியோ காண்பித்துத் தங்கள் அன்பைக் காட்டிக் கொள்ளுகிறவர்கள் வாழ்கிற உலகம் இது. மெய் அன்பு வைத்திருந்தால் போதும் என்று எண்ணினாலும், அந்த அன்புடையவர்கள் மனம் அதை எப்படியாவது வெளிப் படுத்தாமல் இருக்கும் வரை அமைதியடைவதில்லை. பெரியவர்கள் களங்கமற்ற அன்புடன் கொடுக்கும் வெகுமதி களைப் பெற்றுக் கொள்வது இழிவல்ல'' என்று கயிலாயம் கூறியபிறகுதான் இரண்டு பெண்களும் அந்தத் துணிமணி களை ஏற்றுக் கொண்டார்கள்.

கதலிப் பட்டணம் வந்த அன்று பகல் உணவுக்குப் பிறகு, தங்கம் தானும் நெய்யூருக்கு அம்மாவுடனும் இராதாவுடனும் போய் அப்பாவைப் பார்த்து விட்டு வரவேண்டும் என்று சொன்னாள். கயிலாயம் சம்மதித்தார்.

கந்தசாமி வாத்தியார் தன் மகளை அன்புடன் வரவேற்றார். தங்கம், வீடெல்லாம் சுத்தம் செய்து விட்டு மல்லிகைப் பந்தலுக்குப் போனாள். மல்லிகைப்பந்தலில் ஆங்காங்கே ஒன்றிரண்டு அரும்பு, பூக்கள்தான் இருந்தன. கீழே எல்லாம் புல்லும் பூண்டுகள் காடாய் மண்டிக்கிடந்தன. அவள் உடனே கீழ்த் தரையைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டாள்.

அப்போது கந்தசாமி வாத்தியார் அங்கே வந்தார்.

"அப்பா!" என்று அழைத்துக் கொண்டே அவரை நோக்கி வந்த தங்கம், தன் தந்தை தன்னிடம் ஏதோ பேச எண்ணுகிறார் என்று தெரிந்து கொண்டாள். அவரும் பேசத் தொடங்கினார்.

"தங்கம், எங்கே உனக்குத் திருமணமே செய்து வைக்காமல் நான் செத்துப்போய்விடுவேனோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது உன் மாமா வந்தவுடன் அந்தக் கவலை என்னை விட்டுப் போய்விட்டது. இன்னும் உன்னைத் திருமணமாகாமல் வைத்துக்கொண்டிருப்பது பொருத்தமில்லை. உடனடியாக உனக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் என்று உன் அம்மாவும் துடியாய்த் இருக்கிறாள். நீ என்னம்மா சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள் அப்பா!" என்றாள் தங்கம்.

"அப்படியானால், மாப்பிள்ளை பார்க்கத் தொடங் கட்டுமா தங்கம்?" என்று கேட்டார் கந்தசாமி.

"அப்பா ..." என்று மேலே பேச முடியாமல் தயங்கினாள் தங்கம்.

ஏனம்மா? யாரையும் மனத்துக்குள் நினைத்து வைத்திருக்கிறாயா? சொல்லம்மா! உன் மனம்போல் செய்து வைக்கிறேன்!'' என்றார் கந்தசாமி வாத்தியார்.

தங்கம் சொல்லமுடியாமல் திணறினாள். ஏற்கனவே, அவர் நடராசனைத் தனக்குத் திருமணம் செய்து வைக்க இருப்பதாகச் சொன்னபோது அழுத அழுகை இப்போது அவளுக்கு நினைவு வந்தது. அதனால், இப்போது அவளால் வாய் திறந்து சொல்லமுடியவில்லை.

''அம்மா, உனக்குத் தயக்கமாக இருந்தால், ராதாவிடம் சொல்லம்மா'' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அன்று இரவு ராதா மூலமாக மரகத அம்மாள் தங்கத்தின் கருத்தைத் தெரிந்துகொண்டு, அதைக் கந்தசாமி வாத்தியாரிடம் கூறியபோது, அவரால் நம்ப முடியவில்லை.

''என்ன? நடராசனைத்தான் தங்கம் விரும்புகிறாளா? நம்பமுடியவில்லை! இருந்தாலும், அவனை எங்கே போய்க் கண்டுபிடிப்பது?'' என்று அவர் மரகத அம்மாளிடம் கூறிய போது அவர் நெஞ்சில் வியப்பும் திகைப்பும் நிரம்பியிருந்தன.

# 31. தங்கத்தின் மன உறுதி.

கந்தசாமி வாத்தியார், முருகேச வாத்தியாரிடம் இந்தச் செய்தியைக் கூறியபோது அவர் அடைந்த திகைப்பும் வியப்பும் சொல்லத் தக்கதன்று. 'நான் இந்த உலகத்தில் தான் இருக்கிறேனா' என்றே அவருக்குச் சந்தேகம் வந்து விட்டது.

தங்கத்திடம் எப்படி இந்த மாறுதல் ஏற்பட்டது என்பதை அந்த இரண்டு வாத்தியார்களாலும் சரியாகவோ முழுதாகவோ புரிந்துகொள்ள முடியவில்லை. அகப் பாட்டுக்களிலே வருகின்ற தலைவிமார்களைப் பற்றி அந்தக் காலத்துப் புலவர்கள் எழுதி வைத்துள்ள இன்பியல் துறைச் சொற்களைப் பற்றியெல்லாம் நுணுகி நுணுகி ஆராய்ந்து பெருங் கண்டுபிடிப்புகள் செய்து தம் புலமைக்கு மெருகிட்டுக் கொண்ட அந்த ஆசிரியர்களால், தங்கத்தின் இந்த மனோ மாறுதலுக்கு மட்டும் பொருள் புரிந்துகொள்ள முடியவே யில்லை.

தங்கம், சாதாரணப் பெண்ணாக, சம்பளத்தைத் தவிர வேறு வரும்படியில்லாத கந்தசாமி வாத்தியாரின் மகளாக மட்டும் இருந்த காலத்தில் இந்த முடிவுக்கு வந்திருப்பாளே யானால், அவர்கள் சிறிதும் அது குறித்து ஆச்சரியப்

பட்டிருக்கவே மாட்டார்கள். பெரும் பணக்காரியாகவும், ஒரு ஜமீன் மாளிகைக்கே அதிபதியாகவும் உள்ள நிலையில், சாதாரணமான ஒரு பள்ளி ஆசிரியரின் வளர்ப்புப் பிள்ளையின் மேல், அதுவும் தான் வெறுத்தொதுக்கிய ஒருவனின் மேல் அவள் அன்புகாட்டத் தொடங்கியதுதான் அவர்களால் நினைத்துப் பார்க்கமுடியாத ஆச்சரியமாக இருந்தது. அந்த நாளிலாக இருந்தால், நமக்குத் திருமணமாக வழியேயில்லை; குடும்பத்தின் துயரத்தைத் தீர்க்க இந்த நடராசனையாவது மணம் புரிந்துகொள்ளுவோம் என்று அவள் தன் மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டதாக எண்ணிக்கொள்ளலாம். இப்போது அப்படி எண்ணக்கூடிய வாய்ப்பேயில்லை.

கந்தசாமி வாத்தியாரைப் பார்த்து முருகேச வாத்தியார் நாத்தழுதழுக்கக் கூறினார்! "கந்தசாமி இந்த உலகத்தை என்னால் நம்பவே முடியவில்லை. என் மகன் நடராசனைத் தான் எடுத்துக் கொள்ளேன், அவன் வாழப் பிறந்தவன் என்று நான் நினைக்கவேயில்லை அவன் வாழ்க்கையிலே ஏற்படுகின்ற திருப்பங்கள் ஒவ்வொன்றும் எனக்கு ஆச்சரியத்தையே உண்டாக்குகின்றன. சின்னஞ் சிறு வயதில் அவனைக் கிணற்றிலே தள்ளிவிட்டு அவன் தாயும் குதித்திருக்கிறாள். பின்னால் குதித்த அவள் இறந்து போக இவன் பிழைத்துக்கொண்டான். கிணற்றுக்குள்ளே யாரோ ஒரு தாயும் குழந்தையும் விழுந்த செய்தியைக் கேட்ட நான் ஓடோடிச் சென்று இருவரையும் கரைக்குத் தூக்கி வந்தேன். அதிலே இவன் பிழைத்துக்கொண்டான், பாவம்! கையில் ஊனமுள்ள பிள்ளையாக இவன் இருந்தான். நான்தான் பரிதாபப்பட்டு என் பிள்ளையாக வளர்த்தேன். வளர்ந்து வந்த இவனோ பைத்தியக்காரனாக இருந்தான். பைத்தியக்காரனாக இருந்தாலும் வளர்த்த பாசத்தால் நான் இவனை எப்படியாவது வாழ வைத்துவிட வேண்டும் என்றுதான் முதலில் தங்கத்துக்கும் இவனுக்கும் மணம் புரிந்து வைக்க

முயன்றேன். எதிர்பாராத விதமாக அண்ணாமலைப் பண்டிதர் வந்து பைத்தியத்தைத் தெளிவித்ததோடு மட்டு மல்லாமல் நல்ல அறிஞனாகவும் ஆக்கிவிட்டார். பிறகு அவன் தங்கத்திடம் தன் மனத்தைப் பறிகொடுத்திருக் கிறான். ஆனால் அவளோ விரட்டியடித்து விட்டாள். அதன் பிறகு எங்கோ காணாமல் போய் விட்டான். இப்போது தங்கம் அவனைத் திருமணம் செய்து கொள்ள முடிவு கட்டி யிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வாறு நடந்தால் அது மகிழ்ச்சிக்குரியதே! ஆனால், இப்போது எங்கிருக் கிறானோ தெரியவில்லையே!'' என்றார்.

''என் மைத்துனர் கயிலாயத்தின் மூத்த மனைவி தன் பிள்ளையோடு கிணற்றில் விழுந்து விட்டாள். அதனால் தான், அவருக்குத் தாய் தந்தையில்லாத பிள்ளைகளிடத்தில் இரக்கமும் அன்பும் உண்டாகிறது. நடராசனையும் அவர் இப்படிப்பட்ட மன இரக்கத்தால்தான் கவனித்து முன் னேற்றத்திற்குக் கொண்டுவர முயன்றிருக்க வேண்டும். ஆனால், அவரிடம்கூடச் சொல்லாமல் நடராசன் திடீரென்று மறைந்து போனதுதான் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் தங்கத்தை விரும்பி அவள் மறுத்துவிட்டதால் ஓடிவிட்டான் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் இன்று தங்கம் அவனை மணந்து கொள்ள விரும்பும் செய்தி அவனுக்குத் தெரியுமோ என்னவோ?'' என்றார் கந்தசாமி வாத்தியார்.

இவ்வாறு இரண்டு வாத்தியார்களும் பேசிக் கொண் டிருந்து நடராசனைத் தேடிப் பிடிக்க ஏதாவது வழிகண்டு பிடிக்க வேண்டும் என்றும், வருகிற தைமாதத்தில் தங்கத் திற்கும் நடராசனுக்கும் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்றும் முடிவு கட்டிக் கொண்டார்கள்.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் குளத்தங்கரையில் உள்ள வேப்ப மரத்தினடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு முருகேசரைப் பிரிந்து வீட்டிற்கு வந்த கந்தசாமி வாத்தியாருக்கு மற்றுமோர் ஆச்சரியம் காத்திருந்தது.

வீட்டில் அவர் நுழையும்போது சற்று முன்தான் அங்கு வந்து சேர்ந்த கயிலாயம் ஊஞ்சலில் போய் உட்கார்ந்தார்.

''நல்ல வேளை! கந்தசாமி உனக்கு நூறு வயசு. எங்கே நல்ல விஷயமாகப் பேசவரும்போது இவன்வீட்டில் இல்லாமல் போய்விடுகிறானோ என்று எண்ணினேன்! நீயும் வந்து விட்டாய்!'' என்றார் கயிலாயம்.

''பெரியவர்கள் எந்தக் காலத்தில் எந்த வேளையில் எந்த இடத்தில் எந்தப்பேச்சு பேசினாலும் அது நல்ல விஷயமாகவே யிருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே கந்தசாமி வாத்தியார் அண்ணாமலைப் பண்டிதரின் எதிரில் பாயில் உட்கார்ந்தார்.

மரகத அம்மாளும் அவர் ஓரமாகக் குந்தியிருந்தாள்.

''கந்தசாமி, சும்மா வேதாந்தம் பேசாதே. இப்போது நான் ஒரு கலியாண விஷயமாகப் பேச வந்திருக்கிறேன்!'' என்றார் கயிலாயம்.

''உண்மையில் அது நல்ல வேளைதான்! பேச இருப்பதும் நல்ல விஷயந்தான். சற்று முன் தான் பேசிக் கொண்டிருந்ததும் இதே நல்லவேளைதான்!'' என்று கந்தசாமி தன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டார்.

''கந்தசாமி, என்ன பேசாமல் இருக்கிறாய்? நான் உன் மகள் தங்கத்தின் திருமணம் பற்றித் தான் பேச வந்திருக்கிறேன்'' என்று கயிலாயம் கூறியபோது அவர் மேலும்

வியப்புக் காளானார். ஆனால், கயிலாயம் தொடர்ந்து சொன்ன அந்தச் சொற்கள் அவர் இதயத்தைப் படீரென்று உடைந்து விடும் போல் இருந்தன.

“என் மகனுக்கு உன் மகளைக் கட்டிக் கொடுக்கிறாயா? என்று கேட்கத்தான் வந்தேன்” என்று கயிலாயம் கேட்ட வுடன் மரகத அம்மாளும் அதிர்ச்சியடைந்தாள்.

“அண்ணா, தெரிந்துதான் கேட்கிறீர்களா? இரண்டாந் தாரமாக உங்கள் மகனுக்குத் தங்கத்தைக் கட்டிக் கொடுக்க நாங்கள் எப்படி சம்மதிக்க முடியும்? அதுவும் அவனைப் போன்ற தரங்கெட்டவனுக்கு எப்படி எங்கள் பெண்ணைக் கொடுக்க முடியும்?” என்று பொறுக்க முடியாமல் கேட்டு விட்டாள் மரகத அம்மாள்.

“மரகதம், நீ யாரை நினைத்துக்கொண்டு பேசுகிறாய்?” என்று கேட்டார் கயிலாயம்.

“அண்ணா, அந்த சுந்தரேசன் குணம் உங்களுக்குத் தெரி யாதா? பெற்றோர் என்ற மரியாதை கூட இல்லாமல் உங்களையே பகைவர் போலக் கருதிய அவனுக்காக நீங்கள் பரிந்து பேச வந்துவிட்டீர்களே! அவன் தங்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடியதைக்கூடவா அதற்குள் மறந்துவிட்டீர்கள்?” என்று மனந்தாங்காமல் பேசினாள் மரகத அம்மாள்.

“மரகதம், கொஞ்சம் பொறு. நான் முழுவதும் பேசு வதற்குள் நீ இப்படி அவசரப் பட்டுப் பேசுவது நன்றாக இருக் கிறதா?” என்று சிறிது கடுமையான குரலில் சினக்குறியுடன் கேட்டார் கயிலாயம்.

மரகதம் அப்போதும் விடவில்லை. “நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவன் இனிமேல் திருந்திவிடப் போவதாக உறுதி சொல்லி விட்டான் என்று சமாதானம் சொல்லுவீர்கள். நீங்கள்

வேண்டுமானால் அவனை நம்பலாம். பெற்ற மகன் என்ற பாசம் உங்களை இரக்கமும் பரிவும் காட்டச் சொல்லலாம். ஆனால், நாங்கள் அவனை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டோம். நாய் வாலை நிமிர்த்த முடிந்தால், உங்கள் மகனைத் திருத்த முடியலாம். எங்கள் தங்கத்தை இவ்வளவு நாட் கழித்துக் கடைசியாகப் படுகுழியில் தள்ள எங்களுக்கு எப்படி மனம் வரும்?'' என்று பொரிந்து தள்ளினாள் மரகதம்.

கயிலாயம் தங்களுக்கு நன்மை செய்வதாகத் தொடங்கிக் கடைசியில் இப்படித் தங்கத்தின் வாழ்வைப் பாழாக்க வந்துவிட்டாரே என்றுகூட அவள் உள்ளம் குமுறியது.

'மரகதம் கொஞ்சம் வாயை மூடு, உன் அண்ணனை இவ்வளவு மோசமாக நீ நினைப்பதே தவறு. சுந்தரேசனை நான் என் மகனாக நினைத்து இருபது வருடங்களுக்கு மேலாகிறது' இப்போது நான் பேசுவது என் அருமை மகனைப்பற்றி, இறந்து போன என் மனைவி தேவநாயகியின் பிள்ளைக்குத் தான் உன் மகள் தங்கத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன்'' என்று கயிலாயம் சொன்னபோது மரகத அம்மாளால் நம்பவே முடியவில்லை. ஒன்றன்மேல் ஒன்று இன்று பேரதிசயமான செய்திகள் நிகழ்கின்றன என்று கந்தசாமி வாத்தியார் நினைத்துக்கொண்டார்.

''ஐயா. உங்கள் மகனோடு மனைவியும் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாக வல்லவர் கேள்விப்பட்டிருந்தோம்!'' என்று கந்தசாமி வாத்தியார் கேட்டார்.

''கந்தசாமி, அப்படித்தான் நானும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், இப்போது அவன் உயிருடன் இருப்பதாகத் தெரிந்துகொண்டுவிட்டேன். ஆம்! என் குலத்தை விளக்க

வந்தவனாக - என் குடிப் பெருமையைக் காக்க வந்த பண்புடையவனாக 'அந்த மகன் இருக்கிறான். சுந்தரேசன் தங்கத்தைத் தூக்கிக்கொண்டு காட்டுப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றபோது, தங்கத்தைக் காப்பாற்றியவன் அவன்தான். அவன் இப்பொழுது சென்னையில் இருக்கிறான். என் நண்பர் ஒருவர் அவனைத் தன் வீட்டில் வைத்திருக்கிறார். அவனும் தங்கமும் பலமுறை சந்தித்திருக்கிறார்கள். தங்கத்திற்கும் அவனுக்குமிடையே ஒரு பாசம் கூட வளர்ந்து வருவதாகத் தெரிந்துகொண்டேன். மன மொத்த அந்த இரண்டு பேரையும் ஒன்றுபடுத்தி மணக் கோலத்தில் காணவேண்டும் என்பதற்காகவே உங்களைக் கலந்து கொண்டு ஏற்பாடு செய்ய வந்தேன்'' என்று கயிலாயம் கூறிய பொழுது அவர்கள் இருவருக்கும் வாயடைத்துப் போய்விட்டது.

''ஆமாம் தங்கம் அடிக்கடி அந்தப் பையனை மருத்துவ விடுதியில் போய்ப் பார்த்து வந்தாள். மோட்டார் சைக்கிளில் அடிப்பட்டுக் காயமடைந்து மருத்துவ விடுதியில் கிடந்ததனால். அண்ணா, ராஜு தான் உங்கள் மகனா? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று மரகத அம்மாள் சொன்னாள்.

''ஆமாம்மா! அவனே தான்!'' என்று சொன்ன கயிலாயம் மேற்கொண்டு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

''அண்ணா, நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அந்தப் பையனைப் பற்றித் தங்கம் உயர்வாகத் தான் பேசினாள். அவனிடம் அன்பு தான் காட்டினாள். அவன் தான் உங்கள் மகன் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் தங்கம் அவனிடம் அன்பு காட்டியது அவன் மேல் உள்ள பிரியத்தால் இருக்க முடியாது; நன்றியறிதலாலோ,

இரக்கத்தினாலோதான் ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்றாள் மரகத அம்மாள்.

''மரகதம், என்ன சொல்லுகிறாய்?'' என்று மீண்டும் சினக்குரலில் கேட்டார் கயிலாயம்.

அதற்கு மரகத அம்மாள் பதில் சொல்லவில்லை. கந்தசாமி வாத்தியார் தான் பதிலளித்தார்.

''ஐயா, மரகதம் சொல்வது உண்மை தான். தங்கம் வேறொரு பையனைக் காதலிப்பதாகத் தெரிகிறது. அவள் மனத்துக்கு விரோதமாக மணம் முடித்து வைக்க எங்களுக்கு விருப்பமில்லை. ஆனால், உங்கள் விருப்பத்தை மீறி நடக்கவும் எங்களுக்குத் தடுமாற்றமாயிருக்கிறது. இதில் நீங்கள் தான் எங்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டும்'' என்றார்.

''யார் அந்தப் பையன்?'' என்று அதட்டலான குரலில் கேட்டார் கயிலாயம்.

''அவனும் உங்கள் அன்புக்குபாத்திரமான பையன்தான். ஆனால், சாதாரண நிலையில் உள்ளவன். உங்களாலேயே வாழ்வில் ஒருபடி உயர்ந்தவன்'' என்றார் கந்தசாமி வாத்தியார்.

கயிலாயம் அவன் யாராயிருக்கும் என்று நினைத்துப் பார்த்தார். அவருக்குப் புலப்படவில்லை. ''கந்தசாமி, அந்தப் பையன் யார்?'' என்று கேட்டார்.

''ஐயா, முருகேச வாத்தியாரின் மகன் நடராசனைத் தான் தங்கம் விரும்புகிறாள்!'' என்றார் கந்தசாமி.

கயிலாயத்தின் முகத்தில் ஒரு குறுநகை நெளிந்தது.

"பொய்! அவனைத் தங்கம் விரும்பவேமாட்டாள். தங்கம் அவனை விரும்பாததையறிந்துதான் அவன் எங்கோ ஓடிப் போய்விட்டான்!" என்றார் முன் அண்ணாமலைப் பண்டிதராக விளங்கிய கயிலாயம்.

"அப்போது அது உண்மையாக இருக்கலாம். ஆனால், இப்போது தங்கம் அவனைத்தான் விரும்புகிறாள்" என்று கந்தசாமி வாத்தியார் உறுதியாகக் கூறினார்.

"அப்படியானால், என் மகனுக்கு உங்கள் மகளைத் தர முடியாதென்று சொல்லுகிறீர்கள்! அப்படித்தானே" என்று கோபத்தோடு கேட்டார் கயிலாயம்.

"அண்ணா, உங்களுக்கு நாங்கள் எப்படி மறுத்துரைக்க முடியும். ஆனால், தங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக அவளுக்குத் திருமணம் நடத்தி வைப்பது நல்லதா? நீங்கள் பெரியவர்கள், நீங்கள் பார்த்துச் சொன்னால் சரி" என்றாள் மரகத அம்மாள் பணிவுடன்.

"மரகதம், நான் சொல்லுவதைக் கேள். தங்கத்திற்கு அடிக்கடி புத்தி மாறாட்டம் ஏற்படுகிறது. அதன் பலன் தான் இது. அவள் உண்மையில் என் மகனைத்தான் காதலிக்கிறாள் என்று நான் நன்றாகத் தெரிந்துகொண்டு தான் திருமண ஏற்பாடு தொடங்க முடிவு செய்தேன். பேசாமல் என் மகனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்க ஒப்புக் கொள். அவள் மேலும்மேலும் குழம்பிக் கொண்டிருக்க விடாதே. எல்லாம் நன்மையில் முடியும். இப்போது முருகேச வாத்தியாரின் மகனைத் தேடிப் பிடிப்பதென்றால் சாமான்யமல்ல. இன்னும் தங்கத்தைக் கன்னிப் பெண்ணாகவே வைத்துக்கொண்டிருப்பதும் சரியல்ல" என்று சொல்லிக்கொண்டு வந்தார் கயிலாயம்.

கயிலாயம் எப்பொழுதும் தங்களுக்குக் கேடு செய்ய மாட்டார் என்பது அந்தத் தம்பதிகளின் நம்பிக்கை.

"அண்ணா நீங்கள் பார்த்துச் செய்தால் சரி. எதற்கும் தங்கத்தை ஒரு முறை நீங்கள் பார்த்து... என்று மரகத அம்மாள் சொல்லி வரும்போதே, "அதெல்லாம் தேவையில்லை. அவளுக்கு வேண்டாததையா நாம் செய்யப் போகிறோம்?" என்றார் கயிலாயம்.

கந்தசாமி வாத்தியாருக்கு என்ன முடிவு செய்வதென்றே புரியவில்லை. ஒருபுறம் தங்கம் - வாழவேண்டிய பெண். மறுபுறம் அருமை மைத்துனர் - தங்களை வாழவைக்க வந்தவர். இவர்களில் எவர் விருப்பத்தைத்தான் நிறைவேற்றுவது என்று அவரால் ஒரு தீர்மானத்துக்கு வர முடியவில்லை. எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விட்டார்.

அண்ணனும் தங்கையும் ஒன்றாகக் கூடித் தங்கள் பிள்ளைகளுக்கு மணம் முடித்து வைப்பதென்று பேசி முடித்துக் கொண்டார்கள்.

கயிலாயம் தான் திருமண ஏற்பாடுகளைக் கவனிப்பதாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். கந்தசாமி வாத்தியார் மறுநாள் முருகேசரைச் சந்திக்கும் போது, அவரிடம் நடந்த விஷயத்தைக் கூறினார். முருகேச வாத்தியார் இதைக் கேட்டுப் பெருங் கவலைக் குள்ளானார். தன் வளர்ப்புப் பிள்ளையான நடராசன் வாழ முயலும் போதெல்லாம் ஏதாவது இக்கட்டு வந்து சேர்கிறதென்று அவருக்கு மனத்திற்குள் ஓர் எண்ணம் உண்டாகியது. ஆனால் அதை அவர் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. "கந்தசாமி நாம் நினைக்கிறபடியெல்லாம் நடந்து விட்டால் உலகம் உலகமாகவேயிருக்காது. எப்படியெப்படி நடக்க வேண்டுமோ

அப்படியப்படித் தான் எல்லாம் நடக்கும். இதற்காக ஆயாசப் படவேண்டாம்'' என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்பவர் போல் கந்தசாமி வாத்தியாருக்குச் சமாதானம் கூறினார்.

மரகத அம்மாள் தங்கத்திடம், தான் செய்து வைத்திருந்த ஏற்பாட்டைக் கூறியதோடு, சென்னையில் அவள் புதிதாகக் கண்ட இளைஞன், கயிலாயத்தின் மகன் தான் என்றும் கூறினாள்.

தங்கத்திற்குத் தலை சுற்றியது. குழப்பமே யில்லாமல் தன் வாழ்வு கழியாது போலிருக்கிறதே என்று அவளுக்குத் தோன்றியது.

தங்கத்திற்கு ராஜுவின்மேல் பிரியம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், நடராசனைத் திருமணம் செய்து கொண்டு தியாக வாழ்வு வாழ வேண்டுமென்று அவள் உறுதி பூண்டிருந்தாள். ஆரம்பத்தில் குலைந்துவிடும்போல் தோன்றிய அந்தஉறுதி வர வரக் கட்டுக் குலையாத தன்மையை அடைந்துவிட்டது. இனி அந்த உறுதியினின்றும் பிறழ்வதில்லை என்ற திடமான நிலையை அவள் அடைந் திருந்த போது அவள் கேட்ட இந்தத் திருமண ஏற்பாட்டுச் செய்தி அவளைத் திடுக்கிட வைத்தது. தன் அன்னையிடம் அவள் எதுவும் பதில் பேச முடியவில்லை பித்துப் பிடித்தவள் போல் தன் தாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மரகத அம்மாள் தன் மகள் மனத்தில் ஓடிய எண்ணங் களை ஊடுருவிப் பார்க்கக்கூடிய சக்தியுடையவளாக இல்லாததால், தங்கமும் எதுவும் பதில் சொல்லாததால், தங்கள் ஏற்பாட்டுக்கு ஒத்து வந்துவிடுவாள் என்று எண்ணிக் கொண்டாள்.

தங்கம் அதிகமாகக் குழம்பிக் கொண்டிருக்கவில்லை. தன் தியாக நோக்கத்திற்குப் புறம்பாக நடக்கும் இந்த ஏற்பாட்டை நிறுத்தவும் அவளால் முடியவில்லை. கயிலாய மாமா, பணத்தைக் கொடுத்துத் தன்னை விலைக்கு வாங்கி விட்டதுபோல் நடந்து கொள்கிறார் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. யாரிடமும் அவள் தன் கருத்தைத் தெரிவிக்க வில்லை.

இரவு நேரத்தை அவள் எதிர் பார்த்துக் கொண்டிருந் தாள். இரவு உணவுக்குப் பிறகு எல்லோரும் படுத்து விட்டார்கள். தங்கம் தன் படுக்கையில் ஒரே உறுதியான எண்ணத்தோடு சாய்ந்துகொண்டிருந்தாள். அவள் உறங்க வில்லை. நள்ளிரவு நேரம் வந்து விட்டதை வீட்டிலிருந்த கடிகாரம் பன்னிரண்டு தடவை மணியடித்து அறிவித்தது.

தங்கம் மெல்ல எழுந்தாள். பூனை போல் அடிமேல் அடியெடுத்து நடந்தாள். கொல்லைப்புறக் கதவைத் திறந்துகொண்டு பின்புறமாக வெளியேறினாள். மல்லிகைப் பந்தல்நிழலோவியம்போல் அவள் கண்களில்பட்டது. அதைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு வீதிக்கு வந்தாள். இருளில் ஒதுங்கி யொதுங்கி நடந்து வந்தாள். ஊரைத் தாண்டி வந்தாள். ஊர்க் கோடியில், வேலியிட்ட காய்கறித் தோட்டம் ஒன்றினுள் முள் கம்பியை நீக்கிக்கொண்டு நுழைந் தாள். அங்கேயிருந்த கிணற்றின் அருகில் வந்து சேர்ந்தாள். கிணற்றை ஒருமுறை எட்டிப் பார்த்தாள். உள்ளே ஒரே பயங்கரமான கருக்கிருட்டாக இருந்தது. "தியாக வாழ்வு வாழ எண்ணினேன். ஆனால் உலகம் என்னை அப்படி வாழ விடவில்லை. இப்போது தியாகச் சாவு சாகிறேன்" என்று அவள் முடிவு கட்டிக்கொண்டாள்.

# 32. காரிருளில் காதல் பிறந்தது.

நாம் எத்தனையோ சமயங்களில் உறுதியான முடிவுக்கு வருகிறோம். ஆனால், சிலசமயம் எவ்வளவோ நாட்களாக நாம் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வந்து சேர்ந்த அந்த உறுதி கடைசியில் எப்படியோ திடீரென்று உருக்குலைந்து போவதும் உண்டு. தங்கம் தியாக வாழ்வு வாழவேண்டுமென்று முடிவு கட்டியதும், அந்த எண்ணம் கைகூடாதென்று தெரிந்தபோது, தியாகச் சாவையாவது அடைவதென்ற திண்ணமான முடிவுடன் இருட்டில் வெளிக் கிளம்பிக் கிணற்றடிக்கு வந்ததும் எவ்வளவோ உறுதியான முடிவுகளாகத்தான் இருந்தன.

தொலைதேசத்திற்குப் போவதற்காக மூன்று மாதங்களாகத் திட்டமிட்டு, வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்துக் கட்டி வைத்து ஒன்றுக் கிரண்டு முறை சரி பார்த்துக் கடைசியில் புறப்பட்டு வெளிவந்த பிறகு ஏதோ முக்கியமான ஒன்றை மறந்து விட்டுத் திரும்பி வீட்டிற்குள் நுழைவதுண்டல்லவா? அதுபோலத்தான், தங்கமும் எத்தனையோ நாட்களாகத் திட்டமிட்டுக் கடைசியில் சாவ தென்றே முடிவுக்கு வந்தவள் கிணற்றடியில் வந்து நின்று கைப்பிடிச் சுவரில் ஏறிக் குதிக்கக் காலைத் தூக்கியவள், சட்டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்,

தன் தாய் தந்தையர் வருந்துவார்களே, அவர்களுக்கும் மேலாக நடராசனும் ராதாவும் மிகவும் வருந்துவார்களே என்றெல்லாம் அவள் நினைத்துப் பார்த்த பிறகுதான் சாவதென்ற முடிவுக்கு வந்தாள். ஆனால் இப்போது தான் அவளுக்குத் தன் சாவினால் ஏற்படக் கூடிய மற்றொரு விளைவு ஞாபகத்துக்கு வந்தது.

தான் சாவதோ, தன்னுடைய தியாக இலட்சியம் கூட நிறை வேறவில்லையே என்று தோன்றிய மனத்துயரத்தின் காரணமாகத்தான். ஆனால், உலகத்திற்கு இதுதெரியுமா? ஊருலகம், அவள் சாவைப் பற்றி என்னென்ன மாதிரியாக இட்டுக் கட்டிக் கதை பேசும் என்ற நினைப்பு அவளுக்கு இப்போதுதான் வந்தது.

தான் பருவமடைந்து பல ஆண்டுகள் திருமணமாகாமல் வீட்டிலே சும்மா யிருந்த போதே பற்பலவாறு பேசிய ஊருலகம் இப்போது தற்கொலை செய்து கொண்டதை யறிந்தபின் எப்படி யெப்படிப் பேசும் என்ற எண்ணம் அவளுக்கு அப்போது திடீரென்று உண்டாகியது. பரம்பரை பரம்பரையாகத் தன் மூதாதையரும், தாய் தந்தையரும் காப்பாற்றி வரும் அந்தக் குடிப்பெருமை தன்னால் கெட்டொழிய நேரிடும் என்ற அந்த நினைப்பு வந்தவுடன், அவள் உடலெல்லாம் நடுங்கியது. எத்தனையோ நூற்றாண்டு களாக, எத்தனையோ முன்னோர்களால், எத்தனையோ அரும்பாடுபட்டுக்காப்பாற்றப்பட்டு வருகின்ற அந்த நற்குடிப் பெருமை. தான் செய்யாத குற்றத்திற்காகக் கெட்டொழியும் படியான நிலையைத் தன்னுடைய இந்தச் செயல் உண்டாக்கி விடும் என்று எண்ணியபோதுதான் அவளுடைய சாவு உறுதி தளர்ந்தது.

வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும் என்று அவள் முடிவுக்கு வந்தபோது, யாரோ அவளைப் பின்னுக்குப் பிடித்

திமுத்தார்கள். அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அந்த இருளில், தன்னைப் பிடித்திழுத்தது ஓர் ஆடவன் என்று மட்டுமே அவளால் அறிய முடிந்தது. இருளில் அந்த ஆடவன் வெறும் நிழலுவருமபோலவே தென்பட்டான். அவனை "யார்?" என்று கேட்கக்கூட அவளுடைய உதடு களுக்கு அப்பொழுது தெம்பு வரவில்லை.

ஆனால் அவன் கேட்டான், "ஏனம்மா நீ யார்? இந்த இருளில் இங்கே என்ன செய்யவந்தாய்?" என்று. அவனுடைய குரல் முன் எங்கோ கேள்விப்பட்டிருப்பதாகத் தோன்றியது தங்கத்துக்கு. ஆனால், அது சட்டென்று சரியாகப் புரிபட வில்லை.

"ஐயா, முதலில் என் கையை விடுங்கள்!" என்று தங்கம் சொன்னாள். அவன் உடனே அவள் யார் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டான்.

"தங்கம், நீயா? நீதானா? நம்பமுடியவில்லையே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? உனக்கு என்ன துன்பம் வந்தது?" என்று அவன் பதட்டத்துடன் கேட்டான்.

அப்பொழுதும் தங்கம் அவனை இன்னார் என்று நினைவு படுத்திக்கொள்ள முடியவில்லை.

"ஐயா, முதலில் என் கையைவிடுங்கள். நீங்கள் யார் என்று சொல்லுங்கள்." என்று கேட்டாள் தங்கம்.

"மறுபடியும் கிணற்றுக்கு ஓடுவதில்லை என்று சத்தியம் செய்தாலொழிய நான் உனக்கு எவ்விதமான பதிலும் சொல்லப் போவதில்லை" என்றான் நிழல் வடிவாகத் தோன்றிய மனிதன்.

தங்கம் அவ்வாறே உறுதி செய்து கொடுத்தாள்.

"தங்கம், என்னைத் தெரியவில்லையா? நான் தான் முருகேசவாத்தியார் மகன்" என்று சொன்னான் அவன். அப்பொழுதும் அவன் தங்கத்தின் கையை விட்டுவிடவில்லை.

"நடராசன். நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டள் தங்கம்.

"அதை நான் பிறகு சொல்லுகிறேன். முதலில் நீ இப்படி இருட்டில் கிணற்றடி நோக்கி வந்த காரணத்தை மட்டும் சொல்" என்றான் நடராசன்.

'பெரியவர்களெல்லாம் கூடி என் கருத்துக்கு விரோதமாகத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்து விட்டார்கள்...' என்று தங்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நடராசன் இடைமறித்தான்.

"தங்கம், என்னால் நம்பமுடியவில்லையே! உன் அப்பா அப்படிப் பட்டவரில்லையே!" என்றான்.

"அப்பா நல்லவர்தான்; ஆனால், அந்த அண்ணாமலைப் பண்டிதர்தான் அப்பாவின் மனத்தை மாற்றிவிட்டார்" என்று தங்கம் வெறுப்புடன் கூறினாள்.

"யார்? உன் மாமா கயிலாயமா? அவர் உனக்கு எந்த மாப்பிள்ளையை ஏற்பாடு செய்தார்?" என்று புரியாதவன் போல கேட்டான் நடராசன்.

"பட்டணத்திலே ராஜு என்று ஒருவர் இருக்கிறார். அவர் மாமாவின் மகனாம். தன் மகனுக்குத் தான் என்னைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அம்மாவை வற்புறுத்தியிருக்கிறார் அவர்."

"தங்கம் உனக்கு அந்த ராஜுவைப் பிடிக்கவில்லையா?" என்று ஒருவிதமான பதற்றத்துடன் கேட்டான்

நடராசன். தங்கம் அவன் குரலில் இருந்த நடுக்கத்தைக் கவனிக்கவில்லை. அவன் கேள்விக்குத் தங்கத்திடமிருந்து எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை.

"தங்கம், நீ வேறு யாரையாவது கட்டிக் கொள்ள வேண்டும் என்று நிச்சயித்திருக்கிறாயா?" என்று மறுபடியும் ஆவலும் பதற்றமும் நிறைந்த குரலில் கேட்டான் நடராசன்.

"ஆம்" என்று மட்டும் தங்கத்தின் உதடுகள் அசைந்தன.

"தங்கம் யார் அந்தப் புண்ணியவான்?" என்று மோதும் துடிப்புடன் கேட்டான் நடராசன்.

தங்கம் பதில் சொல்லவில்லை. ஆனால், திடீரென்று நடராசன் தோளில் சாய்ந்து கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அவள் செயல் நடராசனுக்குப் புரியவில்லை.

அப்படியே அவளைத் தன்னோடு அணைத்தபடியே வழி நடத்திக்கொண்டு வந்தான். சிறிது தூரம் அவர்கள் நடந்து வந்ததும், ஓர் அரசமரத்தடியில் சின்னஞ் சிறிய அறையொன்று மட்டுமே கட்டப்பெற்றிருந்த ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அங்கே மினுக் மினுக்கென்று ஒரு சிறு எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

"தங்கம், யாரைக்கட்டிக்கொள்ள எண்ணியிருக்கிறாய்?" என்று மீண்டும் கேட்டான் நடராசன். ஒருவேளை அவள் தன் அத்தான் சுந்தரேசன் மீதே மனம் வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று அவன் எண்ணினான்.

"நடராசன், நான்... உங்களைத் தான்" என்று சொல்லி மீண்டும் அவன் மார்பில் சாய்ந்துகொண்டாள் தங்கம். நடராசனால் நம்பவே முடியவில்லை.

"உண்மையாகவா தங்கம்?" என்று கேட்ட அவன் அவளைத் தன் மார்போடு சேர்த்து இறுகத் தழுவி கொண்டான். அந்த ஒரு தழுவல் அவர்களிருவரையும் வேறு நினைவின்றிச் செய்துவிட்டது. ஒருவரைப்பற்றி மற்றொருவர் கொண்டிருந்த அசூயை, வெறுப்பு, வேறுபாடு ஆகிய அத்தனை உணர்ச்சிகளும் அப்போது மறைந்து விட்டன. அந்த அணைப்பிலே தங்கம் ஏற்கனவே அவன் மீது கொண்டிருந்த அருவருப்பு குறைபாடு ஆகிய உணர்ச்சி களெல்லாம் கரைந்து மறைந்து போய்விட்டன. நடராசன் அவள் தன்னை விரும்புவாளா என்று எண்ணிக்கொண்டிருந்த சந்தேகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. வியக்கத்தக்க முறையில் அவர்கள் மனம் இரண்டும் ஒன்றி விட்டது.

எவ்வளவு நேரம் அவர்கள் அந்த நிலையில் இருந்தார் களோ தெரியாது. தங்கம் மெதுவாக அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள். "நடராசன், என்னை ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டாள். 'இது என்ன கேள்வி தங்கம்? எத்தனை யாண்டுகளாக உனக்காக நான் தவமிருந்தேன்?" என்று சொன்னான் அவன்.

பிள்ளையார் சிலையின் அருகில் எரிந்து கொண்டிருந்த விளக்கை நடராசன் தூண்டிவிட்டான். வெளிச்சம் சிறிது அதிகமாகியது.

"நடராசன், எப்போது உங்கள் கை வளர்ந்தது என்று கேட்டாள் தங்கம். ஆம், அவனது இடது கை முழு உருவோடு இருந்தது. அப்போது அதிலிருந்த ஊனம் மறைந்திருந்தது.

"தங்கம், அது மிகச் சாதாரண விஷயம். அந்தக் கையை வேண்டும் போது கழற்றி வைத்து விடலாம்" என்றான் நடராசன்.

தங்கம் புரியாமல் திகைத்தாள்.

"தங்கம், அது ரப்பர்க் கை. பார்வைக்கு முழுக்கை போல் தெரிவதற்காக ரப்பரினால், கைபோல் செய்து மாட்டிக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்!" என்றான் நடராசன்.

அதன் பிறகு தங்கம் எதுவும் பேசவில்லை. அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளத்தில் ஒருவிதமான இன்ப உணர்ச்சி ஊறுவது போலிருந்தது. அவன் தனக்காகவே பிறந்திருக்கிறான் என்ற உணர்வு அவள் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டு விட்டது போலிருந்தது. சுந்தரேசன், ராஜு போன்றவர்களைப் பற்றிய நினைவுகளே அப்போது அவளுக்குத் தோன்றவில்லை.

அவனும் அவளை ஆவலோடு பார்த்துக் கொண்டுதான் இருந்தான். கடைசியில் அவன் தான் பேசினான். "தங்கம், நேரமாகிறது. வா. உன்னை வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு வருகிறேன்" என்றான்.

"வீட்டுக்கா? நான் வரமாட்டேன்" என்றாள் தங்கம்.

"ஏன் தங்கம்?"

"அங்கே அண்ணாமலைப் பண்டிதர், அவர்தான் கயிலாயமாமா இருக்கிறார். அவர் தன் மகனுக்கே என்னைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அங்கே போனால் நான் மீளமுடியாது!" என்றாள் தங்கம்.

"அப்படியானால், நீ என்ன தான் செய்யப்போகிறாய்!" என்று கேட்டான் நடராசன்.

"எனக்கு அவர் வீட்டுப் பணமும் வேண்டாம் மாளிகையும் வேண்டாம். நீங்கள் எங்காவது என்னைக் கூட்டிக் கொண்டு போய்விடுங்கள்'' என்றாள் தங்கம்.

இதைக் கேட்டதும் நடராசன் புன்சிரிப்புக்கொண்டான். அந்தப் புன்சிரிப்பு சிறிது நேரத்தில் பெருஞ் சிரிப்பாக மாறியது. மேலும் அந்தச் சிரிப்பு வெறிச் சிரிப்பாக மாறியது. அவன் பைத்தியக்காரன்போல் சிரித்துக்கொண்டிருந்தான்' தங்கம் பயப்படும் அளவுக்கு அவன் சிரிப்புப் பெரிதாகி விட்டது. மீண்டும் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று அவள் சந்தேகப்பட்டாள்.

தங்கம், அவனைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினாள். 'ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?'' என்று ஓர் அதட்டு அதட்டினாள்.

நடராசன் தன் சிரிப்பைக் குறைத்துக் கொண்டான்.

''தங்கம், நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போகிறேன். ஆனால், அதற்கு முன்னால் உன் மாமாவிடம் அனுமதி வாங்கிக்கொள்ள வேண்டும்'' என்றான்.

''ஏன்?'' என்பதுபோல் அவள் அவனை நோக்கினாள்.

''தங்கம், உனக்குத் தெரியாதா? பைத்தியமாய் இருந்த எனக்கு வைத்தியம் செய்தவர் அவர். படிப்பில்லாமல் இருந்த எனக்கு அறிவு நூல்களைக் கற்றுத் தந்தவர் அவர். காட்டுமிராண்டிபோல் இருந்த என்னை நாகரிகம் படைத்தவனாக மாற்றியவர் அவர். ஏழையாகக் கிடந்த என்னை வசதியாக வாழச் செய்தவர் அவர். அநாதையாய் வாழ்ந்த எனக்கு அரியதோர் தந்தையாக வந்து ஆட்கொண்டவர் அவர். அவருக்கு நான் துரோகம் செய்யலாமா?'' என்று கேட்டான் நடராசன்.

"அவர் அனுமதி கொடுக்காவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம், அவர் அனுமதி கொடுக்காமல் இருக்கவே மாட்டார். அப்படி அவர் அனுமதி கொடுக்காவிட்டாலும் அவர் முடிவுக்குக் கட்டுபட்டு நடக்க நான் கடமைப் பட்டவன்."

"நீங்கள் கடமைப்பட்டிருக்கலாம். அதற்காக நான் ஏன் அவருக்குக் கட்டுபட்டு நடக்க வேண்டும்" என்றாள் தங்கம்.

"தங்கம், நீயும் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமை பட்டவள்தான். உனக்கு அவர் எவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறார்?" என்று கேட்டான் நடராசன்.

"நன்மைகளா? எல்லாம் சூழ்ச்சி, தன் பணத்தால் என்னை விலைக்கு வாங்கி விட்டதாக நினைத்துக் கொண் டிருக்கிறார் அவர். சின்னஞ்சிறிய பூச்சி புழுக்கள் கூடத் தன்தன் உணர்ச்சியோடு உரிமையாக வாழுகின்றன. ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை மதிக்காமல் நடந்து கொள்கிற இவருக்கு நான் ஏன் கட்டுப்படவேண்டும்?' தங்கம் ஆத்திரத் தோடு பேசினாள்.

"தங்கம், நீ உன் மாமாவைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய்!" என்றான் நடராசன்.

"புரிந்துகொண்டு பேசுகிறேனோ புரியாமல் தான் பேசுகிறேனோ! நான் கடைசியாக உங்களையொன்று கேட்கிறேன். என் வாழ்வில் நான் உங்களைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைக்கமாட்டேன்; நீங்கள் இப்போதே என்னை எங்காவது கூட்டிக் கொண்டு போய்விடுங்கள். இல்லாவிட்டால், அதற்கு

உங்களுக்கு உறுதியில்லையென்றால் பேசாமல் என்னை விட்டு விட்டுப் போங்கள்'' என்று தீர்மானமான குரலில் சொன்னாள்' தங்கம்.

''தங்கம் மனத்தை வீணாக அலட்டிக் கொள்ளாதே! அண்ணாமலைப் பண்டிதர் நம் இருவருடைய உணர்ச்சிக்கும் விரோதமாக நடந்துகொள்ளவேமாட்டார். வா, உன்னை யாருக்கும் தெரியாமல் வீட்டில் கொண்டு போய் விடுகிறேன். நீ தற்கொலை செய்து கொள்ள முயன்றது வேறு தெரிந்தால் அவமானம். எப்படியும் நானே உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன். நம்பிக்கையோடிரு'' என்று உறுதி சொன்னான் நடராசன். அதன்பிறகு தான் தங்கம் அவனுடன் திரும்பினாள். வீட்டுவாசலில் அவளை விட்டு விட்டு அவன் போய்விட்டான். கொல்லைப்புற வழியாக அவள் உள்ளே நுழைந்து யாரும் கவனியாமல் தன் படுக்கைக்குத் திரும்பிப் போய் விட்டாள். படுக்கையில் சாய்ந்த பிறகுதான், நடராசன் தன்னைஎப்படித் தொடர்ந்து வந்தான் என்ற விஷயத்தைக் கடைசிவரை சொல்லாமல் மறைத்து விட்டான் என்பது அவளுக்கு நினைவு வந்தது. தானும் அதை மீண்டும் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் விட்டு விட்டதற்காக சலித்துக் கொண்டாள். இப்போது அவள் மனம் பூரணமாக அவன் மீது பாசம் கொண்டிருந்தது.

# 33. இன்பப் பெரு வெள்ளம்

தங்கம் இரவில் வெளிக் கிளம்பிச் சென்றதும் தற்கொலை செய்ய முயன்றதும், வீட்டுக்குத் திரும்பிவந்ததும் யாருக்கும் தெரியாது. வீட்டில் அவளைப் பற்றிய எண்ணமே யாருக்கும் இல்லாதது போல் காரியங்கள் நடந்து கொண்டிருந்தன அண்ணாமலைப் பண்டிதராகிய கயிலாய மாமா; தங்கத்தின் திருமணத்திற்குத் தானே ஒரு நாள் குறித்தார். அவரே முன்னின்று திருமணத்திற்கு ஆக வேண்டிய காரியங்களை யெல்லாம் கவனித்தார். திருமணத்தை எங்கே நடத்துவது என்ற பிரச்சினை வந்தபோது கயிலாயம், கதலிப் பட்டணத்தில் ஜமீந்தார் மாளிகையிலேயே நடத்தலாம் என்று சொன்னார். ஆனால், தான் வாழ்க்கைப்பட்ட வீட்டில்தான் தன் அருமை மகளுக்குத்திருமணத்தை நடத்திக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்பது மரகத அம்மாளின் ஆசை. ஆகவே, கயிலாயம் தன் தங்கையின் எண்ணத்திற்கு இசைய வேண்டியதாயிருந்தது.

நெய்யூரிலே யிருந்த அந்தக் கந்தசாமி வாத்தியாரின் சின்னஞ்சிறிய வீட்டிலே நாளுக்குநாள் புதுப்பொலிவு தோன்றிக் கொண்டிருந்தது. வீடு முழுவதும் வெள்ளை யடித்துப் புத்தம் புதிய அலங்காரங்கள் பல செய்யப்பட்டன.

இத்தனை ஏற்பாடுகளையும் கண்டு மனம் புழுங்கிக் கொண்டு வெளியே சொல்ல முடியாமல் மனத்துக்குள்ளே வேதனைப் பட்டுக் கொண்டிருந்த இதயம் ஒன்று இருந்தது என்றால், அது தங்கமாகத் தான் இருக்கும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், இந்த ஏற்பாடுகள் இன்னொரு பெண்ணுக்குமனவருத்தம் அளிக்கக்கூடியவையாக இருந்தன. அந்தப் பெண் வேறு யாருமில்லை. அது தங்கத்தின் அருமைத் தோழி ராதாதான். தங்கத்திற்குத் தன்னால் காதலிக்கப் பட்டவனும், தன் அன்புள்ளத்தில் என்றென்றும் குடியிருந்து வருபவனும் ஆகிய நடராசனைத் திருமணம் செய்து வைத்து விடவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்த ராதா, இந்த ஏற்பாடுகளைக் கண்டு தன் எண்ணம் சித்திக்காதநிலை ஏற்பட்டதற்காக வருந்திக் கொண்டிருந்தாள் ஆனால், அவள் தன் வருத்தத்தை வெளியில் யாரிடமும் சொல்ல வில்லை. தங்கத்திடம் கூடச் சொல்லவில்லை. எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று மனத்தை அமைதிப்படுத்திக் கொண்டு அவள் பேசாமல் இருந்தாள்.

நடராசன் அந்த நள்ளிரவில் சொன்ன உறுதி மொழியில் தங்கத்திற்கு ஓரளவு நம்பிக்கை. ஆகையால், அவள் அடிக்கடி தன் மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டாள்.

தன் மகள் முகத்தில் செழிப்பில்லாததை மரகத அம்மாள் கவனிக்கத் தவறவேயில்லை. அவள் மெதுவாக ஒருமுறை தன் கணவரை யணுகி, "என்னங்க தங்கத்தைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறதே?" என்று கேட்டாள். அதற்குக் கந்தசாமி வாத்தியார் தாமும் வருத்தத்துடன் பதிலளித்தார். 'என்ன செய்வது? உன் அண்ணன் சொல்லை யும் மீறமுடியவில்லை என் மகள் நிலையையும் பொறுக்க முடியவில்லை" என்று கந்தசாமி வாத்தியார் ஈனக்குரலில் கூறியபோது மரகத அம்மாளுக்கு மனத்தில் சுருக்கென்று முள் தைத்தது போலிருந்தது.

குறிப்பாகக்கூடத் தன் மனம் வருந்தும்படி இதுவரை தன் அருமைக் கணவர் பேசி அவள் கண்டதேயில்லை. இன்று உன் அண்ணன், என் மகள் என்று அவர் தம்மையும் தன்னையும் பிரித்துப் பேசுவதை அவளால் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை. கலங்கிய கண்களுடன், குமுறும் உள்ளத்துடன் அவள் அவரிருந்த இடத்தைவிட்டுப் போவதற்காகச் சட்டென்று திரும்பினாள். அப்போது அவர்கள் இருந்த கூடத்திற்குள் கயிலாயம் திடீரென்று நுழைந்தார். தன் தங்கை மரகதத்தின் முகத்தைக் கண்ட கயிலாயம் அவள் ஏதோ மனவேதனையுடன் இருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறவில்லை. தன் மைத்துனர் நிலையும் அவளைக் காட்டிலும் சிறந்ததாக இல்லை என்பதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

'கந்தசாமி உங்களுக்குள் என்ன மனவருத்தம்?' என்று கேட்டார் கயிலாயம்.

பதில் இல்லை.

''மரகதம், உங்களுக்குள் என்ன சச்சரவு?'' என்று மறு படியும் கேட்டார் கயிலாயம்.

அதற்கும் பதிலில்லை.

''கணவன் மனைவி விகாரத்திடையே மூன்றாவது மனிதன் ஒருவன் தலையிடுவது என்றும் தகுதியுடையதல்ல' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு கயிலாயம் அந்தக் கூடத்தைவிட்டு வெளிச் செல்லுவதற்காகத் திரும்பினார்.

''அண்ணா! அண்ணா!'' என்று மரகதம் கூவி யழைத்தாள்.

கயிலாயம் சட்டென்று அங்கே நின்றார்.

"மரகதம்!" என்று பாசம் இழைந்தோடும் மெல்லிய ஓசை அவரிடமிருந்து எழுந்தது.

"அண்ணா! இந்தத் திருமணம் வேண்டாம் அண்ணா!" என்று மரகத அம்மாள் கதறினாள்.

"அசடே! இன்னொருமுறை அப்படிச் சொல்லாதே. கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த ஒரு மகளுக்கு மங்கல காரியமாக நடக்கப்போகும் திருமணத்தை எண்ணி மகிழ்ந்து வாழ்த்த வேண்டிய நீயா இப்படிப் பேசுவது? தன் மகளுடைய விருக்கும் ஒரு நன்மையைத் தாயே தடுப்பதா?" என்று கூறினார் கயிலாயம். அவர் சொற்களில் எப்போதும் இருக்கக் கூடிய உறுதியான பாணி அப்போதும் இருந்தது.

"அண்ணா, என் மகள் வாழ்நாள் முழுவதும் மனங் கலங்கிக்கொண்டிருக்கச் செய்யும் இந்தத் திருமணம் எப்படி யண்ணா மங்கல காரியமாகும்?" என்று உருக்கத்துடன் கேட்டாள் மரகத அம்மாள்.

இந்தச் சமயம் தங்கம் அந்தக் கூடத்திற்குள்ளே எதற் காகவோ நுழைய அடியெடுத்து வைத்தாள். ஆனால், தன் தாயும் தந்தையும் இருந்த சோக நிலையைக் கண்டதும் அவள் பின்வாங்கி அடுத்த அறையிலேயே நின்று விட்டாள். அண்ணாமலைப் பண்டிதர் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு கூடத்தின் உட்புறமாகத் திரும்பியிருந்த படியால், தங்கம் அங்கு நுழைந்ததையோ, அடுத்த அறையில் நின்று கொண்டிருந்ததையோ கவனிக்கவில்லை.

"மரகதம், நீ சிறிதும் புரியாமல் பேசுகிறாய். நீ உறுதியாக நம்பு. உண்மையில் நான் உன் தங்கத்திற்கு நன்மை தான் செய்கிறேன். அவள் யாரை ஆசையோடு நேசிக்கிறாளோ அவனுடன் தான் அவளை இணைத்து வைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

"இல்லை, உங்கள் ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை" என்று அவர் எதிரில் ஓடிச் சொல்ல வேண்டும் போலிருந்தது தங்கத்துக்கு. ஆனால், அவள் உடல் அசையவில்லை; குரலும் வெளிப்படவில்லை.

"தான் நடராசனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தங்கம் தெளிவாகச் சொல்லி விட்டாள். அவள் இன்பமாக வாழவேண்டுமென்றால், அவள் எண்ணப் படி மணமுடித்து வைத்தால் தான் நல்லது. அதுதான் அவள் வாழ்வில் கலங்காமல் களிப்போடு இருக்க நாம் வழி செய்து கொடுப்பதாக இருக்கும். அவள் மறுக்கின்ற மாப்பிள்ளையைக் கொண்டு வந்து மணமுடித்து வைத்து அவள் இவனைத்தான் நேசிக்கிறாள் என்று நான் சொல்லிக் கொண்டிருந்தால் அது எப்படிப் பொருந்தும்;" என்று கந்த சாமி வாத்தியார் துயரங் கலந்த சினத்தோடு பேசினார். கயிலாயத்தின் எதிரில் அவர் இதுவரை கடுகடுப்பாகப் பேசியதே கிடையாது. கயிலாயத்தை அவர் ஒரு மகான் என்று மதித்திருந்தார். ஆனால், தன் மகள் திருமண விஷயத்தில் மைத்துனர் கயிலாயம் காட்டும் பிடிவாதத்தை அவரால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

கந்தசாமி வாத்தியாரின் கோபமான பேச்சுக்கள் கயிலா யத்திற்குச் சிரிப்பைத்தான் வரவழைத்தன. அதுவும் வெறும் புன் சிரிப்பாகத்தான் வந்தது.

"கந்தசாமி, மரகதம், நான் உங்களை மிகவும் மனம் நோகச்செய்துவிட்டேன். உங்கள் விருப்பப்படி நடராசனைத் தங்கம் திருமணம் செய்து கொண்டு நன்றாக வாழட்டும். அதுவும் எனக்கு மகிழ்ச்சியையே தரும்." என்றார் கயிலாயம்.

"அண்ணா, முழுமனத்தோடுதான்சொல்லுகிறீர்களா?" என்று தன் ஆனந்தத்தை இடைமறித்த சந்தேகத்தோடு கேட்டாள் மரகதம்.

கந்தசாமி வாத்தியாரும் தன் மைத்துனர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"கந்தசாமி, மரகதம், உங்கள் மனப்போக்கை நான் இப்போதுதான் புரிந்து கொண்டேன் என்பதில்லை. முதலிலேயே தெரிந்துகொண்டுவிட்டேன். கடைசியில் உங்கள் எண்ணப்படியே திருமணத்தை நடத்திவிடுவதென்று நானே முடிவு செய்துவிட்டேன். இதோ நீங்கள் எதிர் பார்த்தபடியே திருமண அழைப்பிதழும் அச்சடித்துக் கொண்டுவந்து விட்டேன்" என்று சொல்லித் தாம் கையில் கொண்டு வந்திருந்த ஒரு கட்டைப் பிரித்து அவர்கள் இருவர் கையிலும் ஆளுக்கோர் அழைப்பிதழ் கொடுத்தார்.

அந்த அழைப்பிதழைப் பார்த்த உடனே அவர்கள் கண்கள் வியப்பால் விரிந்தன· கொட்டை எழுத்துக்களில் நடராசனுக்கும் தங்கத்துக்கும் என்று இருந்ததைப் பார்த்தவுடன் அவர்கள் கொண்ட ஆனந்த உணர்ச்சி அளவிடற்கரியதாயிருந்தது. ஆனால், அழைப்பிதழை வரி வரியாகப் படித்தபோதுதான், வியப்புணர்ச்சி மேலோங்கியது. அண்ணாமலைப் பண்டிதர் என்ற கயிலாயத்தின் மகன் திருவளர் செல்வன் நடராசனுக்கும், நெய்யூர் கந்தசாமி வாத்தியாரின் மகள் திருவளர் செல்வி தங்கத்துக்கும் என்று இருந்த அந்தச் சொற்றொடர் கந்தசாமி வாத்தியாரையும், மரகத அம்மாளையும் பெருத்த ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

"அண்ணா, நடராசன் உங்கள் மகனா?" என்று கூவினாள் மரகதஅம்மாள்.

"உண்மைதானா?" என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

"உண்மை இது மட்டுமல்ல, தொடக்க முதலே நான் என் மகன் நடராசனுக்குத்தான் உங்கள் தங்கத்தைத் திருமணம் செய்துவைக்கச் சொல்லிவருகிறேன்" என்றார் கயிலாயம்.

"நீங்கள் சொல்வது புரியவில்லையே?" என்று கேட்டார் கந்தசாமி.

"ராஜுவுக்குத் தங்கத்தைக் கொடுங்கள் என்று கேட்டேன் நான். நீங்கள் மறுத்துவிட்டீர்கள். நடராசனைத் தான் தங்கம்மணம்புரிய விரும்புகிறாள் என்று சொன்னீர்கள். நடராசனும் ராஜுவும் ஒருவரே தான்என்பது தெரியாததால் நீங்களும், தங்கமும் என்மேல் வெறுப்புக்கொள்ளும்படி ஆகி விட்டது. இதில் நானும் ஒருவகையில் ஏமாந்து போயிருக் கிறேன். நடராசன் மேல் தங்கம் முதலில் வெறுப்புக் கொண் டிருந்தாள். ஆகையால் அவள் அன்பைக் கவருவதற்காக அவன் ராஜுவாக வேடம் போட்டான். தங்கமும், ராஜுவை விரும்பினாள். அவள் ராஜுவிடம் வெறுப்புக்கொள்ளும் படியும், நடராசனிடம் அன்புகொள்ளும்படியும் எப்படி மாறுதல் ஏற்பட்டது என்பதுதான் எனக்கு புரியவில்லை." என்றார் கயிலாயம்.

"மைத்துனரே, நீங்கள்தான் இரட்டைவேடம் போட்டீர் களென்றால், உங்கள் மகனும் இரட்டைவேடம் போட்டிருக் கிறான். நடராசன்தான் உங்கள் மகன் என்று எப்போது எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? என்று சொல்லவில்லையே!" என்று கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

'கந்தசாமி, எனக்கு உயிருக்குயிரான ஒரு மனைவி கிடைத்திருந்தும் நான் அவளை அலட்சியப்படுத்தி குணவதி அழகில் மயங்கி அவளை இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொண்டேன் அல்லவா! இந்தக் குணவதி பெயரளவில்

குணவதியே தவிர, மிகுந்த குணக்கேடியாக இருந்தாள். ஒரு நாள், இவள் செய்து வைத்திருந்த வடையை என் மூத்தாள் மகன் ராஜு எடுத்துத் தின்றுவிட்டான் என்பதற்காக அவன் கையை அப்படியே அரிவாளால் துண்டாக வெட்டிவிட்டாள், இது ஊராருக்குத் தெரியாது. இந்தக் கொடுமையும் பொறுத்துக் கொண்டு இருந்த என் மூத்தாள் கற்பகத்தின் பேரில் குணவதி பழி கிளப்பி விட்டாள்.

ராஜு ராஜு என்று தான் அன்போடு பாராட்டி வளர்த்து வந்த இந்தக் குழந்தையை அவள் மானமிழந்து பெற்றதாக ஊருக்குள் பேச்சுக் கிளப்பி விட்டாள். குணவதி சீற்றத்திற்கு அஞ்சி நான் கற்பகத்திடம் வெறுப்பாக நடப்ப தாகக் காட்டிக் கொண்டேனே தவிர, உண்மையில் அவளிடம் அன்பும் இரகசியத்தொடர்பும் வைத்திருந்தேன். இதை வெளிப்படையாகக் கூறி என் மனைவியைக் காப்பாற்றும் வன்மையில்லாத கோழையாக அப்போது நான் இருந்தேன். கற்பகமோ, மானம் பொறுக்க முடியாமல் தன் அருமைக் குழந்தையுடன் கிணற்றில் விழுந்து இறந்து விட்டாள். கிணற்றில் விழுந்து அவள் இறந்து விட்ட போதிலும், இந்தக் குழந்தை வெளிப்படுத்தப் பட்ட போது பிழைத்துக் கொண்டு விட்டது. பிழைத்துக் கொண்ட இந்தக் குழந்தையைத்தான் முருகேச வாத்தியார் வளர்த்து வந்திருக் கிறார். அவர் அவனுக்கு நடராசன் என்று பெயர் வைத்து வளர்த்திருக்கிறார். கிணற்றில் விழும்போது மண்டையில் அடிபட்டதால் அதிர்ச்சியடைந்து அவன் மூளையில் தாக்கிய தால் அவன் பைத்தியமாக வளர்ந்திருக்கிறான் அவனுடைய வரலாற்றை முருகேச வாத்தியார் கூறிய பிறகு அவன் என் மகன்தான் என்று தெரிந்து கொண்டேன். அதனால் தான் நான் அவனை மருத்துவ விடுதி அழைத்துச் சென்று ஒளி மருத்துவம் புரியும்படி ஏற்பாடு செய்தேன். உங்களுக்கோ

நான் அவனுக்குக் கல்வி போதிப்பது போல் நடிப்புக் காட்டினேன். நான் இங்கு வந்ததுமே, குணவதி எப்படியோ என்னைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தன் மகன் சுந்தரேசனை அனுப்பி என்னை உளவறிந்து வரச் செய்திருக்கிறாள். அவன் என்னை மட்டுமல்ல, நடராசனையும் இன்னார் என்று தெரிந்து கொண்டு விட்டான். அவனுக்கு வந்த இரண்டு கடிதங்கள் மூலமாகவும் என் திருவாசகப் புத்தகம் திருட்டுப் போனதன்மூலமாகவும், நான் அவன் என்னைப் புரிந்து கொண்டுவிட்டான் என்பதையும், அவன் ஒழுக்கமற்றவன் என்பதையும் தெரிந்து கொண்டேன். அவனை மறைமுகமாகத் திருத்த முயன்று தோல்வியடைந்தேன்.

நடராசன் தங்கத்தை விரும்பினான். தங்கமோ சுந்தரேசன்மீது மோகம் கொண்டிருந்தாள். இதையும் நான் அறிந்துகொண்டேன். சுந்தரேசன் விஷயம் தானாக நடந்தது. நடராசனுக்காக நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டேன். அவனைப் பட்டணத்து இளைஞனாக மாற்றினேன். குறையூனம் இல்லாதவனாகத் தோற்றமளிக்கச் செய்தேன். தங்கம், அவனோடு பழகும் படியான சூழ்நிலையை உருவாக்கினேன். தங்கமும், அவன்மீது ஆசை கொண்டாள். என் எண்ணம் இந்த முறையில் நிறைவேறி விட்டது என்று மனமகிழ்ந்தேன். ஆனால், அவள் மறுபடியும், புதிய ராஜுவைவிட்டு பழைய நடராசன் பக்கம் எப்படித் திரும்பினாள் என்பதுதான் எனக்கு மர்மமாக இருக்கிறது.'' என்றார் கயிலாயம்.

''மர்ம மனிதர்களுக்கும் விளங்காத மர்மங்கள் உலகில் இருக்கின்றன'' என்று, கந்தசாமி வாத்தியார் புன்சிரிப்புடன் கூறினார்.

''அப்புறம்...?'' என்று கேட்டாள் மரகத அம்மாள் தன் அண்ணனை நோக்கி.

"அப்புறம் எல்லாவற்றையும் நீயே யூகித்துக்கொள். ராஜூவாக இருந்தாலும் சரி, நடராசனாக இருந்தாலும் சரி, தங்கம் என் மகனைக் கட்டிக் கொள்ளச் சம்மதித்து விட்டாள். அது போதும் எனக்கு!" என்று சொல்லி விட்டு வெளியே வந்தார் அண்ணாமலைப் பண்டிதர். அவரைப் பின்தொடர்ந்து கந்தசாமி வாத்தியாரும் மரகத அம்மாளும் வந்தார்கள். கூடத்தை யடுத்த அறையில் சுவரில் சாய்ந்து கொண்டிருந்த தங்கத்தைக்கண்டதும், "நீயும்இரகசியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாயா?" என்றுகேட்டார் கயிலாயம்.

தங்கம் பதில் சொல்லவில்லை.

அவள் கண்களில் அசாதாரணமான ஓர் ஒளி வெளிப் பட்டுத் தெரிந்தது. அவள் முகம் விரிந்த மல்லிகைப் பூவைப் போல் மலர்ந்திருந்தது. அந்தரத்திலே தெரியும் இன்பக் காட்சி யொன்றைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் அவள் மேலே நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் உதடுகள் புன் சிரிப்புடன் மின்னிக்கொண்டிருந்தன. வீட்டுக் கொல்லைப் புறத்திலே இருந்த அந்த மல்லிகைப் பந்தலும், அதனடியில் முதன் முதலாக அவள் கண்ட நடராசனுடைய அந்தக் கவர்ச்சியான முகமும் அவள் மனக்கண்முன் தோன்றின. அந்த இனிய காட்சியைக் கண்டவாறே அவள் தன்னை மறந்த நிலையில், இன்பப் பெரு வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள்!

# தமிழாலயம் வெளியீடுகள்

## நாரா நாச்சியப்பன் எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | நாச்சியப்பன் பாடல்கள் I | ரூ. | 15 |
| 2. | நாச்சியப்பன் பாடல்கள் II | | 15 |
| 3. | புதுமுறை பஞ்ச தந்திரக் கதைகள் | | 15 |
| 4. | மூன்று திங்களில் அச்சுத்தொழில் | | 10 |
| 5. | ஏழாவது வாசல் | | 5 |
| 6. | மாயத்தை வென்ற மாணவன் | | 5 |
| 7. | அப்பந்தின்ற முயல் | | 5 |
| 8. | குயில் ஒரு குற்றவாளி | | 5 |
| 9. | பள்ளிக்குச் சென்ற சிட்டுக் குருவிகள் | | 5 |
| 10. | தாவிப்பாயும் தங்கக் குதிரை | | 4 |
| 11. | பாடு பாப்பா | | 4 |
| 12. | பறவை தந்த பரிசு | | 4 |
| 13. | நாயகப் பெருமான் | | 4 |
| 14. | நான்கு பார்வைகளில் பாரதிதாசன் | | 7 |

**தமிழாலயம்** 137, ஜானி ஜான்கான் தெரு
சென்னை - 600 014.